# வேதாகம

# முகாமைத்துவ

# கொள்கைகள்

## சர்வதேச அறுவடைநேர நிறுவனம்

இப்பாடமானது **சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின்** செயல்திட்டங்களில் ஒரு பகுதியாக இருக்கின்றது. இத்திட்டம் விசுவாசிகள் தாக்கமுள்ள ஆவிக்குரிய அறுவடையை செய்யும்படியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள், வரிவசூலிப்பவர்கள் போன்றோருக்கு இயேசு கற்பித்து, அவர்களை மீள உருவாக்கும் கிறிஸ்தவர்களாக்கி, அவர்கள் வாழ்ந்த உலகத்தை சுவிஷேசத்தை ஆளுமையின் வல்லமையால் மாற்றியமைத்ததைப்போன்று உங்களுக்கும் கற்பிப்பதே இப்பயிற்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

பாடத்திட்டத்திலுள்ள பல பாடங்களில் இக்கையேடும் ஒன்றாகும். சுவிஷேச மயமாகுக்கும் இலக்கை நிறைவேற்ற, விசுவாசிகள் பெருக, பிரதிநிதிகளாக செயல்பட, ஆயத்தம் செய்யப்படவும் இப்பாடம் உதவும்.

© Harvestime International Institute
http://www.harvestime.org

# பொருளடக்கம்


இக்கையேட்டை பாவிப்பது எவ்வாறு . . . . . . . . 4
குழுவாக கற்றலுக்கான ஆலோசனைகள் . . . . . . . 5
அறிமுகம் . . . . . . . . . . . 6
பாடத்தின் குறிக்கோள்கள் . . . . . . . . . 7

1. முகாமைத்துவத்தின் ஊழியம். . . . . . . . 8

2. தலைமைத்துவத்தின் நிலைகள். . . . . . . 18

3. வழிநடத்துவதற்கான அபிஷேகம் . . . . . . . 30

4. தலைவர்களுக்கான தகுதி . . . . . . . . 42

5. ஊழியனைப்போல் வழிநடத்துதல் . . . . . . . 58

6. மேய்ப்பனைப்போல் வழிநடத்துதல் . . . . . . . 66

7. தலைவர்களின் இலக்குகள் . . . . . . . . 78

8. தீர்மானம் மேற்கொள்ளுதல் . . . . . . . . 88

9. முரண்பாடுகளும் ஒழுக்கங்களும் . . . . . . . 97

10. தலைவர்களையும் பின்பற்றுவோரையும் பயிற்றுவித்தல் . . . 107

11. தோல்வியை எதிர்கொள்ளல் . . . . . . . . 121

12. வெற்றியுடைய கொள்கைகள் . . . . . . . . 134

13. கிரயத்தை கணக்கிடல் . . . . . . . . 145

பிற்சேர்க்கை . . . . . . . . . . . 153

சுய பரீட்சைக்கான விடைகள் . . . . . . . . 160

# இக்கையேட்டை பாவிப்பது எவ்வாறு?

### கையேட்டின் வடிவமைப்பு

ஒவ்வொரு பாடத்திலும் அடங்குபவை:

**குறிக்கோள்கள்:** அதிகாரத்தை கற்று முடித்ததும் இலக்கை நிறைவேற்ற முற்படுவீர்கள். பாடத்தை ஆரம்பிக்க முன்னர் அவைகளை வாசியுங்கள்.

**திறவுகோல் வசனம்:** அதிகாரத்தின் முக்கிய விடயத்தை இவ்வசனம் பிரபலிக்கும். மனனம் செய்யுங்கள்.

**அதிகாரத்தின் பொருளடக்கம்:** ஒவ்வொரு பகுதியையும் கற்கவும். வேதாகமத்தை பாவித்து கையேட்டில் இல்லாத வசனங்களையும் கவனிக்கவும்.

**சுயபரீட்சை:** அதிகாரத்தை கற்று முடித்ததும் இப்பரீட்சையை செய்யவும். வேதாகமத்தையும் கையேட்டையும் பாராமல் வினாக்களுக்கு விடையளிக்க முயற்சி செய்யுங்கள். விடையளித்து முடிந்ததும் இப்புத்தகத்தின் கடைசி பக்கத்திலுள்ள விடைகளுடன் ஒப்பிட்டு பாருங்கள்.

**மேலதிக படிப்பினைக்கு:** தேவனுடைய வசனத்தை தொடந்தேர்ச்சியாக கற்றுக்கொள்ளவும், கற்றல் திறனை அபிவிருத்தி செய்யவும், உங்கள் வாழ்விலும், ஊழியத்திலும், கற்றதை பிரயோகிக்கவும் இப்பகுதி உதவும்.

**இறுதி பரீட்சை:** நீங்கள் மதிப்பெண்களை பெறும்படியாக இப்பாடத்தை பதிவு செய்து கற்பீர்கள் என்றால் இப்பாடத்தின் இறுதியில் பரீட்சை எழுத வேண்டும். பரீட்சையை செய்து முடித்த பின்னர் மதிப்பெண்ணை பெற பரிசோதனைக்காக விடைத்தாளை திருப்பி அனுப்பி வைக்கவும்.

### மேலதிகமாக தேவைப்படுபவை

King James வேதாகமம் மேலதிகமாக தேவைப்படும்.

# குழுவாக கற்பதற்கான ஆலோசனைகள்

## முதல் கூடுகையில்

**ஆரம்பம்:** ஜெபத்தோடும் அறிமுகத்தோடும் ஆரம்பியுங்கள். நன்கு அறிமுகமாகி மாணவர்களை பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தொடர்ந்து செயலாற்றகூடிய குழுவை நியமியுங்கள்:** கூட்டத்தை வழிநடத்துவது யார், நேரம், இடம், திகதி என்பற்றை முடிவு செய்யுங்கள்.

**துதியும் ஆராதனையும்:** உங்கள் பயிற்சியின் வேளையில் பரிசுத்த ஆவியானவர் பிரசன்னமாயிருக்க அவரை அழையுங்கள்.

**கையேடுகளை மாணவருக்கு பகிர்ந்தளித்தல்:** கையேட்டின் தலைப்பையும், முதல் நான்கைந்து பக்கங்களிலுள்ள குறிக்கோள்களையும், அறிமுகப்படுத்துங்கள்.

**முதலாவது ஒப்படை:** மாணவர்கள் இப்பாடத்தை ஒதுக்கிக்கொடுக்கப்பட்ட முறையில் வாசிக்கவும், அடுத்த கூடுகைக்கு முன்னால் சுயமாக பரீட்சை செய்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு குழு கூடுகையின் போது அதிகாரங்களை முடிக்கும் எண்ணிக்கையானது அதிகாரத்தின் நீளத்திலும், உள்ளடக்கத்திலும், குழுவின் இயலுமையிலும் தங்கியிருக்கும்.

## இரண்டாவதும் தொடரும் கூட்டங்களும்

**ஆரம்பம்:** ஜெபியுங்கள். வரவேற்ற பின்னர் புதிதாக வந்த மாணவர்களை பதிவு செய்த பின் கையேட்டை வழங்குங்கள். வரவை பதிவு செய்யுங்கள். துதி ஆராதனையை நடத்துங்கள்.

**மீட்டல்:** கடந்த வகுப்பில் கற்றவற்றை சுருக்கமாக முன் வையுங்கள்.

**பாடம்:** அதிகாரத்திலுள்ள **தடித்த எழுத்துகளிலுள்ள தலைப்புகளின்** சகல பகுதிகளையும் கலந்துரையாடுங்கள். மாணவருக்கு தாங்கள் கற்றுக்கொண்ட பகுதிகளில் கேள்விகள் அல்லது விமர்சனங்கள் இருப்பின் கூறச் சொல்லவும். ஜீவியத்திலும், ஊழியத்திலும் கற்றவற்றை பிரயோகிக்கும்படி மாணவரை கேட்டுக் கொள்ளுங்கள்.

**சுயபரீட்சை:** சுய பரீட்சையை செய்திருப்பின் மீட்டல் செய்யுங்கள். (சுய பரீட்சைக்கான பதில்கள் கையேட்டில் இருக்க வேண்டியதில்லை என நீங்கள் தீர்மானித்தால் கடைசி பக்கங்களிலுள்ள அவற்றை அகற்றிவிடலாம்.

**மேலதிக படிப்பினைக்கு:** இத்திட்டத்தை குழுவாகவோ அல்லது தனிப்பட்ட விதத்திலோ செய்யலாம்.

**இறுதிப்பரீட்சை:** உங்கள் குழுவினர் மதிப்பெண்களை பெறுவதற்காக கற்பார்களாயின், இப்பாடத்திற்கான கேள்விப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளலாம். அதை பிரதிபண்ணி, மாணவரிடம் பரீட்சை எழுத கொடுத்து கண்காணிக்கவும்.

**அலகு:** ஒழுங்குப்படுத்தல்
**பாடம்:** வேதாகம முகாமைத்துவ கொள்கைகள்

# அறிமுகம்

இந்த பாடமானது தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையான, பரிசுத்த வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்ட முகாமைத்துவ கொள்கைகளை முன்வைக்கின்றது. “நிர்வாகம்” என்பதற்கான வேறு வார்த்தை “முகாமைத்துவம்” என்பதாகும். “நிர்வாகி” அல்லது “முகாமையாளர்” யாதொருவரால் அவர்களுக்கு ஒப்படைத்த ஒன்றுக்கு மேலாக பொறுப்பானவர்கள் ஆவர். விசுவாசிகள் என்ற வகையில், நாம் ஒவ்வொருவரும் தேவன் நமக்கு ஒப்படைத்த ஆவிக்குரிய வளங்களுக்கு முகாமையாளர்கள் ஆவோம்.

அநேக கிறிஸ்தவ தலைவர்களிடமுள்ள முக்கியமான பிரச்சினையானது இந்த ஆவிக்குரிய வளங்களை ஒழுங்குப்படுத்துவதும், நிர்வாகிப்பதும் ஆகும். வேதாகமம் குறிப்பிடுவதுபோல் ஆவிக்குரிய அறுவடைக்கு வேலையாட்கள் குறைவாக இருந்தால், அவர்கள் அதை சரியாக ஒழுங்குப்படுத்தி ஆயத்தம் செய்தல் வேண்டும்.

உயிருள்ள அணுக்களின் பெருக்குதலினாலும் மனித எலும்பின் அபிவிருத்தியினாலும் அவர்களை தாங்கும்படியாக மனித வளர்ச்சி அதற்கூடாக நடைபெறுகின்றது. கிறிஸ்துவினுடைய சரீரம் வளர்வதற்கு, அமைப்பும் கூட முக்கியமானது. ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சியை கொண்டுவருவதற்கு நாம் ஒத்துழைக்க ஆயத்தப்படுவது அவசியமாகும்.

சர்வதேச அறுவடைநேர வலையமைப்பில் வழங்கப்படும் பயிற்சியான “ஒழுங்குபடுத்தும் மாதிரி” என்னும் மூன்று தொடர்ச்சிப்பாடங்களில் இந்த பாடமானது முதலாவது தொடராக உள்ளது. இந்த பயிற்சியானது “சுற்றுச் சூழல் ஆய்வு” மற்றும் “குறிக்கோளிலான முகாமைத்துவம்” என்னும் இதை தொடரும் பாடங்களோடு உள்ளது, இஃது ஆவிக்குரிய வளங்களை திறமையான நிர்வாகிக்க உங்களுக்கு உதவி புரியும். வல்லமையுள்ள ஊழியத்திற்கு அவசியமான தலைமைத்துவம், திட்டமிடுதல், ஒழுங்குப்படுத்தல் ஆகியவற்றை சரியாக விளங்கிக் கொள்ளும் பொருட்டு படிக்க இந்த மூன்று பாடங்களையும் நாம் பரிந்துரைக்கின்றோம்.

முகாமைத்துவம், தலைவர்களுடைய நிலைகளை இனங்காணுதல், வழிநடத்துவதற்கு அபிஷேகத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தல் ஆகிய பொருள்களை இந்த பாடம் அறிமுகம் செய்யும். வேதாகம கொள்கைகளான ஊழியனைப் போல் வழிநடத்தல், தலைவர்களுக்கான தகுதி ஆகியவையும் கலந்துரையாடப்படும்.

தீர்மானம் மேற்கொள்ளுதல் மற்றும் முரண்பாடுகளை கையாளுதல் ஆகியவற்றின் வலியுறுத்தலோடு தலைவர்க-ளுடைய பிரதான இலக்குகளை மீளாய்வு செய்யும். பயிற்சி செய்யும் தலைவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு வழிகாட்டுதல் கொடுக்கப்பட்டுள்ளதோடு, வெற்றிக்கான கொள்கைகளையும், தோல்விக்கான காரணங்களையும் பரீட்சிக்கும்.

இந்த பாடத்தின் பிற்சேர்க்கையானது வேதாகமத்தின் மாபெரும் தலைவர்களின் உதாரணங்களை படிப்பதன் மூலம் மேலதிக் கொள்கைகளை கற்கும் பொருட்டான சந்தர்ப்பத்தை கொடுக்கும்.

# பாடத்தின் குறிக்கோள்கள்

இப்பாடத்தை கற்று முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ முகாமைத்துவத்தை வரையறுக்கவும்,
- ☐ விசுவாசிகளால் நிர்வாகிக்கப்படும் ஆவிக்குரிய வளங்களை இனங்காணவும்,
- ☐ உக்கிராணத்துவம் செய்வதற்கான பிரதான அவசியங்களை இனங்காணவும்,
- ☐ ஆவிக்குரிய தலைமைத்துவத்தின் பிரதான உதாரணங்களை இனங்காணவும்,
- ☐ முகாமைத்துவ ஊழியத்தில் உள்ளடங்குபவை என்ன என்பதை சுருக்கவும்,
- ☐ தலைமைத்துவத்தின் வேதாகம நிலைகளை இனங்காணவும்,
- ☐ ஊழியத்தில் ஆவிக்குரிய வரங்கள் எவ்வாறு பயன்படுகின்றது என்பதை விபரிக்கவும்,
- ☐ ஊழியத்தில் எவ்வாறு தலைவர்கள் ஒன்றாக வேலை செய்வது என்பதை விபரிக்கவும்,
- ☐ ஆவிக்குரிய தலைமைத்துவத்தில் அபிஷேகத்தின் முக்கியத்துவத்தை உணரவும்,
- ☐ ஆவிக்குரிய தலைவர்களின் தகுதியை பட்டியலிடவும்,
- ☐ ஊழியனைப்போல் எவ்வாறு நடத்துவது என்பதை விபரிக்கவும்,
- ☐ மேய்ப்பனைப்போல் எவ்வாறு நடத்துவது என்பதை விபரிக்கவும்,
- ☐ தலைவர்களின் இலக்குகளை சுருக்கவும்,
- ☐ தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வேதாகம வழிகாட்டல்களை பயன்படுத்தவும்,
- ☐ முரண்பாடு மற்றும் சீஷத்துவத்தோடு சம்பந்தப்பட வேதாகம வழிகாட்டல்களை பயன்படுத்தவும்,
- ☐ தலைவர்களையும் ஊழியர்களையும் பயிற்றுவிக்கவும்,
- ☐ தோல்விகளை வெற்றிகரமான மாற்றுவதற்கும்,
- ☐ வெற்றிக்கு வேதாகம கொள்கைகளை பிரயோகிக்கவும்,
- ☐ தலைமைத்துவத்தின் கிரயத்தை இனங்காணவும்,
- ☐ ஆவிக்குரிய தலைமைத்துவத்தின் உண்மையான பரீட்சையை விபரிக்கவும் முடியும்.

# அதிகாரம் ஒன்று

## முகாமைத்துவத்தின் ஊழியம்

**குறிக்கோள்கள்:**

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ முகாமைத்துவத்தை வரையறுக்கவும்,
- ☐ விசுவாசிகளினால் முகாமைப்படுபவற்றிற்கு மேலாக ஆவிக்குரிய வளங்களை இனங்காணவும்,
- ☐ உக்கிராணத்துவத்திற்கு முக்கியமாக அவசியமானவற்றை இனங்காணுவதற்கும்,
- ☐ தலைமைத்துவத்தின் மாபெரும் உதாரணத்துவத்தை இனங்காணுவதற்கும்,
- ☐ முகாமைத்துவ ஊழியத்தில் உள்ளடங்குபவை என்ன என்பதை சுருக்கவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **கண்காணிப்பை விரும்புகிறவன் நல்லவேலையை விரும்புகிறான். (1 தீமோத்தேயு 3:1)**

### அறிமுகம்

இந்த அதிகாரம் முகாமைத்துவத்தின் ஊழியத்தை அறிமுகம் செய்கின்றது. நாம் முகாமைத்துவத்தை குறித்து பேசும் போது வியாபார உலகில் காணப்படுவதை போல் உலக ரீதியான முகாமைத்துவத்தை குறித்து நாம் பேசவில்லை. ஊழியத்தின் வேலைக்காக ஆவிக்குரிய வளங்களை நிர்வகித்தலை குறித்தே நாம் பேசுகின்றோம்.

முகாமைத்துவத்தின் ஊழியத்தை நீங்கள் கற்பீர்களானால், தேவன் உங்களுக்கு கொடுத்த ஊழியம் மற்றும் சுவிசேஷத்தின் நல்ல உக்கிராணத்துவராக நீங்கள் மாறுவீர்கள். நீங்கள் தேவனோடு அவருடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான வேலை செய்வீர்கள்.

### முகாமைத்துவத்தின் வரைவிலக்கணம்

"உக்கிராணத்துவம்" என்பதற்கான வேறு பெயர் "முகாமைத்துவம்" என்பதாகும். "உக்கிராணக்காரர்" அல்லது "முகாமையாளர்" மற்றவர்களால் அவர்களுக்கு நம்பிக்கையினால் கொடுக்கப்பட்ட ஏதோவொன்றிற்கு மேலான பொறுப்பாகும். மனித வளம், பொருட்கள், ஆவிக்குரிய வளம் ஆகியவற்றின் சரியான உபயோகித்தலின் மூலமாக தேவனுடைய குறிக்கோள்களையும் திட்டங்களையும் அடைவதற்கான செயற்பாடு முகாமைத்துவம் ஆகும். இந்த திட்டங்களும் குறிக்கோள்களும் அடைந்தாலும் இல்லாவிட்டாலும் முகாமைத்துவம் அளவிடப்படும். வேதாகமம் குறிப்பிடுகின்றது:

> **நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்.**
> **(ஏசாயா 53:6)**

தனியான பாதையின் வழியே நகர்வதற்கு மந்தைகள் வழிகாட்டப்படுவதைப்போல், மக்களுக்கு வழிகாட்டப்படல் வேண்டும், ஆகவே அவர்களுடைய வலிமைகளும் சக்திகளும் தேவனுடைய குறிக்கோள்களையும் திட்டங்களையும் அடையும்.

## ஆவிக்குரிய வளங்கள்

அனைத்து விசுவாசிகளும் தேவனால் கொடுக்கப்பட்ட வளங்களுக்கு உக்கிரணத்துவம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். இந்த பாடத்தின் “மேலதிக படிப்பினைக்கு” பகுதியில் இவைகள் பட்டியலிடப்பட்டுள்ளன. இந்த வளங்களுக்கு மேலாக, தலைவர்களுக்கு உள்ளடங்கும் விசேட வளங்களுக்கு மேலான உக்கிராணத்துவமானவை:

**சுவிசேஷம்:** அதன் செய்தியை நாம் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**நிதி:** ஒவ்வொரு விசுவாசிகளும் அவர்களுடைய சொந்த நிதியில் உக்கிராணத்துவமுடையவர்களாக இருத்தல் வேண்டும், ஆனால் சபை அல்லது கிறிஸ்தவ அமைப்பில் பணத்தை கட்டுப்படுத்தும் தலைவர்கள் கூட இந்த நிதியில் உக்கிராணத்துவமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

**ஊழியத்தின் பொருள் வளங்கள்:** சபை கட்டிடங்கள், சொத்து, மற்றும் உபகரணங்களினால் இந்த காரியங்கள் உள்ளடங்கும்.

**ஆவிக்குரிய வளங்கள்:** உக்கிராணத்துவத்திற்கு பொறுப்பாயிருக்கும்படி ஒவ்வொரு விசுவாசியும் குறைந்த பட்சம் ஒரு ஆவிக்குரிய வளங்களையாவது கொண்டிருப்பர். ஓர் தலைவரும் கூட மற்றவர்களுக்கு உதவி செய்து அவர்களுடைய ஆவிக்குரிய வளங்களை விருத்திசெய்யும்பொருட்டு பொறுப்பானவரும் ஆவார்.

**வேறு விசுவாசிகள்:** நீங்கள் ஒரு தலைவரானால், நீங்கள் மற்ற மக்களுக்கு பொறுப்பானவராய் இருத்தல் வேண்டும். அவர்கள் ஆவிக்குரிய முதிர்ச்சியடைய உதவவும், ஊழியத்தின் வேலைகளில் பங்குபற்றவும் அவர்களுக்கு நீங்கள் உதவுதல் வேண்டும். தேவன் அவருடைய இராஜ்ஜியத்தை கட்டுவதற்கு மக்களை பயன்படுத்துகின்றார், செயற்திட்டங்களை அல்ல. முகாமைத்துவம் மக்களுக்கூடாக தேவனுடைய காரியங்களை செய்யும்படிக்கு உள்ளடங்குகின்றது.

## முகாமைத்துவத்தின் முதன் செய்தி

தேவனிடமிருந்து மனிதனுக்கான முதல் செய்தியானது முகாமைத்துவத்தின் பொருளாகவே இருந்தது. தேவன் ஆதாம் மற்றும் ஏவாளுக்கு கூறினார்:

> **நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள். (ஆதியாகமம் 1:28)**

இந்த வசனத்தில் உள்ளடங்கும் முகாமையாளருக்கான மூன்று முக்கிய இலக்குகள்:

1. தேவனுடைய குறிக்கோளையும் திட்டங்களையும் அடைவதற்கு “பெருகுதல்” மூலமான உயர்பட்ச வளங்களை ஏற்படுத்தல்.
2. “கீழ்ப்படுத்தல்” மூலமாக ஒழுங்கின்மையை குறைத்தல்.
3. “ஆளுதல்” மூலமாக ஒழுங்கை பேணுதல்.

## மாபெரும் உதாரணம்

தலைமைத்துவத்தின் மாபெரும் உதாரணம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே ஆவார். அனைத்து கிறிஸ்தவ தலைவர்களுக்கும் அவரே மாதிரி ஆவார். ஊழியன் மற்றும் மேய்ப்பனைப்போல் வழிநடத்துவதற்கு அவர் ஏற்படுத்திய உதாரணத்தை குறித்து இந்த பாடத்தில் பின்னர் நீங்கள் கற்றுக் கொள்வீர்கள்.

இந்த பாடத்தில் போதிக்கப்பட்டுள்ள அனைத்து கொள்கைகளும் இயேசு செய்து போதித்தவற்றையே காட்டுகின்றது. தலைவருக்கு தேவையான அனைத்து தகுதிகளும் கிறிஸ்துவின் வாழ்க்கையில் ஆதாரமாக உள்ளன. ஒரு தலைவர் செய்யக்கூடிய அனைத்து குறிக்கோள்களும் அவரினால் காட்டப்பட்டுள்ளன. தலைவர்களையும் பின்பற்றுவோரையும் பயிற்சிற்குட்படுத்த அவர் உதாரணம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்.

## முக்கியமான தேவை

ஒருவருடைய கல்வி, இயற்கையான இயலுமை அல்லது குணாதிசயத்தினால் உக்கிராணத்தின் சித்தியை தேவன் ஒருபோதும் கரிசனை கொள்ள மாட்டார். அவர்கள் அவர்களுடைய விசுவாசத்தினால் சித்தியடைந்தார்கள். உக்கிராணத்துவத்தின் முக்கிய தேவையானது அவர்கள் விசுவாசமுள்ளவர்களாக இருப்பதே:

> **மேலும், உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம். (1 கொரிந்தியர் 4:2)**

எஜமான் வேலையாட்களுக்கு “தாலந்துகள்” என்று அழைக்கப்படும் வளங்களை கொடுத்ததை குறித்து மத்தேயு 24:14-30ல் இயேசு ஓர் உவமை ஒன்றை கூறியுள்ளார், இது பணத்தை காட்டுகின்றது. அவர்கள் நல்ல உக்கிராணக்காரர்களாக இருக்கும்படியாகவும், பணத்தை ஞானமாக பயன்படுத்தும்படிக்கும் அவர்களுக்கு கூறப்பட்டது. அதை செய்தவர்கள் “உண்மையுள்ளவர்கள்” என அழைக்கப்பட்டதோடு, வெகுமதி அளிக்கப்பட்டது. தோற்றவர்கள் நியாயத்தீர்ப்பிற்கும் கணக்கொப்புவித்தலுக்கும் உட்பட்டார்கள்.

## முகாமைத்துவத்தின் ஊழியம்

முகாமைத்துவத்தின் ஊழியமானது தேவனுக்காக மாபெரும் காரியங்களை மற்றவர்கள் அடைவதற்காக வழிநடத்துவதை உள்ளடக்குகின்றது. இந்த பாடத்தில் நீங்கள் கற்பவை குறித்தான கீழ்வரும் பகுதிகளில் முகாமைத்துவம் உள்ளடங்குகின்றது:

**வழிநடத்துவதற்கான அபிஷேகத்தின் முக்கியத்துவத்தை உணர்தல்:** கல்வி, தாலந்து, அனுபவத்தை விட வழிநடத்துவதற்கான தேவனுடைய அபிஷேகமானது மிகவும் முக்கியமானதாகும்.

**தலைமைத்தவத்திற்கான வேத தரங்களை அடைதல்:** சுய முகாமைத்துவத்தோடு முகாமைத்துவ ஊழியம் ஆரம்பமாகின்றது.

**ஊழியனைப்போல் வழிநடத்த கற்றல்:** வசன ரீதியான தலைமைத்துவமானது வெளி பிரகாரமான உறவோ அல்லது தனிப்பட்ட கவர்ந்திழுக்கும் மேடையோ அல்ல. இது நீங்கள் நடத்துவோருக்கான தாழ்மையான சேவை ஆகும். சேவை என்பது உலகரீதியான தலைமைத்துவத்திலிருந்து கிறிஸ்தவ தலைமைத்துவத்திற்கு வேறுபாட்டை ஏற்படுத்துவதாகும்.

**மேய்ப்பனை போல வழிநடத்த கற்றல்:** ஆவிக்குரிய தலைமைத்துவத்தை விபரிக்க இயேசு பயன்படுத்தியவை என்னவென்றால் இயற்கையான உலகில் மேய்ப்பனுடைய தரங்கள் ஆகும்.

**தலைவர்களுடைய அடிப்படை இலக்குகளை விளங்குதல்:** தீர்மானம் மேற்கொள்ளுதல், முரண்பாடுகளை தீர்த்தல் போன்ற கடினமான பகுதிகளில் இவை உள்ளடங்குகின்றன.

**தலைவர்களையும் பின்பற்றுவோரையும் பயிற்றுவித்தல்:** நாம் அனைவரும் குறித்த சூழ்நிலைகளில் வழி நடத்தப் படுகின்றோம், ஆனால் எல்லோரும் வேறு சூழ்நிலைகளில் பின்பற்றுகின்றோம். தலைவர்களுக்கு பின்பற்றுவோர் அவசியமாகும். தலைவர் மற்றும் பின்பற்றுவோர் ஆகிய இருவரும் பயிற்சிற்குட்படுத்தப்பட வேண்டும்.

**தேவனுடைய வார்த்தையில் போதிக்கப்பட்டுள்ள வெற்றியின் கொள்கைகளை பிரயோகித்தல்:** ஆவிக்குரிய வளத்தின் வெற்றிகரமான முகாமைத்துவத்தை இந்த கொள்கைகள் உறுதிப்படுத்துகின்றது.

**தலைமைத்துவத்தில் தோல்வியை ஏற்படுத்தும் மீறல்களை தவிர்த்தல்:** தலைமைத்துவத்தின் தோல்வியும், ஆவியின் கொள்கைகளின் மீறல்களிலிருந்து விளைவுகளை பின்பற்றுதல்.

**வேதாகம அமைப்புக்களின் கொள்கைகளை விளங்கிக்கொள்ளுதல்:** சபையின் பொருளாதார தேவைகளின் காரணமாக அபிவிருத்தி அடைந்தோரும், தேவனால் ஏற்படுத்தப்பட்ட தலைமைத்துவ நிலைகளையும் இது உள்ளடக்குகின்றது.

## வேதாகம அமைப்புக்களின் அடிப்படை

ஊழியத்தின் அமைப்புக்களானது நிலையான, திடமான அல்லது உலக மாதிரியின் அடிப்படையிலானது அல்ல. அமைப்புக்களானது தேவனுடைய வழிநடத்துதலை இடமளிக்க நெகிழ்வானது. தேவனால் கொடுக்கப்பட்ட குறிக்கோள்களையும் திட்டங்களையும் அடைவதற்கான நோக்கங்களானது முகாமைத்துவ ஊழியத்தில் காணப்படுகின்றது, இது திடமான நிறுவனங்களையோ, அமைப்புக்களின் கட்டமைப்புக்களையோ உருவாக்குவது அல்ல. சபையிலுள்ள அமைப்பானது உண்மையில் உயிருள்ள அங்கியை விடவும் அதிகமானது. வேதாகமமானது ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றாக வேலை செய்யும் மனித சரீரத்துடன் சபையை ஒப்பிடுகின்றது.

தேவனுடைய அமைப்பின் தலைமைத்துவத்திற்கு நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட முடியாது. நீங்கள் அலுவலகத்திற்கு ஓர் மனிதனால் தேர்ந்தெடுக்கப்பட அல்லது நியமிக்கப்பட முடியும், ஆனால் எந்த தலைவரும் நியமனத்தினாலோ அல்லது தேர்ந்தெடுக்கப்படுதலினாலோ ஒருபோதும் ஏற்படுத்தப்படவில்லை. இராஜ்ஜியத்தின் வேலைக்காக நீங்கள் தேவனால் ஏவப்பட்டு, அழைக்கப்பட்டிருக்க வேண்டும்.

தலைமைத்துவம் நிலைகளை உள்ளடக்குகின்றது, உதாரணத்திற்கு அப்போஸ்தலர், தீர்க்கதரிசி, சுவிசேஷகர், மேய்ப்பர், மற்றும் போதகர் போன்ற நிலைகள். தலைமைத்துவம் செயற்பாட்டை கூட உள்ளடக்குகின்றது. அதனுடைய முக்கிய பணி ஊழியத்தின் வேலையிற்காக மற்றவர்களை ஏவுதலாகும். தலைமைத்துவம் கூட அதன் பின்பற்றுவோருடனான தலைவர்களுடைய உறவில் கரிசனை செலுத்தும்.

தலைவராக தெரிவுசெய்தலும், முன்னேற்றமும் தேவனிடமிருந்து வருகின்றது:

> **கிழக்கிலும் மேற்கிலும் வனாந்தர திசையிலுமிருந்து ஜெயம் வராது:**
>
> **தேவனே நியாயாதிபதி: ஒருவனைத் தாழ்த்தி, ஒருவனை உயர்த்துகிறார். (சங்கீதம் 75:6-7)**

## முகாமைத்துவத்தின் மற்ற பக்கம்

முகாமைத்துவம் குறிக்கோளையும் நோக்கங்களையும் நிறுவும் பொருட்டு உங்கள் ஊழியத்தின் ஆய்வை கூட உள்ளடக்குகின்றது. இவ்வாறான பாடத்தை எவ்வாறு மேற்கொள்வது என்பதை சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் பாடமான “சுற்றுச்சூழல் ஆய்வு” என்பதில் நீங்கள் படிக்கலாம். சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் பாடமான “குறிக்கோளிலான முகாமைத்துவத்தில்” கீழ்வரும் பகுதிகளில் முகாமைத்துவம் கூட சம்பந்தப்படுவதை குறித்து நீங்கள் கற்பீர்கள்.

**தேவனுடன் இணக்கமாக ஊழியத்தின் நோக்கத்தை அமைத்தல்:** உங்களுடைய நோக்கத்தையும் தரிசனத்தையும் நீங்கள் அறியாவிட்டால், நீங்கள் மற்றவர்களை வழிநடத்த முடியாது.

**நோக்கத்தை அடைவதற்காக தீர்மானத்தை உருவாக்குதல்:** ஓர் திட்டத்தை செய்யாவிட்டால் உங்களுடைய நோக்கத்தை நீங்கள் ஒருபோதும் அடைய மாட்டீர்கள்.

**திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மக்களையும் செயற்பாடுகளையும் ஒழுங்கமைத்தல்:** தேவனுடைய நோக்கம் மற்றும் திட்டத்தின் பகுதிகளின் இலக்குகளை மக்கள் அடையும் போது முகாமைத்துவம் ஊக்கப்படுத்தல் மற்றும் வழிநடத்தல் ஆகியவற்றில் உள்ளடங்குவதில் பங்குபெறும்.

**மதிப்பிடுவதன் மூலம் திட்டங்களை சீர்ப்படுத்தல்:** தேவனுடைய வேலையானது சிறப்பாக செய்யப்படல் வேண்டும்.

## நல்ல முகாமைத்துவத்தின் முக்கியத்துவம்

ஊழியத்தில் சரியான முகாமைத்துவம் ஏன் முக்கியமானது என்பதற்கான சில காரணங்கள் இங்கே தரப்பட்டு உள்ளன:

### நோக்கத்தையும் வழிகாட்டுதலையும் கொடுக்கும்:

ஊழியத்தில் சித்தியுள்ளவர்களாக நீங்கள் இருக்க வேண்டுமானால், தேவனோடுள்ளவர்களோடு ஒத்துப் போக கூடிய விதமாக குறிக்கோளையும் திட்டங்களையும் நீங்கள் கொண்டிருப்பதோடு, மற்றவர்களோடு அவர்களை குறித்து தொடர்பாடக்கூடியதாக இருத்தல் வேண்டும். உங்களுடைய ஊழியத்திற்கான விசேட குறிக்கோளை அறிந்து, அந்த குறிக்கோளை நிறைவேற்றுவதற்கான திட்டங்களை உருவாக்கும் போது, உங்களால் மற்றவர்களை வழிநடத்த முடியும். மற்றவர்களை வழிநடத்தும்பொருட்டு அவர்கள் எங்கு செல்லுகின்றார்கள் என்பதை தலைவர்கள் அறிந்திருத்தல் அவசியம். ஊழியத்தில் உள்ள வழிகாட்டுதலும், ஐக்கியமும் பொதுவான குறிக்கோளையும் திசையையும் உள்ளடக்கும்.

### கலகத்தை நீக்குகின்றது:

எங்கு சரியான வழிநடத்தல் காணப்படுகின்றதோ, அங்கு கலகம் நீக்கப்படும்:

> **தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல், சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார். (1 கொரிந்தியர் 14:33)**
>
> **ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, (எபேசியர் 5:1)**

தேவனுடைய கிரியைகளானது கலகத்தின் குணாதிசயமாக இல்லாதிருப்பதால், அவருடைய ஊழியர்களின் ஊழியமும் அவ்வாறு இருத்தல் கூடாது.

### சரியான தீர்மானத்தை அனுமதிக்கின்றது:

தீர்மானம் உங்களுடைய இலக்குகளை நிர்ணயிக்கின்றது. இரட்சிப்பிலும் கூட இது உண்மையானது. இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளவோ அல்லது புறக்கணிக்கவோ நீங்கள் தீர்மானத்தை மேற்கொள்ளுகின்றீர்கள், அத்தோடு உங்களுடைய தீர்மானத்தினால் நித்திய இலக்குகளும் தீர்மானிக்கப்படுகின்றன.

உங்களுடைய தற்போதைய ஜீவியமும் ஊழியமும் நீங்கள் உருவாக்கிய முன்னைய தீர்மானங்களை தீர்மானிக்கின்றது. சந்தர்ப்ப சூழ்நிலையின் ஏவுதலினால் அல்லது ஞானமுடைய திட்டத்தினால் நீங்கள் தீமானங்களை மேற்கொண்டிருக்கலாம். நல்ல முகாமைத்துவம் தேவனுடைய வழிநடத்துதலோடு சரியான தீர்மானங்களை மேற்கொள்ளுவதற்கு உங்களை அனுமதிக்கின்றது.

### ஊழியத்திற்கு முன்னுரிமைமை அளிக்கின்றது:

முன்னுரிமை என்பது மற்ற காரியங்களை விட அதிகம் முக்கியமான ஓர் காரியம் ஆகும். அவைகளே உங்களுடைய நேரத்தையும் கவனத்தையும் முதலாவதாக எடுக்கும் காரியங்கள் ஆகும். உங்கள் வாழ்க்கையில் முன்னுரிமைகளை நீங்கள் அறிந்தாலோ அல்லது இல்லையோ அவைகள் காணப்படும். உங்களுடைய பழக்க வழக்கங்களில் முன்னுரிமையை எடுத்துக்கொள்ளுவதாலும் சூழ்நிலையின் அழுத்தங்கள் அல்லது உங்களை சுற்றியுள்ள மக்கள் அல்லது தேவனுடைய குறிக்கோளை அடிப்படையாக கொண்ட சரியான தீர்மானத்தினால் அவை வாழ்வின் வழியாக மாறிவிடும்.

## கிரியை செய்யாதிருப்பதை விட செய்வதை அனுமதிக்கின்றது:

அநேக ஊழியங்களானது எதிர்காலத்தை திட்டமிடுவதை விட தற்காலத்தில் அவசர காரியங்களை கிரியை செய்யாதிருப்பதாக காணப்படுகின்றது. இது தலைவர்களை ஞானத்தினாலும் குறிக்கோளினாலும் கிரியை செய்வதை விட செய்யாதிருப்பதற்கு அனுமதிக்கின்றது.

ஓர் திட்டம் அல்லது உபாயம் இல்லாமல், ஊழியத்தில் அதை நீங்கள் ஏன் செய்கின்றீர்கள் அல்லது அது எவ்வாறு செய்யப்பட வேண்டும் எனவும் நீங்கள் என்ன செய்கின்றீர்கள் எனவும் அறிய மாட்டீர்கள். ஏனென்றால் உங்களுக்கு நிறுவனங்களோ மற்றும் வழிகாட்டுதலோ இல்லை, நீங்கள் எதற்கும் அர்ப்பணிக்க தேவையில்லை, தேவனுக்கான உங்களுடைய வலிமையை அளவிட எந்த வழியும் இல்லை, நீங்கள் இலகுவாக கிரியை செய்வதை அனுமதித்து, கடினமான காலத்தில் நிறுத்துகின்றீர்கள்.

நல்ல முகாமைத்துவம் வாஞ்சைகளை செய்து காட்டுவதாகவும், தரிசனங்களை உண்மையானதாகவும் மாற்றும். தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதன் பொருட்டு நீங்கள் என்ன செய்ய வேண்டும் எனவும், அதை எவ்வாறு செய்ய வேண்டும் எனவும் அது உங்களுக்கான உதவியை தீர்மானிக்கும்.

## பொறுப்பு கூறுதலை ஏற்படுத்துகின்றது:

மத்தேயு 25:14-30ல் உள்ள தாலந்து உவமையில் அவர்களுடைய கவனிப்பிற்கு ஏற்படுத்தப்பட்ட அனைத்திற்கும் ஊழியர்கள் பொறுப்பு கூற வேண்டியவர்களாக இருந்தனர். அவர்களுடைய எஜமானுக்கு ஓர் திட்டம் இருந்தது, அவர்களை அதில் அர்ப்பணித்து, அவர்களுக்கு கொடுக்கப்பட்ட நிதியின் முதலீட்டினால் அதை நிறைவேற்ற வேண்டும்.

உங்களுடைய வாழ்க்கை மற்றும் ஊழியத்தில் தேவனுடைய சித்தத்தை அறிந்திருத்தலினால் மாத்திரம் பொறுப்பு கூறுதல் இல்லை, ஆனால் அதை கூட செய்தல் வேண்டும்:

> **தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான். (லூக்கா 12:47)**

உங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட ஊழியத்தை ஞானமாக நீங்கள் செய்யாவிட்டால், நீங்கள் பொறுப்பு கூற வேண்டியவர்களாக மாறுகின்றீர்கள்.

## மதிப்பை ஏற்படுத்துகின்றது:

தேவனுடைய திட்டங்களையும் நோக்கத்தையும் நீங்கள் நிறைவேற்றுகின்றீர்களா என்பதை பார்க்க மதிப்பிடலும் முகாமைத்துவத்தில் உள்ளடங்குகின்றது. சித்தியடைதலின் வேதாகம கொள்கைகளையும் தோல்விகளின் காரணங்களையும் விளங்கிக்கொள்ளுதலும் மதிப்பை ஏற்படுத்த அனுமதிக்கின்றது.

## ஆவிக்குரிய வளங்களின் ஞானமான பயன்பாட்டிற்கு அனுமதிக்கின்றது:

நல்ல முகாமைத்துவமானது ஆவிக்குரிய வளங்களை சரியாக நீங்கள் நிர்வகிக்கவும், தேவனுடைய இராஜ்ஜியத்தின் வேலைகளுக்காக நிதி, பொருட் காரியங்கள், மக்கள், ஆவிக்குரிய வரங்கள் ஆகியவற்றின் சரியான உக்கிராணத்தை நீங்கள் ஏற்படுத்துவதற்கும் உதவுகின்றது.

## திறந்த வாசல்களை பிரவேசிப்பதற்கு உங்களை ஆயத்தப்படுத்துகின்றது:

> **ஏனெனில் இங்கே பெரிதும் அநுகூலமுமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது: விரோதஞ் செய்கிறவர்களும் அநேகர் இருக்கிறார்கள். (1 கொரிந்தியர் 16:9)**

தேவன் திறந்த வாசல்களை ஏற்படுத்தும்போது, அதற்கூடாக நீங்கள் நடக்கவும், புதிய சவால்களுக்கு முகங்கொடுக்கவும் ஆயத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும். சரியான ஆயத்தம் இல்லாமல் இது முடியாத காரியம் ஆகும். மத்தேயு 25:1-13ல் உள்ள புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகள் குறித்தான உவமை-களை வாசியுங்கள். தேவன் வாசல்களை திறந்தார், ஆனால் அவர்கள் எப்பொழுதும் ஆயத்தம் உள்ளவர்களாக இருக்கவில்லை. அவைகள் திறந்து நீங்கள் பிரவேசிப்பதற்காக காத்திருந்தது. பிற்பாடு அவைகள் பூட்டப்பட்டு, சிலசமயங்களில் ஒருபோதும் திறக்கப்படவில்லை.

## தேவனுடைய சித்தத்திற்கு ஒத்துப்போகும் ஊழியம்:

அப்போஸ்தலனாகிய பவுல் தனது மனமாற்றத்தின் பின்னரான முதலாவது கேள்வியானது, “நான் என்ன செய்ய வேண்டும்?” அவர் தேவனிடம் கேட்கின்றார், “என்னுடைய வாழ்க்கையிற்கும் ஊழியத்திற்குமான உமது திட்டம் என்ன?” அறிவுள்ள உக்கிராணமானது உங்கள் வாழ்க்கையையும் ஊழியத்தையும் தேவனுடைய திட்டத்திற்கும் குறிக்கோளுக்கும் ஒத்துப்போகுதலை கொண்டு வரும்.

## தேவன் தலைவர்களை எதிர்பார்க்கின்றார்

தேவன் சவுல் ராஜாவுக்கு கூறினார்:

> **இப்போதோ உம்முடைய ராஜ்யபாரம் நிலைநிற்காது. கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனைத் தமக்குத் தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய ஜனங்கள்மேல் தலைவனாயிருக்கக் கட்டளையிட்டார். கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையை நீர் கைக்கொள்ளவில்லையே என்று சொன்னான். (1 சாமுவேல் 13:14)**

தேவன் இன்னும் தலைவராக அவர் பயன்படுத்தக்கூடிய மனிதர்களை தேடிக்கொண்டிருக்கின்றார்:

> **நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன். (எசேக்கியேல் 22:30)**

> **தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது... (2 நாளாகமம் 16:9)**

நல்ல முகாமையாளராக மாறுவதற்கு நேரமும், வலிமையும் எடுக்கின்றது:

> **அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும். நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும். அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். (1 கொரிந்தியர் 3:13)**

பலகை, வைக்கோல் மற்றும் கோல் அனைத்தும் நிலத்திற்கு மேலாக வளரும். அது இலகுவாக உற்பத்தியாக்கப்பட்டு, ஆயத்தமானதுடன் மனிதனால் பார்க்கப்படும், ஆனால் அது இலகுவாக அழிக்கப்படும். தங்கமும் வெள்ளியுமான விலையுயர்ந்த உலோகமமானது நிலத்திற்கு கீழ் உருவாக்கப்படும். அது ஆயத்தமுள்ளதாக மனிதனால் பார்க்கப்படாது, ஆனால் அவை அதிகமாக நிலைநிற்கும்.

மாம்சமான, பிரசித்திபெற்ற, உலகரீதியான தலைமைத்துவமானது பலவை, வைக்கோல் மற்றும் கோல் போன்றதாகும். அது மனிதனால் பார்க்கப்பட்டு, இயற்கையான தாலந்துக்கள் மற்றும் இயலுமையினால் இலகுவாக உற்பத்தியாகும். தேவனுடைய தலைமைத்துவம் என்பது பொன்னையும், வெள்ளியையும் போன்றது. அது பரிசுத்த ஆவியின் வல்லமையினால் மனிதனில் உள்ளாக, மறைமுகமாக உற்பத்தியாகும். ஆனால் அது எல்லையற்ற பெறுமதியையும் காலத்தையும் கொண்டிருக்கும்.

## சுய பரீட்சை

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

..........................................................................................................................................................................................

..........................................................................................................................................................................................

2. “முகாமைத்துவம்” என்பதை வரையறுக்கவும்.

..........................................................................................................................................................................................

3. விசுவாசிகள் முகாமைத்துவம் செய்யும் ஆவிக்குரிய வளங்களிற்கு மேலானவற்றை பட்டியலிடவும்.

..........................................................................................................................................................................................

..........................................................................................................................................................................................

4. உக்கிராணத்துவத்தின் முக்கிய தேவை என்ன?

..........................................................................................................................................................................................

5. தலைமைத்துவத்தின் மாபெரும் உதாரணம் யார்?

..........................................................................................................................................................................................

6. இந்த பாடத்தின் கலந்துரையாடலின் அடிப்படையில், “முகாமைத்து ஊழியத்தில்” என்ன உள்ளடங்கியுள்ளது என்பதை சுருக்கமாக எழுதவும்.

..........................................................................................................................................................................................

7. நல்ல முகாமைத்துவம் ஏன் முக்கியமானது?

..........................................................................................................................................................................................

..........................................................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. இயேசு பரலோகத்தில், நரகத்தில் அல்லது இரட்சிப்பில் செய்ததை விட உக்கிராணத்தின் உடைமையில் அதிகம் போதித்தார். 40 உவமைகளில், 19 உடைமையில் சம்பந்தப்படுகின்றது.

2. தலைமைத்துவம் என்பது மிகப்பெரிய பொறுப்பாகும் ஏனென்றால் நீங்கள் மற்றவர்களில் செல்வாக்கு செலுத்துகின்றீர்கள். உதாரணத்திற்கு, "நான் மீன்பிடிக்க செல்லுகின்றேன்" என பேதுரு தன்னோடு இருந்தவர்களுக்கு கூறியபோது அவர்கள் உடனடியாக கூறியது, "நாங்கள் உம்மோடு கூட வருகின்றோம்" என்பதாகும். தலைமைத்துவம் கூட முக்கியமானது ஏனென்றால் தலைவர் தேவனுடைய பிரதிநிதி ஆவார். மல்கியா 2:7ஐ பார்க்கவும்.

3. உலக மற்றும் ஆவிக்குரிய முகாமைத்துவங்களின் இந்த ஒற்றுமையை படியுங்கள்:

   -உலக ரீதியான முகாமைத்துவத்தில், வல்லமையானது திறன், இயலுமை மற்றும் அறிவினால் தீர்மானிக்கப்படுகின்றது.

   -ஆவிக்குரிய ரீதியான முகாமைத்துவத்தில், வல்லமையானது தேவனுடைய அதிகாரத்தினாலும் அபிஷே கத்தினாலும் தீர்மானிக்கப்படுகின்றது.

   -உலக ரீதியான முகாமைத்துவத்தில், தலைவரின் தெரிவானது திறன் மற்றும் கல்வி போன்ற அடிப்படை காரணிகளினால் மேற்கொள்ளப்படுகின்றது.

   -ஆவிக்குரிய ரீதியான முகாமைத்துவத்தில், தலைவரின் தெரிவானது அபிஷேகம், அழைப்பு மற்றும் தேவனுடைய சித்தத்தின் வெளிப்பாடு போன்ற அடிப்படையினால் மேற்கொள்ளப்படுகின்றது.

   -உலக ரீதியான முகாமைத்துவத்தில், திறன் மற்றும் அறிவு போன்ற பகுதிகளில் பயிற்சியானது கொடுக்கப்படுகின்றது.

   -ஆவிக்குரிய ரீதியான முகாமைத்துவத்தில், தேவனுடைய வார்த்தையில் அடிப்படையாக கொண்ட வாழ்க்கையில் திறன் பொருந்தக்கூடிய விதத்தில் பயிற்சியானது கொடுக்கப்பட வேண்டும்.

3. முகாமைத்துவ ஊழியம் செய்பவர்களோடு தேவன் செயலாற்றுகின்றார். பவுல் கூறுகின்றார்:

   **பவுல் யார்? அப்பொல்லோ யார்? கர்த்தர் அவனவனுக்கு அருள் அளித்தபடியே நீங்கள் விசுவாசிக்கிறதற்கு ஏதுவாயிருந்த ஊழியக்காரர்தானே.**

   **நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப் பாய்ச்சினான், தேவனே விளையச்செய்தார்.**
   **(1 கொரிந்தியர் 3:5-6)**

4. **உலக ரீதியான முகாமைத்துவம் வலியுறுத்துவது:** **ஆவிக்குரிய ரீதியான முகாமைத்துவம் வலியுறுத்துவது:**

| உலக ரீதியான முகாமைத்துவம் வலியுறுத்துவது: | ஆவிக்குரிய ரீதியான முகாமைத்துவம் வலியுறுத்துவது: |
|---|---|
| பணம் | ஊழியம் |
| உற்பத்தி | ஜெபம் |
| காரணி | விசுவாசம் |
| விசேடத்துவம் | அபிஷேகம் |
| விதிகள் | அன்பு |
| திறன்கள் | தேவனுடைய வார்த்தை |
| தனிப்பட்ட நிலை | குணாதிசயம் |
| புத்தி | ஆவிக்குரிய நிலை |
| திறமையாக கையாளுதல் | வழிகாட்டுதல் |
| இலக்குகள் | உறவுகள் |
| சுய சித்தம் | கீழ்ப்படிவு |
| போட்டி | ஒத்துழைப்பு |

5. அனைத்து விசுவாசிகளுக்கும் பொறுப்பான முகாமைத்துவத்தின் பட்டியலை இங்கே படியுங்கள். நாங்கள் பொறுப்பானவர்களாக உள்ளோம்:

| | | |
|---|---|---|
| அ. | தேவனுடைய சிருஷ்டிப்பு | ஆதியாகமம் 1:26-28 |
| ஆ. | தேவனுடைய மறைபொருள் | 1 கொரிந்தியர் 4:1 |
| இ. | சுவிசேஷ செய்தி | 1 தெசலோனிக்கேயர் 2:4 |
| ஈ. | ஆவிக்குரிய வரங்கள் | 1 பேதுரு 4:10 |
| உ. | மன்னித்தல் | மத்தேயு 6:12, 18:21-22 |
| ஊ. | அன்பு | 1 யோவான் 4:7-8 |
| எ. | மனம் | பிலிப்பியர் 4:8 |
| ஏ. | வல்லமை | அப்போஸ்தலர் 1:8 |
| ஐ. | நேரம் | எபேசியர் 5:15-16 |
| ஒ. | கண்ணோட்டம் | 1 சாமுவேல் 16:7 |
| ஓ. | குறிக்கோள் | பிலிப்பியர் 2:2 |
| ஔ. | விசுவாசம் | யாக்கோபு 2:14-17 |
| ∴. | பணம் | 2 கொரிந்தியர் 9:6-11 |
| அ. | துதி | எபிரெயர் 12:15-16 |
| ஆ. | ஊழியம் | கலாத்தியர் 6:2 |
| இ. | சரீரம் | ரோமர் 12:1 |
| ஈ. | குணாதிசயம் | தீத்து 1:7-9 |
| உ. | குடும்பம் | 1 தீமோத்தேயு 3:4-5,12: 5:8 |

# அதிகாரம் இரண்டு

## தலைமைத்துவத்தின் நிலைகள்

**குறிக்கோள்கள்:**

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ தேவனால் சபையில் ஏற்படுத்தப்பட்ட விசேட தலைமைத்துவ நிலைகளை இனங்காணவும்,
- ☐ ஊழியத்தில் இந்த ஊழியர்கள் எவ்வாறு ஒன்றாக வேலைசெய்கின்றார்கள் என்பதை விபரிக்கவும்,
- ☐ தலைமைத்துவத்தில் எவ்வாறு ஆவிக்குரிய வரங்கள் பயன்படுகின்றது என்பதை விபரிக்கவும்,
- ☐ வேறு வேதாகம தலைமைத்துவ நிலைகளை இனங்காணவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். (எபேசியர் 4:11)**

### அறிமுகம்

தேவன் தற்பொழுது கிரியை செய்து உலகத்திற்கு தம்மைத்தாமே வெளிப்படுத்துவதற்கூடான கருவி சபையே ஆகும். இந்த பாடத்தில் தேவனால் சபையிற்கு ஏற்படுத்தப்பட்ட தலைவர்களை குறித்து நீங்கள் கற்பீர்கள். உள்ளுர் சபையில் நடைமுறை தேவை காரணமாக உட்கொண்டுவரப்பட்ட வேறு தலைமைத்துவ நிலைகளையும் கூட நீங்கள் கற்பீர்கள்.

இந்த பாடத்தில் கலந்துரையாடப்பட்ட தலைமைத்துவ நிலைகளை நிரப்புபவர்கள் அடைய வேண்டிய விசேட தகுதிகளை வேதாகமம் தருகின்றது. நீங்கள் இந்த தகுதிகளை குறித்து நான்காம் அதிகாரத்தில் கற்பீர்கள்.

### விசேட தலைமைத்துவ நிலைகள்

**நிலைகள்:**

தேவனால் சபையில் ஏற்படுத்தப்பட்ட ஐந்து விசேட தலைமைத்துவ நிலைகளை வேதாகமம் இனம்காட்டுகிறது:

> **அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். (எபேசியர் 4:11)**

இந்த தலைமைத்துவ நிலைகள் சபையில் தேவனால் ஏற்படுத்தப்படுகின்றது. அவர்கள் விசேட தேவனுடைய அழைப்பினாலும் விசேட ஆவிக்குரிய வரங்களினாலும் பங்கெடுக்கின்றார்கள். நீங்கள் சாதாரணமாக கேட்டுக் கொள்ளப்பட்டாலோ அல்லது நீங்கள் செய்ய வேண்டும் என்பதற்காகவோ இந்த நிலையில் ஊழியம் செய்ய கூடாது. நீங்கள் தேவனால் அழைக்கப்பட்டும் சரியான ஆவிக்குரிய வரங்களை பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

## அவர்களுடைய செயற்பாடு:

இந்த விசேட ஐந்து தலைமைத்துவ நிலைகளின் விரிவான சுருக்கம் இங்கே தரப்பட்டுள்ளது:

**அப்போஸ்தலர்:** அப்போஸ்தலர் எனப்படுபவர் பல இடங்களில் புதிய சபைகளை விருத்தி செய்யும் விசேட இயலுமையையும், பல சபைகளை மேற்பார்வையாளராக மேற்பார்வை செய்யும் இயலுமையையும் பெற்றவர் ஆவர். அப்போஸ்தலர் எனப்படுவது “மற்றொருவருக்காக கிரியை செய்யும்படி முழு வல்லமையுடனும் அதிகாரத்துடனும் செய்ய அனுப்பும் படி ஒப்படைக்கப்பட்ட பிரதிநிதி ஆவர்.” அப்போஸ்தலர் என்பவருக்கு விசுவாசிகளுடைய சரீரத்தை ஒழுங்கமைத்து அபிவிருத்தி செய்வதின் மூலம் உலகிற்கூடாக சுவிசேஷத்தை விரிவிபடுத்தும் இயலுமை அல்லது விசேட அதிகாரத்தை கொண்டவராவர். அப்போஸ்தலர் என்பதற்கு உபயோகிக்கப்படும் நவீன பதங்களானது “மிஷனரி” அல்லது “சபையை ஆரம்பிப்பவர்” ஆகும். அப்போஸ்தலருக்கான வேதாகம சிறந்த உதாரணம் அப்போஸ்தலராகிய பவுல் ஆவர்.

**தீர்க்கதரிசி:** தீர்க்கதரிசி எனப்படுபவர் தேவனுடைய நேரடியான ஏவுதலின் கீழ் பேசி சபையில் ஓர் அலுவலக அதிகாரத்தை வைத்திருப்பவர் ஆவர். தீர்க்கதரிசி தெய்வீக அபிஷேக வெளிப்படுத்தலுக்கூடாக தேவனால் தம்முடைய மக்களுக்கு செய்திகளை உடனடியாக பெற்று தொடர்புபடுத்தும் இயலுமை உள்ளவர் ஆவர். புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளில் அகபு நல்ல உதாரணம் ஆவார். அப்போஸ்தலர் 21:11ஐ பார்க்கவும்.

**சுவிசேஷகர்:** சுவிசேஷகர் என்பவர் அவிசுவாசி பிரதிபண்ணும் வழியில் சுவிசேஷத்தை பகிரும் விசேட இயலுமையை கொண்டிருப்பதோடு கிறிஸ்துவின் சரீர அங்கத்தவர்களில் பொறுப்பானவர்களாக மாறுவர். “சுவிசேஷகர்” என்னும் வார்த்தையின் அர்த்தம் “நல்ல செய்திகளை கொண்டு வருபவர்” ஆகும். சுவிசேஷகருக்கு நல்ல உதாரணம் பிலிப்பு ஆவார். அப்போஸ்தலர் 21:8 மற்றும் அதிகாரம் 8ஐ பார்க்கவும்.

**மேய்ப்பர்:** “மேய்ப்பர்” என்னும் வார்த்தையின் சரியான அர்த்தம் மந்தையை மேய்க்கிறவர் ஆகும். விசுவாசிகளின் குழுவின் ஆவிக்குரிய போராட்டத்தில் நீண்ட கால தனிப்பட்ட பொறுப்பானவர் தலைவர்களான மேய்ப்பரே ஆவர்.

**போதகர்:** போதிக்கப்பட்டதை மற்றவர்கள் கற்று பிரயோகிக்கக்கூடியதான வழியில் வல்லமையான தேவனுடைய வசனத்தை தொடர்பாடும் விசேட இயலுமையுள்ள விசுவாசி போதகர் ஆவர்.

## அவர்களுடைய குறிக்கோள்:

இவைகளே கீழ்வரும் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு ஏற்படுத்தப்பட்ட விசேட நிலைகளாகும்:

> **பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்,**
>
> **அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்.**
>
> **நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்,**
>
> **அன்புடன் சத்தியத்தைக் கைகொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். (எபேசியர் 4:12-15)**

கீழ்வரும் வரைப்படம் இந்த நோக்கத்தை காட்டுகின்றது:

தேவன்
தருகின்றார்

அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் சுவிசேஷகர் மேய்ப்பர் போதகர்

பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு,
பக்திவிருத்தி அடைவதற்கு

ஊழியத்திற்கு பக்தி விருத்திக்கு
விளைவானது

ஐக்கியம் அறிவு பூரணத்துவம்

கிறிஸ்துவின் சரீரமானது

பிள்ளையாக இன்னும் இருப்பதில்லை
(தவறான உபதேசம்)

அவருக்குள் வளர்ச்சி அடைகின்றனர்
(உண்மை)

இறுதியான விளைவு: அன்பால் சரீரத்தின் அனைத்து பகுதிகளும் வல்லமையுள்ளதாக கிரியை செய்யும்.

### அவைகள் எவ்வாறு ஒன்றாக கிரியை செய்யும்:

சபையின் ஊழியத்தின் இந்த ஐந்து விசேட தலைமைத்துவ நிலைகள் ஒன்றாக இணைந்து கிரியை செய்யும்.

**அப்போஸ்தலர்** புதிய சபைகளை எழுப்புவதற்காக புதிய பகுதிகளுக்கு சுவிசேஷத்தை விரிவுபடுத்துவார்.

**சுவிசேஷகர்** சபையில் சேர்க்கப்பட்ட மற்றும் அவிசுவாசிகள் பிரதிபண்ணும் வழியில் சுவிசேஷத்தை தொடர்பாற்றுவார்.

**தீர்க்கதரிசி** பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் சபையிற்கு தேவனிடமிருந்து விசேட செய்திகளை கொடுப்பார்கள்.

**மேய்ப்பர்** சுவிசேஷகனால் செய்யப்பட்ட சுவிசேஷ அறிமுகத்தை கொண்டு அறிவுறுத்தல்களை வழங்குவார். அவர்கள் புதிய விசுவாசிகளை ஆவிக்குரிய முதிர்ச்சியிற்குள் எடுத்து மற்றவர்களுக்கு போதிக்கும் இயலு-மையுடைய விசுவாசமுள்ள மக்களை பயிற்றுவிப்பர்.

**போதகர்** சபையிற்கான கரிசனையையும் நீண்ட கால தலைமைத்துவத்தையும் ஏற்படுத்துவார்.

## தலைமைத்துவத்தில் உள்ள ஆவிக்குரிய வரங்கள்

சபையின் தலைமைத்துவத்தில் ஐந்து விசேட தலைமைத்துவ நிலைகள் மாத்திரம் அல்ல, ஒவ்வொரு விசுவாசியும் சபையில் செயற்பாட்டை கொண்டிருக்கின்றார்:

> **தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார். (1 கொரிந்தியர் 12:18)**

ஒவ்வொரு விசுவாசியும் குறைந்தபட்சம் ஒரு ஆவிக்குரிய வரங்களை கொண்டிருப்பர். அவர்களுடைய ஆவிக்குரிய வரங்கள் அவருடைய செயற்பாடுகளை சரீரத்தில் நிறைவேற்றுவதற்கு அவர்களை பக்திவிருத்தியடைய செய்யும்.

> **எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம் ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது: அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார். (1 கொரிந்தியர் 12:11)**

அப்போஸ்தலர், தீர்க்கதரிசி, சுவிசேஷகர், மேய்ப்பர், போதர்கள் ஆகியோரின் விசேட தலைமைத்துவ வரங்களை நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். விசுவாசிகளுக்கு கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியானவரின் வேறு வரங்கள் இங்கே பட்டியலிடப்பட்டுள்ளன:

**பேசும் வரங்கள்:** தீர்க்கதரிசனம், போதித்தல், அறிவுறுத்தல், வசனத்தின் அறிவு, வசனத்தின் ஞானம்.

**சேவிக்கும் வரங்கள்:** சேவித்தல், உதவுதல், தலைமைத்துவம், நிர்வகித்தல், கொடுத்தல், இரக்கம் காட்டுதல், ஆவிகளை பகுத்தறிதல், விசுவாசம் மற்றும் விருந்தோம்பல்.

**அடையாள வரங்கள்:** அந்நியபாஷை, அந்நியபாஷைகளை பரிவர்த்தனை செய்தல், அற்புதங்கள், குணமாக்குதல்.

இந்த வரங்களை இனங்காட்டும் வேதாகம வசனங்கள்:

-ரோமர் 12:1-8
-1 கொரிந்தியர் 12:1-31
-எபேசியர் 4:1-16
-1 பேதுரு 4:7-11

(சர்வதேச அறுவடைய நேர நிறுவனத்தின், “பரிசுத்த ஆவியானவரின் ஊழியங்கள்” இந்த ஒவ்வொரு ஆவிக்குரிய வரங்களையும் விரிவாக கலந்துரையாடுகின்றது. இது உங்களுடைய ஆவிக்குரிய வரங்களை கண்டுபிடிக்க வழிகாட்டல்களை கொடுக்கின்றது.)

## முகாமையாளருக்கான முக்கியமான வரங்கள்

முகாமையாளருக்கு தலைமைத்துவம் மற்றும் நிர்வகித்தல் ஆகிய இந்த இரண்டு ஆவிக்குரிய வரங்களும் விசேடமாக முக்கியமானவையாகும். “வழிநடத்துதல்” அல்லது தலைமைதாங்குபவரின் தலைமைத்துவ வரங்களை ரோமர் 12:8ல் இனங்காட்டுகின்றது. தலைமைத்துவத்தின் வரத்தை கொண்டிருக்கும் ஒரு நபர் தேவ-னுடைய குறிக்கோள்களை பொருத்தமாக தீர்மானங்களை மேற்கொள்ளும் இயலுமையை கொண்டிருப்பார், அத்தோடு இந்த இலக்குகளை மற்றவர்களோடு தொடர்பாடுவர். தேவனுடைய மகிமைக்காக இந்த இலக்குகளை அடையும்படி அவர் மற்றவர்களை ஊக்கப்படுத்துவார்.

1 கொரிந்தியர் 12:28ல், இந்த நிர்வகிக்கும் வரங்கள் “அதிகாரங்கள்” என அழைக்கப்படுகின்றது. இந்த வரங்களை கொண்டிருக்கும் ஓர் நபர் மற்றவர்களுக்காக வழி காட்டுதல், ஒழுங்கமைத்தல் மற்றும் ஆலோசனை-களை மேற்கொள்ளுதல் போன்ற இயலுமைகளை கொண்டிருப்பார். “அதிகாரம்” அல்லது “நிர்வாகம்” என்னும் வார்த்தைக்கு அர்த்தம் விமானி கப்பலை ஓட்டுவதை போன்றதாகும். இந்த வரத்தை கொண்டிருக்கும் நபர் வழிகாட்டுதல் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளுதல் போன்றவற்றிற்கு பொறுப்பானவராவார். கப்பலில் உள்ள விமானி போல, அவருக்கு கப்பல் சொந்தமானது அல்ல, ஆனால் அவர் அதன் பயணத்தில் செல்லும் வழியில் பொறுப்போடு செயற்படுவார்.

நிர்வாக வரத்திற்கு வேதாகமத்திலுள்ள உதாரணமுள்ள நபர் தீத்து ஆவர். அப்போஸ்தலனாகிய பவுல் கிரேத்தாவிலே சபை ஒன்றை தொடங்கினார். அவருக்காக அதை ஒழுங்கமைத்து வழிநடத்தியவர் ஒருவர் தீத்து ஆகும்:

> **உத்தம குமாரனாகிய தீத்துவுக்கு எழுதுகிறதாவது: நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், உன்னைக் கிரேத்தாதீவிலே விட்டுவந்தேனே. (தீத்து 1:4-5)**

தலைமைத்துவம் மற்றும் நிர்வாகிக்கும் வரங்கள் ஒன்றாக திறமையாக கிரியை செய்யும். நிர்வகிக்கும் வரமுள்ள ஓர் நபர் வழிநடத்தல், ஒழுங்கமைத்தல், தீர்மானம் மேற்கொள்ளுதல் ஆகியவற்றை மேற்கொள்ளும் இயலு-மையை கொண்டிருப்பார். தலைமைத்துவ வரமுள்ள ஒரு நபர் இந்த இலக்குகளை அடையும்படி மக்களை ஊக்கப்படுத்தி வேலை செய்யும் திறமையை கொண்டிருப்பர்.

## அனைவரும் ஊழியம் செய்யலாம்

இந்த இரண்டு வரங்கள் அல்லது ஐந்து விசேட தலைமைத்துவ நிலைகளோடு விசுவாசிகளின் தலைமைத்துவம் எல்லைப்படுத்தப்படவில்லை. வேறு ஆவிக்குரிய வரங்களை கொண்டிருக்கும் விசுவாசிகள் வேறுப்பட்ட தலைமைத்துவ நிலைகளை சேவிக்கும்படி சபையினால் கேட்டுக்கொள்ளப்படலாம்.

உதாரணத்திற்கு, கொடுக்கும் வரமுள்ள ஒரு நபர் சபை நிதி குழுவில் வழிநடத்தும்படி கேட்டுக்கொள்ளப் படலாம். குணமாக்கும் வரமுடைய ஒரு நபரை உள்ளூர் சபையில் நோயாளி குழுவில் ஊழியம் செய்யும் விசுவாசிகளுக்கு தலைமைத்துவம் தாங்கும்படி கேட்டுக்கொள்ளப்படலாம். ஆவிக்குரிய வரங்கள் கொடுக்கப்பட்ட ஊழிய வேலைகளானது அநேக தலைமைத்துவ சந்தர்ப்பங்களை உள்ளடக்குகின்றது. ஆவிக்குரிய வரங்கள் ஒன்று கூட இல்லாத விசுவாசி கூட தன்னுடைய சொந்த சரியான விருத்திக்கூடாக தலைவராகும் படி அவருக்கு சாத்தியம் உள்ளது.

## வேறு வேதாகம நிலைகள்

வேதாகமத்தில் வேறு தலைமைத்துவ நிலைகள் குறிப்பிடப்பட்டுள்ளன, ஆனால் அவைகள் எல்லாம் ஆவிக்குரிய வரங்கள் அல்ல. அவைகள் “அலுவலக” ரீதியான ஏற்படுத்தப்பட்டவை, ஏனென்றால் நடைமுறை காரியங்கள் சபையிற்கு அவசியமாகின்றது. புதிய ஏற்பாட்டில் தொண்டர், மூப்பர், பாதிரி ஆகிய அலுவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (சில மக்கள் பாதிரியை போதகருக்கு ஒத்ததாக கருதுவர். மற்றவர்கள் அதை தனிப்பட்ட அலுவலகமான கருதுவர்.)

சபை கட்டமைப்பை நாம் பின்பற்றுவதற்கு உதாரணமாக தேவனால் ஆரம்ப சபை பதிவுகள் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த அலுவல்களும் இன்றைய சபையில் கூட செயல்பட வேண்டும். அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவி-சேஷகர்கள், மேய்ப்பர்கள், போதகர்கள் மற்றும் தலைமைத்துவம், நிர்வாகம் ஆகிய வரங்களை கொண்டுள்ளோர் போன்ற தலைமைத்துவ வரங்களை உடையோருக்கு இந்த அலுவலக குறிக்கோள்கள் ஈடுபட செய்கின்றது. இந்த நிலைகளை படிப்பதற்கு கீழ்வரும் கட்டமைப்பை பயன்படுத்துங்கள்:

| **தலைப்பு** | **வசனம்** | **பதவி** |
|---|---|---|
| பாதிரி | 1 தீமோத்தேயு 3:3-7<br>பிலிப்பியர் 1:1<br>தீத்து 1:5-9<br>1 பேதுரு 5:2-3 | அநேகர் பாதிரியை போதகரோடு ஒத்ததாக கருதுகிறார்கள். இவர் விசுவாசிகளின் குழுவிற்கு நீண்டகால கரிசினையை கொண்டிருப்பார். |
| உதவியாளர் | 1 தீமோத்தேயு 3:8-13<br>பிலிப்பியர் 1:1<br>அப்போஸ்தலர் 6:1-7 | சேவித்தல் மற்றும் உதவுதலில் ஊழியம் செய்யும் உதவியாட்களை இந்த வசனங்கள் குறிப்பிடுகின்றது. |
| பெண் உதவியாளர் | 1 தீமோத்தேயு 3:11<br>ரோமர் 16:1-2 | பெண் உதவியாளர்கள் வேதாகமத்தில் விசேடமாக குறிப்பிடப்படவில்லை. சேவித்தல் அல்லது உதவும் ஊழியத்தில் வேறு பெண்கள் அல்லது உதவியாட்களின் மனைவிகளுக்கு இந்த பதத்தை சில சபைகள் உபயோகிக்கின்றது. |
| மூப்பர் | அப்போஸ்தலர் 20:17,28-32<br>அப்போஸ்தலர் 14:23; 15<br>அப்போஸ்தலர் 16:4; 11:30<br>1 தீமோத்தேயு 5:17<br>1 பேதுரு 5:1-4<br>தீத்து 1:5<br>யாக்கோபு 5:14 | சபை தீர்மானங்களில் மூப்பர்கள் வழங்கும் தீர்மானங்கள், விசுவாசிகளின் தேவைகளுக்கு ஊழியம் செய்தல் மற்றும் உள்ளூர் சபை அங்கத்தவர்களின் கவனிப்பு மற்றும் அபிவிருத்திகளில் பங்குபற்றுதல் போன்றவற்றை இந்த வசனங்கள் குறிப்பிடுகின்றது. |

(மூப்பர்களில் குறித்துக்கொள்ளுங்கள்: “மூப்பர்” என்ற முதலாவது வார்த்தை வேதாகமத்தில் யாத்திராகமம் 3:16ல் இஸ்ரவேல் தலைவர்களை குறிப்பிட பயன்படுத்துகின்றது. வேதாகமம் முழுவதற்குமூடாக இஸ்ரவேல-ர்களின் தலைவர்களை குறிப்பிட அநேக வசனங்கள் காணப்படுகின்றது. சபையில் அறியப்பட்ட மூப்பர்களின் தலைமைத்துவ நிலைகளில் இருந்து இந்த மூப்பர்களின் நிலை வித்தியாசமாகும். மேற்கண்ட வசனங்களில் பட்டியலிடப்பட்ட சபை மூப்பர்களிடமிருந்து இஸ்ரவேலர்களின் மூப்பர்கள் வேறுப்பட்டவர்கள்.)

மூப்பர், உதவியாட்கள் மற்றும் பாதிரி ஆகியோர் விசேட தலைவர்களை போல் சபையை சுதந்திரமாக நடத்த மாட்டார்கள் (தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், போதகர்கள்). மூப்பர்கள், உதவியாட்கள் மற்றும் பாதிரிகளை மனிதர்களே தெரிவுசெய்கின்றார்கள், ஆனால் இந்த விசேட தலைமைத்துவ வரங்களோடு உடையவர்கள் தேவனால் சபையில் ஏற்படுத்தப்படுகின்றது.

## நடைமுறை தலைமைத்துவ நிலைகள்

பல வருட காலமாக, சபையில் நடைமுறை மற்றும் அலுவலக தேவைகளை சந்திக்கும்படியாக வேறு அநேக தலைமைத்துவ நிலைகள் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்த நிலைகள் வேதாகமங்களில் குறிப்பிடப்பட வில்லை, ஆனால் அவைகள் உள்ளூர் ஐக்கிய ஊழியத்தில் முக்கியமானவை ஆகும். இந்த பாடத்தின் “மேலதிக படிப்பினைக்கு” பகுதியில் இந்த நிலைகளின் சில பட்டியலிடப்பட்டுள்ளன.

## சபை கட்டமைப்பு

கீழ்கண்ட வரைபடமானது நீங்கள் கற்ற தலைமைத்துவ வரங்கள் எவ்வாறு சபை கட்டமைப்பில் ஒன்று படுகின்றது என்பதை காட்டுகின்றது:

### சபை

விசேட தலைமைத்துவ வரங்கள்:

▽

அப்போஸ்தலர்கள்
தீர்க்கதரிசிகள்
சுவிசேஷகர்கள்
மேய்ப்பர்கள்
போதகர்கள்

▽

நிர்வாகம், தலைமைத்துவம், பாதிரிகள், உதவியாட்கள், மூப்பர் மற்றும் சபையிலுள்ள அனைத்து அங்கத்தவர்களும் தேவன் அவர்களுக்கு ஏற்படுத்திய இடத்தில் அவர்களுக்கு உருவாக்கப்பட்ட வரங்களினால் சபையில் அவர்களுடைய ஆவிக்குரிய வரங்களை பயன்படுத்துகின்றனர்.

▽

அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளினால் இடப்பட்ட அஸ்திபாரம் எபேசியர் 2:20

▽

"இயேசு கிறிஸ்துவின் கன்மலையின் மேல் கட்டப்பட்டவை"
மத்தேயு 16:18, 1 கொரிந்தியர் 3:11, எபேசியர் 2:20



## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

2. பட்டியல் ஒன்றிலுள்ள பட்டியல் நிலைகளை பாருங்கள். பட்டியல் இரண்டில் வரைவிலக்கணத்தை படியுங்கள். கொடுக்கப்பட்ட வெற்றிடத்தில் தலைமைத்துவத்தின் நிலையை மிகச்சிறப்பாக விபரிக்கும் வரைவிலக்கணத்தின் எண்ணை எழுதுங்கள். முதலாவதானது உங்களுக்கு உதாரணமாக செய்யப்பட்டுள்ளது.

| **பட்டியல் ஒன்று** | **பட்டியல் இரண்டு** |
|---|---|
| ..... தீர்க்கதரிசி | 1. புதிய சபைகளை உருவாக்கி அவைகளை கண்காணிக்கும் பொருட்டு மற்றொருவரினால் செயற்படும் விதமாக அதிகாரத்துடன் அனுப்பப்பட்டவர். |
| ..... அப்போஸ்தலர் | 2. தேவனுடைய செய்தியை அவருடைய மக்களுக்கு உடனடியாக தொடர்பு படுத்துவதற்கு விசேட ஏவுதலின் கீழ் பேசுபவர்: அத்தோடு தலைமைத்துவ நிலையையும் கொண்டிருப்பர். |
| ..... மேய்ப்பர் | 3. கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தவர்களுக்கு பொறுப்பானவராக மாறுவதோடு அவிசுவாசிகள் பிரதிபண்ணும் வழியில் அவர்களுக்கு சுவிசேஷத்தை பகிர்வார்: “நல்ல செய்தியை கொண்டு வரும் ஒருவர்.” |
| ..... சுவிசேஷகர் | 4. விசுவாசிகளின் ஆவிக்குரிய போராட்டத்தில் நீண்ட நிலை தலைமைத்துவத்தை கொண்டிருப்பார்: வார்த்தை என்றால் “மேய்ப்பர்” என்று பொருள். |
| ..... போதகர் | 5. மற்றவர்கள் கற்று, கற்றதை பிரதிபண்ணும் வழியில் தேவனுடைய வார்த்தையை தொடர்புபடுத்துபவர்: அத்தோடு கூட ஓர் தலைமைத்துவ நிலை ஆகும். |
| ..... தலைமைத்துவம் | 6. மக்கள் இலக்குகளை அடையும்படி ஊக்கப்படுத்துபவர். |
| ..... நிர்வாகம் | 7. கப்பலின் விமானிக்கு ஒத்ததாகும்: வழியை காட்டுபவர். |

3. இந்த பாடத்தில் கலந்துரையாடப்பட்ட வேறு மூன்று வேதாகம தலைமைத்துவ அலுவல்களை பட்டியல் படுத்தவும்.

...................................................... ...................................................... ......................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

உள்ளூர் சபையில் வேறு சில தலைமைத்துவ நிலைகள் சில இங்கே பட்டியலிடப்பட்டுள்ளன:

**ஜெபம் மற்றும் குணமாக்குதலின் ஊழியங்கள்:**

-பரிந்துபேசுதலின் ஜெபம்
-எண்ணெயினால் அபிஷேகித்தல்
-ஜெப உணவுகள்
-ஜெப குழு
-உதவும் அழைப்புக்கள்
-தொலைபேசியினால் ஜெபித்தல்
-ஜெப சங்கிலி
-உபவாசம்
-ஜெப ஆலோசனை

**நடைமுறை ஊழியங்கள்:**

-அலுவலக உதவிகள்
-சபை செயலாளர்
-கடிதங்களை ஆயத்தப்படுத்தல்
-சபை சமையல்களில் உதவுதல்
-சிறுவர் வேலைகள்
-பாதுகாப்பு வேலைகள்
-திருத்துதல்
-பதனிடும் வேலை
-கடிதங்களை எழுதுதல்
-திருவிருந்தை ஆயத்தப்படுத்தல்
-சிறுவர் பராமரிப்பு
-நிதி உதவிகள்
-நாடா கச்சு ஊழியங்கள்
-தொலைபேசி அழைப்புக்கள்
-பதிவுகளை கையாளுதல்
-விளம்பரப்படுத்தல்
-பரிசு பொருட்களை உருவாக்குதல்
-விளையாட்டு செயற்பாடுகள்
-வழிகாட்டுதல்
-திருமணங்கள்
-பாடல் சங்கிலிகளை உருவாக்குதல்
-உபசரிப்பு
-பொக்கிஷங்கள்
-குழு செயற்பாடுகள்
-மீள் உற்பத்தி திட்டங்கள்
-செய்தி அறிக்கைகளை தயாரித்தல்

**படிப்பு சம்பந்தமான ஊழியங்கள்:**

-வேதாகம போதகர்
-செயற்பாட்டு தலைவர்
-வாலிபர் ஊழியம்
-மகாநாடு பேச்சாளர்
-ஆய்வு செய்தல்
-சபை நூலகம்
-கருத்தரங்கு தலைவர்
-பெரியோர் வகுப்புக்கள்
-சிறுவர் ஊழியங்கள்
-சீஷத்துவம்
-ஞாயிறு பாடசாலை ஆசிரியர்
-வேதாகம பாடசாலை பயிற்றுவிப்பாளர்
-பயிற்சிக்குட்படுத்தல்
-புதிய விசுவாசிகளுக்கு போதித்தல்

**ஆலோசனை ஊழியங்கள்:**

-ஜெப ஆலோசனை
-திருமண ஆலோசனை
-வாலிப ஆலோசனை
-கர்ப்பிணி தாய்மாருக்கான ஆலோசனை
-மற்றவர்களை உற்சாகப்படுத்தல்
-வீடுகளை சந்தித்தல்
-வைத்தியசாலைகளை சந்தித்தல்
-பிரச்சினைகளை தீர்வுகாணல்
-தொடர் வரும் அழைப்புக்கள்
-நெருக்கடி தீர்வு மையங்கள்
-தொலைபேசி ஆலோசனை

**வெளியக ஊழியங்கள்:**

-சிறுவர் சுவிசேஷங்கள்
-பேருந்து ஊழியங்கள்
-நாடகம்
-உயர் பாடசாலை ஊழியம்
-அரசியல் செயற்பாடுகள்
-இலக்குகள்
-போராட்டங்கள்
-தொலைக்காட்சி / வானொலி நிகழ்ச்சிகள்
-தெரு சாட்சிகள்
-கல்லூரி ஊழியங்கள்
-வெளியக மையங்கள்
-தேநீர் விடுதி
-ஆண் மற்றும் பெண் ஊழியங்கள்
-வீட்டுக்கு வீடு சாட்சிகள்
-வேதாகம கல்லூரி விடுமுறைகள்
-வேதாகமம் மற்றும் இலக்கிய விநியோகங்கள்

**தலைமைத்துவ ஊழியங்கள்:**

-ஒழுங்குப்படுத்தல்
-ஞாயிறு பாடசாலை கண்காணிப்பாளர் அல்லது திணைக்கள கண்காணிப்பாளர்
-திட்டமிடுபவர்
-வீட்டு குழு தலைவர்
-இலக்குகளை ஒருங்கிணைப்பாளர்
-தலைவர்
-குழு தலைவர்
-கிறிஸ்தவ கல்வி இயக்குனர்
-சபை நிர்வாகி

**கவனிப்பு ஊழியங்கள்:**

-பராமரித்தல்
-உணவளிக்கும் செயற்திட்டங்கள்
-வைத்தியசாலை சந்திப்புக்கள்
-இரவு விருந்தினர்கள்
-தேவையானோருக்கு உடை வழங்குதல்
-மருத்துவ இல்லங்கள்
-பொழுதுபோக்குகள்
-சிறைச்சாலை சந்திப்புக்கள்
-முதியோர்களை சந்தித்தல்
-போக்குவரத்து
-குழந்தை பராமரிப்பு
-தொலைபேசி ஊழியம்
-இலக்குகள்
-தெரு ஊழியம்
-நெருக்கடி நிலையம்
-ஓய்வு பெற்ற மக்களை சந்தித்தல்
-துஷ்பிரயோக மக்களை சந்தித்தல்
-ஊனமுற்ற மக்களை சந்தித்தல்
-தேவையுள்ளோரை சந்தித்தல்
-திருமணமாகாத தாய்மார்களுக்கு ஊழியம் செய்தல்

**வேறு ஊழியங்கள்:**

-இசை
-சங்கீத குழு
-பியானோ இசைத்தல்
-நாடகங்களின் வாசிப்பு
-சங்கீத குழுக்கள்
-மொழிபெயர்ப்பு வேலைகள்
-நாடகங்கள்
-ஆராதனை வழிநடத்தல்
-ஓர்கன் வாசித்தல்
-பொம்மலாட்டம்
-வியாக்கியானம் செய்தல்
-அறிவிப்பு பலகைகள்

-கிறிஸ்தவ காரியங்களை எழுதுதல் மற்றும் திருத்துதல்
-பாடல்கள் எழுதுதல்
-சபை வாத்திய குழு
-சபை சங்கீத குழு
-விசேட தருணங்களில் சபையை அலங்கரித்தல்
-சித்திரம்

# அதிகாரம் மூன்று

## வழிநடத்துவதற்கான அபிஷேகம்

**குறிக்கோள்கள்:**

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ “அபிஷேகத்தை” வரைவிலக்கணப்படுத்தவும்,
- ☐ அபிஷேகத்தின் மூன்று வகைகளை இனங்காணவும்,
- ☐ ஒவ்வொரு வகைகளின் குறிக்கோள்களை விபரிக்கவும்,
- ☐ ஆவிக்குரிய அபிஷேகத்தின் ஆதாரத்தை இனங்காணவும்,
- ☐ அபிஷேகத்தின் நோக்கங்களை கலந்துரையாடவும்,
- ☐ தேவனுடைய அபிஷேகத்தின் அடிப்படைகளை இனங்காணவும்,
- ☐ தேவனால் அபிஷேகம் பெற்றோரை எதிர்க்கும் சேனைகள் குறித்து கலந்துரையாடவும்,
- ☐ நீங்கள் அபிஷேகம் பெற்ற நிலையில் மாத்திரம் ஊழியம் செய்தல் ஏன் முக்கியமானது என்பதை விபரிக்கவும்,
- ☐ தேவனுடைய புதிதான அபிஷேகத்தை எவ்வாறு தொடர்ந்து பேணுவது என்பதை விபரிக்கவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **என் கொம்பைக் காண்டாமிருகத்தின் கொம்மைப்போல உயர்த்துவீர்: புது எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்படுகிறேன். (சங்கீதம் 92:10)**

### அறிமுகம்

தேவன் தலைவர்களை உலகத்திற்கு தாக்கமுள்ளவர்களாகவும், சித்தியுள்ளவர்களாகவும் இருக்க வேண்டுகின்றார். அந்த வகை தலைவராக நீங்கள் எவ்வாறு இருப்பீர்கள்? நடைமுறை காரியங்களில் அறிவை கொண்டிருத்தலும், பொதுவான இலக்குள்ள தலைவராயிருத்தலும் சித்தியுள்ள தலைவர்களாக மாற உங்களுக்கு உதவி புரியும். தலைவர்களுக்கு கூட தேவைப்படும் வேதாகம தகுதிகள் காணப்படுகின்றன. ஆவிக்குரிய வரங்கள், திறமைகள், கல்வி மற்றும் அனுபவங்கள் கூட முக்கியமானவை. இவைகளை குறித்து பின்னர் நீங்கள் கற்பீர்கள்.

ஆனால் தலைவர்களுடைய மிகவும் முக்கியமான காரியம் பரிசுத்த ஆவியானவரினால் அபிஷேகம் பெறுவதாகும். உங்களால் தேவனுடைய அபிஷேகம் இல்லாமல் வல்லமையாக வழிநடத்தல், ஒழுங்கமைத்தல், ஆயத்தம் செய்தல் மற்றும் சுவிசேஷம் செய்ய முடியாது. தேவனால் தலைமைத்துவத்திற்கு அழைக்கப்பட்டவர்களுக்கும், தெர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கும் அவசியமான பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை இந்த அதிகாரம் நோக்கும்.

### அபிஷேகம்

“அபிஷேகித்தல்” என்றால் அர்ப்பணித்தல் அல்லது ஒன்றை புனிதப்படுத்தல் அல்லது ஒன்றிற்கு எண்ணெயை பிரயோகித்தல் ஆகும். எண்ணெய் பரிசுத்த ஆவியானவருக்கு அடையாளமாயிருக்கிறது.

## அபிஷேகம் பண்ணப்பட்ட ஒருவர்

“கிறிஸ்து” என்றும் கிரேக்க பாஷை பெயரின் அர்த்தம் “அபிஷேகம் பண்ணப்பட்ட ஒருவர்” ஆகும். இயேசு தன்னுடைய பூலோக ஊழியத்தை அறிமுகம் செய்த விதமானது:

> **கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்: என்னை அபிஷேகம் பண்ணினார். (லூக்கா 4:18)**

இயேசு பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தினால் அது உண்டாயிற்று என அதை தெளிவாக்கினார். அவரால் முடிந்தது...

> **தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி... இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும்... சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும்... குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும்... நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்... கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும்... (லூக்கா 4:18-19)**

இயேசுவுக்கு ஊழியம் செய்ய அபிஷேகம் அவசியமானால், பின் எமக்கும் கூட அது அவசியமாகும்.

## மூன்று வித அபிஷேகங்கள்

பழைய ஏற்பாட்டில் மூன்று விதமான அபிஷேகங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவைகள் தலைவர்கள் கொண்டிருக்க தேவன் வேண்டும் இயற்கையான உதாரணங்கள் அல்லது ஆவிக்குரிய அனுபவங்களின் “வகைகள்” ஆகும்:

### குஷ்டரோக அபிஷேகம்: உறவுமுறை

குஷ்டரோகம் ஒரு கொடூரமான நோயாகும், இது பாதிக்கப்பட்டவரின் மாம்சத்தை மெதுவாக இல்லாமல் செய்கின்றது. கால்விரல்கள், விரல்கள் மற்றும் பிற உடல் பாகங்கள் முடிவாக அழுகி விழுந்து விடும்.

பழைய ஏற்பாட்டு காலங்களில் தொழுநோயுடைய மனிதர் குஷ்டரோகி என அழைக்கப்பட்டார். குஷ்டரோகி தனது சமூகத்திடமிருந்து தடைசெய்யப்பட்டிருந்தார், ஏனென்றால் இந்த நோய் தொற்றும் என்பதாலாகும். அவருடன் தொடர்பு கொள்ளுவதிலிருந்து மற்றவர்களை வைத்துக்கொள்ளாமலிருக்க அவர் செல்லும் எல்லா இடங்களிலும் “தீட்டு” என சத்தமிடும்படியாக கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தார். குஷ்டரோகம் அவருடைய பௌதீக உடலை மெதுவாக இல்லாமல் செய்து விடுவதோடு, அவர் வலியுடனான மரணத்தை தழுவ வேண்டும்.

வேதாகமத்தில், தேவன் ஆவிக்குரிய உண்மைகளை காட்டுவதற்கு இயற்கையான உதாரணங்களை உபயோகிக்கின்றார். குஷ்டரோகம் பாவத்திற்கு உதாரணமாக உபயோகப்படுத்தப்படுகின்றது. பௌதீக உடலை குஷ்டரோகம் அழிப்பதைபோல், பாவம் ஆவிக்குரிய ரீதியில் உங்களை அழித்து அது உங்களுடைய ஊழியத்தை இல்லாமல் செய்துவிடும்.

பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தின்படி, குஷ்டரோகமுடைய மனுஷனை சுத்தம்பண்ணும்படியாக தேவன் விசேட அறிவுறுத்தல்களை கொடுத்திருந்தார். இந்த பாடத்தை செயற்படுத்துவதின் முன் இதை உங்களுடைய வேதாகமத்தில் லேவியராகமம் 14ஐ வாசியுங்கள். நீங்கள் வாசிக்கும் ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் ஆவிக்குரிய ரீதியில் நீங்கள் சுத்தப்படுத்தும்படியான அடையாளமாக இருக்கின்றது:

**பாவகுற்றத்தை சுமந்து நீக்கும் பறவை:** ஒரு பறவை கொல்லப்பட்டு, அதனுடைய இரத்தம் மற்றதையின் மேல் போடப்படும். இது உங்களுடைய பாவத்தை சுமந்து இயேசு அவருடைய இரத்தத்தை சிந்தியமையிற்கு அடையாளமாக இருக்கின்றது.

**மனந்திரும்புதலும் அறிக்கையிடுதலும்:** பாவத்திலிருந்து சுத்தமாகி மறுபடியும் பிறக்கும்படியாக நீங்கள் செய்ய வேண்டியது இதுவே.

**ஊற்றுநீர்:** தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு இது அடையாளமாக இருக்கின்றது.

**எண்ணெயினால் அபிஷேகித்தல்:** உங்களுடைய வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவருடைய கிரியையிற்கு இது அடையாளமாக இருக்கின்றது. எண்ணெயானது குஷ்டரோகியினுடைய காது, கட்டைவிரல் மற்றும் காலில் இடப்படவேண்டும் என்பதை குறித்துக்கொள்ளுங்கள். இதை தலைமைத்துவத்திற்கு பிரயோகித்தலானது, நாம் இதையொத்த ஆவிக்குரிய அபிஷேகத்தை அனுபவிக்க வேண்டும்....

**காது:** தேவனுடைய சத்தத்தை அறியும் இயலுமை.

**கை:** அவரை சேவிக்கும் இயலுமை.

**கால்:** அவருடன் சரியான உறவில் நடத்தல்.

தலைவர்களுக்கான மிகவும் முக்கியமான அபிஷேகமானது இந்த “குஷ்டரோக” அபிஷேகமாகும் ஏனென்றால் இது தனிப்பட்ட உறவு முறையிற்கு அடையாளமாக இருக்கின்றது. நீங்கள் மற்றவர்களை வழிநடத்த வேண்டுமாயின் தேவனுடனான உங்களுடைய சொந்த உறவுமுறையானது சரியாக இருத்தல் வேண்டும். நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும், தேவனுடைய சத்தத்தை கேட்க கேண்டும், அவரை சேவிக்க வேண்டும் மற்றும் அவரோடு சரியான உறவுமுறையில் நடக்க வேண்டும்.

## ஆசாரியனுடைய அபிஷேகம்: பரிசுத்தம்

தலைவர்களும் ஆசாரியனுடைய அபிஷேகத்தை கூட அனுபவித்திருக்க வேண்டும். இதை குறித்து யாத்திராகமம் 29 மற்றும் 30 லேவியராகமம் 8ல் இந்த பாடத்தை செயற்படுத்த முன் வாசியுங்கள். ஆசாரியனுடைய அபிஷேகமானது பரிசுத்தத்திற்கான அபிஷேகமாகும், சரியான வாழ்க்கை மற்றும் நடத்தையினால் அவருக்கு சேவிக்கும்படியாக தேவனுக்காக ஏற்படுத்திக் கொள்ளுவதாகும்.

பழைய ஏற்பாட்டு காலங்கள், ஆசாரியனால் செய்ய முடியாத அநேக காரியங்கள் காணப்பட்டன, ஏனென்றால் அவருடைய அலுவலகத்திலுள்ள பரிசுத்தத்தினால் ஆகும். அவருடைய வழிநடத்துதலுக்கான விசேட அபிஷே கத்தின் காரணமாக, சில காரியங்கள் ஆசாரியனை தீட்டுப்படுத்தும் ஆனால் இஸ்ரவேல் கூட்டத்திலுள்ள மற்ற அங்கத்தவர்களை தீட்டுப்படுத்த மாட்டாது.

தலைவர் என்ற வகையில், நீங்கள் பரிசுத்தத்தின் ஆசாரிய அபிஷேகத்தை அனுபவிக்க வேண்டும், அத்தோடு தேவனுடைய சேவையிற்காக ஏற்படுத்தப்பட வேண்டும். தேவனுடைய வார்த்தையிற்கு ஒத்ததாக நீங்கள் வாழ வேண்டும். உங்கள் அலுவலகத்தின் பரிசுத்தத்தின் காரணமாக உங்களால் செய்ய முடியாத காரியங்கள் காணப்படலாம். மற்றவர்களை வழிநடத்தும்படி உங்களுடைய விசேட அபிஷேகத்தின் காரணத்தினால், உங்களை மாசுப்படுத்தும் காரியங்கள் மற்றவர்களை மாசுப்படுத்தாது.

## தலைவருடைய அபிஷேகம்: நிலை மற்றும் வல்லமை

பழைய ஏற்பாட்டிலுள்ள அபிஷேகத்தின் மூன்றாவது வகை தலைவருக்கான அபிஷேகமாகும். இராஜாக்கள், தீர்க்கதரிசிகள், மூப்பர்கள் போன்று தேவனுடைய மக்களை வழிநடத்தும் தலைவர்களுக்கான அபிஷேகம் இதுவாகும். தலைவருடைய அபிஷேகம் என்பது தேவனால் கொடுக்கப்பட்ட நிலையின் தலைவர்களுக்கானது என்பதோடு அந்த நிலையை நிறைவேற்றுவதற்கு அவருக்கு கொடுக்கப்பட்ட வல்லமையாகும்.

உதாரணத்திற்கு, சவுலினுடைய அபிஷேகமானது தேவனுடைய மக்களின் மேல் தலைவராயிருக்கும்படியான நிலையாகும்:

> **அப்பொழுது சாமுவேல் தைலக்குப்பியை எடுத்து, அவன் தலையின் மேல் வார்த்து, அவனை முத்தஞ் செய்து: கர்த்தர் உன்னைத் தம்முடைய சுதந்திரத்தின்மேல் தலைவனாக அபிஷேகம் பண்ணினார் அல்லவா? (1 சாமுவேல் 10:1)**

1 சாமுவேல் 16ல் தாவீதினுடைய அபிஷேகம் பதியப்பட்டுள்ளது. அபிஷேகத்தின் காரணமாக தாவீதிற்கு மேல் தேவனுடைய வல்லமை வந்தது என இந்த பகுதி தெளிவாக புலப்படுத்துகிறது:

> **(தாவீதின் தந்தை) ஆள் அனுப்பி அவனை (தாவீதை) அனுப்பித்தான்: அவன் சிவந்தமேனியும், அழகிய கண்களும், நல்ல ரூபமுள்ளவனாயிருந்தான்: அப்பொழுது கர்த்தர்: இவன் தான், நீ எழுந்து இவனை அபிஷேகம்பண்ணு என்றார்.**
>
> **அப்பொழுது சாமுவேல்: தைலக் கொம்மை எடுத்து, அவனை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம் பண்ணினான். அந்நாள்முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின் மேல் வந்து இறங்கியிருந்தார். சாமுவேல் எழுந்து ராமாவுக்குப் போய்விட்டான். (1 சாமுவேல் 16:12-13)**

தலைவருடைய அபிஷேகமானது அலுவல்களுக்கு நிலை, வல்லமை மற்றும் அதிகாரத்தை கொடுக்கின்றது. இந்த அபிஷேகத்தினால், தேவனுடைய ஆவியானவர் ஓர் நபருக்கு மேல் வருவார், ஆகவே அவர் தேவனுடைய மக்களை சரியாக வழிநடத்தலாம். இந்த வல்லமையின் அபிஷேகத்தின் புதிய ஏற்பாட்டு வாக்குத்தத்தத்தை அப்போஸ்தலர் 1:8ல் காணலாம்.

> **பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)**

இந்த வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலானது அப்போஸ்தலர் 2ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டின் நிறைவேறுதலான தலைவர்களுக்கான வல்லமையின் அபிஷேகமானது பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானமாகும்.

புதிய ஏற்பாட்டின் பிரகாரமான அபிஷேகத்தின் நிலை எபேசியரில் விபரிக்கப்பட்டுள்ளது:

> **அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். (எபேசியர் 4:11)**

தேவன் குறித்த மக்களை சபையில் தலைமைத்துவ நிலையிற்கு அபிஷேகித்துள்ளார், அத்தோடு அவர்களுடைய அழைப்பை நிறைவேற்றி அவர்களுக்கு கொடுக்க அபிஷேகத்தின் வல்லமையை ஏற்படுத்தியுள்ளார்.

## தேவனிடமிருந்தே அபிஷேகம் வருகின்றது

இந்த மூன்று அபிஷேகங்களும், அனுபவிக்கப்படவேண்டிய தலைவர்களுக்கான அடையாளங்கள், அனைத்தும் தேவனிடமிருந்து வருகின்றது. சாமுவேல் சவுலை அபிஷேகிக்கும்பொழுது “கர்த்தர் உன்னை அபிஷேகம் பண்ணினார்....” (1 சாமுவேல் 10:1; 15:17) என்று அவர் கூறினார். தேவன் தம்முடைய அபிஷேகத்தை அறிவிக்கும் பொழுது, “கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்” என கூறினார் (லூக்கா 4:18; அப்போஸ்தலர் 10:38 ஐயும் பார்க்கவும்). கர்த்தரே அபிஷேகிக்கப்பட்டோரை எழுப்புகிறவர் ஆவார். தேவன் சாமுவேலிடம் கூறினார்:

> **நான் என் உள்ளத்துக்கும் என் சித்தத்துக்கும் ஏற்றபடி செய்யத்தக்க உண்மையான ஒரு ஆசாரியனை எழும்பப்பண்ணி, அவனுக்கு நிலையான வீட்டைக் கட்டுவேன்: அவன் என்னால் அபிஷேகம் பண்ணப்பட்டவனுக்கு முன்பாகச் சகல நாளும் நடந்துகொள்ளுவான். (1 சாமுவேல் 2:35)**

ஆளுகை மற்றும் அமைப்பினால் ஒழுங்குப்படுத்தப்பட்ட அபிஷேகத்தை நீங்கள் அனுபவிக்க வேண்டாம். (எவ்வாறாயினும் இதை செய்வதினால் எந்த பிழையும் இல்லை). தலைவருக்கான அபிஷேகம் தேவனிடமிருந்து வருகின்றது:

> **நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது... (1 யோவான் 2:27)**

ஸ்தேவன் மனிதர்களால் சபை வேலைக்காரனாக ஏற்படுத்தப்பட்டார். அவர் தேவனால் சுவிசேஷகராக அபிஷேகம் பண்ணப்பட்டார் (அப்போஸ்தலர் 6). அது தேவனுடைய அபிஷேகமாகும், மனிதனானது அல்ல, அதுவே மிக முக்கியமாகும்.

## அபிஷேகத்தின் அடிப்படை

எந்த அடிப்படையில் தேவன் இந்த அபிஷேகத்தை கொடுக்கின்றார்? அறிவு, கல்வி, அனுபவம் மற்றும் இயலுமை அடிப்படையில் தேவன் அபிஷேகம் செய்வதில்லை. வெளியக தோற்றத்தின் பிரகாரம் அபிஷேகம் இல்லை. அது இருதயத்தின் குறிக்கோளின் அடிப்படையில் உள்ளது.

சாமுவேல் புதிய இராஜாவாக அபிஷேகிக்க ஈசாயின் வீட்டிற்கு சென்றபோது, அவர் வெளியக தோற்றத்தில் மாபொரும் மனிதனை எதிர்பார்த்தார்:

> **அவர்கள் வந்தபோது, அவன் (சாமுவேல்) எலியாபைப் பார்த்தவுடனே: கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்படுபவன் இவன் தானாக்கும் என்றான்.**
>
> **கர்த்தர் சாமுவேலை நோக்கி: நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீரவளர்ச்சியையும் பார்க்கவேண்டாம் நான் இவனைப் புறக்கணித்தேன் மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன் மனுஷன் முகத்தைப் பார்ப்பான் கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார். (1 சாமுவேல் 16:6-7)**

தேவன் தாவீதை அவனுடைய இருதயத்தின் குறிக்கோள் மற்றும் நிலையின் காரணமாக அபிஷேகித்தார். நீங்கள் உள்ளுக்குள்ளாக எவ்வாறு இருக்கின்றீர்கள் என்பதை தேவன் பார்க்கின்றார்.

## அபிஷேகத்தின் குறிக்கோள்கள்

அபிஷேகத்தின் சில குறிக்கோள்கள் இங்கு காணப்படுகின்றது:

### தேவனுடைய குறிக்கோள்களை நிறைவேற்ற:

தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற தலைவர்களுக்கு அபிஷேகம் கொடுக்கப்பட்டது. இயேசு இதை தெளிவாக குறிப்பிட்டார்:

> **கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார் தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார், இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்... (லூக்கா 4:18)**

### வழிநடத்த அறிவை கொடுக்கின்றது:

அபிஷேகமானது வழிநடத்தப்படவேண்டும் என்பதிலிருந்து மற்றவர்களை வழிநடத்துவதற்கான அறிவை உங்களுக்கு கொடுக்கின்றது:

> **நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை. அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது. அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக. (1 யோவான் 2:27)**

### நுகத்தடிகளை அழிக்கின்றது:

உங்களுடைய ஊழியத்தில் மனிதர்களை கட்டும் ஆவிக்குரிய நுகத்தடிகளை அழிக்கும் அபிஷேகம் இதுவாகும்.

வேதாகமமானது மூன்று வகையான நுகத்தடிகள் காணப்படுவதாக குறிப்பிடுகின்றது:

1. பாவத்தின் நுகம் காணப்படுகின்றது:

**நீங்கள் எகிப்தியருக்கு அடிமைகளாயிராதபடிக்கு, நான் அவர்கள் தேசத்திலிருந்து உங்களைப் புறப்படப்பண்ணி, உங்கள் நுகத்தடிகளை முறித்து, உங்களை நிமிர்ந்து நடக்கப்பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர். (லேவியராகமம் 26:13)**

2. “மாம்சம்” அல்லது “சுயம்” ஆகிய கட்டில் மக்களை வைத்திருக்கும் நுகம் காணப்படுகிறது, இது பழைய பாவத்தின் காரணியாக இருக்கின்றது:

**எப்படியெனில், நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை, நான் விரும்புகிறதைச் செய்யாமல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன். (ரோமர் 7:15)**

3. மற்ற மனிதர்களால் உங்கள் மேல் போடப்படும் கட்டாகிய மனிதனின் நுகம் காணப்படுகிறது. இந்த நுகமானது சட்டம், பாரம்பரியம் அல்லது மற்றவர்களால் சுமத்தப்படும் முடியாத உயர்தரத்திலான நடத்தைகளையும் உள்ளடக்குகின்றது:
**சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக்கட்டி மனுஷர் தோள்களின்மேல் சுமத்துகிறார்கள் தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொடமாட்டார்கள்... (மத்தேயு 23:4)**

அபிஷேகமானது இந்த அனைத்து நுகத்தையும் அழிக்கின்றது:

**அபிஷேகத்தின் நுகம் முறிந்துபோம்... (ஏசாயா 10:27)**

இந்த நுகமானது ஆழ்ந்த போதனையினால் அழிக்கப்படுவதில்லை. அவைகள் கல்வி, ஆலோசனை மற்றும் அமைப்புக்களினால் அழிக்கப்படமாட்டாது. கட்டுக்களிலானவர்களுக்கு விடுதலையின் செய்தியை எவ்வாறு கொண்டு வருவது என அறிந்த ஆவிக்குரிய தலைவர்களுக்கு மேல் தேவனுடைய அபிஷேகத்தினால் அவைகள் அழிக்கப்படுகின்றது.

## நிலையை அறிதல்:

தேவன் ஊழியத்தில் மக்களை விசேட நிலைகளில் அல்லது அழைப்பினால் அபிஷேகிக்கின்றார். உதாரணமாக, ஆசாரியர்களுடைய நிலைகளானது “அபிஷேகத்தின் காரணத்தினால்” அறியப்பட்டது (எண்ணாகமம் 18:8)

தேவன் வித்தியாசமான ஆவிக்குரிய வரங்களையும் விசுவாசிகளுக்கு அழைப்பையும் கொடுக்கின்றார் என புதிய ஏற்பாடு அதை தெளிவாக்குகின்றது. பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தில் நடக்கும் பொருட்டு தேவனுடைய திட்டத்தில் உங்களுடைய தனிப்பட்ட தேவனுடைய அழைப்பு, உங்களுடைய ஆவிக்குரிய வரங்கள், உங்களுடைய விசேட குறிக்கோள்கள் ஆகியவற்றை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். நீங்கள் அழைக்கப்படாத அல்லது அபிஷேகிக்கப்படாத நிலைகளை நீங்கள் செயற்படுத்த முயற்சித்தால், நீங்கள் கஷ்டத்தை அனுபவிப்பீர்கள். இது அபிஷேகத்தை குறித்த அடுத்த முக்கியமான கருத்தை கொண்டு வருகின்றது....

## உங்களுடைய சொந்த அபிஷேகத்தில் நடவுங்கள்

தேவன் மக்களை விசேட ஆவிக்குரிய அலுவல்கள், நிலைகள் மற்றும் அழைப்புக்களுக்கு அபிஷேகித்து இருக்கிறார். இந்த காரணியை விளங்கிக்கொள்ளாத காரணத்தினால், அநேக தலைவர்கள் தோல்வியடைந்திருக்கிறார்கள். அவர்கள் அழைக்கப்படாத அல்லது அபிஷேகிக்காத ஊழியத்தை செயல்படுத்துவதற்கு முயற்சிக்கிறார்கள்:

-எண்ணாகமம் 16ஐ வாசியுங்கள். கோராகும் மற்ற அவனுடைய மனிதரும் மோசேயுடைய அதே அபிஷேகம் இருப்பதாக உரிமை கோரினார்கள், தேவன் வித்தியாசத்தை உணர்த்தினார்.

-எண்ணாகமம் 17ஐ வாசியுங்கள். ஆரோன் மேல் விசேட வழியில் தேவன் தமது அபிஷேகத்தை தங்கப்பண்ணினார் என்பதை நிரூபித்தார்.

-1 சாமுவேல் 13:8-14ஐ வாசியுங்கள். சவுல் தான் பெறப்படாத அபிஷேகத்தை அலுவலகத்தில் செய்ய முயற்சித்தபோது, அவன் நியாயந்தீர்க்கப்பட்டு தேவனால் புறக்கணிக்கப்பட்டார்.

-அப்போஸ்தலர் 19:13-16ஐ வாசியுங்கள். தேசாந்தரி என்னும் பெயருடைய மந்திரவாதியின் ஏழு மகன்மார் அவர்களால் செயல்படுத்தமுடியாத அபிஷேகத்தின் ஊழியத்தை முயற்சித்தபோது, அவர்கள் கடினத்தை உணர்ந்தார்கள்.

உங்களுடைய சொந்த அபிஷேகத்தில் ஊழியம் செய்தல் அல்லது உங்களால் இயலுமை இல்லாதிருக்கும் போது, ஊழியத்தில் மாபெரும் கடினத்தை அனுபவிப்பீர்கள்.

## எதிர்ப்பை எதிர்பார்த்தல்

நீங்கள் தேவனால் அபிஷேகம் செய்யப்பட்டால் சாத்தானிடமிருந்தும், அவனுடைய சேனைகளிடமிருந்தும், தேவனல்லாத மனிதர்களிடமிருந்தும் நீங்கள் எதிர்ப்பை எதிர்பார்க்கலாம்:

> **கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம்பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் ராஜாக்கள் எழும்பிநின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனைபண்ணி... (சங்கீதம் 2:2)**

> **கர்த்தாவே, உமது அடியார் சுமக்கும் நிந்தையையும், வலுமையான ஜனங்களெல்லாராலும் நான் என் மடியில் சுமக்கும் என் நிந்தையையும் நினைத்தருளும். (சங்கீதம் 89:51)**

தேவனல்லாத சேனைகள் உங்களை மறைக்க முயற்சிக்கின்றன, ஏனென்றால் அபிஷேகிக்கப்பட்ட ஊழியம் தேவனுடைய நோக்கத்தை அடையும் என அவைகள் அறிந்திருக்கின்றன.

## புதிய அபிஷேகம்

தாவீது “புதிய எண்ணெய்” குறித்து பேசுகின்றார், தேவனுடைய தொடர்ச்சியான அபிஷேகத்திற்கும், புதியதிற்கும் அடையாளமாக இருக்கின்றது:

> **என் கொம்பைக் காண்டாமிருகத்தின் கொம்பைப்போல உயர்த்துவீர், புது எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்படுகிறேன். (சங்கீதம் 92:10)**

நீங்கள் ஏற்கனவே கற்ற மூன்று வகையான தொடர்ச்சியான அனுபவத்திற்கூடான தேவனுடைய வல்லமையான புதிய அபிஷேகத்தை தொடர்ந்து கொண்டு செல்லுகின்றீர்கள்.

### குஷ்டரோக அபிஷேகம்: உறவு முறை:

உங்களுடைய தனிப்பட்ட உறவு தேவனோடு தொடர்ச்சியாயிராத பட்சத்தில் உங்களுடைய அபிஷேகமானது புதிதாக இராது. நீங்கள் தேவனுடைய வழியில் நடந்து, அவரை சேவித்து, அவருடைய சத்தத்தை கேட்பதற்கு வேதத்தை படித்து, ஜெபத்திற்கூடாக அவரோடு தொடர்பை பேணுதல் வேண்டும். உறவுமுறையல்லாத நிலை மற்றும் வல்லமையில் ஊழியம் செய்தல், சிக்குதலுக்குள் உள்ளாக்குவதோடு உங்களுடைய சொந்த அனுபவத்தை இழக்கும் விளைவை ஏற்படுத்தும்:

> **மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக்கீழ்ப்படுத்துகிறேன். (1 கொரிந்தியர் 9:27)**

> **பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில்**

**பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.**

**அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்.**

**அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன். (மத்தேயு 7:21-23)**

## ஆசாரிய அபிஷேகம்: பரிசுத்தம்:

உங்களுடைய ஊழியத்தில் தேவனுக்கு மேலான புதிய அபிஷேகத்தை நீங்கள் அனுபவிக்க வேண்டுமாயின் உங்களுடைய ஜீவியம் பரிசுத்தத்தினால் தொடர்ச்சியாக கடைபிடிக்க வேண்டும். நீங்கள் உங்கள் வாழ்க்கையிலும், ஊழியத்திலும், நீதியில் தூய்மையாகவும், முழுமையடைந்த நபராகவும், அனைத்து பகுதிகளிலும் இருத்தல் வேண்டும்.

## தலைவருக்குரிய அபிஷேகம்: நிலை மற்றும் வல்லமை:

தேவன் உங்களை அழைத்த நிலையிற்கு நீங்கள் ஊழியம் செய்ய வேண்டும். நீங்கள் மற்றவர்களுடைய ஊழியத்தையும் அழைப்பையும் செயற்படுத்த கூடாது. தேவன் உங்களுக்கு கொடுத்த இலக்குகளான ஆவிக்குரிய வல்லமையை உறுதிப்படுத்தும் பரிசுத்த ஆவியானவருடைய தொடர்ச்சியான நிரப்புதலை நீங்கள் கண்டிப்பாக அனுபவிக்க வேண்டும்.

## அவைகள் எவ்வாறு ஒன்றாக செயற்படும்

இந்த மூன்று அபிஷேகங்களும் ஒன்றாக செயற்பட்டு உங்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய புதிதான அபிஷேகத்தை வைத்திருக்கும்.

-உறவு முறை அல்லாமல், உங்களால் வல்லமையை அனுபவிக்க முடியாததோடு, உங்களால் பரிசுத்தமான வாழ்வை வாழ முடியாது.

-வல்லமையிற்கப்பால் பரிசுத்தத்தை வலியுறுத்துவது அறநெறிக்கான விளைவை ஏற்படுத்தும்.

-பரிசுத்தமான வாழ்க்கையை வாழாமல் வல்லமையையும் நிலையையும் கொண்டிருப்பது, மற்றவர்களுக்கு ஊழியம் செய்யும் நிலையிற்கு உங்களை நீங்களே ஏற்படுத்துவதோடு, உங்களில் நீங்களே “சிக்கிக்” கொண்டவர்கள் ஆவீர்கள்.

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

..........................................................................................................................................................................................

..........................................................................................................................................................................................

..........................................................................................................................................................................................

2. “அபிஷேகித்தல்” என்பதற்கான அதன் அர்த்தம் என்ன?

..........................................................................................................................................................................................

..........................................................................................................................................................................................

3. எண்ணெய் எதற்கு அடையாளமாக இருக்கின்றது?

..........................................................................................................................................................................................

..........................................................................................................................................................................................

4. இந்த பாடத்தில் கலந்துரையாடப்பட்ட மூன்று வகையான அபிஷேகத்தை பட்டியல்படுத்தி, ஒவ்வொன்றிற்கான அர்த்தத்தை விபரிக்கவும்.

..........................................................................................................................................................................................

..........................................................................................................................................................................................

..........................................................................................................................................................................................

5. ஊழியத்திற்கான அபிஷேகத்தின் ஆதாரம் யார்?

..........................................................................................................................................................................................

6. அபிஷேகத்திற்கான குறிக்கோள்களை கலந்துரையாடுக.

..........................................................................................................................................................................................

..........................................................................................................................................................................................

7. தேவன் எந்த அடிப்படையில் அபிஷேகிக்கிறார்? அது கல்வி, அனுபவம், அறிவு நுட்பம் ஆகியவற்றினாலா?

................................................................................................................................................................

................................................................................................................................................................

................................................................................................................................................................

8. தேவனல்லாத சேனைகள் ஏன் தேவனுடைய அபிஷேகத்தை எதிர்க்கின்றன என்பதை விபரிக்கவும்.

................................................................................................................................................................

................................................................................................................................................................

................................................................................................................................................................

9. தேவனால் அபிஷேகிக்கப்பட்ட நிலையில் மாத்திரம் நீங்கள் ஊழியம் செய்ய வேண்டியதற்கான முக்கியம் என்ன?

................................................................................................................................................................

................................................................................................................................................................

................................................................................................................................................................

10. உங்களுடைய வாழ்க்கையிலும் ஊழியத்திலும் தேவனுடைய புதிய அபிஷேகத்தை நீங்கள் எவ்வாறு தொடர்ந்து பேணலாம்?

................................................................................................................................................................

................................................................................................................................................................

................................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. அபிஷேகம் பண்ணப்பட்டவர்களுடனான தேவனுடனான தொடர்பை படியுங்கள்:

-தேவன் அபிஷேகம்பண்ணப்பட்டவர்களுக்கு விடுதலையையும் இரக்கத்தையும் கொடுக்கிறார்: சங்கீதம் 18:50

-அவர் அபிஷேகம்பண்ணப்பட்டவர்களுக்கு பாதுகாத்து கேட்கின்றார்: சங்கீதம் 20:6

-அவர் அபிஷேகம்பண்ணப்பட்டவர்களுடைய முகத்தை பார்க்கின்றார்: சங்கீதம் 84:9

-அவர் அபிஷேகம்பண்ணப்பட்டவர்களுக்கு பெலமளித்து பாதுகாக்கின்றார்: சங்கீதம் 28:8

-அவர் அபிஷேகம்பண்ணப்பட்டவர்களுக்கு வெளிப்படுத்தலை கொடுக்கின்றார்: சங்கீதம் 132:17

-தேவன் எதிரிகளை அழிக்கும்படிக்கு அபிஷேகிக்கிறார்: 2 நாளாகமம் 22:7

2. அபிஷேகத்தை குறித்த பொதுவான வேறு காரணிகளை படியுங்கள்:

-முதல் தடவை குறிக்கப்பட்ட அபிஷேகம்: ஆதியாகமம் 31:13

-அபிஷேகமானது சந்தோஷம் மற்றும் நீதியோடு தொடர்புபடுகின்றது: சங்கீதம் 45:7; எபிரெயர் 1:9

-இயற்கையான பலவீனங்கள் தேவனுடைய அபிஷேகம் பெறுவதை தவிர்க்காது: 2 சாமுவேல் 3:39

-அபிஷேகமானது மாற்கு 6:13 மற்றும் யாக்கோபு 5:14ல் உள்ள வியாதி; யோவான் 9:6;11ல் உள்ள குருடன் மற்றும் வெளிப்படுத்தல் 3:8ல் உள்ள ஆவிக்குரிய குருட்டு ஆகியவற்றை குணப்படுத்துவதற்கு பயன்படுகின்றது.

-பழைய ஏற்பாட்டு காலங்களில் தூய எண்ணெய் பயன்படுத்தப்பட்டது: யாத்திராகமம் 30:31

-ஐக்கியம் அபிஷேகத்தோடு ஒப்பிடப்படுகின்றது: சங்கீதம் 133:2

-அபிஷேகமானது தூய்மைப்படுத்தலோடு தொடர்புபடுகின்றது: யாத்திராகமம் 29:29

-தேவனுடைய வசனமானது அபிஷேகம் பண்ணப்பட்டது: லேவியராகமம் 7:36

3. குஷ்டரோகி, ஆசாரியர் மற்றும் தலைவர்களுக்கான பழைய ஏற்பாட்டு காலங்களில் எவ்வாறு அபிஷேகமானது பயன்படுத்தப்பட்டது என நீங்கள் ஏற்கனவே கற்றீர்கள். அது கூட அபிஷேகம் பண்ண பயன்படுகின்றது:

-காணிக்கைகள்: யாத்திராகமம் 29:36

-உடன்படிக்கை பெட்டியின் பகுதிகள்: லேவியராகமம் 8, எண்ணாகமம் 7; யாத்திராகமம் 40

-தூண் அல்லது பலிபீடம்: ஆதியாகமம் 31:13

4. தலைவர்கள் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட காரணத்தினால், அவர்களை எதிர்காமல் இருக்க நாம் கவனமாக இருக்க வேண்டும். எண்ணாகமம் 16; 1 சாமுவேல் 24 மற்றும் 26; 2 சாமுவேல் 1; 1 நாளாகமம் 16:22; சங்கீதம் 105:15ஐ பார்க்கவும்.

5. மனிஷருடைய அபிஷேகம் தேவனுடையதை போன்றதான ஒன்று அல்ல. 2 சாமுவேல் 19:10ஐ பார்க்கவும். மனுஷரால் அபிஷேகிக்கப்பட்ட அப்சலோமின் வருந்தத்தக்க கதையை வாசியுங்கள் (2 சாமுவேல் 18-20).

6. கீழ்வரும் அபிஷேகங்களை குறித்து படியுங்கள்:

-யோசுவா: உபாகமம் 34:9 மற்றும் எண்ணாகமம் 27:18,22
-சவுல்: 1 சாமுவேல் 10:15-27
-தாவீது: 1 சாமுவேல் 16:1-13
-இயேசு: லூக்கா 4:18

7. அப்போஸ்தலர் 7:25 மற்றும் யாத்திராகமம் 2:11-15ஐ படியுங்கள். மோசேயிற்கு சரியான அழைப்பு இருந்தது, ஆனால் தவறான அதிகாரம் முதலில் இருந்தது. அவர் தேவனுடைய அதிகாரத்தை அல்லாமல் தன்னுடைய சொந்த அதிகாரத்தை செய்ய முயற்சித்தார்.

8. ஆமோஸ் 7:14-15 ஐ வாசிக்கவும். ஆமோஸ் ஓர் ஊழியர் அல்ல. அவர் மேய்ப்பரும் பயிர் சேகரிப்பவராயும் இருந்தார். ஆனால் தேவன் அவனை அபிஷேகிக்கும் பொழுது, அவர் தீர்க்கதரிசியாக மாறினார்.

# அதிகாரம் நான்கு

## தலைவர்களுக்கான தகுதி

**குறிக்கோள்கள்:**

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ "தகுதிகளை" வரைவிலக்கணப்படுத்தவும்,
- ☐ ஆவியின் வெளியக கனியை வரைவிலக்கணப்படுத்தவும்,
- ☐ ஆவியின் உள்ளக கனியை வரைவிலக்கணப்படுத்தவும்,
- ☐ தலைவர்களுக்கான விசேட தகுதிகளை பட்டியலிடும் இரண்டு முக்கிய வசனங்களை இனம்காணவும்,
- ☐ அனைத்து ஆவிக்குரிய தலைவர்களுக்கும் அவசியமான நான்கு தகுதிகளை பட்டியல்படுத்தவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். (எபேசியர் 2:10)**

### அறிமுகம்

தேவன் ஒரு விசுவாசியை தலைமைத்துவத்திற்கு அழைக்கும்போது, அவர் அவன் சரியாக முறைப்படி சேவிக்கும்படி வேண்டுகின்றார். குறிப்பிட்ட இலக்குகளும் அழைப்புக்களும் வித்தியாசமானபடியால், கிறிஸ்துவினுடைய சரீரத்தில் பல்வேறுப்பட்ட தலைமைத்துவ நிலைகளில் ஒத்த தரங்களில் அவசியம் காணப்படுகின்றன. தேவன் ஒவ்வொரு தலைவர்களையும் வித்தியாசமான வழிகளில் முறைப்படுத்துகின்றார்.

தேவன் தலைவர்களுக்கு அவர்களுடைய சொந்த அழைப்பிற்கு தேவையான விசேட தகுதிகளை கொடுக்கும்போது, அனைத்து ஆவிக்குரிய தலைவர்களுக்கும் அவசியமான பொதுவான தகுதிகளும் கூட காணப்படுகின்றன. இந்த பாடத்தின் பொருள் இந்த தகுதிகளே, இவைகள் அடிப்படை தேவைகள், ஆவிக்குரிய கனிகள், தலைவர்களுக்கான பொதுவான குறிப்பிட்ட தகுதிகள் போன்றவற்றை கலந்துரையாடும்.

### வேதாகம தகுதிகள்

தகுதிகள் என்பது இயற்கையிலான இயலுமைகள் அல்ல. அவைகள் குணம் மற்றும் நடத்தைகளின் தரம் ஆகும். தலைமைத்துவத்திற்கான வேதாகம தகுதிகளானது தேவனுடைய வார்த்தையில் தலைவர்களுக்காக விபரிக்கப்பட்ட குணம் மற்றும் நடத்தைகளின் தகுதிகளாகும். அவைகள் தேவனுடையதான வாழ்க்கை முறைக்கு ஆதாரமாக உள்ளது.

மக்கள் தலைவர்களுக்கு அவர்களுடைய தலைமைத்துவ இயல்பை மிகவும் முக்கியமாக கருதுவதோடு

தகுதிகளை புறக்கணிக்கிறார்கள். உதாரணமாக, ஒரு போதகருடைய நல்ல உபதேசத்தின் அடிப்படையில் மக்கள் நியாயம் தீர்க்கலாம். ஆனால் அவருடைய பேசும் திறமையினால் மக்களை அவர் கவரும் போது, தலைவர்களுக்கு அவசியமான தேவ வாழ்க்கைமுறையான வேதாகம தகுதிகளை கண்டிப்பாக இல்லாமல் செய்கின்றார்.

ஆவிக்குரிய தலைமைத்துவமானது வேதாகம தரங்களின் அடிப்படையில் அபிவிருத்தி செய்யப்பட்டு மதிப்பிடப் படல் வேண்டும். ஆவிக்குரிய வரங்கள், வல்லமை அல்லது இயற்கையிலான இயலுமைகளினால் எந்த ஒரு ஊழியமும் பரீட்சிக்கப்படலாகாது. "ஆவிக்குரிய கனிகள்" என்று கூட அழைக்கப்படும், தேவ வாழ்க்கை முறையான ஆதாரங்களினால் ஊழியங்கள் மதிப்பிடப்படல் வேண்டும்:

**ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்... (மத்தேயு 7:20)**

கனி அல்லது ஒரு நபரின் ஆவிக்குரிய தகுதிகள், அவர் உள்ளாக என்ன விரும்புகின்றார் என்பதை வெளிப்படுத்துகின்றது:

**நல்ல மரமானது கெட்ட கனி கொடாது, கெட்ட மரமானது நல்ல கனி கொடாது.**

**அந்தந்த மரம் அதனதன் கனியினால் அறியப்படும் முட்செடிகளில் அத்திப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை, நெருஞ்சிச்செடியில் திராட்சப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை.**

**நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான், பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான், இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும். (லூக்கா 6:43-45)**

ஓர் மனிதனால் ஆவிக்குரிய வல்லமையிற்கு தவறுதலான தனிப்பட்ட அபிப்பிராயங்கள் காணப்படலாம். அவர் தேவனுடைய நாமத்தினால் அற்புதங்களை கூட செய்யலாம். ஆனால் இயேசு கூறினார்:

**பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.**

**அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்.**

**அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன். (மத்தேயு 7:21-23)**

யூதா சபையிற்குள் "புகுந்து" தவறான போதனைகளை உபதேசிப்போருக்கு எதிராக எச்சரித்தார். அவர் அவர்களுடைய வாழ்க்கையில் கனி இல்லாமையினால் அவர்களை அடையாளம் காணும் ஒரு வழியை கூறினார்:

**இவர்கள்.... இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப் போன மரங்களும்... (யூதா 12)**

எந்தவொரு ஊழியத்தின் முக்கியமான காரியம் கனியாகும் ஏனென்றால்.... "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்."

## அடிப்படைகள்

அனைத்து தலைவர்களுக்குமான நான்கு அடிப்படை தேவைகள் காணப்படுகின்றது. ஒரு கிறிஸ்தவ தலைவரா-னவர்:

1. **மறுபடியும் பிறத்தல்:** யோவான் 3ல் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் படி அவர் இயேசு கிறிஸ்துவின் உண்மையான விசுவாசியாக இருத்தல் வேண்டும்.

2. **பரிசுத்த ஆவியானவரினால் ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும்:** அப்போஸ்தலர் 1:8ன் விபரிக்கப்பட்டுள்ளப்படி வல்லமையுள்ள சாட்சியின் ஆதாரத்தை நாம் கொண்டிருக்க வேண்டும்.

3. **தலைவராக இருக்கும்படிக்கு அழைக்கப்பட்டு அபிஷேகிக்கப்பட்டிருக்க வேண்டும்:** சபையிலுள்ள தலைமைத்துவ நிலையை நிரப்புவதற்கு மக்கள் தேவனால் அழைக்கப்பட்டு அபிஷேகிக்கப்பட்டிருக்க வேண்டும்.

4. **ஆவிக்குரிய முதிர்ச்சி:** ஓர் தலைவர் மாம்சத்திற்குரிய தலைவராக (1 கொரிந்தியர் 3:1) அல்லது புதிய கிறிஸ்தவராக (1 தீமோத்தேயு 3:6) இருத்தல் கூடாது. அவர் எபிரெயர் 6:1-3ல் விபரிக்கப்பட்டுள்ள விசுவாச ஊற்றின் அனுபவத்தை கொண்டிருக்க வேண்டும், அத்தோடு இந்த பகுதி வழிகாட்டும் ஆவிக்குரிய முதிர்ச்சிக்கு நேராக வழிகாட்ட வேண்டும்.

ஆவிக்குரிய முதிர்ச்சியானது நல்ல ஜெபம் மற்றும் வேதாகம படிப்பு நடவடிக்கை உட்பட தேவனோடான நல்ல தனிப்பட்ட உறவையும் உள்ளடக்கியுள்ளது. நீங்கள் மற்றவர்களை தேவனுடைய வழியில் நடத்த வேண்டுமாயின், நீங்கள் அவரில் உங்களை தொடர்புபடுத்தி, அவருடைய வார்த்தையில் அறிவை கொண்டிருக்க வேண்டும். நீங்கள் தலைமைத்துவ கூட்டங்களில் பங்குபற்றுதல், உங்களுடைய கல்லூரிக்கு செல்லுதல், தலைமைத்துவத்திற்கு சம்பந்தப்படும் அநேக புத்தகங்களை வாசித்தல் போன்றவற்றை செய்யலாம், ஆனால் நீங்கள் தேவனை தொடர்ந்து தேடாவிட்டால், உங்களுடைய ஊழியம் தோல்வியை சந்திக்கும்.

## பரிசுத்த ஆவியானவருடைய கனி

பரிசுத்த ஆவியானவருடைய கனியானது விசுவாசிகளினுடைய வாழ்க்கையில் ஆவிக்குரிய வெளிப்படுத்தலின் இயற்கையை காட்டுகின்றது. அனைத்து கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையில் ஆதாரமாக கொள்ளப்படவேண்டிய ஆவிக்குரிய தகுதி அதுவாகும், ஆனால் முக்கியமாக ஆவிக்குரிய தலைவர்களில் காணப்படவேண்டும்.

பரிசுத்த ஆவியானவருடைய வரங்களானது வல்லமையானதாகும். பரிசுத்த ஆவியானவருடைய கனியானது குணாதிசயத்திற்கு உரியது. ஆவிக்குரிய கனியானது ஆவிக்குரிய முதிர்ச்சிக்கு ஆதாரமாகும். சாதாரண கனி இயற்கையான உலகில் அபிவிருத்தி அடைய நேரம் எடுப்பதுபோல், ஆவிக்குரிய கனியானது விருத்தியடைய நேரம் எடுக்கும். ஆவிக்குரிய வாழ்க்கையில் இயற்கையான வளர்ச்சியை அது உற்பத்தி செய்கின்றது.

வேதாகமமானது இரண்டு வகையான ஆவிக்குரிய கனிகளை பேசுகின்றது: வெளியக கனி சுவிசேஷமா-கவும், உள்ளக கனி தேவனுடைய ஆவிக்குரிய தகுதிகளாகும். ஆவிக்குரிய தலைவர்களானவர்கள் சுவிசேஷ செய்தியை வல்லமையுள்ள சாட்சியாக கொண்டிருப்பதன் மூலம் கனி கொடுக்கலாம்:

> **நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்... அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும்... (யோவான் 15:16)**

பரலோகத்திற்கு செல்லு முன் இயேசுவினுடைய கடைசி கட்டளையானது:

> **நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். (மாற்கு 16:15)**

அவர் அவர் வைத்த சீஷர்களுக்கான சவாலானது ஆவிக்குரிய அறுவடையின் மாபெரும் தரிசனமாகும்:

> **அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.**
>
> **விதைக்கிறவனும் அறுக்கிறவனுமாகிய இருவரும் ஒருமித்துச் சந்தோஷப்படத்தக்கதாக, அறுக்கிறவன் கூலியை வாங்கி, நித்திய ஜீவனுக்காகப் பலனைச் சேர்த்துக்கொள்ளுகிறான். (யோவான் 4:35-36)**

சாலெமோன் கூறினார்:

> **நீதிமானுடைய பலன் ஜீவவிருட்சம் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன். (நீதிமொழிகள் 11:30)**

பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையானது சுவிஷேசத்திற்கூடாக ஆவிக்குரிய கனியை சுவிசேஷகர்களுக்கு இயலுமையாக்குகின்றது:

> **பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)**

ஆவிக்குரிய அபிவிருத்தியின் முறையானது 2 தீமோத்தேயு 2:2ல் கொடுக்கப்பட்டுள்ளது:

> **அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி. (2 தீமோத்தேயு 2:2)**

சுவிஷேசத்தின் கனியின் முக்கியத்துவம் காரணமாக, சர்வதேச அறுவடைநேர நிறுவனமானது “சுவிசேஷத்தை போல் மாறுதல்” என்னும் தலையங்கமுடைய பாடத்தை கொடுக்கின்றது.

ஆவியின் கனியின் சுவிசேஷத்திற்கு மேலாக, தலைவர்கள் கிறிஸ்துவின் கனியை போல் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிவை:

> **ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம்,**
>
> **சாந்தம், இச்சையடக்கம் இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. (கலாத்தியர் 5:22-23)**

இவைகள் தலைவர்களுடைய வாழ்க்கையில் விருத்தி செய்யப்பட வேண்டிய பரிசுத்த ஆவியானவரின் உள்ளான தகுதிகளாகும். இவைகள் இயேசு கிறிஸ்துவினுடைய வாழ்க்கையில் ஆதாரமாக காணப்பட்ட தகுதிகளாகும். இதலானலேயே நாம் அவர்களை “கிறிஸ்துவை-போலான தகுதிகள்” என அழைக்கின்றோம்.

பரிசுத்த ஆவியின் கனிகளானது விசுவாசிகளினால் செய்யப்படும் ஒவ்வொரு நடத்தையான நன்மை, நீதி மற்றும் உண்மை ஆகியவற்றில் காணப்படுகின்றது:

> **ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும். (எபேசியர் 5:9)**

பரிசுத்த ஆவியின் கனியானது கீழ்வரும் விசேட தகுதிகளையும் கூட உள்ளடங்கும்:

### அன்பு:

அன்பானது ஆழமான பிரியம், கவனிப்பு, கரிசனை ஆகிய உணர்வை உடையது. இவை மக்களை கவனித்தல், நண்பராக இருத்தல், இரங்குதல், அர்ப்பணித்தல், விளங்குதல், தேற்றுதல், உற்சாகப்படுத்தல் மற்றும் பணி விடை செய்தல் ஆகியவற்றையும் கூட உள்ளடக்கியது.

தலைவர் தேவனை நேசிக்க வேண்டும் (மாற்கு 12:30). தலைவரால் தனது பின்பற்றுவோருக்கும், அனைத்து விசுவாசிகளுக்கும் மற்றும் இரட்சிக்கப்படாதோருக்கும் அன்பு காட்டப்படல் வேண்டும் (1 பேதுரு 1:22; லூக்கா 6:27,32,35; மத்தேயு 5:43-44; 19:19; யோவான் 13:34-35; 15:9:12; 17:26; 1 யோவான் 2:9-10).

தலைவருடைய தேவ வேலையானது அன்பின் அர்ப்பணிப்பினால் இருத்தல் வேண்டும் (1 தெசலோனிக்கேயர் 1:3). விசுவாசம் அன்பினால் வேலை செய்யப்படுகிறது (கலாத்தியர் 5:6) ஆவிக்குரிய வரங்களானது அன்பிற்கூடாக வேலை செய்யப்படுகிறது (1 கொரிந்தியர் 13). அனைத்து ஊழியத்திற்கும் சித்தி பெறுவதற்கான திறவுகோல் அன்பாகும் (1 கொரிந்தியர் 13).

அன்பு ஸ்பரிசத்தையும் உள்ளடக்கியது, இது நேரான வழியில் மற்றவர்களோடு தனிப்பட்ட ரீதியில் நடப்பதற்கும் அவர்களோடு உறவாடுவதற்கும் இயலுமை அளிக்கின்றது. மற்றவர்களை வெறுப்புக்குள்ளாக்காதப்படிக்கு அவசியமான மற்றும் கடினமானதை கூறி செய்யும்படியான இயலுமையை இது அளிக்கின்றது.

### மகிழ்ச்சி:

சந்தோஷம், இன்பம், களிப்பு ஆகியவற்றின் தகுதி மகிழ்ச்சி ஆகும். நீங்கள் மகிழ்ச்சியாயிருப்பது தேவனுடைய வாஞ்சையாகும் (யோவான் 15:11; 17:13). சீஷர்கள் மகிழ்ச்சியினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டிருந்தார்கள் (அப்போஸ்தலர் 13:52). மகிழ்ச்சிக்கான ஆதாரம் உலகத்திற்கான காரியத்தில் இல்லை. அது கடவுளிடம் உள்ளது (சங்கீதம் 16:11). உண்மையான சந்தோஷம் ஆவிக்குரியதாயும் வெளியக சூழ்நிலையிற்கு அடிப்படையாக இல்லாத படியால், தலைவர் சோதனையிலும், பரீட்சையிலும் சந்தோஷப்படலாம் (யாக்கோபு 1:2; 2 கொரிந்தியர் 7:4). அவர் சந்தோஷத்தோடு கூட நீண்ட துன்பத்தை அனுபவிக்கலாம் (கொலோசெயர் 1:11).

### சமாதானம்:

அமைதி, நிசப்தம், சாந்தம் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றின் நிலை சமாதானம் ஆகும். இது சண்டை, கோபம், தாக்குதல் போன்றவை இல்லாமலிருத்தலாகும். இந்த தகுதிகளை கொண்டிருக்கும் தலைவர் நம்பக்கூடியவராகவும், அவசர தருணங்களில் முகங் கொடுக்ககூடியராகவும் இருப்பார், ஏனெனில் அவரால் அமைதியை கடைப்பிடிக்க முடியும்.

குழப்பம் சமாதானத்திற்கு எதிரானதாகும். தேவன் குழப்பத்தை ஏற்படுத்துகிறவர் அல்ல. அவருடைய வாஞ்சை சமாதானத்தை கொண்டுவருவதாகும் (1 கொரிந்தியர் 14:33). அனைத்து உண்மையான சமாதானமும் இயேசு கிறிஸ்துவிற்கூடாக வருகின்றது (அப்போஸ்தலர் 10:36; எபேசியர் 2:14; ரோமர் 5:1; யோவான் 14:27; 16:33).

சமாதானத்தின் விளைவினால் வரும் காரியங்களை தலைவர்கள் பின்தொடர வேண்டும் (ரோமர் 14:19) மற்றும் மற்றவர்களோடு சமாதானத்தில் வாழ வேண்டும் (2 கொரிந்தியர் 13:11; எபிரெயர் 12:14). ஐக்கியம், வல்லமையுள்ள எந்த ஊழியத்திற்கும் அவசியமானதாகும், இது சமாதானத்திற்கூடாக வைக்கப்படுகிறது (எபேசியர் 4:3). தேவனுடைய சமாதானமானது ஆளுகிறவருடைய இருதயத்தை ஆள வேண்டும் (கொலேசெயர் 3:15).

### நீண்ட துன்பத்தை அனுபவித்தல்:

நீண்ட துன்பம் பொறுமையிற்கான தகுதியாயிருக்கிறது. இது ஓர் பொறுக்கமுடியாத சூழ்நிலையை சந்தோஷ மாக ஏற்றுக்கொள்ளுவதையும், பொறுமையாக சகிக்கும் இயலுமையும் ஆகும். நீண்ட துன்பம் அனுபவித்தல் அப்போஸ்தலனாகிய பவுலின் ஊழியத்தில் தகுதியான ஆதாரமாக இருந்தது (2 தீமோத்தேயு 3:10). நாம் சந்தோஷத்தோடு நீண்ட துன்பத்தை அனுபவிக்கும்படி அழைக்கப்பட்டுள்ளோம் (கொலோசெயர் 1:11)

தலைவரானவர் நீண்ட துன்பத்தோடு தேவனுடைய வசனத்தை உபதேசிக்க வேண்டும் (2 தீமோத்தேயு 4:2) அத்தோடு இந்த தகுதியை மற்றவர்களோடு தொடர்புபடுத்த வேண்டும் (எபேசியர் 4:2). அவர் ஆவிக்குரிய தரத்தை நீண்ட துன்பத்திற்குள் “இடல்” வேண்டும் (கொலோசெயர் 3:12).

### காருணியம்:

காருணியம் என்பது சாந்தமான குணத்தை கொண்டிருப்பது, கடுமையாக, கலகமாக அல்லது கடும்சத்தம் இல்லாதிருக்கும் ஒரு தரம் ஆகும். இது அமைதியான, மதிப்பளிக்க கூடிய இரக்கமுள்ளதாகும். விசுவாசிகள் போராட கூடாதப்படிக்கும், ஆனால் அனைத்து மனிதரோடும் காருணியத்தோடு இருக்கும்படிக்கும் வேதா-கமம் எச்சரிக்கின்றது. (2 தீமோத்தேயு 2:24). நாம் சண்டையிடும் மக்களாக இருத்தல் கூடாது. சண்டையிடும் மக்கள் எப்பொழுதும் சண்டையிட்டு அல்லது தர்க்கித்து கொண்டிருப்பர் (தீத்து 3:2). நாம் இலகுவாக கேட்டுக்கொள்ளப்படுகின்றோம். இதன் அர்த்தமானது எமது இயற்கையின் காருண்யம் காரணமாக மற்றவர்களால் நாம் இலகுவாக அணுகப்படுகின்றோம் (யாக்கோபு 3:17).

ஒரு காருணிய தலைவர் மாபெரும் தலைவராவர். தாவீது எழுதுகின்றார்:

> **உம்முடைய இரட்சிப்பின் கேடகத்தையும் எனக்குத் தந்தீர். உம்முடைய வலதுகரம் என்னைத் தாங்குகிறது, உம்முடைய காருணியம் என்னைப் பெரியவனாக்கும். (சங்கீதம் 18:35)**

### நன்மை:

நன்மை எனப்படுவது தூய்மை அல்லது நீதியான நடத்தை ஆகும். பசியுள்ள ஆத்துமாவை நன்மையினால் நிரப்புகிறார்... (சங்கீதம் 107:9). விசுவாசி என்ற வகையில் தேவனுடைய நன்மையும் கிருபையும் எம்மைத் தொடருகின்றது... (சங்கீதம் 23:6)

### விசுவாசம்:

விசுவாசம் எனப்படுவது தேவனுக்கு நேரான நம்பிக்கை, எதிர்பார்ப்பு மற்றும் நிச்சயம் ஆகிய அணுகு முறையாகும் (எபிரெயர் 12:1). இது தேவன் கூறியவை அனைத்தும் உண்மை எனவும் தேவனால் ஆகாதது ஒன்றுமில்லை என்று நம்புவதாகும். விசுவாசம், ஊழியத்தின் வேலைகளோடு ஒன்றாகி, தேவனுடைய இராஜியத்திற்காக மாபெரும் காரியங்களை அடைவதாகும்.

விசுவாசம் என்பது தேவனில் நம்பிக்கைப்படும் குறிக்கோளாகும், இது பின்பற்றுவோருக்கு நம்பிக்கையை உணர வைப்பதோடு, அவர்களுடைய விசுவாசத்தை கட்டியெழுப்ப உதவுகின்றது. இது “என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றை செய்ய எனக்கு பெலனுண்டு” என நம்புவதாகும்.

### அடக்கம்:

அடக்கம் பெலத்தை கட்டுப்படுத்தும். மற்றவர்களுக்கு செய்யப்படும் சீஷத்துவமானது அடக்கத்தினால் செய்யப்படல் வேண்டும் (கலாத்தியர் 6:1). அத்தோடு இது சபையில் ஐக்கியத்தை வைத்திருக்க தலைவருக்கு உதவுகின்றது (கலாத்தியர் 4:1-3). இது அனைத்து மனிதர்களோடும் சம்பந்தம் வைத்துக்கொள்ள உதவுகின்றது (தீத்து 3:2; 2 தீமோத்தேயு 2:24-25). ஞானமுள்ள மனிதன் அடக்கமுள்ள மனிதராவர் (யாக்கோபு 3:13). எல்லா விசுவாசிகளும் இந்த தகுதிகளையும் எதிர்பார்க்கும்படி ஊக்கப்படுத்தப்படுகின்றார்கள் (கொலோசெயர் 3:12; 1 தீமோத்தேயு 6:11; செப்பனியா 2:3).

**தன்னடக்கம்:**

தன்னடக்கம் என்பது உணர்ச்சிகள், எண்ணங்கள் மற்றும் நடத்தைகளில் உள்ள நிதானமான தன்மையாகும். இது சுய - கட்டுப்பாடு ஆகும். தன்னடக்கம் என்பது அனைத்து காரியங்களிலும் தேர்ச்சிபெற்ற நிலையாகும் (1 கொரிந்தியர் 9:27; 9:19-27). நாம் எமது வாழ்க்கையில் தன்னடக்கத்தை சேர்த்துக் கொள்ள வேண்டும் (2 பேதுரு 1:6)

## குறிப்பிடத்தக்க தகுதிகள்

ஆவிக்குரிய கனிகளுக்கு மேலாக, தலைவர்களுக்கான விசேட தகுதிகளை வேதாகமமானது இனங்காட்டுகின்றது. இவைகள் 1 தீமோத்தேயு 3 மற்றும் தீத்து 1ல் காணப்படுகின்றது. கீழ்வருவனவற்றில் பட்டியல்படுத்தப்பட்ட தகுதிகள் போதகர், ஆயர், மூப்பர் அல்லது வேலைசெய்வோருக்கானவை ஆகும். எவ்வாறாயினும் இந்த தகுதிகள் விசேட அலுவல்களில் இனங்காணப்பட்டாலும், அவைகள் அனைத்து தலைமைத்துவ நிலைமைகளுக்கும் பொருந்தக் கூடியவை ஆகும்.

### ஆயர்கள் மற்றும் மூப்பர்கள்:

**பழிசுமத்தலுக்கு அப்பால்:** நல்ல நற்பெயர், நீதி, சீஷத்துவம் கொண்டிருப்பதோடு, தேவனுடைய வார்த்தைகளை மீறியவராக இருத்தல் கூடாது: 1 தீமோத்தேயு 3:2; தீத்து 1:6,7

**ஒரு மனைவியிற்கு புருஷனாயிருத்தல்:** திருமணம் செய்திருந்தால் ஒரு துணையாரை மாத்திரம் கொண்டிருத்தல் வேண்டும்: 1 தீமோத்தேயு 3:2; தீத்து 1:6; (ஊழியத்தில் துணையாரின் பங்குபற்றல் மற்றும் ஒத்துழைப்பு கூட முக்கியமானவையாகும்.)

**நிதானம்:** அனைத்து காரியங்களிலும் நிதானமான ஆற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்: தீத்து 1:8; 1 தீமோத்தேயு 3:2

**சுய கட்டுப்பாடு:** வாழ்க்கை மற்றும் நடத்தையின் அனைத்து பகுதிகளிலும் கட்டுப்பாட்டை கடைபிடிக்க வேண்டும். ஓர் மனிதன் மற்றவர்களை நடத்த வேண்டுமாயின், அவர் தன்னைத்தான் கட்டுப்படுத்தியவராக இருத்தல் வேண்டும்: தீத்து 1:8

**நிதானம், ஜாக்கிரதை:** இதன் அர்த்தமானது தலைவரானவர் அறிவுள்ளவராகவும், விவேகமுள்ளவராகவும், ஞானமுள்ளவராகவும், நடைமுறையிலுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்: 1 தீமோத்தேயு 3:2; தீத்து 1:8

**விருந்தோம்பல்:** மற்றவர்களுக்காக வீடு திறந்திருத்தல் வேண்டும்: 1 தீமோத்தேயு 3:2; தீத்து 1:8

**போதிக்க கூடியவராயிருத்தல்:** மற்றவர்களோடு தேவனுடைய வார்த்தையை தொடர்புபடுத்தும் இயல்பை கொண்டிருத்தல் வேண்டும்: 1 தீமோத்தேயு 3:2; தீத்து 1:9

**மதுவிற்கு அடிமையாயிருத்தல் கூடாது:** 1 தீமோத்தேயு 3:3; தீத்து 1:7

**பொறுமையாயிருத்தல்:** எதிர்ப்புகளுக்கு உடனடியாக விவேகமாக நிதானமாயிருத்தல்: 1 தீமோத்தேயு 3:3

**சுய சித்தம் இல்லாதிருத்தல்:** சுய-மையமாயிராமலும் எப்பொழுதும் அவர்களுடைய சொந்த வழியில் வேண்டுமென இல்லாதிருத்தல்: தீத்து 1:7

**புதியதாக மனந்திரும்பியராக இருத்தல் கூடாது:** முதிர்ச்சி நிலையை கொண்டிருப்பதோடு விசுவாசிகளை போல் அனுபவிக்க வேண்டும்: 1 தீமோத்தேயு 3:6

**நல்லது எதுவோ அதை நேசித்தல்:** அனைத்தும் தேவனுக்கும் அவரது குறிக்கோளுக்கும் பெறுமதியாயித்தலை ஏற்றுக்கொள்ளுதல்: தீத்து 1:8

**சாதாரணமானவராயிருத்தல்:** மக்களோடு சாதாரணமாக சம்பந்தப்படுபவராக இருத்தல் வேண்டும்: தீத்து 1:8

**வார்த்தையில் நிலைத்திருப்பது:** தீத்து 1:9

**பரிசுத்தம்:** நீதி மற்றும் புனிதம்: தீத்து 1:8

**தவறான சேகரிப்புகளில் பற்றில்லாதிருத்தல்:** நிதி சேகரிப்பில் பேராசையற்றவராயிருத்தல். பணத்தை நேசிப்பதிலிருந்து இல்லாதிருத்தல்: தீத்து 1:7; 1 தீத்து 3:3

**தனது சொந்த வீட்டுகாரியங்களை நன்றாக நிர்வகித்தல்:** தனது சொந்த குடும்பத்தில் தலைமைத்துவ இயல்பை காண்பிக்க வேண்டும்: 1 தீமோத்தேயு 3:4-5

**விசுவாசிக்கும் பிள்ளைகளை கொண்டிருத்தல்:** தேவனுக்கு பிரதியுத்தரவு செய்யும் மற்றும் கலகம் பண்ணாத பிள்ளைகளையும் கொண்டிருக்க வேண்டும்: தீத்து 1:6

**வெளியில் இருப்போரோடு நல்ல நன்மதிப்பை கொண்டிருத்தல்:** விசுவாசி அல்லாதவர்களிடம் நல்ல மதிப்பை கொண்டிருத்தல் வேண்டும்: 1 தீமோத்தேயு 3:7

## உதவிக்காரர்:

**கண்ணியம்:** மதிப்புள்ளவராகவும் கண்டிப்பான மனம் மற்றும் குணாதிசயத்தை காண்பிக்க வேண்டும்: 1 தீமோத்தேயு 3:8

**இரு நாக்கற்றவர்:** முரண்பாடற்ற தகவல்களை கொடுக்காதவராயிருத்தல்: 1 தீமோத்தேயு 3:8

**அதிகமான மதுவிற்கு அடிமையற்றவராக இருத்தல்:** 1 தீமோத்தேயு 3:8

**தவறான சேகரிப்புகளில் பற்றில்லாதிருத்தல்:** நிதி சேகரிப்பில் பேராசையற்றவராயிருத்தல்: 1 தீமோத்தேயு 3:8

**தனது அர்ப்பணிப்பை விசுவாசத்திற்கு ஏற்படுத்தியிருக்க வேண்டும்:** 1 தீமோத்தேயு 3:9

**பரீட்சிக்கப்பட்டிருத்தல்:** ஆவிக்குரிய பரீட்சைகள் மற்றும் சோதனைகளிற்குள் சென்று விசுவாசத்தை நிரூபித்த நபராக இருத்தல் வேண்டும்: 1 தீமோத்தேயு 3:10

**பழிசுமத்தலுக்கு அப்பால்:** தீய நடத்தையின் எந்தவொரு செயலிலும் இல்லாதிருத்தல்: 1 தீமோத்தேயு 3:10

**ஒரு மனைவியிற்கு புருஷனாயிருத்தல்:** திருமணம் செய்திருந்தால் ஒரு துணையாரை மாத்திரம் கொண்டிருத்தல்: 1 தீமோத்தேயு 3:12

**வீட்டுக்காரியங்களில் நல்ல நிர்வாகம்:** குடும்ப வாழ்க்கையில் தலைமைத்துவத்தை காட்ட வேண்டும்: 1 தீமோத்தேயு 3:12

**நிரூபித்தல்:** புதிதாக மனந்திரும்பியர் அல்ல, ஆனால் விசுவாசி என்ற வகையில் நிரூபித்தவராக இருத்தல் வேண்டும்: 1 தீமோத்தேயு 3:10

## பொதுவான தகுதிகள்

தலைவர்களுக்கு முக்கியமான மேலதிக தகுதிகள் இங்கு காணப்படுகின்றன:

**தரிசனம்:**

வழிநடத்தும் ஓர் நபருக்கு தரிசனம் இருத்தல் வேண்டும். தேவனுடைய திட்டத்தில் உங்களுடைய நோக்கத்தை அறிதல், தேவனுடைய திட்டத்தை கேட்கும் இயலுமை, அவருடைய சித்தத்தையும் குறிக்கோளையும் அறிதல் போன்றவற்றை தரிசனம் உள்ளடக்குகின்றது.

பவுல் தரிசனத்தோடான தலைவருக்கான நல்ல உதாரணமாகும். பவுலுக்கு மற்றவர்களை வழிநடத்தும் இயலுமை இருந்தது, ஏனென்றால் தேவன் அவரை அழைத்து என்ன செய்யசொன்னார் என்னும் தெளிவான தரிசனம் அவர் கொண்டிருந்தார். “நான் பரலோக தரிசனங்களுக்கு கீழ்ப்படியாதவன் அல்ல” என அவருடைய ஊழியத்தின் கடைசி வருடங்களில் கூறினார்,

தரிசனமானது தலைவரை தற்காலத்தில் எதிர்காலத்திற்கு அப்பாலான திட்டத்திற்கான செயற்பாட்டை ஏற்படுத்தவும், தேவனுக்காக மாபெரும் காரியங்களை நம்பவும் ஏற்படுத்துகின்றது.

**சிறப்பு:**

ஒரு தலைவரானவர் தேவனுடைய காரியத்தில் “சராசரி” அல்லது “போதுமான அளவு” ஏற்படுத்தாமல், சிறப்பை காட்ட கரிசனை கொள்ள வேண்டும். அவர் ஊழியத்தில் திறமையுள்ளவராகவும், தகுதிவாய்ந்தவராகவும், மெதுவாக செயற்பாடு அற்றவராகவும் இருத்தல் வேண்டும். அவர் காலந்தவராதவராகவும், நேரானவராகவும், விசுவாசமுள்ளவராகவும், அடிப்படையுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

**தீர்க்கம்:**

“தீர்க்கம்” எனப்படுவது தீர்க்கமான தீர்மானங்களை எடுக்கும் இயலுமையையும், தீர்மானத்தின் போது முன்னுக்கு பின் தீர்மானம் செய்யாதிருத்தல் என்னும் அர்த்தமாகும். எல்லா காரணிகளும் உள்ளாக இருக்கும்போது, தீர்க்கமாகவும் தெளிவான தீர்மானமாகவும் எடுக்கும் இயலுமை நல்ல தலைவனின் அடையாளமாகும்.

**நகைச்சுவை:**

நகைச்சுவையின் நல்ல உணர்வு, அதாவது நகைச்சுவையான காரியங்களை பார்க்கும் இயலுமை, கடினமான சூழ்நிலைகளில் உதவும்.

**திடம்:**

ஒரு தலைவர் பயப்படாது இருத்தல் வேண்டும். சாத்தான் அல்லது மனிதனால் எதிர்க்கும் நிலையில் முகம் கொடுத்து நிற்கும் இயலுமை மற்றும் திடமானவராக அவர் இருத்தல் வேண்டும் (நெகேமியா 6:11).

**ஒரு நேராக அணுகுமுறை:**

ஊக்கமின்மை மற்றும் மறைத்தன்மையான அணுகுமுறை தோல்வியின் விளைவை ஏற்படுத்தும். கடினமான சூழ்நிலைகள் தலைமைத்துவத்திற்கான பரீட்சையாகும். அவைகள் உங்களை ஊக்கமிழக்க செய்கின்றதா? அவைகள் உங்களை அழித்து, தோல்வியடைய செய்து அல்லது தடுக்கின்றதா? தலைவரானவர் ஊக்கமில்லாமையிற்கு பதிலாக ஊக்கமுள்ள ஆவியோடான நேராக அணுகுமுறையை அபிவிருத்தி செய்ய வேண்டும். உங்களுடைய குறிக்கோள் தலைவர் என்ற வகையில் உங்களுடைய செயற்பாட்டை மாத்திரம் தாக்கம் செலுத்தாது, ஆனால் உங்களுடைய பின்பற்றுவோருக்கும் தொடர்புப்படச் செய்யும். மறையான, ஊக்கமில்லாத தலைவர் மறையானவராகும், ஊக்கமில்லாத பின்பற்றுவோரையும் கொண்டிருப்பார்.

**பக்திவிருத்தி:**

தலைவருடைய பிரதான இலக்கானது ஊழியத்தின் வேலைக்காக மக்களை பக்திவிருத்தி அடைய செய்வதாகும்

(எபேசியர் 4:12). பக்திவிருத்தியுள்ள ஒருவர் ஒழுங்கமைத்து, ஊக்கப்படுத்தி மக்களை தயார்படுத்தும் இயலுமை உடையவராவர். அவர் தேவனுடைய வேலையிற்காக ஆர்வம் மற்றும் உற்சாகத்தை காட்டுவார். அவர் இந்த குறிக்கோள்களை சீஷர்களுக்கு தொடர்புபடுத்தி, ஊக்கப்படுத்தி, ஊழியத்தின் வேலையிற்காக அவர்களை ஊக்கப்படுத்துவார்.

பக்திவிருத்தியிற்கு ஒரு பகுதியாக, தனக்குதானே அனைத்தையும் செய்வதற்கு பதிலாக மற்றவர்களுக்கு இலக்குகளை எவ்வாறு பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு அவர் அறிந்திருக்கிறார். ஒரு நல்ல தலைவர் மற்ற தலைவர்களை உருவாக்குவார். ஓர் பக்திவிருத்தி செய்பவர் மற்றவர்களை ஊழியம் செய்யும்படி, பொறுப்பாக இருக்கும்படி, அதிகாரம் உள்ளவராக இருக்கும்படி, அச்சுறுத்தல் உணர்வு இல்லாமல் துதிக்கும்படி அனுமதிக்கும் இயலுமையில் போதியளவு பெலனுள்ளவராக இருத்தல் வேண்டும்.

### அதிகாரம்:

தலைவரானவர் தேவனுடைய அதிகாரத்தின் கீழ் அதிகாரமுள்ள மனிதராய் இருத்தல் வேண்டும். தேவனால் அவருக்கு அளிக்கப்பட்ட வல்லமை மற்றும் அதிகாரத்தினால் வழிநடத்தப்பட அவர் இயலுமை உள்ளவராக இருத்தல் வேண்டும்.

### அர்ப்பணிப்பு:

ஒரு தலைவரானவர் ஊழியத்தின் வேலையிலும், அவர் நடத்துபவற்றிலும், தேவனிலும், அவருடைய இராஜ்ஜியத்திலும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளவராக இருத்தல் வேண்டும்.

### ஏற்றுக்கொள்ளுதல்:

சில தலைவர்கள் மற்றவர்களுடைய மாதிரியை பின்பற்றுபவர்கள். மற்றவர்கள் செய்பவற்றை அவர்களால் செய்ய முடியும்.

சில தலைவர்கள் பேணுபவர்களாக இருப்பார்கள். அவர்களால் ஏற்கனவே தொடங்கப்பட்டதை சாதாரணமாக பேண முடியும். அவர்கள் கலாச்சாரத்தினால் கட்டுண்டுடிருப்பார்கள்.

சில தலைவர்கள் இணக்கமுள்ளவர்களாக இருப்பார்கள். அவர்கள் மக்களுடைய சித்தத்திற்கு இணக்கமுள்ளவர்களாக இருந்து “நாம் இந்த வழியில் இதை எப்பொழுதும் செய்தோம்” என உரிமை கோருவார்கள்.

நல்ல தலைவர்கள் ஏற்றுக்கொள்ளுபவர்களாக இருப்பார்கள். அவர்கள் இலகுவானவர்களாகவும், மாற்றுவதற்காக திறப்பவர்களாகவும் இருப்பர். அவர்கள் இணக்கமில்லாதவர்களாகவும், கலாச்சாரத்தினால் கட்டுண்டற்றவர்களாகவும் இருக்க மாட்டார்கள். இந்த வகையான தலைவர்கள் கலையுள்ளவர்களாகவும், உண்மையுள்ளவர்களாகவும் இருப்பர், புதிய எண்ணங்களுக்கும், புதிய வழிகளில் காரியங்களை செய்வதற்கும் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலுக்காக திறக்கப்பட்டவர்களாக இருப்பர். அவர்களால் முதன்மையான விடயங்களை இலகுவாக மாற்றக்கூடியவர்களாகவும், முறைகளை மாற்றக்கூடியவர்களாகவும், இராஜ்ஜியத்தின் முன்னேற்றத்திற்கு அவசியமான “எதையும்” “எப்பொழுதும்” செய்பவர்களாகவும் இருப்பர்.

### ஞானமும் அறிவும்:

ஓர் தலைவர் தீர்மானத்திலும் கிரியையிலும் அறிவுள்ளவராகவும் சிந்திக்கும் ஆதாரத்தை கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும். எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என அறியும் சிந்தையுள்ள இயலுமையை அவர் கொண்டிருக்க வேண்டும். இந்த திறமைகளானது பயிற்சி, அனுபவம், பரிசுத்த ஆவியானவருடைய வழிநடத்தலுக்கூடாக பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

**கல்வி:**

கல்வி முக்கியமானது, ஆனால் தேவன் புறக்கணிக்கப்பட்ட மற்றும் கல்லாத மனிதரையும் தெரிவார் என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். அவர்கள் தேவனுடைய வல்லமையின் காரணத்தினால் மாபெரும் தலைவர்களாக மாறுவர்.

**அனுபவம்:**

யோசுவா என்னும் மனிதனுக்கு சண்டை அனுபவங்கள் காணப்பட்டதால், வாக்குத்தத்த தேசத்திற்குள் இஸ்ரவேலை நடத்துவதற்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் காரணமாகவே "சரீர ரீதியான ஊழியம்" அனைத்து விசுவாசிகளுக்கும் மிக முக்கியமானது. அது அனுபவங்களை ஏற்படுத்துவதினால் அது புதிய தலைவர்களை எழுப்புகின்றது.

**விலைக்கிரயத்தை செலுத்துவதற்கான சித்தம்:**

இயேசு உண்மையான சீஷத்துவத்திற்கு கிரயம் உண்டு என கூறினார். அவர் கிரயத்தை எண்ணும்படி உண்மையுள்ள சீஷர்களுக்கு எச்சரித்தார். தலைவர்கள் சிலுவையை எடுக்கும்படியான சித்தத்தையும், தம்மைத்தாம் வெறுக்கும்படிக்கும், கடினமான மற்றும் தனிமையான சூழ்நிலைகளில் கீழ் கடும் வேலைசெய்யும் படியும் சித்தமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

**ஊழியம் செய்யும் ஆவி:**

இயேசுவானவர் பூலோக தலைவர்களிலிருந்து தேவ ராஜ்ஜியத்திற்கான தலைவர்களின் வித்தியாச தரங்களை குறித்துக்காட்டினார். கிறிஸ்தவ தலைவர்கள் தாழ்மையாக, அர்ப்பணிப்புள்ள, சேவிக்கும் ஆவியுள்ள மற்றும் மேய்ப்பனைப்போல் நடத்துவதுபோல் அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டும். இந்த தகுதிகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையோடு அடுத்த இரண்டு அதிகாரங்களும் இவைகளில் கவனத்தை கொள்ளும்.

## தரங்களை அபிவிருத்தி செய்தல்

இந்த அதிகாரத்தில் கலந்துரையாடியுள்ளப்படி ஆவியின் கனியின் பட்டியல்கள், விசேட பொதுவான தகுதிகளை நீங்கள் படிக்கும்போது, தலைமைத்துவத்திற்கு அவசியமான தகுதிகளில் நீங்கள் வெற்றிக்கொள்ளுகின்றீர்கள். "நான் இந்த அனைத்து தகுதிகளையும் ஒருபோதும் விருத்திசெய்ய முடியாது" என நீங்கள் சிந்திக்கலாம்.

... அத்தோடு நீங்கள் சரி. "சுயமாக-உருவாக்கப்பட்ட" தலைவர் என்று ஒன்றும் இல்லை. வேறொரு வார்த்தையில், உங்களில் நீங்களே இந்த தகுதிகளை உங்களால் உருவாக்கிக்கொள்ள இயலாது. உங்களுடைய வாழ்க்கையில் கிரியை செய்யும்படி பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையை அனுமதிப்பதின் மூலம் மாத்திரமே தலைவருக்கான தகுதிகளை அபிவிருத்தி செய்ய முடியும்.

இந்த செயற்பாடு தொடர்ச்சியானதொன்றாகும், அத்தோடு "நாம்" அவருடைய ஊழியர்கள் என வேதாகமம் குறிப்பிடுகின்றது. "நாம்" எனும் வார்த்தை நிகழ்காலம் என்பதோடு, தேவனுடைய கலையுள்ள வல்லமையிற்கூடாக நாம் தொடர்ந்து விருத்தி செய்யப்படுகின்றோம் என அர்த்தப்படுத்துகின்றது:

> **ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம் அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். (எபேசியர் 2:10)**

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

2. "தகுதி" என்ற வார்த்தையிற்கான அதன் அர்த்தம் என்ன?

..........................................................................................................................................................

3. சுவிசேஷத்தின் கனி என்றால் என்ன?

..........................................................................................................................................................

4. கிறிஸ்துவை-போலான தகுதிகளின் கனி என்றால் என்ன?

..........................................................................................................................................................

5. பரிசுத்த ஆவியானவருடைய கனியை பட்டியல் ஒன்றில் பார்க்கவும். வரைவிலக்கணத்தை பட்டியல் இரண்டில் பார்க்கவும். கனியை நன்றாக விளக்கும் வரைவிலக்கணத்தின் எண்ணை கொடுக்கப்பட்ட வெற்றிடத்தில் எழுதுக.

| **பட்டியல் ஒன்று** | **பட்டியல் இரண்டு** |
|---|---|
| ....... தன்னடக்கம் | 1. ஆழமான பிரியம், கவனிப்பு |
| ....... விசுவாசம் | 2. சந்தோஷம், இன்பம், களிப்பு |
| ....... அடக்கம் | 3. அமைதி, நிசப்தம், நல்லிணக்கம் |
| ....... காருணியம் | 4. நீடிய பொறுமை |
| ....... நன்மை | 5. சாந்தமான குணத்தை கொண்டிருப்பது |
| ....... மகிழ்ச்சி | 6. நீதியுள்ள நடத்தைகள் |
| ....... நீண்ட துன்பத்தை அனுபவித்தல் | 7. தேவனில் பலமுள்ள நம்பிக்கை |
| ....... சமாதானம் | 8. கட்டுப்படுத்தப்பட்ட பலம் |
| ....... அன்பு | 9. சுய-கட்டுப்பாடு |

6. சபையில் தலைவர்களுக்கு கொடுக்கப்பட்ட விசேட தகுதிகளை தரும் வேதாகமத்தின் இரு முக்கிய வசனங்களை இனங்காண்க.

.....................................................................................................................................................................

.....................................................................................................................................................................

7. அனைத்து தலைவர்களுக்கும் அவசியமான நான்கு அடிப்படை தகுதிகள் என்ன?

.....................................................................................................................................................................

.....................................................................................................................................................................

.....................................................................................................................................................................

.....................................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. இயேசு கிறிஸ்துவிடம் பரிசுத்த ஆவியானவருடைய அனைத்து கனிகளும் அவருடைய வாழ்க்கையில் காணப்பட்டது. கீழ்வரும் உதாரணங்களை படியுங்கள்.

**வெளியக கனி:**

-சுவிசேஷம்: யோவான் 10:16; மாற்கு 1:38

**உள்ளான கனி:**

-அன்பு: மாற்கு 10:21; யோவான் 11:5,36
-மகிழ்ச்சி: யோவான் 15:11
-சமாதானம்: யோவான் 14:27
-நீண்ட துன்பத்தை அனுபவித்தல்: 1 பேதுரு 3:15
-காருண்யம்: 2 கொரிந்தியர் 10:1
-நன்மை: ரோமர் 11:22
-விசுவாசம்: மத்தேயு 17:14-21
-அடக்கம்: 2 கொரிந்தியர் 10:1
-தன்னடக்கம்: லூக்கா 4:1-13

2. இந்த பாடத்தில் கலந்துரையாடப்பட்ட தலைவர்களுக்கான விசேட மற்றும் பொதுவான தகுதிகளை மீண்டும் படியுங்கள். இயேசுவினுடைய வாழ்க்கை மற்றும் ஊழியத்தில் இந்த தகுதிகளை காட்டும் சுவிசேஷத்தின் வேதாகம வசனங்களை கண்டுபிடியுங்கள்.

3. இந்த பாடத்தில் தலைவர்களுக்காக கொடுக்கப்பட்ட தகுதிகளின் பட்டியல்களை மீளாய்வு செய்க. உங்களுடைய சொந்த வாழ்க்கையை மதிப்பிடுங்கள். இந்த ஒவ்வொன்றையும் நீங்கள் எவ்வாறு அளவிடுவீர்கள்.

4. மத்தேயு 21:18-20ல் அத்திமரத்தை சபித்த தேவனுடைய கதையை வாசியுங்கள். இயேசு அத்தி மரத்தை கனி இல்லாத கோபத்தினால் மாத்திரம் சபிக்கவில்லை. அவர் ஓர் முக்கியமான உண்மையை போதித்தார். அத்தி மரம் நல்ல தோற்றத்தை கொடுத்தது. அதற்கு நல்ல பச்சை இலைகள் இருந்தது, அது கனி கொடுப்பது போல் காணப்பட்டது, ஆனால் அதற்கு கனி இல்லை.

ஆவிக்குரிய தோற்றத்தை மாத்திரம் கொண்டிருத்தல் போதாது. சில தலைவர்கள் அனைத்தும் கட்டுப்பாட்டுக்கு கீழ் இருப்பதை போன்ற வெளியக தோற்றத்தை தருவர், ஆனால் உள்ளாக கிறிஸ்துவை-போலான ஆவிக்குரிய கனியை அவர்கள் கொண்டிருக்க மாட்டார்கள். இதுவே இயேசுவின் காலத்தில் சமய குழு தலைவர்களான பரிசேயர்களின் நிலை ஆகும். இயேசு அவர்களுக்கு கூறினார்:

**மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள்., அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். (மத்தேயு 32:27)**

தலைவர்கள் அத்தோடு அனைத்து விசுவாசிகளில், தேவன் தோற்றத்தில் கனியின்மையை விட கனிகொடுத்தலை குறித்து கரிசனை கொள்ளுகின்றார்.

5. எதிர்கால இஸ்ரவேல் தலைவர்களுக்கு மோசேயினால் நிர்ணயம் செய்யப்பட்ட ஐந்து தகுதிகளை குறித்துக் கொள்ளுங்கள் (எண்ணாகமம் 27:17). அவர் இவ்வாறான மனிதனாயிருக்க வேண்டும்:

1. அவர்களோடு வெளியில் செல்ல வேண்டும்: நடத்தி செல்லும் ஒருவர்.
2. அவர்களுக்குள் முன்னாக செல்ல வேண்டும்: மக்களின் பொருட்டு பரிந்துபேசும் ஓர் நபர்.
3. அவர்களை வழிநடத்துதல்: போராட்டத்தில் தலைவராக இயலுமையுள்ள ஓர் நபர்.
4. அவர்களை கொண்டுசெல்லும் ஒருவர்: அவர்களை நிலத்தில் நடத்தும் இயலுமையுள்ள ஓர் நபர்.
5. சரியான தலைமைத்துவத்தை கொடுக்கக்கூடியதாக இருத்தல் "தேவ சேனையானது மேய்ப்பன் இல்லாத ஆடுகள் போல் இல்லாதிருத்தல்."

6. உலக மற்றும் ஆவிக்குரிய தலைவர்களுக்கிடையிலான சில வேறுபாடுகள் இங்கே தரப்பட்டுள்ளது:

| **உலக தலைவர்** | **ஆவிக்குரிய தலைவர்** |
|---|---|
| சுய-நம்பிக்கை | தேவனில் நம்பிக்கை |
| மனிதர்களை அறிந்திருக்கிறார் | தேவனை கூட அறிந்திருக்கிறார் |
| அவருடைய சொந்த தீர்மானங்களை எடுப்பார் | தேவனுடைய சித்தத்தை தேடுவார் |
| லட்சியவாதியாக இருப்பார் | தாழ்மையுள்ளவராக இருப்பார் |
| தன்னுடைய சொந்த முறைகளை பின்பற்றுவார் | தேவனுடைய முறைகளை பின்பற்றுவார் |
| மற்றவர்களிடமிருந்தான கீழ்ப்படிவில் மகிழ்வார் | தேவனிடம் கீழ்ப்படிவார் |
| தனிநபர்களிடமிருந்தான வாஞ்சைகளிலிருந்து ஊக்கப்படுவார் | அன்பினால் ஊக்கப்படுவார் |
| சுதந்திரமானவர் | தேவனிடம் அடிப்படையானவர் |

7. தீமையான தலைவர்களிடமிருந்து நல்ல தலைவருக்கான 28 நீதிமொழிகளின் வேறுபாடான தகுதிகள்:

**ஓர் நல்ல தலைவர்:**

-நிலையானவர் (தப்பி ஓட மாட்டார், தைரியமானவர்): வசனங்கள் 1-2
-முரண்பாடுகளாயிருப்பினும் சரியானதிற்காக நிற்பார்: வசனம் 4
-நியாயப்பிரமாணத்தை வைத்திருப்பார்: வசனங்கள் 4,9
-வெளிப்படுத்தும் அறிவிற்காக தேவனை தேடுவதினால் அனைத்து காரியங்களையும் விளங்கியிருப்பார்: வசனங்கள் 5,11
-அவருடைய உறவினர்களை பெருமைப்படுத்துவார்: வசனம் 7
-உண்மையானவராயிருப்பார்: வசனங்கள் 6,8
-ஜெப மனிதராயிருப்பார்: வசனம் 9
-(அனைத்து நன்மையான காரியங்கள்) பரிபூரணமானவன்: வசனங்கள் 10,20,25
-புத்தியுள்ள மனிதன் (விளங்கிக்கொள்வதற்காக தேடுகின்றான்): வசனம் 11
-சந்தோஷத்தை கொண்டுவருகிறார்: வசனம் 12
-தன்னுடைய பாவத்தை அறிக்கையிடுகிறார்: வசனம் 13
-தேவனுக்கு பயப்படுகின்றார்: வசனம் 14
-பொருளாசை அற்றவன்: வசனம் 16
-தீர்க்காயுள்: வசனம் 16
-சமாதானக்காரர்: வசனம் 17
-உத்தமனாய் நடக்கிறவர்: வசனம் 18
-சுறுசுறுப்புள்ளவர்: வசனம் 19
-உண்மையுள்ள மனுஷன்: வசனம் 20
-முகதாட்சிணியம் அற்றவர்: வசனம் 21
-கடிந்துகொள்வதற்கும் ஒழுக்கத்திற்கும் பயப்படமாட்டார்: வசனம் 23
-தன்னுடைய குடும்பத்தை முதன்னிலைபடுத்துவார்: வசனம் 24
-தன்னைவிட தேவனை நம்பி தாழ்மையாய் இருப்பார்: வசனம் 25

-தேவனுடைய வழிநடத்தலை நம்புவார்: வசனம் 26
-தன்னை சுற்றியுள்ளோருக்கு இரக்கமுள்ளவராகவும், கரிசனையுள்ளவராகவும் இருப்பார்: வசனம் 27
-நீதிமானாகிய மனிதர்கள் எழும்புவதற்கு காரணமாயிருக்கிறார்கள்: வசனம் 28

**துன்மார்க்கமான தலைவர்:**

-தேவையற்றபோது பயமுள்ளவர்களும் ஓடிப்போகிறவர்களுமாயிருக்கிறார்கள்: வசனம் 1
-நிலையற்றவராய் இருக்கிறார்கள்: வசனம் 1-2
-ஏழைகளை ஒடுக்குகின்றவர்: வசனம் 3
-மனிதர்களுடைய புகழ்ச்சியினால் பெருமையுள்ளவராகவும், அதிகாரமுள்ளவராகவும் இருக்கிறார்: அவர் அநீதியினிமித்தம் செல்வாக்கு பெறுகின்றார்: வசனம் 4
-ஆழமற்றவராயிருக்கிறார் (அவர் அடித்து போகின்ற மழையை போன்று இருக்கிறார்): வசனம் 3
-கருணை அற்றவர்: வசனம் 3,27
-நியாயப்பிரமாணத்தை விட்டு விலகுகிறார்: வசனம் 4
-விளங்கிக்கொள்ளாதிருக்கின்றார்: வசனம் 5,16
-தன் வழியில் பிடிவாதமாயிருக்கிறார்: வசனம் 6,18
-போஜனப்பிரியருக்குத் (ஆகாத) தோழனாயிருக்கிறார்: வசனம் 7
-தன் குடும்பத்தவரை அவமானப்படுத்துகிறார்: வசனம் 7
-அநீதியை அதிகப்படுத்துகின்றார்: வசனம் 8,20,22
-ஜெபிக்காதிருக்கிறார்: வசனம் 9
-நீதிமானை வழிதவறச் செய்கின்றார்: வசனம் 10
-தன்னுடைய சொந்த அகந்தை வழியில் ஞானமாயிருக்கிறார்: வசனம் 11
-அவருடைய எழும்புதல் பயத்தை கொண்டுவரும்: வசனம் 12,28
-தன்னுடைய பாவங்களை மறைக்கிறார்: வசனம் 13
-தன்னுடைய இருதயத்தை கடினப்படுத்துகிறார்: வசனம் 14
-கர்ஜிக்கும் சிங்கம் அல்லது பயமுறுத்தும் கரடி போல் ஆளுகின்றார்: வசனம் 15
-முரட்டுத்தனமாக இருக்கின்றார்: வசனம் 15,17
-பேராசையுடையவர்: வசனம் 16
-விழுவதற்காக ஏற்படுத்தப்படுகின்றார்: வசனம் 10,18
-தீங்குகிற்குள் விழுகின்றார்: வசனம் 14
-தற்பெருமையிற்கு பின்னால் செல்லுகின்றார் (சோம்பல், மாபெரும் மக்களால் செல்வாக்கிற்கு உட்படுகிறார்): வசனம் 19
-முகதாட்சிணியம் உள்ள மனிதன்: வசனம் 21
-குற்ற உணர்வுள்ளவன்: வசனம் 20
-ஆவிக்குரிய வறுமையில் வாழுகின்றார்: வசனம் 22
-முகஸ்துதி செய்கின்றார் (பாராட்டுக்களை விரும்புகின்றார்): வசனம் 23
-தனது குடும்பத்திற்கு முன்னுரிமை கொடுப்பதில்லை: வசனம் 24
-பெருமையுள்ளவர்: வசனம் 25
-வழக்கை ஏற்படுத்துகின்றார்: வசனம் 25
-தன்னை வழிநடத்தும்படி தனது சொந்த இயலுமைகளை நம்புகின்றார்: வசனம் 26
-கட்டுவதற்கு பதிலாக அழிக்கின்றார்: வசனம் 24
-தன்னை சுற்றியுள்ளோருக்கு தனது கண்களை விலக்குகின்றார்: வசனம் 27

**இந்த வேறுபாடுகளின் சுருக்கம்:** வசனம் 28ஐ பார்க்க

# அதிகாரம் ஐந்து

## ஊழியனைப்போல் வழிநடத்துதல்

**குறிக்கோள்கள்:**

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ தனித்துவமான கிறிஸ்தவத்தை போன்றதான ஒரு தலைமைத்துவ மாதிரியை இனங்காணவும்,
- ☐ ஊழியனைப்போலான மாபெரும் உதாரணத்தை இனங்காணவும்,
- ☐ ஊழியனைப்போல் வழிநடத்துதல் எவ்வாறு வல்லமையில் விளைவாயிருக்கும் என்பதை விபரிக்கவும்,
- ☐ மதசார்பற்ற மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கிடையிலான நான்கு வேறுபாடுகளை பட்டியல்படுத்தவும்,
- ☐ நாம் சேவிப்போரை இனங்காணவும்,
- ☐ ஊழியனைப்போலான தலைவனாக எவ்வாறு மாறுவது என்பதை விபரிக்கவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது:**
>
> **அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்,**
>
> **தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். (பிலிப்பியர் 2:5-7)**

### அறிமுகம்

உலகத்திலுள்ள தலைமைத்துவமானது வல்லமை, பணம், கல்வி மற்றும் இயலுமைகளால் கூட அளவிடப்படுகின்றது. உலகத்தில் அநேக தலைமைத்துவ வகைகள் காணப்படுகின்றன. “மாதிரியினால்” நாம் அர்த்தப்படுவது ஒரு நபர் வழிநடத்தும் வழி ஆகும். உதாரணமாக, மக்களை கட்டுப்படுத்தும் சர்வதிகாரி காணப்படலாம். மக்களுடைய வாக்குகளால் கட்டுப்படுத்தப்படும் ஜனநாயக தலைவர்களும் காணப்படலாம்.

இயேசு பூமியிற்கு வந்து, ஊழியரைப்போன்று மாறிய போது சித்தியுள்ள தலைமைத்துவத்தின் உலக கொள்கைளை அவர் மாற்றியமைத்தார். இந்த அத்தியாயமானது ஊழியனைப்போன்று வழிநடத்தும் புதிய ஏற்பாட்டின் கொள்கைகளை கரிசனை செலுத்துகின்றது.

### வேறுபடுத்தும் உதாரணம்

இயேசு உலக தலைமைத்துவத்தை ஆவிக்குரிய தலைமைத்துவத்தோடு வேறுபடுத்தினார். அவர் கூறினார்:

**அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்டவரச்செய்து: புறஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், அவர்களில் பெரியவர்கள் அவர்கள் மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.**

**உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது: உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்.**

**உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன். (மாற்கு 10:42-44)**

ஊழியனைப்போல் வழிநடத்தல் என்பதே உலக தலைமைத்துவத்திற்கு அப்பால் கிறிஸ்தவ தலைமைத்துவத்திற்கு ஏற்படுத்தப்பட்டதாகும். இதுவே தனித்துவமான கிறிஸ்தவத்திற்கான ஒரு தலைமைத்துவ மாதிரி ஆகும்.

## மாபெரும் உதாரணம்

ஊழியனைப்போல் வழிநடத்துவதற்கான மாபெரும் உதாரணம் தேவனாகிய இயேசு கிறிஸ்துவே. ஊழியன் என்னும் ஒருவர் தாழ்மை, அர்ப்பணிப்பு மற்றும் அன்பினால் மற்றவர்களுக்கு சேவிப்போர் ஆவார். இயேசு ஊழியனைப்போன்று உபதேசித்து மற்றும் மாதிரியாக இரண்டையும் காண்பித்தார். இயேசு உலகத்தில் நடைபெற்ற அனைத்து வல்லமையான மாதிரிகளையும் புறக்கணித்து, புதியதொன்றை காண்பித்தார். “ஊழியன்” என்பது தலைவருக்கு கடினமான வார்த்தையாகும், ஆனால் இயேசு அவர் சேவிக்க வந்தார் என்று அதை தெளிவாக்கினார்:

**நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன். (லூக்கா 22:26)**

இயேசு சேவிக்கப்பட அல்ல, மாறாக சேவிக்கவே வந்தார் என மாற்கு தொடர்புபடுத்துகின்றார்:

**அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார் என்றார். (மாற்கு 10:45)**

பவுல் இயேசுவைப்பற்றி கூறினார்...

**தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்... (பிலிப்பியர் 2:7)**

## மாதிரியைப் பின்பற்றல்

ஆரம்பகால சபை தலைவர்கள் இயேசுவினால் ஏற்படுத்தப்பட்ட மாதிரியை பின்பற்றினார்கள். அவர்கள் தம்மைத்தாம் ஊழியக்காரராக அறிவித்தார்கள்:

**இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனுமாகிய பவுல்... (ரோமர் 1:1)**
**தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய யாக்கோபு... (யாக்கோபு 1:1)**
**இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனும் சீமோன் பேதுரு எழுதுகிறதாவது... (2 பேதுரு 1:1)**
**இயேசுகிறிஸ்துவினுடைய ஊழியக்காரனுமாயிருக்கிற யூதா... (யூதா 1:1)**
**உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழுதைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ்செய்தருளும் என்றார்கள். (அப்போஸ்தலர் 4:29)**

நாம் இந்த மாதிரியில் தொடர வேண்டும். நாம் வழிநடத்துவோருக்கு நாம் ஊழியக்காரராக இருக்க வேண்டும்.

## ஊழியக்காரரின் வல்லமை

“நான் நடத்தும் மக்களுக்கு நான் ஊழியக்காரராக இருக்கும்போது எவ்வாறு நான் தலைவராக இருக்க முடியும்? ஏன் இவைகள் அனைத்தும் ஊழியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன?” என நீங்கள் கேட்கலாம். இந்த கேள்விகளுக்கெல்லாம் பதிலானது ஊழியத்துவத்தில் வல்லமை காணப்படுகின்றது. ஊழியனைப்போல் வழிநடத்துதல் என்பது பலவீனமான தலைவனைப்போல் இருத்தல் எனும் அர்த்தமாகாது. தலைமைத்துவமானது ஆவிக்குரிய எதிரிகளுக்கு எதிராக ஆற்றல்மிகுந்த, ஆக்கிரமிக்கும் மற்றும் வலிமையா-னதாக இருக்காது என கூறலாகாது.

ஊழியத்துவத்தின் வல்லமையானது ஒரு நபரை தேவனால் உபயோகிக்கக்கூடியவாறு ஒரு நிலையிற்கு தாழ்மைப்படுத்துவதாகும். இது இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் காட்டப்பட்டுள்ளது. உங்களுடைய வேதாகமத்தில் பிலிப்பியர் 2:5-11ஐ வாசிக்கவும். (இந்த பந்தியை இந்த பாடத்தின் பின்னர் விரிவாக நீங்கள் படிப்பீர்கள்). இந்த வசனங்களானது ஊழியரைப்போன்று தம்மைத்தாமே எவ்வாறு தாழ்மைப்படுத்துவது மற்றும் சிலுவையில் மரித்தல் எவ்வாறு என்பதையும் விபரிக்கும் (வசனங்கள் 5-8), இயேசு மாபெரும் வல்லமையினால் மேன்மைப்படுத்தப்பட்டார் (வசனங்கள் 9-11). ஒருவர் தலைவரை பார்க்கவேண்டுமானால் சிலுவையே இப்பூமியில் உள்ள கடைசி இடம் ஆகும், ஆனால் அது “இரட்சிப்பிலிருந்து தேவனுடைய வல்லமையாக” மாற்றப்பட்டுள்ளது (1 கொரிந்தியர் 1:18). தேவனுடைய இராஜ்ஜியத்தில் அநேக காரியங்களின் அமைப்பானது மறுபக்கமாயுள்ளது. நாம் பலவீனமாகவுள்ளபோது பலமுள்ளவர்களாகவும், கொடுக்கும்போது பெறுபவர்களாகவும், இறந்தும் வாழ்பவராக காணப்படுகின்றோம். தலைவர் என்ற வகையில், ஊழியத்திற்கூடாக நீங்கள் வல்லமையுள்ளவராக மாறுகின்றீர்கள்.

## நான்கு வேறுபாடுகள்

மத்தேயு 20:25-28 மற்றும் மாற்கு 10:42-44 ஐ வாசியுங்கள். இந்த பகுதிகளானது கிறிஸ்தவ தலைவர்களின் குணாதிசயத்திலிருந்து வேறுபடுத்தும் உலக தலைவர்களின் நான்கு வேறுபாடுகளை காட்டுகின்றது:

1. மதசார்பற்ற தலைவர்கள் தம்மை பின்பற்றுவோருக்கு ஆதிக்கம் செலுத்துகின்றனர்: “ஆதிக்கம்” என்னும் இந்த வார்த்தையின் அர்த்தம் “அடக்குமுறை, கட்டுப்படுத்தும் சேனை” ஆகும். ஊழிய தலைவர்களா-னவர்கள் தம்மை பின்பற்றுவோரை அடக்குமுறையோ அல்லது கட்டுப்படுத்தலோ இல்லை.

2. மதசார்பற்ற தலைவர்கள் பின்பற்றுவோருக்கு மேல் அதிகாரத்தை பயிற்றுவிக்கின்றனர்: “அதிகாரம்” என்னும் இந்த வார்த்தையின் அர்த்தமானது “மேன்மை” அகும். உலகளாவிய தலைவர்கள் தம்முடைய பின்பற்றுவோருக்கு மேல் தம்மைத்தாமே மேன்மையுள்ளவர்களாக கருதுவர். கிறிஸ்தவ தலைவர்கள் சேவையிற்காகவே அழைக்கப்பட்டுள்ளார்கள், மேன்மையிற்காக அல்ல.

3. மதசார்பற்ற தலைவர்கள் தம்மை பின்பற்றுவோருக்கு மேல் தலைவர்களாக இருக்கிறார்கள். “தலைவர்” எனும் இந்த வார்த்தையிற்கு அர்த்தமானது முதன்மையான இடமாகும். தேவனுடைய இராஜ்ஜியத்தில் முதலாவதே (தலைவர்கள்) கடைசியான இடமாகும்.

4. மதசார்பற்ற தலைவர்கள் அவர்கள் வழிநடத்துவதற்கு மேல் இராஜாக்களாக இருக்கின்றார்கள்: “இராஜாக்கள்” எனும் வார்த்தையிற்கு அர்த்தமாவது சேவை மிகுதியாயிருக்கும் ஒருவருக்கானது. கிறிஸ்தவ தலைவர்கள் தமது பின்பற்றுவோரை சேவிக்கின்றார்கள்.

## நாம் யாரை சேவிக்கின்றோம்?

ஊழிய தலைவர் என்ற வகையில், நாம் கிறிஸ்துவின் சரீரத்தை பின்பற்றுகின்றோம். பவுல் கொரிந்தியர்களுக்கு கூறினார்:

> **நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம். (2 கொரிந்தியர் 4:5)**

நாமும் கூட இறந்துபோன மற்றும் தொலைந்த தாழ்மையை சேவிக்கின்றோம். நல்ல சமாரியனின் உவமையை லூக்கா 10:25-37ல் வாசிக்கவும். ஊழியத்துவமானது மரியாதையையும் வல்லமையையும் எடுக்கின்றது, ஏனென்றால் நாம் மற்றவர்களை சேவிக்கும்போது, நாம் தேவனையே சேவிக்கின்றோம்:

> **அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார். (மத்தேயு 25:40)**

ஊழியத்துவத்தின் உவமையை மத்தேயு 25:14-30ல் வாசியுங்கள். நாம் தேவனை சேவிப்பதால், நாம் அவருக்கு பொறுப்பாக உள்ளோம்:

> **மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல, அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல. (யோவான் 13:16)**

## ஊழியக்கார தலைவராக மாறுவது எவ்வாறு

பிலிப்பியர் 2:5-8ஐ வாசியுங்கள். கிறிஸ்துவின் உதாரணத்தை பின்பற்றுவதினால் ஊழிய தலைவராக மாறுவது எவ்வாறு என இந்த பகுதி விபரிக்கின்றது. ஊழிய தலைவராக மாறுவதற்கு நீங்கள் செய்ய வேண்டியது:

### சரியான குறிக்கோளை விருத்தி செய்தல்:

ஊழியரைப்போல் வழிநடத்துதல் உங்களுடைய குறிக்கோளோடு ஆரம்பமாகின்றது. நீங்கள் கிறிஸ்துவின் குறிக்கோளை விருத்தி செய்ய வேண்டும்:

> **கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது,**
>
> **அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். (பிலிப்பியர் 2:5-7)**

தேவன் இருதயத்தில் சரியான குறிக்கோளுடைய மனிதர்களை பயன்படுத்துகின்றார். தேவன் தாவீதின் இருதயத்தை பார்த்ததினால் அவர் இராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டார் (1 சாமுவேல் 16:7). குறிக்கோள்கள் இருதயத்தில் ஏற்படுத்தப்படுகின்றன. எமது இயல்பான குறிக்கோள்கள் சுயநலமாகும். நீங்கள் ஊழிய தலைவராக இருக்க வேண்டுமாயின், உங்களுடைய குறிக்கோள்களும் நோக்கங்களும் மாற்றப்பட வேண்டும்.

### உங்களை நீங்கள் தாழ்மைப்படுத்துங்கள்:

> **தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்... (பிலிப்பியர் 2:7)**

உங்களுடைய குறிக்கோள்கள், திட்டங்கள், நிலைகள் மற்றும் புகழ் ஆகியவற்றில் கரிசனை செலுத்த வேண்டாம். இந்த அனைத்து காரியங்களையும் தேவனுக்கும் உங்களை தாழ்மைப்படுத்தவும் கொடுங்கள். உங்களை தாழ்மைப்படுத்தல் தேவன் செய்யும் ஒன்றல்ல, அது நீங்கள் செய்யும் ஒன்று ஆகும்.

### மனித இயல்பை இனங்காணுதல்:

இயேசுவினால் சேவிக்க முடிந்தது, ஏனென்றால் அவர் மனித இயல்போடு தம்மைத்தாம் இனம்கண்டார். அவர் அவர்களுடைய தேவைகளை இனங்கண்டு அடைந்தார்:

> **அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.... (பிலிப்பியர் 2:7-8)**

இயேசு மனிதர்களைப்போல் சோதிக்கப்பட்டார், மனிதர்களைப்போல் துன்புறுத்தப்பட்டார், அத்துடன் மனிதர்களின் அடிப்படை தேவைகள் மற்றும் பலவீனமுடையதற்கு பொருள்படும் சரீரத்தை கொண்டிருந்தார். நீங்கள் வழிநடத்துவோருக்கு சேவிக்க விரும்பினால், நீங்கள் அவர்களுடைய பலவீனம், துன்பம் மற்றும் தேவைகளில் உங்களில் நீங்கள் இனம்காண வேண்டும்.

## கீழ்ப்படிவுள்ளவர்களாக இருங்கள்:

சேவிக்கும்பொருட்டு, இயேசு கீழ்ப்படிவுள்ளவராக மாறினார்:

> **அவர் கீழ்ப்படிந்தவராகி... (பிலிப்பியர் 2:8)**

தலைவருக்காக அதிகாரமுள்ள ஒவ்வொருவரும் தலைவருக்கான அதிகாரத்தில் கீழ்ப்பட்டவர்களாவார்கள். கிறிஸ்தவ தலைவர் என்ற வகையில், நீங்கள் தேவனுடைய அதிகாரத்தின் கீழ் இருக்கின்றீர்கள். நீங்கள் சபை ஐக்கியம் அல்லது தலைமைத்துவ அதிகாரத்தின் கீழ் இருக்கலாம். தலைவரைபோல் சரியாக சேவிக்க வேண்டுமாயின், உங்களுடைய சொந்த தலைவர்களுக்கு நீங்கள் கீழ்ப்படிய வேண்டும்.

## பாவத்திற்கும் சுயத்திற்கும் மரிக்க வேண்டும்:

இயேசு மரண தருவாயிலும் கூட கீழ்ப்படிவுள்ளவராக இருந்தார்:

> **அவர் சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி... (பிலிப்பியர் 2:8)**

“நான் அனுதினமும் சாகிறேன்” என பவுல் கூறினார் (1 கொரிந்தியர் 15:31). அவர் பேசும் மரணமானது பாவத்திற்கும் சுயத்திற்குமான தொடர்ச்சியான மரணமாகும். இதுவே சேவிக்கும்படி வழிநடத்துவோருக்கு அவசியமானதொன்றாகும். நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் பாவத்தையும் சுயத்தையும் சிலுவையில் அறைய வேண்டும். சிலுவை வலியுடையதான அனுபவமாகும், ஆனால் கிறிஸ்துவைப்போல், துன்பத்திற்கூடான தலைமைத்துவ ஊழிய கொள்கைகளை நீங்கள் கற்பீர்கள்.

## அன்பில் சேவியுங்கள்:

அவருடைய மாபெரும் அன்பின் காரணமாக, இயேசு தம்மைத்தாம் தாழ்மையாக்கி, ஊழியனுடைய நிலையை எடுத்து, மனிதரோடு இனங்கண்டு, மரணத்தருவாயில் கீழ்ப்படிவுள்ளவராக மாறினார்:

> **நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது.**
>
> **பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம். (1 யோவான் 4:10-11)**

ஊழிய தலைமைத்துவத்திற்கு அன்பே மையமாக இருக்கின்றது. அன்பு இருதயத்தின் உணர்வுபூர்வமாக ஆரம்பிக்கின்றது, ஆனால் அது நடைமுறையில், உணரக்கூடிய வழிமுறைகளில் காட்டப்படுகிறது. நீங்கள் உண்மையிலேயே ஒருவரை நேசித்தால், நீங்கள் அவர்களை சேவிக்க சித்தம் கொள்ளுகின்றீர்கள்.

ஓர் ஊழிய தலைவர் அவர் சேவிப்பவற்றை கொண்டு கட்டுகின்றார். அவர் ஒருபோதும் மக்களை பயன்படுத்த மாட்டார் ஆனால் அவர்களோடு வேலை செய்து, அவர்கள் ஆவிக்குரிய ரீதியில் வளர உதவும்பொருட்டான அவர்களுடைய வழியிற்கூடாக செல்லுவார். அவர் எடுப்பதற்கு பதிலாக கொடுப்பார். அழித்தல் வேகமானதும் இலகுவானதுமாகும், ஆனால் கட்டுதல் நேரத்தை எடுப்பதோடு அதிக கடினமானதாகும்.

1 கொரிந்தியர் 13ஐ வாசியுங்கள். ஒவ்வொரு இடத்தில் அது கூறும் “அன்பானது” “ஊழியனைப்போலான தலைவருக்கு” எனும் வார்த்தையில் பிரதியீடு செய்கின்றது. (உதாரணம்: “ஊழியனைப்போலான தலைவர் நீடிய சாந்தமும் தயவுமுள்ளது.”) இது ஊழிய தலைவர்களினால் காட்டப்பட்ட அன்பின் அர்த்தத்தை பிடிக்க உங்களுக்கு உதவுகின்றது.

### தேவனே பொறுப்பாக இருக்கட்டும்:

இயேசு ஊழியனைப்போல் பூலோகத்திற்கு வரும்போது, அவருடைய சொந்த வாழ்க்கையில் அவருடைய உரிமைகளை “பொறுப்பாக” அவர் கொடுத்தார். அவர் “என்னுடைய சித்தமல்ல, பரலோக சித்தப்படி நடை பெறும்” என அவர் கூறினார். நீங்கள் ஊழியராக தேர்ந்தெடுக்கும்பொழுது, நீங்கள் உரிமைகளை பொறுப்பாக கொடுக்கின்றீர்கள். நீங்கள் உங்களுடைய சொந்த இராஜ்ஜியத்தை தொடர்ச்சியாக கட்டுவதில்லை. நீங்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தை கட்டுகின்றீர்கள். நீங்கள் உங்களுடைய கருத்துக்கள் அல்லது நம்பிக்கைகளை தொடர்ச்சியாக தொடர்பாடுவதில்லை. நீங்கள் உங்களுடைய எஜமானுடைய செய்தியை தொடர்பாடுகின்றீர்கள். இது உங்களுடைய தொடர்ச்சியான சித்தம் அல்ல, ஆனால் இது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. இயேசு தேர்ந்தெடுத்தலின் மூலம் சேவிக்க வந்தார். உங்களுடைய சந்தர்ப்பம் இதுவாகும்... நீங்கள் சேவிக்க தேர்ந்தெடுக்கப்படுகின்றீர்களா? ஞாபகத்தில் கொள்ளுங்கள்: நீங்கள் சேவிக்கும் சித்தத்தின் அளவில் மாத்திரமே சேவிக்கும் தரம் காணப்படுகின்றது.

**சுய பரீட்சை:**

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

.....................................................................................................................................................................

.....................................................................................................................................................................

.....................................................................................................................................................................

2. கிறிஸ்தவ தனித்துவமான ஓர் தலைமைத்துவ மாதிரி என்ன?

.....................................................................................................................................................................

3. ஊழிய தலைமைத்துவத்திற்கான மாபெரும் உதாரணம் யார்?

.....................................................................................................................................................................

4. ஊழியனைப்போல் வழிநடத்தல் எவ்வாறு வல்லமையின் விளைவை ஏற்படுத்தும் என்பதை விபரிக்க?

.....................................................................................................................................................................

5. மதசார்பற்ற மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இடையிலான நான்கு வேறுபாடுகளை பட்டியலப்படுத்துக.

........................................................................................ ........................................................................................

........................................................................................ ........................................................................................

6. தலைவர் என்ற வகையில், நாம் யாரை சேவிக்கின்றோம்?

.....................................................................................................................................................................

7. பிலிப்பியர் 2:5-8ஐ பயன்படுத்தி, ஊழிய தலைவராக மாறுவது எவ்வாறு என விபரிக்க?

.....................................................................................................................................................................

.....................................................................................................................................................................

.....................................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. இந்த வசனத்தை வாசியுங்கள்:

**இவைகளிலே கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்கிறவன் தேவனுக்குப் பிரியனும் மனுஷரால் அங்கிகரிக்கப் பட்டவனுமாயிருக்கிறான். (ரோமர் 14:18)**

இந்த வசனம் சித்தியுள்ள தலைமைத்துவத்தின் விளைவை இனங்காட்டுகின்றது.

1. இயேசுவை சேவிப்பதால் ஏற்படுத்தப்படும் விளைவு...
2. தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுதலும்...
3. மனிதனால் ஏற்றுக்கொள்ளப்படுதலும்...

இப்பொழுது ரோமர் அதிகாரம் 12-14ஐ படியுங்கள். தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மனுஷனால் ஒப்புதல் பெறும்படியாக, கிறிஸ்துவின் சேவகனாயிருக்கும்பொருட்டு நீங்கள் செய்யவேண்டி காரியங்களை பட்டியல்படுத்துங்கள். பின்தொடருவதற்கான உதாரணம் இங்கு தரப்பட்டுள்ளது:

| **வசனம்** | **நான் என்ன செய்ய வேண்டும்** |
|---|---|
| ரோமர் 12:1 | என்னுடைய சரீரத்தை ஜீவ பலியாகவும், பரிசுத்தமாகவும், தேவனால் ஏற்றுக்கொள்ளும்படியாகவும் கொடுக்க வேண்டும். |
| ...................................... | ...................................................................................................................... |
| ...................................... | ...................................................................................................................... |
| ...................................... | ...................................................................................................................... |
| ...................................... | ...................................................................................................................... |
| ...................................... | ...................................................................................................................... |
| ...................................... | ...................................................................................................................... |
| ...................................... | ...................................................................................................................... |
| ...................................... | ...................................................................................................................... |
| ...................................... | ...................................................................................................................... |
| ...................................... | ...................................................................................................................... |
| ...................................... | ...................................................................................................................... |
| ...................................... | ...................................................................................................................... |

# அதிகாரம் ஆறு

## மேய்ப்பனைப்போல் வழிநடத்துதல்

**குறிக்கோள்கள்:**

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ நல்ல மேய்ப்பனை இனங்காணவும்,
- ☐ உண்மையான ஓர் ஆட்டுமந்தையை இனங்காணவும்,
- ☐ மேய்ப்பனுடைய பொறுப்புக்களை இனங்காணவும்,
- ☐ தீய மேய்ப்பனுக்கான எச்சரிக்கைகளை சுருக்கமாக்கவும்,
- ☐ தலைமைத்துவத்திற்கு இயற்கையிலான மேய்ப்பத்துவ கொள்கைகளை பிரயோகிக்கவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும்,**
>
> **சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். (1 பேதுரு 5:2-3)**

### அறிமுகம்

இன்னொரு ஒற்றுமை அல்லது இயற்கையிலான சமாந்திரம் மேய்ப்பனைப்போலான தலைமைத்துவத்தை காட்டுகின்றது. இயற்கையான உலகில், மேய்ப்பன் என்பவன் ஆடுகளுக்காக கவனிக்கும் ஒருவன் ஆவான். “மந்தை” என்பது குழு அல்லது ஆட்டு மந்தையை குறிக்கும். ஆவிக்குரிய உலகில், மக்கள் ஆடுகளுக்கு ஒப்பிடப்பட்டுள்ளனர். நாம் ஆவிக்குரிய ரீதியில் வழிதவறி சென்ற ஆடாகவோ (ஏசாயா 53:6) அல்லது தேவ-னுடைய “ஆட்டுமந்தையில்” ஒரு பகுதியானவராகவோ இருக்கலாம்.

இயேசு தம்மை “நல்ல மேய்ப்பனாக” காட்டியுள்ளதோடு, மேய்ப்பத்துவம் எதை உள்ளடக்குகின்றது என்பதை விரிவாக விபரித்தார். இந்த உதாரணம் ஆவிக்குரிய தலைமைத்துவத்திற்கான மாபெரும் ஓர் எடுத்துக் காட்டு ஆகும் (யோவான் 10ஐ பார்க்கவும்). வல்லமையுள்ள தலைவராக இருப்பதற்கு, அவரை தனிப்பட்ட ரீதியில் தொடர்புபடுத்தி, நீங்கள் நல்ல மேய்ப்பனை அறிந்திருந்தால் மாத்திரம் போதாது, நீங்கள் எவ்வாறு மேய்ப்பனை போல் வழிநடத்த வேண்டும் என்பதையும் கூட கற்றுக்கொள்ள வேண்டும்.

மேய்ப்பர்களைப்போல் நாம் வழிநடத்த வேண்டும் என பேதுரு உறுதிப்படுத்துகின்றார்:

> **உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை.... கண்காணிப்புச் செய்யுங்கள். (1 பேதுரு 5:2)**

## மேய்ப்பத்துவத்தின் கொள்கைகள்

இயேசு தம்மை "நல்ல மேய்ப்பன்" என அழைத்திருப்பினும் கூட, மேய்ப்பத்துவத்திற்கான கொள்கைகளை விளங்குவதற்கு அவருடைய ஊழியத்தின் உதாரணத்தை நாம் கற்க வேண்டும். உங்களுடைய வேதாகமத்தில் யோவான் 10ஐ திருப்புங்கள், இந்த அடிப்படை வேதாகம கொள்கைகளை நீங்கள் படிப்பதற்கு இந்த வழிகாட்டல்களை பயன்படுத்துங்கள்:

### ஒரு மந்தை, ஒரு மேய்ப்பர்:

நீங்கள் விளங்கவேண்டிய முதலாவது கொள்கையானது ஒரு மந்தையும் ஒரு மேய்ப்பனும் மாத்திரமே காணப்படுகின்றார். அனைத்து மறுபடியும் பிறந்த விசுவாசிகளால் ஏற்படுத்தப்பட்ட சபையே "மந்தை" ஆகும். இயேசு கிறிஸ்துவே "மேய்ப்பர்" ஆவார். மந்தையிற்கான ஒரு வழி மாத்திரமே காணப்படுகின்றது, அது இயேசுவிற்கூடாக ஆகும்:

> **நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும்சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான். (யோவான் 10:9)**
>
> **அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும். (யோவான் 10:16)**

இயற்கையான உலகில், மேய்ப்பர்கள் தம்முடைய மந்தைகளை வேறு மந்தைகளிலிருந்து பிரிப்பர், ஏனென்றால் அவைகளை கவனிப்பது இலகுவானதும் மிகவும் நடைமுறையானதுமாகும். அவர்களால் அநேகத்திற்கு பொறுப்பாகவும் கவனிக்கவும் மாத்திரமே முடியும். இது ஆவிக்குரிய தலைமைத்துவத்திலும் கூட உண்மையாகும். ஆனால் உண்மையில், ஒரேயொரு மந்தை மாத்திரமே காணப்படுகின்றது. இது இயேசு கிறிஸ்துவாகிய நல்ல மேய்ப்பனுக்கு சொந்தமாகவுள்ள அனைத்து உண்மையான விசுவாசிகளினாலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தலைவர் அல்லது "மேய்ப்பர்" என்ற வகையில், நீங்கள் ஏற்கனவே "மேய்ப்பத்துவத்திற்கு - கீழ்" இருக்கின்றீர்கள். நீங்கள் நல்ல மேய்ப்பரின் வழிகாட்டலுக்கு "கீழ்" அவருடைய மந்தையிற்கு பகுதியிற்கு மேல் சேவிக்கிறீர்கள்.

எப்பொழுதும் ஞாபகத்தில் கொள்ளுங்கள் அதாவது இனத்தின் பிரிவுகள், அமைப்புக்கள், உள்ளூர் சபை ஐக்கியங்கள் மனிதனால் ஏற்படுத்தப்பட்டதோடு தனிப்பட்ட கவனிப்புக்கள், நடைமுறை அமைப்புக்கள் ஆகியவற்றின் அனுமதிக்கு மாத்திரமே காணப்படும். ஆனால் உண்மையில், ஒரு மந்தை மாத்திரமே காணப்படுகின்றது.

"உங்களுடைய மந்தைகளை" இனத்தினால் நல்ல மேய்ப்பனுடைய மந்தையிலுள்ள வேறு மக்களிலிருந்து பிரிக்க முயற்சிக்க வேண்டாம். உள்ளூர் ஐக்கியம் அல்லது இனத்தின்படியான "உங்களுடைய மந்தைகளை" கட்டுவதற்கு கரிசனை கொள்ள வேண்டாம். நல்ல மேய்ப்பனுடைய மந்தையை கட்டுவதற்கு கரிசனை கொள்ளுங்கள். சில மந்தைகளை வேறுபடுத்துவதற்கு மனிதர்களுடைய விதிகளையும் கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம். இயேசு அறிவித்தார், "யாரெல்லாம் உட்பிரவேசிக்கிறார்களோ" தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் கதவின் மூலம் அவர்களால் வர முடியும்.

தேவனுடைய மந்தையானது பிரத்தியேகமானது அல்ல. அவருடைய அனைத்து மந்தைகளுக்கும் கதவு திறக்கப்பட்டுள்ளது:

> **இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு, அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும். அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும். (யோவான் 10:16)**

### தேவனால் ஆடுகள் கொடுக்கப்பட்டுள்ளது:

ஒரேயொரு மந்தை மாத்திரமே காணப்படுவதால், அனைத்து ஆடுகளும் தேவனால் கொடுக்கப்பட்டவை ஆகும்:

**அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்... (யோவான் 10:29)**

பின்பற்றுவோர் உங்களுடைய கவனிப்புக்கு மாத்திரமே ஒப்படைக்கப்பட்டுள்ளனர். உண்மையிலேயே, அவர்கள் தேவனுக்கு சொந்தமானவர்கள்.

## சில மந்தைகள் பின்பற்றாது:

மேய்ப்பன் என்ற வகையில் நீங்கள் கவனிக்கவேண்டிய சில சோகமான காரணிகள் காணப்படுகின்றது. அழைக்கப்பட்டவர்களில் சிலர் பின்தொடருவதற்கு மறுப்பர். இயேசு கூறினார்:

**நீங்கள் என் மந்தையின் ஆடுகளாயிராதபடியினால் விசுவாசியாமலிருக்கிறீர்கள். (யோவான் 10:26)**

அழைக்கப்பட்ட சிலர் காணப்படுவார்கள், ஆனால் விசுவாசிக்க மாட்டார்கள். அவர்கள் மந்தையிற்கு ஒரு பகுதியாக மாறுவதற்கு மறுப்பர். அது ஒரு சோகமான காரணி, ஆனால் உண்மையாகும். இது உங்களை ஊக்கமின்மைப்படுத்த இடம் கொடுக்க வேண்டாம். பின்பற்றுவோரை நடத்துங்கள்.

## மேய்ப்பர் தன்னுடைய ஆடுகளை அறிவார்:

இயேசு கூறினார்:

**நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன், ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன். (யோவான் 10:14)**

கிறிஸ்துவினுடைய ஊழிய நேரத்தில், மேய்ப்பர்கள் தம்முடைய ஆடுகளுடன் மிகவும் தனிப்பட்ட உறவை கொண்டிருந்தார்கள். ஆடுகள் பிறக்கும்போது மேய்ப்பர்கள் அதன்கூட இருந்து, அவைகளை வழிநடத்தி, அதின் வாழ்நாள் முழுவதும் அதை கவனித்தார்கள். வல்லமையுள்ள தலைவராயிருப்பதற்கு, உங்களுடைய கவனிப்பை ஒப்படைக்கும் மக்களை அறிந்திருக்க வேண்டும். நீங்கள் அவர்களோடு தனிப்பட்ட உறவுமுறையை அபிவிருத்தி செய்ய வேண்டும். இயேசு நல்ல மேய்ப்பனைப்பற்றி “அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு...” (யோவான் 10:3) என கூறினார்.

## மேய்ப்பனை மந்தைகள் அறிந்திருக்கின்றன:

மேய்ப்பன் மாத்திரம் தனது ஆடுகளை அறிந்திருக்கவில்லை, ஆடுகளும் மேய்ப்பனை அறிகின்றன:

**என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது: நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. (யோவான் 10:27)**

மேய்ப்பனுடைய சத்தத்தை மந்தைகள் அறிந்திருக்கின்றன என இயேசு கூறினார். அவைகள் அறிந்தும் நம்பியும் இருப்பதால் அவைகள் கவனித்து பின்செல்லுகின்றன.

தலைவர் என்ற வகையில், உங்களை பின்தொடருவோருக்கு அன்பு மற்றும் நம்பிக்கையான உறவை நீங்கள் கட்டி கொடுக்க வேண்டும். இதை செய்வதற்கு, நீங்கள் உங்கள் ஆடுகளோடிருந்து, அவைகளின் தேவைகளின் போதிருந்து, அவைகளிலிருந்து விலகாது இருத்தல் வேண்டும். உங்களுடைய சொந்த வாழ்க்கையை நடத்த வேண்டும், ஆகவே நீங்கள் கிறிஸ்துவை பின்பற்றுகிறது போல ஆடுகள் உங்களை தொடரும்:

**நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள். (1 கொரிந்தியர் 11:1)**

நீங்கள் தலைவராக மாறிய காரணத்தினால் மாத்திரம் மக்கள் உங்களை பின்தொடரவில்லை. நீங்கள் அவர்களை நடத்தும் பொருட்டு அவர்களுடைய நம்பிக்கையை பெற வேண்டும். உங்களை அறியும்படி விடுவதால் நீங்கள் இதை செய்யலாம்.

## மேய்ப்பன் தன் ஆடுகளுக்காக கவனிப்பு செலுத்துகின்றார்:

நல்ல மேய்ப்பன் தனது ஆடுகளை கவனிக்கின்றார். நீங்கள் ஆடுகளின் ஆத்துமாக்களுக்காக கரிசனை கொள்ள வேண்டும். தேவனுடனான சரியான உறவுமுறையிற்கு அவைகளின் "ஆத்துமாவை ஏற்படுத்தும் பொருட்டு" நீங்கள் அவைகளை பார்க்க வேண்டும்:

> **அவர் என் ஆத்துமாவைத் தேற்றி... (சங்கீதம் 23:3)**

மந்தைகளை கவனித்தல் என்பது துக்கமான மற்றும் தேவையான நேரங்களில் அவைகளை தேற்றுவதை உள்ளடக்கும். மேய்ப்பனுடைய தடியானது ஆட்டை பிடித்து, அதை அடைந்து, தேற்றி பரீட்சிக்கப்பட்டு அவைகள் அடைவதற்கு உதவும் (சங்கீதம் 23:4).

மக்களுடைய தேவைகள் அனைத்தையும் நிறைவேற்ற கூடிய நல்ல மேய்ப்பனுக்கு நேராக அவர்களை திருப்புவதன் மூலம் கவனிப்பு உள்ளடங்கும்:

> **கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார் நான் தாழ்ச்சியடையேன். (சங்கீதம் 23:1)**

தேவனுடைய கவனிப்பை ஆவிக்குரிய தலைவர் என்ற வகையில் தாவீது பேசுகின்றார்:

> **அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார். (சங்கீதம் 23:2)**

மந்தைகளை நன்றாக கவனிக்கும்போது, அவைகள் படுத்து திருப்தி கொள்ளும். இயற்கையான உலகில் ஆடுகள் போல் ஆவிக்குரிய உலகில் அவர்கள் படுத்துக்கொள்வார்கள் மாத்திரம்:

**பயத்திலிருந்தான சுதந்திரம்:** மனிதருடைய அல்லது எதிரியுடைய பயம் மந்தைகளை சிதற செய்யும். நீங்கள் மந்தைகளுக்கு பயிற்றுவிக்க வேண்டும்....

> **தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். (2 தீமோத்தேயு 1:7)**

**மற்ற ஆடுகளிலிருந்தான உராய்விலிருந்து சுதந்திரம்:** ஒன்றுக்கொன்று சண்டையிடும் ஆடுகள் ஓய்வு பெறவோ அல்லது போஜிக்கப்படவோ முடியாது. அவைகள் ஆவிக்குரிய ரீதியிலும் பெருகாது. வேதாகம காலத்தில் இயற்கையான உலகில் ஆடுகள் சண்டையிடும்போது, மேய்ப்பன் அவைகளுடைய தலையில் எண்ணெயை ஊற்றி விடுவார். இவைகள் அவைகளின் தலையை வழுக்க செய்யும் அதனால் அவைகள் தலையை உயர்த்தி ஒன்றுக்கொன்று சண்டையிட முடியாது. ஆடுகளுக்கு எதிரிகளுடன் சண்டையிட போதியுங்கள், ஒன்றுடன் ஒன்று அல்ல. அவைகளின் தலையில் பரிசுத்த ஆவியானவருடைய எண்ணெயை பூசுங்கள்!

**பூச்சிகளிலிருந்து சுதந்திரம்:** இயற்கையான உலகில், ஆடுகளின் உரோமத்தை தாக்கும் வித்தியாசமான பூச்சிகள் காணப்படுகின்றன, அவைகள் சுகவீனத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்துகின்றன. மந்தைகளை தாக்கி, அவைகளில் முட்டையிட்டு, அதிலிருந்து பிறந்த குஞ்சுகள் அவைகளின் தலைகளுக்குள் சென்று குருட்டு தன்மையையும் மரணத்தையும் ஏற்படுத்தும் குறிப்பிடத்தக்க பூச்சிகள் காணப்படுகின்றன.

தாவீது மேய்ப்பன் "என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறார்" (சங்கீதம் 23:5) என்று கூறுகின்றார். இயற்கையான உலகில், மந்தையினுடைய சுகவீனம், வியாதி மற்றும் நோய்களை சுத்தப்படுத்த எண்ணெயை உபயோகிக்கின்றார். ஆவிக்குரிய உலகில், பூச்சிகளை பாவத்திற்கு ஒப்பிட முடியும். பாவம் ஆவிக்குரிய குருட்டையும் மரணத்தையும் ஏற்படுத்தும். பரிசுத்த ஆவியானவருடைய எண்ணெயானது பாவம் என்னும் பூச்சியிலிருந்து மந்தையை குணப்படுத்த பிரயோகிக்க முடியும்.

**பசி மற்றும் தாகத்திலிருந்து சுதந்திரம்:** நீங்கள் ஆடுகளை மந்தையில் வைத்திருக்க வேண்டுமாயின், அவைகளை ஆவிக்குரிய ரீதியில் போஷிக்க வேண்டும். தலைவர் ஆடுகளை பச்சை புல்லுகளில் மேய்த்து, தேவனுடைய வார்த்தையான உண்மையோடு அவர்களை போஷிக்க வேண்டும்:

> **உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து.. உற்சாக மனதோடும்..**
> **(1 பேதுரு 5:2)**

பச்சை புல்லுகளில் மக்களை மேய்த்தல் மாத்திரம் போதாது. நீங்கள் அவைகளை மேய்த்து, அமர்த்த வேண்டும். நீங்கள் தேவனுடைய நல்ல காரியங்களை கொண்ட மேசையை ஆயத்தப்படுத்தி அவர்களுக்கு முன்பாக அதை ஏற்படுத்த வேண்டும் (சங்கீதம் 23:5). நீங்கள் ஆடுகளை நித்திய தண்ணீர்களண்டையில் நடத்த வேண்டும் (யோவான் 4) இவைகள் அவர்களுடைய தாகத்தை தீர்க்கும். அவர்களுடைய ஆவிக்குரிய பானங்களை வார்த்தைகளின் நிரம்பல்களினால் நிரப்ப வேண்டும் (சங்கீதம் 23:5).

இயற்கையான உலகில், மந்தைகள் தாகமாக காணப்பட்டால் நீரை தேடும்படி அவைகள் வெளியில் விடப்படும். அவைகள் நல்ல தண்ணீரண்டையில் நடத்தப்படாவிட்டால், அவைகள் கெட்ட நீரை குடிக்கும். மேய்ப்பன் அவைகளுக்கு முன்னாக சென்று கெட்ட நீரையும், ஆற்றோரங்களில் அருகில் வளரும் நச்சான தாவரங்களையும் பரிசோதிப்பார். மேய்ப்பன் என்ற வகையில், மந்தையை நல்ல தண்ணீருக்கண்டையில் நீங்கள் வழிநடத்த வேண்டும். இயேசு கூறினார்:

> **ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்... (யோவான் 7:37)**

எரேமியா "தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகள்" குறித்து கூறுகின்றார். வெற்றிடம் ஜீவியம் என்னும் நீரினால் ஒழிய நிரப்பப்பட முடியாது (எரேமியா 2:13).

சங்கீதம் 23:2ல் மேய்ப்பன் "அமர்ந்த தண்ணீர்கள்" அண்டையில் நடத்தும் குறிப்பு சுவாரஸ்யமானது. அமர்ந்த தண்ணீர்கள் என்பது அமைதியான, ஆனால் ஓடும் நீராகும். இங்கு தண்ணீர் சுத்தமானது. அசுத்தமான, கறைப்பட்ட தண்ணீர் இங்கு இல்லை. அது தூய்மையானது. ஆனால் இது தொந்தரவுமிக்கது அல்ல, ஆபத்தாக கூடிய வேகமாக விழும் அருவியும் அல்ல. இது நிலையான கொள்கைளை குறித்து பேசுகின்றது, அதாவது தூக்கிச்செல்லும் காற்றினாலான அனுபவத்தினாலோ அல்லது பிரதித்திப்பெற்ற இறையியலினாலோ அல்ல.

## மேய்ப்பர் ஆடுகளை நல்லொழுக்கம் செய்கின்றார்:

ஆடுகளை கவனித்தல் ஒழுக்கத்தை உள்ளடக்கும். மேய்ப்பர் சுமந்து செல்லும் கோலானது மந்தைகளை சரியான வழியில் நடத்த பயன்படுகின்றது. அது கோலுடைய நுனியினால் தூண்டப்படுவதை நன்மையாக உணராது, அனால் அது அவசியமானது.

மேய்ப்பனுடைய கோலானது ஆவிக்குரிய மேய்ப்பர்களினால் சுமத்தப்படும் தேவனுடைய அதிகாரத்தின் கோலாகிய இயற்கையிலான உதாரணமாகும். கோலானது ஒழுக்கத்தை ஏற்படுத்துகின்றது. அது எப்பொழுதும் நன்மையாகவே உணராது, ஆனால் அது அவசியமாகும்.

வழிநடத்துதலானது ஒழுக்கம், கண்டித்தல், சரியான வழியில் மந்தைகளை வைத்திருக்க திருத்துதல் போன்றவற்றை உள்ளடக்குகின்றது. மந்தைகள் சிதறடிக்கப்படும்போது, ஒழுக்கமும் கவனிப்பும் அவைகளின் பின்னால் சென்று மந்தையிற்குள் அவைகளை மீண்டும் கொண்டுவருவதை உள்ளடக்குகின்றது (லூக்கா 15). நீங்கள் மந்தையை பாவத்திலிருந்து நீதியிற்கு வழிநடத்த வேண்டும்:

> **தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதையில் நடத்துகின்றார்... (சங்கீதம் 23:3)**

இயற்கையான உலகில், ஆடுகளானது தம்முடைய சொந்த வழிகளில் தம்மில் திரும்பி செல்ல விடப்படுகின்றன. அவைகள் புல் முற்றிலும் அழிக்கப்படும்வரை அதே இடத்தில் மேய்கின்றது அல்லது அவைகள் அனைத்து திசைகளிலும் சிதறடிக்கப்பட்டுவிடும். இதுவே மனிதர்களுக்கும் உண்மையாகும்:

**நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்: கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். (ஏசாயா 53:6)**

மக்களை நீதியின் பாதையில் வழிநடத்துவதினால், நீங்கள் தேவனுடைய வழிகளில் அவர்களை ஒழுக்கப் படுத்துகின்றீர்கள்.

## மேய்ப்பன் முதுகுபுறமாக விழும் ஆடுகளுக்கு உதவுகின்றார்:

இயற்கையான உலகில், "முதுகுபுறமாக விழும்" ஆடுகள் அதன் பின்புறமாக உருளப்பட்ட ஒன்றாகும், அத்தோடு அதனால் தன்னில்தானே எழ முடியாது. அது மிருகங்களுக்கு இலகுவான உணவாகவும் அது உதவியற்றும் காணப்படும். மேய்ப்பன் அங்கு வந்து, கோலினால் அதை தூண்டி, அதன் கால்களினால் மீள எழும்படிக்கு அதை ஊக்கப்படுத்துகின்றார்.

ஆடுகளும் விசுவாசிகளுமாகிய இருவரும் "முதுகு புறமாக விழுந்தவர்கள்" ஆகின்றார்கள்:

**அவர்கள் இலகுவாக ஸ்தாபிக்கப்படும்பொழுது:** இயற்கையான உலகில், மந்தைகள் அழகான பச்சையான புற்புதர் பகுதிகளுக்குள் செல்லும் போது மகிழ்ச்சி மற்றும் திருப்தியான நிலையின் போது சிலசமயம் முதுகு புறமாக மாற்றப்படும். அவைகள் அதன் பின்புறத்தினால் உருண்டு, செழிப்பில் தமது கால்களை உதைக்கும்... பின் அவைகளால் எழ முடியாது.

ஆவிக்குரிய உலகில், விசுவாசிகள் கூட இலகுவாக பொருட்களினால் விழவைக்கப்படுகின்றார்கள். அவர்கள் செழிப்பு மற்றும் உலகத்தின் பணத்தினால் உள்ளடக்கப்படுகின்றார்கள். அவர்கள் தேவன், அவருடைய இராஜ்ஜியம் மற்றும் இழந்துபோன ஆத்துமாக்களை குறித்து கரிசனையற்றவர்களாகின்றார்கள். இவைகள் நடக்கும்போது அவர்கள் தேவனுக்கான வல்லமையை இழந்து எதிரிகளுக்கு இலகுவான உணவாகின்றனர். அதைப்போன்ற ஆடுகளுக்கு உதவ, அவர்களுடைய கவனத்தை நித்திய பெறுமதியிற்கு நோக்க செய்து, இராஜ்ஜியத்திற்கான வேலையிற்காக அவர்களை ஊக்கம் செய்தல் வேண்டும்.

**அவைகளுக்கு அதிகப்படியான ரோமம் காணப்படும்:** ஆடுகளின் ரோமம் நீண்டதாக வளர்ந்த பிற்பாடு, முற்புதர்களும் முட்களும் அதனோடு ஒட்டத்தொடங்கும், பின் இந்த பொருட்களோடு ஆட்டினுடைய பாரம் கூடி, எதிரிகளுக்கு இலகுவான உணவாக மாற்றப்படும். இந்த "விழுகையிற்கு" ஆட்டை உதவ, மேய்ப்பன் உரோமத்திலிருந்த குப்பை சிக்கல்களை வெட்டி அகற்ற வேண்டும். அவர் இதை செய்யும்போது ஆடானது அலறி, வேதனையடைந்து உதைக்கும்.

ஆவிக்குரிய உலகில், "இந்த உலகத்தின் கரிசனையினாலும்" "எம்மை இலகுவாக சுற்றிக்கொள்ளும் பாவங்களும்" விசுவாசிகள் பாரமானவற்றிற்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். அவர்கள் தேவனுக்கு வல்லமையுள்ளவர்களாக இருப்பதற்கு இந்த காரியங்கள் வெட்டப்படவேண்டும். நாமும் உதைத்து, கஷ்டப்பட்டு, அலறலாம், ஆனால் இது அவசியமாகும்.

**அவைகள் மிகுந்த கொழுமையாக மாறிவிடும்:** அதிகம் கொழுக்கமடைந்த ஆடுகள் அவைகளின் பின்புறத்தினால் உருண்டபின் தமக்குத்தாமே சரிசெய்துகொள்ள முடியாது. சில விசுவாசிகள் ஆவிக்குரிய ரீதியில் மிகவும் மிகவும் கொழுப்படைந்தவர்களாகின்றனர். அவர்கள் தேவனுடைய காரியங்களை எடுக்கின்றனர், ஆனால் ஒருபோதும் கொடுப்பதில்லை. அவர்கள் மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதில்லை, ஆனால் தமக்குத்தாமே ஆவிக்குரிய கொழுப்பை தொடர்ந்தும் வளரும்படி செய்கின்றனர்.

இயற்கையான உலகில், இந்த கொழுத்த ஆடுகள் எப்பொழுதும் ஆரோக்கியமானதாகவோ அல்லது அதிகம் உற்பத்தியானவையாகவோ இருக்காது. இது ஆவிக்குரிய உலகிலும் கூட உண்மையாகும். ஆவிக்குரிய மேய்ப்பர்கள் இந்த "கொழுத்த" ஆடுகளை எழுப்பி தேவனுக்காக நடத்த வேண்டும்.

## மேய்ப்பன் ஆடுகளை வழிநடத்துகின்றார்:

இயேசு கூறினார்:

> **அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது... (யோவான் 10:4)**

தலைமைத்துவம் என்பது சாதாரணமாக வசனம் என்ன கூறுகிறது என்பதாகும்: நீங்கள் ஆடுகளுக்கு முன்பதாக சென்று அவைகளை வழிநடத்த வேண்டும். நீங்கள் ஆடுகளுக்கு எங்கு செல்வது என்று கூறுவது மாத்திரம் அல்ல, அவைகளுக்கு முன்னால் செல்லுவதின் மூலம் நீங்கள் அவைகளுக்கு காட்ட வேண்டும். நீங்கள் எதை உபதேசிக்கிறீர்களோ அவர்களுக்கு சொல்லுவதினால் மாத்திரம் அல்லாமல் உங்களுடைய வாழ்க்கை நடத்தையிலிருந்தும் கிரியையினாலும் அவர்களுக்கு காட்டுவதினால் இதை செய்கின்றீர்கள். மேய்ப்பன் "தேவன்" என்ற நிலையில் அல்லாது, தலைவர் என்ற உதாரணத்தை ஏற்படுத்துகின்றார். பேதுரு சேவிக்கும்படி கூறுகின்றார்....

> **சுதந்திரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்ளாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்பு செய்யுங்கள். (1 பேதுரு 5:3)**

## மேய்ப்பர் சித்தத்துடன் சேவிக்கின்றார்:

பேதுரு கூறுகின்றார்....

> **உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும்... (1 பேதுரு 5:2)**

நீங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டதற்காகவோ, வற்புறுத்தப்பட்டதற்காகவோ வழிநடத்துதல் செய்ய கூடாது. நீங்கள் நடத்த வேண்டும் என்பதற்காக நீங்கள் நடத்துங்கள். உங்களுடைய அழைப்பை சித்தத்துடன் நிறைவேற்றுங்கள்.

## மேய்ப்பன் தனது ஆடுகளுக்காக ஜீவனை கொடுக்கின்றார்:

இயேசு கூறினார்:

> **நானே நல்ல மேய்ப்பன், நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான். (யோவான் 10:11)**

இயேசு மாத்திரமே மனித பாவத்திற்கு அவசியமான ஒரே பலி ஆகும். நீங்கள் இந்த வழியில் உங்களுடைய ஆடுகளுக்காக மரிக்க முடியாது. நம்மில் சிலர் மற்றவர்களுக்காகவும் அல்லது இரத்தசாட்சியாகவும் கூட மரிக்கலாம்.

ஆனால் தலைவராகுவதற்கு, வேறு வழிகளில் "உங்களுடைய ஜீவியத்தை கொடுக்க" வேண்டும். உங்களுடைய சொந்த வாஞ்சைகளையும் சுய குறிக்கோள்களையும் மற்றவர்களுக்காக நீங்கள் தியாகம் செய்ய வேண்டும். மக்களுக்காக கவனிப்பத்தில் பல சிக்கல்கள் காணப்படலாம். அவைகள் நேரத்தை எடுத்து உங்களுடைய சொந்த தனிப்பட்ட திட்டங்களோடு தடை செய்யலாம்.

லூக்கா 15ல் உள்ள தொலைந்துபோன ஆட்டின் உவமையில் இயேசு இதை தெளிவுபடுத்தினார். அனைத்து ஆடுகளும் கீழ்ப்படிவுள்ளதாகவும் அவைகள் இருக்கும்படியாகவும் வைக்கப்பட்டன, ஆனால் ஒன்று காணாமல் போய்விட்டது. இரவில் அதை பார்ப்பதற்கு வெளியில் செல்லுதல் வசதியானது அல்ல. அது வசதியானதும் வாஞ்சையானதும் அல்ல. அது ஆபத்தானதும் கூட. ஆனால் மேய்ப்பன் "தனது வாழ்க்கையை கொடுத்து" தொலைந்துபோன ஆட்டை கண்டுபிடிக்க சென்றார்.

## மேய்ப்பர் ஆடுகளை பாதுகாக்கின்றார்:

**திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்... (யோவான் 10:10)**

**மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான். அப்பொழுது ஓநாய் ஆடுகளைப்பீறி, அவைகளைச் சிதறடிக்கும்.**

**கூலியாள் கூலிக்காக வேலைசெய்கிறவனாகையால் ஓடிப்போகிறான், ஆடுகளுக்காக அவன் கவலைப்படான். (யோவான் 10:12-13)**

நல்ல மேய்ப்பன் ஆடுகளோடிருந்து, என்ன கிரயமானாலும் பரவாயில்லை, அவைகளை பாதுகாக்கின்றார்.

பணம், வல்லமை, நிலை மற்றும் கௌரவம் ஆகியவற்றிற்கு மாத்திரம் தலைமைத்துவத்தை உபயோகிக்கும் தலைவர்கள் கூலியாட்களாக இருக்கின்றார்கள். அவர்கள் "அசுத்தமான ஆதாயத்திற்காக" அல்லது அவர்களுடைய சொந்த தேவையிற்காக சேவிக்கின்றார்கள். கூலியாள் ஆடுகளுக்காக உண்மையிலேயே கவலைப்படுவதில்லை, ஆகவே எதிரி தாக்கமுறும்போது அவர்கள் ஒடுகிறார்கள் (1 பேதுரு 5:2).

## மேய்ப்பனுக்காக எச்சரிக்கைகள்

உங்களுடைய வேதாகமத்தில் எசேக்கியேல் 34ஐ வாசிக்கவும். இந்த அதிகாரமானது இஸ்ரவேலை ஆண்ட தீய மேய்ப்பர்களுக்கான எச்சரிக்கைகளை கொண்டுள்ளது. ஆனால் இந்த பந்தியிலுள்ள எச்சரிக்கைகள் தீய மேய்ப்பர்களிலான அனைத்து தலைவர்களையும் கரிசனை கொள்ளுகின்றது. தேவன் "துன்பம்" அல்லது நியாயத்தீர்ப்பை கீழ்வரும் மேய்ப்பர்களுக்கு வாக்குப்பண்ணியுள்ளார்:

1. மந்தையை மேய்க்காதவர்கள்: வசனம் 2

2. மந்தையிலிருந்து சுயநலத்திற்காக திருடி எடுப்பவர்கள்: வசனம் 3

3. மந்தைகளை அல்லாமல், தம்மைத்தாம் கவனிப்பவர்கள்: வசனம் 2-3,8

4. மந்தைகளுக்கான தேவைகளை கணக்கு பண்ணாதவர்கள்: வசனம் 4
(ஆவிக்குரிய ரீதியில் வியாதிப்பட்ட, சுகவீனமடைந்தவற்றிற்கான கவனிப்பு, ஆடுகளை பலப்படுத்தல், காயமுற்றோரை தேற்றுதல் போன்றவற்றை அவர்கள் செய்வதில்லை.)

5. காணாமல் போன ஆட்டை கவனிக்காதவர்கள்: வசனம் 4 மற்றும் 6

6. வல்லமையாயும் கொடுமையாகவும் ஆளுகிறார்கள்: வசனம் 4

7. மந்தையை சிதறடித்திருக்கிறார்கள்: வசனம் 5-6

8. மந்தையை அழிக்க எதிரியை அனுமதித்திருக்கிறார்கள்: வசனம் 8

9. பாவத்தின் வியாதியையும் மந்தையை அழிக்கும் ஐக்கியமின்மையும் அனுமதித்திருக்கிறார்கள்: வசனம் 21

## மேய்ப்பருக்கான வாக்குத்தத்தம்

மேய்ப்பனைப்போல் வழிநடத்தும் வேதாகம கொள்கைளை நீங்கள் பின்பற்றுவீர்களானால், இந்த வாக்குத்தத்தத்தை நீங்கள் சுதந்தரித்துக் கொள்ளலாம்:

> **அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள். (1 பேதுரு 5:4)**

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

2. யார் நல்ல மேய்ப்பன்?

.....................................................................................................................................................

3. ஒரேயொரு உண்மையான ஆட்டுமந்தை என்ன?

.....................................................................................................................................................

4. இந்த பாடத்தில் நீங்கள் கற்ற மேய்ப்பத்துவத்திற்கான கொள்கைகளின் சுருக்கத்தை எழுதுக. மேய்ப்பர்களுடைய பொறுப்புக்கள் என்ன?

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

5. எசேக்கியேல் 34ல் உள்ள தீய மேய்ப்பனுக்கு கொடுக்கப்பட்ட எச்சரிப்புக்களை சுருக்கமாக்குக.

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. இந்த பாடத்தில் நீங்கள் கற்ற மேய்ப்பத்துவ கொள்கைகள் தொடர்பாக உங்களுடைய சொந்த வாழ்க்கையை பரீட்சிக்க. உங்களுடைய வாழ்க்கையிலும் ஊழியத்திலும் இந்த கொள்கைகளை பிரயோகிக்கின்றீர்களா? எங்கே நீங்கள் விழுகின்றீர்கள்? நீங்கள் எவ்வாறு முன்னேற்றம் அடையலாம்?

2. இந்த மேலோட்டத்தை பயன்படுத்தி சங்கீதம் 23ஐ படியுங்கள். மேய்ப்பன் என்ற வகையில் தேவன் உங்களுக்கு:

| | |
|---|---|
| -ஏற்படுத்துகின்றவர்: | சங்கீதம் 23:1 |
| -சமாதானம்: | சங்கீதம் 23:2 |
| -வழியை-ஏற்படுத்துகின்றவர்: | சங்கீதம் 23:3 |
| -பாதுகாப்பவர்: | சங்கீதம் 23:4 |
| -ஆயத்தப்படுத்துபவர்: | சங்கீதம் 23:5 |
| -அதிகம் (பாத்திரம் நிரம்பி வழிகிறது): | சங்கீதம் 23:5 |
| -வாக்குத்தத்தம்: | சங்கீதம் 23:6 |

**சங்கீதம் 23ல் உள்ள மேலதிக குறிப்புக்கள்: வசனம் 6ல் நன்மை மற்றும் கிருபையை குறித்து பேசுகின்றது, குறித்துக்கொள்ளுங்கள்....**

| | |
|---|---|
| -அதன் முடிவு தன்மை: | “என்னை தொடரும்.” |
| -அதன் தொடர்ச்சி: | “வாழ்க்கை முழுவதிலும் அது தொடரும். |
| -அதன் சீரான தன்மை: | “நாளெல்லாம்” என்பது சீரான தன்மையை அர்த்தப்படுத்தும். |
| -அதன் நிச்சயத்தன்மை: | “நிச்சயமாகவே.” |

இந்த கேள்வியை கருத்திற்கொள்ளுங்கள்: நன்மையும் கிருபையும் உங்களை தொடருகின்றதா? நீங்கள் வாழ்க்கையிற்கூடாக கடந்து செல்லும்போது உங்களுடைய ஊக்கம், கிருபை மற்றும் நன்மை ஆகியவற்றை விட்டு செல்லுகின்றீர்களா?

**பள்ளத்தாக்கு குறித்து பேசும்போது, எமது கிறிஸ்தவ அனுபவத்தில் கடினமான நேரத்தை எது காட்டுகின்றது, குறித்துக்கொள்ளுங்கள்....**

-உண்மையில் அது இல்லை ஆனால் ஓர் நிழல் ஆகும். இயற்கையிலான உலகில் நீங்கள் ஒரு நிழலை பார்க்கும்போது, அதை ஏற்படுத்தும் ஒன்று காணப்படலாம். உண்மையிலேயே நிழல் இல்லை. ஆவிக்குரிய உலகில், எமது பள்ளத்தாக்கின் அனைத்து நிழல்களின் பின்னாலும் எதிரியினுடைய போராட்டம் காணப்படுகின்றது.

-அது ஒன்றிற்கூடான “நடத்தை” ஆகும். நீங்கள் எந்நாளும் பள்ளத்தாக்கில் இருப்பதில்லை. “நான் அங்கே மரிப்பேன்” அல்லது “நான் அங்கே தங்குவேன்” என்று அது கூறுவதில்லை.

-அது ஓர் “நடத்தை”, பயமுள்ள ஓட்டம் அல்ல.

-அது ஓர் இயற்கையிலான உலகில் அதிக கனிகொடுக்கும் பகுதிகளான பள்ளத்தாக்கு ஆகும். பள்ளத்தாக்கிற்கூடாக நீங்கள் போக மாட்டீர்களா அல்லது இல்லையா என்பது கேள்வி அல்ல. நீங்கள் அநேகத்திற்கூடாக செல்லலலாம். கேள்வியானது, அவைகளுக்கு நீங்கள் எவ்வாறு கிரியை செய்வீர்கள்? பள்ளத்தாக்கில் விளையும் தேவனுடைய நல்ல காரியங்களால் மாத்திரம் நீங்கள் திருப்தியாவீர்களா?

-மேய்ப்பனுடைய கோலும் (ஒழுக்கம்) தடியும் (கவனிப்பு) ஆகிய இரண்டும் எமது பள்ளத்தாக்கில் கிரியை செய்கின்றது.

3. கீழ்வரும் வசனங்களை படிப்பதினால் மேய்ப்பத்துவம் தொடர்பாக வேதாகமம் என்ன போதிக்கின்றது குறித்து அதிகம் கற்றுக்கொள்ளுங்கள்:

-எண்ணாகமம் 27:17
-சங்கீதம் 23; 80:1
-ஏசாயா 40:11
-எசேக்கியேல் 34; 37:24
-சகரியா 10:2; 11:15-17
-மத்தேயு 9:36; 25:32; 26:31
-மாற்கு 6:34; 14:27
-யோவான் 10
-எபிரெயர் 13:20
-1 பேதுரு 2:25; 5:4

# அதிகாரம் ஏழு

## தலைவர்களின் இலக்குகள்

**குறிக்கோள்கள்:**

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ தலைவர்களின் இலக்குகளின் முன்னுரிமையை இனங்காணவும்,
- ☐ "சீர்செய்தலை" வரைவிலக்கணப்படுத்தவும்,
- ☐ ஊழியத்தின் வேலையில் மக்களுக்காக "சீர்செய்தலின்" விளைவை சுருக்கமாகவும்,
- ☐ தலைவர்களின் குறிப்பிட்ட இலக்குகளை இனங்காணவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், (தேவன்) சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். (எபேசியர் 4:11-12)**

### அறிமுகம்

முன்னைய அதிகாரங்களில் நல்ல உக்கிராணக்காரராக, ஊழியராக மற்றும் மேய்ப்பனாக எவ்வாறு நீங்கள் வழிநடத்த வேண்டும் என கற்றீர்கள். இந்த மற்றும் தொடரும் அதிகாரங்கள் ஒரு தலைவர் பொதுவாக என்ன செய்கிறார் என்பதை கருத்திற் கொள்ளும்.

தலைமைத்துவம் பல இலக்குகளை உள்ளடக்குகின்றது. இலக்கு என்பது பொறுப்பு, கடமை அல்லது வேலையை குறிக்கும். ஓர் தலைவர் செய்யும்படியாக அழைக்கப்பட்ட ஒவ்வொரு இலக்குகளையும் நாம் கலந்துரையாடுவதற்கு வழி இல்லை, ஆகவே தலைவர்களுடைய முக்கிய இலக்குகளை மாத்திரம் நாம் கருத்தில் கொள்ளுவோம்.

### முதலாவது முன்னுரிமை

கிறிஸ்தவ தலைவருடைய முதலாவது முன்னுரிமையானது கீழ்வரும் பந்தியில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது:

> **பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்,**
>
> **அவர், (தேவன்) சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷ கராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். (எபேசியர் 4:11-12)**

தேவன் ஊழிய வேலைகளில் விசுவாசிகளை “சீர்செய்யும்பொருட்டு” சபைகளில் தலைவர்களை ஏற்படுத்துகின்றார். “சீர்செய்தல்” எனும் இந்த வார்த்தையின் அர்த்தம் ஆயத்தப்படுத்தல் அல்லது பக்திவிருத்தி ஆகும். “ஊழியத்தின் வேலை” என்பது ஊழியத்தின் பொறுப்புக்கள், அனைத்து நிலைகள், கடமைகளை உள்ளடக்குகின்றது.

கிறிஸ்தவ தலைவரின் முதலாவது இலக்கானது ஊழிய வேலைகளில் விசுவாசிகளை சீர்செய்தல் ஆகும். ஒவ்வொரு விசுவாசிகளுக்கும் குறைந்தபட்சம் ஒரு ஆவிக்குரிய வரம் கொடுக்கப்பட்டிருப்பதால், தலைவர்கள் எடுத்துக்கொள்ளும்படியான மாபெரும் வளங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு விசுவாசிகளும் தேவன் அவர்களை அழைத்தவற்றிற்காக வேலைசெய்யும்படி ஆவிக்குரிய ரீதியில் பக்திவிருத்தியடைந்திருக்க வேண்டும்.

சீர்செய்தல் என்பது போதித்தல், உபதேசித்தல், செய்துகாட்டுதல், பயிற்சிக்குட்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. சீர்செய்தல் ஊழியத்தின் வேலையில் மக்களை ஆயத்தம்செய்வதை கூட உள்ளடக்கும். “ஆயத்தப்படுத்தலை” செயல்படுத்த அல்லது கிரியையில் ஏற்படுத்த வேண்டும். விசுவாசிகள் பயிற்சியினால் மாத்திரம் அல்ல, ஆனால் அவர்கள் என்ன கற்றார்களோ அதை பயன்படுத்தும்படிக்கு அவர்கள் ஆயத்தப்படல் வேண்டும்.

சீர்செய்தல் சில மக்களை தலைவர்களாகவும் மற்றவர்களை பின்பற்றுவோராகவும் பயிற்சிக்குட்படுத்தலை உள்ளடக்குகின்றது. ஊழியத்தின் வேலையில் அனைத்தும் முக்கியமாகும். இந்த பாடத்தின் பத்தாம் அதிகாரம் தலைவர்களையும் பின்பற்றுவோரையும் பயிற்சிக்குட்படுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நீங்கள் அழைக்கப்பட்ட தலைவராகவும் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவராகவும் இருந்தால் தேவனுடைய வேலையை மற்றவர்கள் செய்யும்படியான பக்திவிருத்தியில் உள்ளடக்கப்படவேண்டும். இது உங்களுடைய முதலாவது முன்னுரிமையும் உங்களுடைய பிரதான இலக்கும் ஆகும். ஊழியத்தின் வேலையில் விசுவாசிகள் சரியாக “சீர்செய்யும்போது” இந்த நேராக விளைவுகள் காணப்படுகின்றன:

-ஊழியத்தின் வேலை செய்யப்படும்: எபேசியர் 4:12
-கிறிஸ்துவினுடைய சரீரம் (சபை) பக்திவிருத்தியடையும் (கட்டப்படும்): எபேசியர் 4:12
-ஆவிக்குரிய முதிர்ச்சியை மக்கள் அடைவார்கள்: எபேசியர் 4:13-15
-ஐக்கியம் விளைவாயிருக்கும்: எபேசியர் 4:13
-மக்கள் கிறிஸ்துவினுடைய தோற்றத்திற்குள் மாற்றப்படுவார்கள்: எபேசியர் 4:13
-மக்கள் நிலையான கொள்ளையுள்ளவர்களாக மாறி, உண்மையில் விதைக்கப்படுவார்கள்: எபேசியர் 4:15-16
-கிறிஸ்துவினுடைய சரீரம் வல்லமையுள்ளதாக செயற்படும்: எபேசியர் 4:16

## சீர்செய்யும் செயற்பாட்டின் பொறுப்புக்கள்

இந்த விசுவாசிகளின் “சீர்செய்தல்” பல பொறுப்புக்களை உள்ளடக்குகின்றது. இங்கு சில காணப்படுகின்றன:

### உதாரணத்தை ஏற்படுத்தல்:

பின்பற்றுவோருக்கு சரியான உதாரணத்தை ஏற்படுத்துவதற்கு தலைவர்களுக்குள்ள பொறுப்பை விரிவாக நாம் ஏற்கனவே கலந்தாடியிருந்தோம். உதாரணத்திற்காக, தலைவரானவர் அழைக்கப்பட்டு, அபிஷேகிக்கப்பட்டு, நல்ல உக்கிராணக்காரராகவும் மேய்ப்பராகவும், அனைத்திற்கும் ஊழியராக இருக்க வேண்டும். நான்காம் அதிகாரத்தில் கலந்துரையாடியப்படி தலைவர்களுடைய தரமானது அவருடைய வாழ்க்கையில் காணப்பட வேண்டும். அவர் தேவனுடைய வசனத்தின் மாணவனாகவும், ஜெபிக்கும் மனிதனாகவும் காணப்பட வேண்டும். உங்களுடைய உதாரணம் கடவுளின்படியாக இருத்தல் வேண்டும், ஏனென்றால்....

**சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான். (லூக்கா 6:40)**

முகாமைத்துவம் செய்யும் இயலுமையும் மற்றவர்களை வழிநடக்க ஆரம்பித்தலும் சரியான சுய முகாமைத்துவத்தோடு ஆரம்பமாகின்றது. நீங்கள் அனைத்து “ஊழியத்தின் வேலையிலும்” சுவிசேஷத்திலும் தேவனுடனான உறவு, தனிப்பட்ட நடத்தை, சீஷத்துவம் ஆகியவற்றில் உதாரணத்தை ஏற்படுத்த வேண்டும்.

### கவனித்தல்:

தலைவருடைய அடுத்த முக்கியமான பொறுப்பானது பின்பற்றுவோரை கவனித்தலாகும். இது ஏற்கனவே மேய்ப்பன் மற்றும் ஊழியரைப்போல் வழிநடத்தல் எனும் பாடத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. திட்டங்களும் செயற்பாடுகளும் அல்ல, மக்களே மிகவும் முக்கியமானவர்கள்.

தலைவர் என்ற வகையில், தேவன் உங்களுக்கு ஒப்படைத்தவர்களான பின்பற்றுவோரை கவனிப்பதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுள்ளீர்கள். நீங்கள் அவர்களை நேசித்து, அவர்களுடைய பிரச்சினைகளை குறித்து கரிசனை செலுத்தி, தேவன் இயலுமைப்படுத்திய அவர்களுடைய ஆவிக்குரிய, பௌதீக, மற்றும் பொருட் தேவைகளுக்காக ஊழியம் செய்ய வேண்டும். தலைவருக்கான முக்கிய பகுதியான கவனிப்பானது தன்னுடைய சீஷர்களுக்காக ஜெபிப்பதாகும். உங்களுக்கு ஒப்படைக்கப்பட்டவர்களுக்கான கரிசனையில் ஜெபிப்பதற்கு தோல்வியுறுவதினால் தேவனுக்கு எதிராக பாவம் செய்ய வேண்டாம்.

### வழிநடத்தல்:

ஓர் தலைவர் வழிநடத்தி வழிகாட்ட வேண்டும். அவர் மக்கள் அழைக்கப்பட்ட ஊழியத்தை அடைவதற்கான இயலுமையை அடைவதற்கான வழிகாட்டலை ஏற்படுத்துவார். நீங்கள் மக்களை தேவன் அவர்கள் செல்லும் இடத்திற்கு வழி காட்ட வேண்டும், அவர்கள் வேண்டும் சுயநலமான வாஞ்சைகளுக்கு அல்ல. வழிநடத்தலானது ஆவிக்குரிய கொள்கைகளோடு மக்களை தேவனில் நடக்கும் வழிகளில் வழிகாட்டும் ஆலோசனைகளில் உள்ளடக்குகின்றது.

### தீர்மானம் மேற்கொள்ளுதல்:

மற்றவர்களை வழிநடத்த, நீங்கள் அநேக தீர்மானங்களை மேற்கொள்ளுவது அவசியமாகும். இந்த இலக்குகளில் உங்களை ஈடுபடச்செய்யும், தீர்மானம் மேற்கொள்ளும் சில அடிப்படை கொள்கைகள் காணப்படுகின்றன. நீங்கள் இதை எட்டாம் அதிகாரத்தில் படிப்பீர்கள்.

### முரண்பாடுகளையும் ஒழுக்கத்தையும் கையாளுதல்:

மக்கள் குழுக்களோடு நீங்கள் நடக்கும்போதெல்லாம், முரண்பாடுகள் எப்பொழுதும் எழும். ஓர் தலைவரானவர் தேவனுடைய வழிநடத்துதலோடு இவ்வாறான முரண்பாடுகளை தீர்க்கும் இயலுமைகளை கொண்டிருத்தல் வேண்டும். ஆவிக்குரிய ஒழுக்கம் தேவைப்படும் மக்கள் கூட காணப்படுவார்கள் ஏனென்றால் அவர்கள் பிழையான உபதேசத்திற்குள் அல்லது பாவத்திற்குள் விழுவார்கள், அத்தோடு அவர்களுக்கு திருத்துதல் தேவைப்படும். அதிகாரம் ஒன்பதானது முரண்பாடுகள் மற்றும் ஒழுக்கத்தின் இலக்குகளை கையாளுவதற்கான வழிகாட்டல்களை இந்த பாடம் கொடுக்கின்றது.

### சுற்றுச்சூழலை ஆய்விற்குட்படுத்தல்:

வல்லமையுள்ளதாயிருக்க, நீங்கள் ஊழியம் செய்யும் மக்களை குறித்து விளங்கியிருத்தல் வேண்டும். நீங்கள் அவர்களுடைய பிரச்சினைகள், தேவைகள் மற்றும் கரிசனைகளை விளங்க வேண்டும். இந்த விளங்குதலை பெறுவதற்கு, அவர்களுடைய ஆவிக்குரிய, பௌதீக, பொருட் மற்றும் கலாச்சார சூழ்நிலைகளை உள்ளடக்கும் அவர்களுடைய “சுற்றுச்சூழலை” ஆய்விற்குட்படுத்தல் வேண்டும். சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் பாடமான, “சுற்றுச்சூழல் ஆய்வு”, ஊழியத்தின் நோக்கத்திற்காக சுற்றுச்சூழல் ஆய்வின் கொள்கைகளை விபரிக்கின்றது.

## குறிக்கோள்களை இனங்காணுதல்:

குறிக்கோள் என்பது அடிப்படையில் ஆவிக்குரிய தரிசனமாகும். வேதாகமம் கூறுகின்றது:

> **தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள், வேதத்தைக் காக்கிறவனோ பாக்கியவான். (நீதிமொழிகள் 29:18)**

குறிக்கோள் அல்லது ஆவிக்குரிய தரிசனம் இரண்டு காரியங்களின் விளக்கங்களை உள்ளடக்குகின்றது:

1. தேவனுடைய குறிக்கோள்.
2. அவருடைய நோக்கத்தையும் திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கான உங்களுடைய பகுதி.

ஊழியத்தில் உங்களுடைய நோக்கங்களை நீங்கள் இனங்காணும்பொழுது, தேவனுடைய திட்டத்தின் உங்களுடைய தனிப்பட்ட பகுதியை கண்டடைவீர்கள். தேவன் அடைவதற்கான அழைக்கப்பட்ட உங்களுடைய ஊழியம் என்ன என சரியாக விளங்குதலையும் வழிகாட்டுதலையும் அது கொடுக்கும். அது நீங்கள் திட்டம் மேற்கொள்ளுவதற்கும், உங்களுடைய நோக்கங்கள் அடைவதற்கான திட்டங்களை நிறைவேற்றவும் அனுமதிக்கின்றது. நீங்கள் தேவனுடைய நோக்கங்களையும், அதிலுள்ள உங்களுடைய பகுதியையும் தெளிவாக விளங்கும்போது, மற்றவர்களை வல்லமையாக வழிநடத்தலாம்.

சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் பாடமான “குறிக்கோளிலான முகாமைத்துவம்” தேவனுடைய திட்டத்தில் உங்களுடைய நோக்கத்தை இனங்காண உங்களுக்கு உதவுகின்றது.

## திட்டமிடல்:

உங்களுடைய ஊழியத்தின் நோக்கத்தை அறிதலும் உங்களுடைய நோக்கத்தை அடைதலும் ஒரே மாதிரியானது அல்ல. நீங்கள் அதை அடைவதற்கான திட்டங்களை உருவாக்கி நிறைவேற்ற வேண்டும். நீங்கள் ஊழியத்தின் வேலையை அடையும் பொருட்டு அறிவில் கிரியையை சேர்த்து, விசுவாசத்தில் வேலை செய்தல் அவசியமாகும். பரிசுத்த ஆவியானவருடைய வழிகாட்டலின் கீழ் திட்டமிடல் தேவனுடைய திட்டத்தையும் நோக்கத்தையும் அடைவதற்காக தேவனுடன் ஒன்றுப்பட்டு வேலைசெய்ய அனுமதிக்கும்.

ஊழியத்தின் உங்களுடைய சொந்த நோக்கத்தை அடைவதற்கான விசேட திட்டங்களை நீங்கள் உருவாக்க வேண்டும். நீங்கள் தலைவரானால், ஊழியத்தின் கூட்டுறவு அல்லது குழுவின் வேலையை நிறைவேற்றும்படி பின்பற்றுவோர் திட்டங்களை உருவாக்க உதவ வேண்டும். திட்டங்கள் தீர்மானித்தலை உள்ளடக்குகின்றது...

-நீங்கள் என்ன செய்ய போகின்றீர்கள்.
-நீங்கள் எவ்வாறு அதை செய்யப்போகின்றீர்கள் (முறைகள் அல்லது செயற்பாட்டு படிமுறைகள்).
-எப்பொழுது நீங்கள் அதை செய்யப்போகின்றீர்கள்.
-அதை யார் செய்ய போகின்றார்.
-அதை செய்வதற்கான கிரயம்.
-நீங்கள் திட்டமிட்டப்படி செய்யப்பட்டதா என பார்க்கும்படிக்கும், மதிப்பிடுவதற்குமான முறை.

திட்டமிடல் தலைவருக்கான பிரதான இலக்காகும். இது வேதாகம கொள்கை என்பதோடு, சர்வதேச அறுவடை நேர நிறுவனத்தின் பாட தலைப்பான “குறிக்கோளிலான முகாமைத்துவம்” எனும் பாடத்தில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

## திட்டங்களை நிறைவேற்றுதல்:

ஓர் தலைவர் திட்டங்களை ஏற்படுத்தியப்பின், இந்த திட்டங்களானது நிறைவேற்றப்பட வேண்டும் அல்லது கிரியைகளிற்குள் செய்யப்பட வேண்டும். ஓர் திட்டத்தை நிறைவேற்ற, கீழ்வரும் இலக்குகளை ஓர் தலைவர் செயற்படுத்த வேண்டும். இந்த ஒவ்வொன்றும் “குறிக்கோளிலான முகாமைத்துவம்” எனும் தலைப்பிடப்பட்ட பாடத்தில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

-திட்டங்களை நிறைவேற்ற மக்களை தேர்ந்தெடுத்தல்.

-ஊழியத்தின் வேலையை செய்யும்படிக்கு, திட்டங்களை அவர்களோடு தொடர்புபடுத்தல்.

-திட்டங்களை அடையும்பொருட்டு அதிகாரத்தையும், பொறுப்புக்களையும் பகிர்ந்தளித்தல்.

-வேலையை அடையும்படிக்கு தேவையான திறமையுள்ளோர்களை தெரிந்தெடுத்து பயிற்சிக்குட்படுத்தல்.

-உள்ளடங்கும் மக்களை ஒழுங்குப்படுத்தலும், திட்டங்களின் விரிவும்.

-திட்டங்களின் செயற்பாட்டின்படியான திட்டங்களின் தொடக்கமும், அடையும் திகதிகளும், காலங்களிலான பரீட்சித்தலும்.

-திட்டங்களை அடையும்படியான தேவையான நிதியை திட்டமிடல்.

-தீர்மானங்களை மேற்கொள்ளுதல்.

-செயற்பாட்டை மீளாய்வுசெய்தல்.

-ஊழியத்தின் வேலையை மதிப்பிடுதல். மதிப்பிடுதலானது திட்டங்களை நீங்கள் நிறைவேற்றினீர்களாக எனவும் உங்களுடைய ஊழியத்தில் தேவனுடைய நோக்கத்தை அடையும்படிக்கு உண்மையிலேயே அது ஒத்துழைத்ததா எனவும் தீர்மானிக்கும்.

## இலக்கிற்காக பலப்படுத்தும்

ஏற்கனவே குறிப்பிட்டுள்ளதுபோல, தலைவர் செயற்படுத்தும் ஒவ்வொரு இலக்குகளையும் கலந்துரையாடும் வழி இல்லை, ஆனால் குறிப்பிடப்பட்ட ஒவ்வொன்றும் ஒவ்வொரு தலைவருக்குமான பிரதான பொறுப்புக்களாகும். தலைமைத்துவத்தை நிறைவேற்றும்பொருட்டு நீங்கள் அழைக்கப்பட்ட மற்ற அனைத்து பொறுப்புக்களும் இந்த இலக்கிற்கான உரிமையும் இங்கு வாக்களிக்கப்பட்டுள்ளன:

> **என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு. (பிலிப்பியர் 4:13)**

நீங்கள் எப்பொழுதெல்லாம் அழுத்தத்திற்கு உட்பட்டு, "எனக்கு தேவையான அனைத்தையும் செய்யும்படியான வழி ஒன்றும் இல்லை," என சிந்திக்க தொடங்கும்போது, தேவனுடன் தனிமையாக அதிக நேரத்தை செலவிட உங்களுக்கு அவசியம் ஆகும். தேவனிடம் காத்திருக்க நீங்கள் நேரம் எடுப்பதால் நீங்கள் களைத்தவர்களாகவோ அல்லது ஏமாற்றமடைந்தவர்களாகவோ மாற்றப்படமாட்டீர்கள்:

> **உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர். (ஏசாயா 26:3)**

சாலெமோன் இராஜாவினால் ஜெபிக்கப்பட்ட இந்த "தலைவருக்கான ஜெபத்தை" ஜெபியுங்கள்:

> **நீர் தெரிந்துகொண்டதும் ஏராளத்தினால் எண்ணிக்கைக்கு அடங்காததும் இலக்கத்திற்கு உட்படாததுமான திரளான ஜனங்களாகிய உமது ஜனத்தின் நடுவில் அடியேன் இருக்கிறேன்.**
>
> **ஆகையால் உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும் ஏராளமாயிருக்கிற இந்த உமது ஜனங்களை நியாயம் விசாரிக்க யாராலே ஆகும் என்றான். (1 இராஜாக்கள் 3:8-9)**

**சுய பரீட்சை:**

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

2. தலைவர்களுடைய முதன்மையான இலக்கு என்ன?

..........................................................................................................................................................................

3. “சீர்செய்தல்” என்பதை வரைவிலக்கணப்படுத்துக?

..........................................................................................................................................................................

4. ஊழியத்தின் வேலையில் மக்களை “சீர்செய்தலின்” நேரான விளைவுகள் என்ன?

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

5. ஊழியத்தின் வேலைகளுக்காக விசுவாசிகளை சீர்செய்யும் தலைவருடைய பிரதான பொறுப்புக்களை சுருக்கமாக்குக.

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. சர்வதேச அறுவடைநேர நிறுவன பாடங்களான "சுற்றுச்சூழல் ஆய்வு" மற்றும் "குறிக்கோளிலான முகாமைத்துவம்" ஆகியவற்றிற்காக இந்த அதிகாரத்தில் அநேக வசனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த பாடத்தின் ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல், வேதாகம முகாமைத்துவ உங்களுடைய படிப்பை தொடர்வதற்கு இந்த இரண்டு பாடங்களையும் வாங்கும்படி நாம் பரிந்துரைக்கின்றோம்.

2. தலைவர்களுடைய சில இலக்குகளை காட்டும் சில வேதாகம உதாரணங்கள் இங்கு தரப்பட்டுள்ளன:

### எருசலேமின் மதில்களை மீள்கட்டுதல்

**பிரச்சினை:**

எருசலேமின் மதில்கள் உடைக்கப்பட்டு அது அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டிருப்பதினால் யூதாவில் மிகுதியாயிருந்து அங்கு திரும்பியவர்கள் மாபெரும் துயரம் மற்றும் நிந்தனையில் இருப்பதாக அறிக்கையொன்றை நெகேமியா பெற்றார்: நெகேமியா 1:2-3

**தீர்வு:**

நெகேமியா உபவாசித்து ஜெபித்தார்: நெகேமியா 1:4-11

அவர் அவருடைய துக்கத்தை இராஜாவுக்கு வெளிப்படுத்தினார்: நெகேமியா 2:1-2

அவர் தான் ஏன் துக்கமாயிருக்கின்றேன் என்பதை இராஜாவுக்கு தெரிவித்தார்: நெகேமியா 2:3

"உன்னுடைய காரியம் என்ன?" என இராஜா கேட்டார்: நெகேமியா 2:4

நெகேமியா இந்த கேள்விக்காக பதிலுக்கு வழிகாட்டும்படி தேவனிடம் கேட்டார்: நெகேமியா 2:4

அவரை யூதாவிற்கு அனுப்பி மதிலை மீள்கட்டும்படிக்கு இராஜாவிடம் அவர் கேட்டார்: நெகேமியா 2:5

இராஜா நேர் தன்மையுடன் பதில் கொடுத்தார்: நெகேமியா 2:6

நெகேமியா இராஜாவிடம் அலுவலகரீதியிலான கடிதத்தை கேட்டார், ஆகவே அவரால் இலகுவாக பிரயாணம் செய்ய முடிவதோடு காட்டிலிருந்து மரங்களை பெறவும் முடிந்தது: நெகேமியா 2:7-8

நெகேமியா வந்தபோது அவர் மூன்று இரவுகள் ரகசியமாக பிரச்சினைகளை ஆய்விற்குட்படுத்தியதோடு, கட்டுவதற்கான உபாயத்தை விருத்தி செய்தார்: நெகேமியா 2:12-16

நெகேமியா பிற்பாடு தனது திட்டத்தை வெளிப்படுத்தியதோடு, மதிலை மீள்கட்ட தனக்கு உதவும்படி மக்களை கேட்டார்: நெகேமியா 2:17-3:32

இஸ்ரவேலருடைய எதிரிகள் வேலையை தடுக்க முயற்சித்தபோது, மக்கள் ஜெபித்து காவலாளியை ஏற்படுத்தினர்: நெகேமியா 4:1-13

மக்களுக்கு பயம் பெருகியபோது, நெகேமியா அவர்களை உற்சாகப்படுத்தினார்: நெகேமியா 4:14

எதிரிகளுக்கு செய்திகள் வெளிசெல்லும் சீக்கிரத்தில் அவர்கள் தம்மைத்தாம் காக்க தயாரானதோடு, அவர்கள் கட்டிடங்களுக்கு திரும்பினார்கள்: நெகேமியா 4:15

நெகேமியா வேலைசெய்வதற்கும் கட்டுவதற்கும் புதிய திட்டங்களை ஏற்படுத்தினார், ஆகவே அவர்களால் தொடர்ந்து கட்டடத்தை கட்ட முடிந்தது: நெகேமியா 4:16-23

**விளைவுகள்:**

அவர்கள் 52 நாட்களில் மதிலை கட்டிமுடித்தார்கள்: நெகேமியா 6:15

மக்கள் தேவனை துதித்தார்கள்: நெகேமியா 12:27-29, 31-42

மக்கள் நகரத்தையும் தம்மையும் தூய்மைப்படுத்தினார்கள்: நெகேமியா 12:30

அவர்கள் தேவனுக்கு பலிகளை செலுத்தினார்கள்: நெகேமியா 12:43

இஸ்ரவேலரின் எதிரிகள் இந்த வெற்றியின் சாட்சி மற்றும் சந்தோஷத்தை கேட்டபோது, அவர்கள் அவர்களுடைய நம்பிக்கையை இழந்தார்கள்: நெகேமியா 6:16

## கொள்கை தவறுகள்

**பிரச்சினை:**

அந்தியோகியாவில் சில மனிதர்களால் தவறான கொள்கைகள் போதிக்கப்பட்டன: அப்போஸ்தலர் 15:1

பவுல் மற்றும் பர்னபா என்பவர்களினால் பிரச்சினைகளை தீர்க்க முடியவில்லை: அப்போஸ்தலர் 15:2

**தீர்வு:**

அந்தியோகியாவில் இருந்த சபை அப்போஸ்தலர்கள் மற்றும் எருசலேமிலிருந்த மூப்பர்களிடம் வழிகாட்டல்களை பெற தீர்மானித்தார்கள்: அப்போஸ்தலர் 15:2-3

அந்தியோகியாவிலிருந்த குழு விசுவாசத்திற்கூடாக மாத்திரம் எவ்வாறு புறஜாதிகள் மாற்றப்பட்டார்கள் என அறிவித்தார்கள்: அப்போஸ்தலர் 15:4

அப்போஸ்தலர்களும் மூப்பர்களும் குறித்த காரியத்தை கலந்தாலோசிக்கும் கூட்டத்தில் நெருக்கமாக இணைந்தார்கள்: அப்போஸ்தலர் 15:6

கொர்நேலிவிற்கும் அவரது குடும்பத்திற்கும் தேவன் என்ன செய்தார் என்பதை மக்களுக்கு பேதுரு நினைவூட்டினார்: அப்போஸ்தலர் 15:7-11

பவுலும் பர்னபாவும் புறஜாதிகள் மத்தியில் அவர்களுக்கூடாக தேவன் செய்த காரியங்கள் தொடர்பாக விசேட சாட்சிகளை கொடுத்தார்கள்: அப்போஸ்தலர் 15:12

யாக்கோபு புறஜாதிகளுடைய மாற்றத்தை பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் எவ்வாறு முன்னறிவித்தார்கள் என்பதை மீள் ஞாபகப்படுத்தினார்: அப்போஸ்தலர் 15:13-18

யாக்கோபு பிரச்சினைகளுக்கான தீர்வொன்றை ஏற்படுத்தினார்: அப்போஸ்தலர் 15:19-21

அப்போஸ்தலரும், மூப்பர்களும், முழு சபையும் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டார்கள்: அப்போஸ்தலர் 15:22

ஓர் கடிதம் எழுதப்பட்டது: அப்போஸ்தலர் 15:22-30

யூதாவிடமும் சீலாவிடமும் கடிதத்தை கொடுத்தனுப்பும்படி தெர்ந்தெடுக்கப்பட்டார்கள்: அப்போஸ்தலர் 15:22

யூதாவும் சீலாவும் கடிதத்தையும், செய்தியையும் கொண்டு சேர்த்தார்கள்: அப்போஸ்தலர் 15:30,32

**விளைவுகள்:**

கூட்டம் மீள்சேர்க்கப்பட்டது: அப்போஸ்தலர் 15:31

யூதாவும் சீலாவும் மீண்டும் எருசலேமிற்கு சமாதானத்தோடே அனுப்பப்பட்டார்கள்: அப்போஸ்தலர் 15:33

தேவனுடைய வேலை ஒளிவுமறைவின்றி தொடர்ந்தது: அப்போஸ்தலர் 15:35

கடிதத்திலிருந்த அறிவுறுத்தல்கள் பவுல், சீலா, தீமோத்தேயுவினால் மற்ற புதிய சபைகளுக்கு கொடுக்கப்பட்டன: அப்போஸ்தலர் 16:4-6

## மக்களை நியாயம் தீர்த்தல்

**பிரச்சினை:**

மக்கள் அவர்களுடைய பிரச்சினைகளை தீர்க்கும்படி மோசேயிற்கு முன்பதாக காலையிலிருந்து சாயங்காலம் மட்டும் நின்றார்கள்: யாத்திராகமம் 18:13

மோசே தன்னினால் அனைத்து வேலைகளையும் செய்யும்படி முயற்சித்தார்: யாத்திராகமம் 18:14-16

இந்த செயற்பாடு மோசே மற்றும் மக்கள் ஆகிய இருவருக்கும் பிரச்சினைகளை ஏற்படுத்தியது: யாத்திராகமம் 18:18

**தீர்வு:**

எத்திரோ முன்னுரிமைகளை ஏற்படுத்தும்படிக்கு மோசேயிற்கு ஆலோசனை கொடுத்தார்: யாத்திராகமம் 18:19

அவர் அந்த குழுவிற்கான திட்டத்தை ஏற்படுத்தினார்: யாத்திராகமம் 18:19-22

மோசே பிரச்சினைகளை மக்களுக்கு தெரிவித்தார்: உபாகமம் 1:9-12

மோசே ஒவ்வொரு கோத்திரத்திற்கும் புத்தியுள்ள மனிதனை தெரிவுசெய்து அவர்களை தலைவர்களாக நியமிக்கும்படிக்கு அறிவுறுத்தினார்: உபாகமம் 1:13

மோசே கவனமாக அவர்களுடைய பொறுப்புக்களை அறிவுறுத்தினார்: உபாகமம் 1:16-18

**விளைவுகள்:**

மோசே தலைமைத்துவ பொறுப்புக்களில் உதவினார்: யாத்திராகமம் 18:22

மோசே தம்முடைய தலைமைத்துவ வகிபாகக் கேள்வியில் தலைமை தாங்கினார்: யாத்திராகமம் 18:23

## புறக்கணிக்கப்பட்ட விதவைகள்

### பிரச்சினை:

சீஷர்களின் தொடர்ச்சியான வேகமான வளர்ச்சியோடு, குழு முறைமையானது தர்க்கத்திற்கு உள்ளாக்கப்பட்டது. குறிப்பிட்ட விதவைகள் கண்காணிக்கதவறவிடப்பட்டு, முறையிட தொடங்கினார்கள்: அப்போஸ்தலர் 6:1

அப்போஸ்தலர்கள் இந்த பிரச்சினையிற்கு விரிவாக உள்ளடக்கத்தை பெற்றதோடு இது தேவனுடைய வார்த்தையின் உபதேசமான முதன்மையான பொறுப்பை அவர்கள் புறக்கணிக்கும்படிக்கு இது ஏற்படுத்தியது: அப்போஸ்தலர் 6:2

### தீர்வு:

அனைத்து விசுவாசிகளும் கூட்டத்திற்காக அழைக்கப்பட்டார்கள்: அப்போஸ்தலர் 6:2

வேதவசனத்தின் ஊழியமும் ஜெபமும் குறித்தான 12 அப்போஸ்தலர்களின் பிரதான இலக்குகள் சம்பந்தமாக மக்களுக்கு அறியக்கிடைத்தது. அப்போஸ்தலர் 6:3-4

மக்கள் அவர்களுக்கு காணப்படும் தேவைகளுக்காக ஏழு தகுதியான மனிதர்களை தேர்ந்தெடுக்கும்படி அறிவுறுத்தப்பட்டார்கள்: அப்போஸ்தலர் 6:3

மக்கள் ஏழு நபர்களை தேர்ந்தெடுத்தார்கள்: அப்போஸ்தலர் 6:5

அப்போஸ்தலர்கள் தமது தெரிவை ஜெபத்தின் மூலமாகவும் கைகளை வைத்தலின் மூலமாகவும் உறுதிப்படுத்தினார்கள்: அப்போஸ்தலர் 6:6

### விளைவுகள்:

மக்களுடைய தேவைகள் சந்திக்கப்பட்டு, ஐக்கியம் ஏற்படுத்தப்பட்டது. அப்போஸ்தலர்களுக்கு தமது முதன்மையான காரியம் நிறைவேற்றும்படிக்கு இயலுமை ஏற்பட்டது: அப்போஸ்தலர் 6:7

# அதிகாரம் எட்டு

## தீர்மானம் மேற்கொள்ளுதல்

**குறிக்கோள்கள்:**

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ தீர்மானம் மேற்கொள்வதற்கான வேதாகமத்தின் அணுகுமுறையை விபரிக்கவும்,
- ☐ தீர்மானம் மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்களை சுருக்கமாக்கவும்,
- ☐ மாதிரியின் குறிக்கோளை விபரிக்கவும்,
- ☐ தீர்மானம் மேற்கொள்வதற்கான மாதிரியின் பெறுமதியை விபரிக்கவும்,
- ☐ தீர்மானம் மேற்கொள்வதற்கான வேதாகமத்தின் மாதிரியை உபயோகிக்கவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **மனுஷனுடைய இருதயம் அவனுடைய வழியை யோசிக்கும்: அவனுடைய நடைகளை உறுதிப்படுத்துகிறவரோ கர்த்தர். (நீதிமொழிகள் 16:9)**

### அறிமுகம்

தலைவர்கள் ஒவ்வொரு நாளும் முகங்கொடுக்கும் கடினமான இலக்கு தீர்மானம் மேற்கொள்ளுதல் ஆகும். ஒவ்வொரு தீர்மானமும் முக்கியதானது, ஏனென்றால் காலத்திற்கு மேலாக எடுக்கப்படும் சிறிய காரியமான தீர்மானங்களும் உங்களுடைய முழு வாழ்க்கையையும் ஊழியத்தையும் பாதிக்கும்.

தீர்மானம் என்பது தெரிவாகும். உண்மையான வாழ்க்கை சூழ்நிலையிற்கான பதிலை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும், அத்தோடு நீங்கள் எடுக்கப்போகும் கிரியை என்ன என்பதை தீர்மானிக்க வேண்டும். தலைவரினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் அவருடைய தலைவிதியை மாத்திரம் அல்ல, அவரை பின்பற்றுவோரின் தலை விதியையும் தீர்மானிக்கும்.

வாழ்க்கை என்பது தெரிவுகளாலும் தீர்மானங்களினாலும் தொடர்ந்துவரும் முடிவற்றதொன்றாகும். தெரிவுகளை மேற்கொள்ளுதல் பொறுப்பாகும். தீர்மானங்களை எடுக்க மறுத்தலும் கூட அதனிலுள்ள தீர்மானம் ஆகும். இந்த பாடமானது நல்ல தீர்மானங்களை எடுப்பதற்கான வழிகாட்டல்களையும், தீர்மானம் மேற்கொள்ளுதவற்கான வேதாகம மாதிரியையும் கொடுக்கும்.

### வேதாகம அணுகுமுறை

வேதாகமத்தின் அணுகுமுறையான தீர்மானம் மேற்கொள்ளுதல் மக்களினாலான வாக்குகள் அல்ல. அது குடியரசு அல்லது “பெரும்பான்மை ஆளுகை” அல்ல. இந்த அணுகுமுறையின் பிரச்சினைகள் கானான் எல்லையில் அமைந்த இஸ்ரவேலரின் கதையின் மூலம் காட்டப்படுகின்றது (எண்ணாகமம் 13ஐ பார்க்கவும்).

சபையில் பெரும்பான்மை செயன்முறையானது சமரசம், சட்டபூர்வம், போட்டி ஆகியவற்றை உருவாக்குகின்றது.

கட்டளைகள், இயக்கம் மற்றும் வாக்கு ஆகிய ஒழுங்குகள் பரிசுத்த ஆவியானவருடைய வெளிப்படுத்தல்களை எல்லைக்குட்படுத்தும். வாக்களிப்பு பெரும்பாலும் காய உணர்வுகள், கோபம் மற்றும் சபை பிளவுகளை என்பவற்றை கூட ஏற்படுத்தும். இவைகள் சபையிற்கு தீர்மானம் மேற்கொள்வதற்கான வேதாகம வழிகள் அல்ல. அவைகள் உலக மாதிரிகளான குடியரசு அரசாங்கத்திலிருந்து சபையிற்குள் எடுக்கப்பட்ட முறைகளாகும்.

அப்போஸ்தலர் 15 வேதாகம அணுகுமுறையிலான தீர்மானம் மேற்கொள்ளுதலுக்கு நல்ல உதாரணம் ஆகும். இந்த உதாரணம் யூத முறைமைகளிலான பிரச்சினைகளில் கரிசனை செலுத்தும். அதை தீர்ப்பதற்கு தலைவர்கள் சந்தித்து, ஜெபித்து, காரணிகளை பரீட்சித்து, பரிசுத்த அவியானவரின் வழிநடத்துதலின் கீழ் ஒப்பந்தத்திற்குள் வர வேண்டும்.

தேவன் சபையிலுள்ள தலைவர்களை தீர்மானம் மேற்கொள்ளும்படிக்கு ஏற்படுத்துகின்றார். அவர் இந்த பொறுப்பை நிறைவேற்றுவதற்கு அவர்களுக்கு அறிவை கொடுக்கின்றார். ஒரு தீர்மானம் எடுக்கப்பட வேண்டிய சூழ்நிலை காணப்படுமாயின், தலைவர்கள் ஒருவரையொருவர் சந்தித்து, ஜெபித்து, காரணிகளை பரீட்சித்து, பரிசுத்த அவியானவரின் வழிநடத்துதலின் கீழ் ஒப்பந்தத்திற்குள் வர வேண்டும்.

## தீர்மானம் மேற்கொள்ளுதலிற்கான வழிகாட்டல்கள்

தலைவர்கள் நல்ல தீர்மானம் மேற்கொள்ள உதவும்படிக்கு சில வழிகாட்டல்கள் இங்கு தரப்பட்டுள்ளன.

### 1. பிரச்சினைகளை இனங்காணுதல்:

தீர்மானத்திற்கு அவசியமான காரணிகள், பிரச்சினைகள் அல்லது கேள்விகள் என்ன? இதோடு தொடர்புடைய விஷயத்தில் கிடைக்கும் அனைத்து தகவல்களையும் சேகரியுங்கள். விரிவாக எழுதப்பட்ட அறிக்கையாக பிரச்சினைகளை குறிப்பிடுங்கள். சரியான பிரச்சினைகளை நீங்கள் இனங்காணாவிட்டால் சரியான தீர்மானத்தை உங்களால் மேற்கொள்ள முடியாது.

### 2. தீர்மானம் மேற்கொள்ளுதலுக்கான மாதிரியை தொடருங்கள்:

ஓர் மாதிரி ஏதோவொன்றிற்கான உதாரணம் ஆகும். அது நீங்கள் தொடர வேண்டிய உதாரணத்தை கொடுக்கும். தீர்மானம் மேற்கொள்ளும் மாதிரியானது தீர்மானம் மேற்கொள்ளும்போது தொடரவேண்டிய உதாரணத்தை கொடுக்கும். அடுத்த பக்கத்திலுள்ள வேதாகம மாதிரிகளானது தேவனுடைய சித்தத்திற்குள் ஞானமுள்ள தெரிவுகளை நீங்கள் மேற்கொள்ள உதவுகின்றது. மாதிரியை பாருங்கள், பின் அதை தொடரும் விரிவை வாசியுங்கள்:

## தீர்மானம் மேற்கொள்ளுதலுக்கான வேதாகம மாதிரி

வழிகாட்டலினால் சுருக்கப்பட்ட பிரச்சினை, கேள்வி அல்லது வாழ்க்கை சூழ்நிலைகளை இனங்காணுங்கள்.

குறிப்பிட்ட கட்டளைகள், பொதுவான கொள்கைகள் அல்லது உதாரணத்தினால் வசனமானது சம்பந்தப்படுகின்றதா?

**ஆம்** → **1ம் பந்தி**

**இல்லை** → **2ம் பந்தி** / **3ம் பந்தி**

### 1ம் பந்தி

வேதாக கட்டளை, கொள்கை அல்லது உதாரணங்களுக்கு தீர்மானங்களை எடுங்கள்

### 2ம் பந்தி

அது கேள்விகேட்ககூடியதான கிரியையா? இந்த கேள்விகளுக்கான பதில்களின் அடிப்படையில் தீர்மானங்களை எடுங்கள்:

இது தேவனை மகிமைப்படுத்துகின்றதா?

உங்களுடைய ஊக்கம் என்ன?

இது அவசியமானதா?

அது ஆவிக்குரிய வளர்ச்சியை ஊக்குவிக்கிறதா?

அது அடிமைப்படுத்தும் பழக்கமா?

அது சமரச இணக்கத்தை ஏற்படுத்துகின்றதா?

அது சோதனையிற்குள் வழிநடத்துகின்றதா?

அது தீய தோற்றத்தை கொடுக்கின்றதா?

அது உங்கள் மனசாட்சியை தூண்டுகின்றதா?

அது எவ்வாறு மற்றவர்களை தாக்கப்படுத்தும்?

ஜெபித்து, பின் தீர்மானத்தை மேற்கொள்ளுங்கள்.

### 3ம் பந்தி

இது வாழ்க்கை சூழ்நிலையா? இந்த படிமுறையில் செயற்படுத்துங்கள்:

ஜெபியுங்கள்

வசனங்களை படியுங்கள்

பரிசுத்த ஆவியானவருக்கும் விசேட வழிகாட்டல்கள் கொடுக்கப்பட்டால் அதை கேளுங்கள்

கிறிஸ்தவ ஆலோசனைகளை எதிர்பாருங்கள்

சூழ்நிலைகளை ஆய்விற்குட்படுத்துங்கள்

வழிகாட்டுதலுக்காக வேதாகம திறவுகோல்களை பயன்படுத்துங்கள்

தீர்மானத்தை எடுங்கள்

சமாதானத்தின் நடுவரை சரிபாருங்கள்.

---

சமாதானத்தின் நடுவரை சரிபாருங்கள்.

உங்களுக்கு சமாதானம் இல்லாவிட்டால், மாதிரியை உபயோகித்து தேவனிடம் தொடர்ந்து எதிர்பாருங்கள்.

**மாதிரியை உபயோகித்தல்:**

தீர்மானம் மேற்கொள்ளும் மாதிரியின் முதலாவது படிமுறையானது வழிகாட்டலில் சுருக்கமாக தரப்பட்டுள்ள பிரச்சினை, கேள்வி அல்லது வாழ்க்கை சூழ்நிலைகளை இனங்காணுவதாகும். அடுத்தது, கட்டளை, உதாரணம் அல்லது பொதுவான கொள்கைகளோடு சம்பந்தப்படும் பிரச்சினைகள் இருக்குமாயின் தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையில் அறிவதற்கு தேடுங்கள். அநேக தீர்மானங்களிற்கான வழிகாட்டல்களும், முக்கிமாக சரியா அல்லது தவறா என்னும் சந்தர்ப்பங்களில், ஏற்கனவே வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

**ஆம்:**

பதில் “ஆம்” என்றால் பிரச்சினையானது எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையோடு சம்பந்தப்பட்டுள்ளது, பின் இந்த வெளிப்படுத்தப்பட்ட எழுத்துக்களின் பிரகாரத்தின் அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்ளுங்கள். (பந்தி 1ல் உள்ள மாதிரியை பாருங்கள்.) உங்களுடைய தீர்மானங்களானது வசனத்தோடு ஒத்துப்போகின்றதா என்பதை உறுதிப்படுத்தி கொள்ளுங்கள்.

**இல்லை:**

பதில் “இல்லை” என்றால், “இல்லை” என்ற வார்த்தையிற்கு கீழுள்ள தீர்மானத்தை மேற்கொள்ளும் மாதிரியோடு செயல்படுத்துங்கள். வேதாகமத்தோடு சம்பந்தப்படாத இரண்டு தெரிவுகளின் மாதிரி சூழ்நிலைகள் காணப்படுகின்றன. தீர்மானம் மேற்கொள்ளுதல் கேள்வியிலாலான கிரியையிலா அல்லது உண்மை வாழ்க்கை சூழ்நிலைகளிலா உள்ளடக்குகின்றது என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும்.

கேள்வியிலாலான கிரியை:

கேள்வியிலாலான கிரியை என்பது வசனங்களில் சரியா அல்லது தவறா என விசேடமாக அடையாளப்படுத்த முடியாத ஒன்று ஆகும். இது பொழுதுபோக்குகளின் தெரிவு அல்லது ஓய்வு நேர நடவடிக்கைகள், பழக்க வழக்கம், உணவு மற்றும் பானங்கள் அல்லது ஆடைகளின் நடை போன்றவற்றை உள்ளடக்கலாம்.

உங்களுடைய தீர்மானங்களானது கேள்வியிலாலான கிரியையில் கரிசனை செலுத்துமாயின், 2ம் பந்தியில் கீழுள்ள மாதிரியில் பட்டியலிலுள்ள கேள்விகளை உங்களை நீங்களே கேளுங்கள். இந்த கேள்விகள் ஒவ்வொன்றிற்கும் நீங்கள் பதில் கொடுத்தப்பின் ஜெபியுங்கள், மாதிரியின் கேள்வியிற்கான உங்களுடைய பதிலின் பிரகாரம் தீர்மானங்களை மேற்கொள்ளுங்கள்.

வாழ்க்கை சூழ்நிலை:

வாழ்க்கை சூழ்நிலையே மேலதிக தெரிவாகும், இது உங்களுடைய எதிர்கால வாழ்க்கையை தாக்கமுறச் செய்யலாம். இது உள்ளடக்கப்பட்டபடலாம், ஆனால் எல்லைக்குட்பட்டது அல்ல, திருமணம், ஊழியம், வேலை, உறைவிடம், சபைகளின் தெரிவுகள் போன்றறை தொடர்பான தீர்மானங்கள், வாழ்க்கை சூழ்நிலை தொடர்பான தீர்மானங்களுக்கு, பந்தி 3ஐ பயன்படுத்துங்கள். முதலாவது தீர்மானத்தை குறித்து ஜெபியுங்கள். உங்களுடைய வாழ்க்கையில் நிறைவேற்றும்படி தேவனிடம் அவருடைய சித்தத்தை கேளுங்கள். சரியான தீர்மானத்தை மேற்கொள்ளும் அறிவை அவரிடம் கேளுங்கள். மற்றவர்களை உங்களோடு ஜெபிக்கும்படி கேளுங்கள். எழுதப்பட்ட தேவனுடைய வசனத்தில் கொடுக்கப்பட்ட வழிகாட்டல்களில் உள்ள வாக்குத்தத்ததை உரிமைகோரி வசனங்களை படியுங்கள்.

தேவன் தெரிந்தெடுத்து அனுப்பும்படியாக இயற்கையான வல்லமை வெளிப்படுத்தல்களை ஒப்புக்கொள்ளுங்கள். தேவன் மனிதர்களோடு பேசி இயற்கையான வல்லமையாக அவருடைய சித்தத்தை வெளிப்படுத்தி அவர்கள் தீர்மானத்தை மேற்கொள்ளும்படி உதவும்படியாக பல வழிகள் காணப்படுகின்றன. இவைகள் தரிசனங்கள், தீர்க்கதரிசனங்கள், கனவுகள், தேவதூதர்கள் மற்றும் கேட்கக்கூடியதான சத்தங்கள் போன்ற முறைகளையும் உள்ளடங்குகின்றன.

ஆனால் இந்த இயற்கையிலான வல்லமை வெளிப்படுத்தல்கள் ஒழுக்கத்திற்கு மாறான விதிமுறைகளாய் இருக்கலாம். விசுவாசிகளின் வாழ்க்கையில் பரிசுத்த அவியானவருடைய குறிக்கோள்களில் ஒன்று வழிகாட்டல்களை ஏற்படுத்துவதாகும்:

> **சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்: அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். (யோவான் 16:13)**

தேவன் அதிகமாக இந்த முறையிலேயே வழிநடத்துகின்றார். இயற்கையான வல்லமை வெளிப்படுத்தல்கள் கிடைக்கப்பெற்றால், தேவனை துதியுங்கள்! ஆனால் எப்பொழுதும் ஞாபகத்தில் கொள்ளுங்கள்.... தேவனிடமிருந்தான கனவு, தரிசனம், தீர்க்கதரிசனம் அல்லது வேறு வெளிப்படுத்தல்கள் அவருடைய எழுதப்பட்ட வார்த்தையிற்கு முரணாக இல்லை.

இன்னொரு வேதாகம முறையான முதலாவதான தீர்மானம் எடுத்தலானது கிறிஸ்தவ ஆலோசனைகள் ஆகும். ஆவிக்குரிய தலைவர்களிடமிருந்தான ஞானப்பூர்வமான ஆலோசனைகள் மிகவும் முக்கியமானவையாகும்:

> **ஆலோசனையில்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்துபோவார்கள்: அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும். (நீதிமொழிகள் 11:14)**

> **மதியீனனுடைய வழி அவன் பார்வைக்குச் செம்மையாயிருக்கும் ஆலோசனைக்குச் செவிகொடுக்கிறவனோ ஞானமுள்ளவன். (நீதிமொழிகள் 12:15)**

தீர்மானத்தை தாக்கம்செய்யும் சூழ்நிலைகளை நீங்கள் ஆய்வு செய்ய வேண்டும் என்பதோடு கூட, நீதிமொழிகள் 3:5-6ல் கொடுக்கப்பட்ட வேதாகம திறவுக்கோள்களுக்கான வழிகாட்டல்களை பயன்படுத்துங்கள்.

## 3. பல்வேறுப்பட்ட சந்தர்ப்பங்களை இனங்காணுங்கள்:

தீர்மானம் மேற்கொள்ளும் மாதிரிகளை நீங்கள் பின்பற்றும்பொழுது, நீங்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கான பல்வேறுப்பட்ட வித்தியாசமான தீர்வுகளை நீங்கள் கண்டுக்கொள்ளலாம். பல்வேறுப்பட்ட சந்தர்ப்பங்களை இனங்கண்டு, ஒவ்வொரு இயலுமான தீர்வுகளையும் கீழ்வரும் அடிப்படையில் மதிப்பிடுங்கள்:

**அபாயம்:** பொது அறிவு மற்றும் உண்மைத்துவத்தோடான சமநிலையான நம்பிக்கை. ஒவ்வொரு இயலுமையான தீர்விற்கான நன்மைகள் மற்றும் தீமைகளை மதிப்பிடுங்கள். திறந்த மற்றும் மூடிய சூழ்நிலைகளிலான கதவுகள் உங்களுடைய தீர்மானத்தை தாக்கமுறச்செய்யலாம்.

**வளங்கள்:** குறிப்பிட்ட தீர்வுகளை நிறைவேற்றுவதற்கான தேவையான வளங்கள் உங்களிடம் உள்ளதா? ஓர் தீர்மானத்தை செயல்படுத்தும் மக்களை விட நல்ல தீர்மானங்கள் இல்லை. தேவையான நிதி வளங்களை கொடுக்கும்படியாக தேவனுடைய நம்பிக்கை இல்லாதிருந்து அல்லது உங்களிடம் இல்லாதிருந்தால் எந்த தீர்மானத்தையும் நிறைவேற்ற முடியாது.

**விளைவுகள்:** குறைந்த வல்லமையோடு மாபெரும் விளைவை எந்த தீர்வு கொடுக்கும்? கடினமான வழிகளில் காரியங்களை செய்வதற்கான காரணங்கள் ஒன்றும் இல்லை. ஒரே விளைவை அடைவதற்கான இலகுவான வழிகள் காணப்படுமாயின், அதை தெரிந்தெடுங்கள் (தேவனே வெளிப்படுத்த வேண்டும் இல்லாவிட்டால்).

## 4. சிறந்த தீர்வை தெரிவுசெய்யுங்கள்:

அனைத்து இயலுமான தீர்வுகளை நீங்கள் பரீட்சித்த பின், சிறந்ததொன்றை தெரிவு செய்யுங்கள். தேவனிடம் உங்களை வழிநடத்தும்படி கேளுங்கள், அவர் செய்வார் என்று விசுவாசியுங்கள். அபாயம், வளங்கள் மற்றும் விளைவுகளின் பதங்களில் சிறந்த அந்த தீர்வை நீங்கள் பொதுவாக தெரிவு செய்ய வேண்டும்.

நாம் “பொதுவாக” என கூறுவோம், ஏனென்றால் இயற்கையிலான எண்ணங்களில் சிறந்தாக தோன்றாத வழிகளில் சில சமயங்களில் தேவன் வழிநடத்துவார். தேவனுடைய வழிகள் உங்களுடைய வழிகள் அல்ல என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள். சிலசமயங்களில் அவருடைய திட்டங்களானது இயற்கையான காரணங்களில் சிறந்தாத தெரியப்பட மாட்டாது, ஆகவே இதில் திறந்து கொள்ளுங்கள்.

தேவன் நேரடியாக அவருடைய வார்த்தையிற்கூடாக பேசாது அல்லது தெய்வீக வெளிப்படுத்தல்கள் அல்லாத ஒவ்வொரு தீர்மானங்களிலும் குறிப்பிட்ட அளவிலான அபாயங்கள் காணப்படும். தவறான தீர்மானம் எடுப்பதற்கு பயப்பட வேண்டாம். அநேக தவறான தீர்மானங்கள் சரிப்படுத்தப்படலாம்.

பரிசுத்த ஆவியானவர் உங்களுடைய தீர்மானங்களில் வழிநடத்துகின்றார் என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள்:

> **மனுஷனுடைய இருதயம் அவனுடைய வழியை யோசிக்கும் அவனுடைய நடைகளை உறுதிப்படுத்துகிறவரோ கர்த்தர். (நீதிமொழிகள் 16:9)**

நீங்கள் ஓர் தீர்மானத்தை எடுக்கும்போது, உங்களுடைய ஆவியில் சமாதானம் இல்லாதவிடத்தில், மாதிரியின் படிமுறைகளை உபயோகித்து தொடர்ந்தும் தேவனிடம் தேடுங்கள். பரிசுத்த ஆவியானவர் சரியான தீர்மானங்களை உறுதிப்படுத்தும் வழிகளில் ஒன்று உள்ளான சமாதானம் ஆகும். உங்களுடைய தெரிவை உறுதிப்படுத்தும் தேவசமாதானம் உங்களில் இருக்கும்வரை இறுதியான தீர்மானங்களை எடுக்க வேண்டாம்.

## 5. தீர்மானங்களில் தொடர்பு செய்யுங்கள்:

நீங்கள் உருவாக்கிய தீர்மானத்தை மக்கள் அறிந்து கொள்ளட்டும். அதை நீங்கள் கிரியை செய்யும் முன்னர் தெளிவாக தொடர்பு செய்து கொள்ளுங்கள்.

## 6. தீர்மானங்களை நிறைவேற்றுங்கள்:

தீர்மானம் எடுத்த தருணத்தில், அதை நிறைவேற்றுங்கள் (கிரியையிற்குள் இடுங்கள்) அதன்பின் எதாவதொன்றிற்குள் செல்லுங்கள். கடந்த தீர்மானங்களை குறித்த கவலை ஒன்றையும் நீங்கள் பெறுவதில்லை. மாறாக, ஒரு காலக்கட்டத்திற்குப் பின் தீர்மானங்களை மதிப்பிடுங்கள்.

## 7. தீர்மானங்களை மதிப்பிடுங்கள்:

நீங்கள் மேற்கொண்ட தீர்மானத்தை மதிப்பிடுங்கள். அது பிரச்சினைகளை தீர்த்ததா? அது நல்ல தீர்மானமா? அதை தேவன் ஆசீர்வதிக்கின்றாரா? மாற்றத்தை ஏற்படுத்த உங்களுக்கு அவசியம் இருக்கின்றதா? அநேக தீர்மானங்கள் அவசியமாயின் மாற்றப்படமுடியும். அநேக தீர்மானங்கள் முன்னேற்றமடைய கூடியன. நெகிழ் தன்மையாக இருங்கள், பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலினால் மாற்றம்பெற திறவுங்கள்.

## எச்சரிக்கையின் இறுதியான வார்த்தை

கோபம், கடினம் அல்லது அழுத்தத்தில் நீங்கள் இருக்கும்போது தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டாம். சீக்கிரமாக தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டாம். காரணிகளை கேட்பதற்கு நேரத்தை கொடுங்கள். அநேகமான தீர்மானங்கள் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டிய அவசியம் இல்லை. பீதி மற்றும் அவசரசத்தை ஏற்படுத்தி தள்ளுபவன் சாத்தானே. பரிசுத்த ஆவியானவர் கனிவாக வழிநடத்துவார். தீர்மானம் மேற்கொள்ளும் செயற்பாடுகளில் ஒருபோதும் அவசரம் வேண்டாம்:

**கர்த்தருக்குக் காத்திரு: அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார் திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு. (சங்கீதம் 27:14)**

**என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு: நான் நம்புகிறது அவராலே வரும். (சங்கீதம் 62:5)**

**கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு... (சங்கீதம் 37:7)**

**கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள் அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள். (ஏசாயா 40:31)**

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

2. வேதாக அணுகுமுறையிலான தீர்மானம் எடுத்தல் என்றால் என்ன? அது வாக்களித்தல் அல்லது பெரும்பான்மையான விதிமுறையா?

..........................................................................................................................................................................

3. இந்தா பாடத்தில் கொடுக்கப்பட்ட தீர்மானம் மேற்கொள்ளுதலுக்கான ஏழு வழிகாட்டல்களை சுருக்குக?

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

4. தீர்மானம் மேற்கொள்ளும் மாதிரி என்ன?

..........................................................................................................................................................................

5. மாதிரியின் குறிக்கோள்கள் என்ன?

..........................................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. இங்கு பிரச்சினையின் மாதிரியும் தீர்மானமும் தரப்பட்டுள்ளன:

**பிரச்சினை:**

ஞாயிறு வேதாக பள்ளி ஆசிரியர்கள் போதுமான அளவு இல்லை. சில மக்கள் மாற்றீடாக சேவிப்பதற்கு சித்தம் கொள்ளுகின்றார்கள். பல சந்தர்ப்பங்களில், வகுப்புகள் சேர்க்கப்படுகின்றன. வரவு குறைகின்றது.

**குறிப்பிடத்தக்க தீர்வுகள்:**

1. தொண்டர்களுக்காக மனுக்களை கோருங்கள்.
2. அநேக வகுப்புக்களை ஒன்றுப்படுத்துங்கள்.
3. புதிய ஆசிரியர்களை பயிற்றுவிக்க பயிற்சி திட்டங்களை தொடங்குங்கள்.

**தீர்வுகளை ஆய்விற்குட்படுத்துங்கள்:**

1. தொண்டர்களுக்கான மனுகோருதல் போதிப்பதற்கு தேவையான அநேக மக்களை எழுப்பும், ஆனால் இந்த மக்களுக்கு சரியாக பயிற்சியளிக்கப்படுமா?

2. அநேக வகுப்புகளை சேர்த்தல் ஆசிரியர் இல்லாத பிரச்சினையை தீர்க்கும். ஆனால் மாணவர்கள் அவ்வகையான பெரிய வகுப்புகளில் தனிப்பட்ட கவனத்தை பெறுவார்களா? சிறிய குழுக்களிலுள்ள உறவின் தரம் குறைந்து விடுமா?

3. பயிற்சி திட்டமானது பிரதியீடாக அல்லது வகுப்புக்களை எடுக்கும் புதிய ஆசிரியர்களை கொடுக்கும்.

**சரியான தீர்வை தெரிவு செய்தல்:**

3வது தீர்வு சிறப்பானது. பயிற்சி திட்டமானது சரியாக ஆயத்தப்பட்டு போதிப்பதற்கான புதிய ஆசிரியர்களின் தொடர்ச்சியான ஆதாரத்தை கொடுக்கும். முதவாவது குழுவாகிய ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படும் வரை 1வது தீர்வு (தொண்டர்கள்) 2வது தீர்வு (வகுப்புக்களை சேர்த்தல்) ஆகியவற்றை நீங்கள் உபயோகிக்கலாம்.

**மதிப்பிடல்:**

1. மூன்று மாதங்களுக்கு பின், தீர்வை மதிப்பிடுங்கள். பயிற்சி திட்டமானது ஆசிரியர் இல்லாத பிரச்சினையை தீர்க்கின்றதா?

2. நீங்கள் முகங்கொடுக்கும் தீர்மானத்தோடு யோசியுங்கள். நீங்கள் தெரிவை மேற்கொள்ள உதவும்படிக்கு இந்த பாடத்தில் நீங்கள் கற்ற கொள்கைகளை பயன்படுத்துங்கள்.

3. வேதாகமமானது தேவனுடைய சித்தப்படியான உறவில் ஜாதிகளும் தனிப்பட்டவர்களும் மேற்கொண்ட தீர்மானங்களின் வரலாறாகும். தேவனுடைய திட்டம் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளுதலை நீங்கள் மேலதிகமாக படிப்பதற்கு சர்வதேச அறுவடைநேர நிறுவன பாடமான, “தேவனுடைய சத்தத்தை அறிதலை” பெறுங்கள்.

4. தீர்மானத்திற்கு முகங்கொடுக்கும்போது தவறான ஆலோசனைகளை எடுத்த ரெகொபெயாம் ராஜாவை குறித்து வாசியுங்கள்: 1 இராஜாக்கள் 12:1-19

# அதிகாரம் ஒன்பது

## முரண்பாடுகளும் ஒழுக்கங்களும்

**குறிக்கோள்கள்:**

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ அனைத்து முரண்பாடுகளுக்கான உண்மையான காரணத்தை இனங்காணவும்,
- ☐ முரண்பாடுகளை தவிர்ப்பதற்கான வழிகளை சுருக்கமாக்கவும்,
- ☐ முரண்பாடுகளோடு கையாளும் வழிகாட்டல்களை சுருக்கமாக்கவும்,
- ☐ ஒழுக்கம் ஏன் தேவையானது என்பதற்கான காரணங்களை இனங்காணவும்,
- ☐ சீஷத்துவத்தின் வேதாகம கொள்கைகளை சுருக்கமாக்கவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

**வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது: தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி,**

**அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. (2 தீமோத்தேயு 3:16-17)**

### அறிமுகம்

நீங்கள் அதிகாரம் ஏழில் தலைவர்களுக்கான இலக்குகள் குறித்து கற்றீர்கள். அனைத்து தலைவர்களுக்குமான இரண்டு முக்கிய இலக்குகளானது ஒழுக்கம் மற்றும் முரண்பாடுகள் தீர்த்தலை கொடுப்பதாகும். நீங்கள் மக்களோடு ஊழியம் மற்றும் வேலை செய்யும் எப்பொழுதும் இந்த இலக்குகளானது அவசியமாகும். ஒழுக்கம் என்பது தவறானவர்களை திருத்துதல் அகும். முரண்பாடு என்பது சண்டை அல்லது மோதல் ஆகும். ஓர் நல்ல தலைவரானவர் திருத்துதல்களை கொடுத்து, அவருடைய பின்பற்றுவோருக்கு இடையிலான பிரச்சினைகளை தீர்க்கும் இயலுமை இருத்தல் வேண்டும்.

### முரண்பாடு இல்லாமல் ஏற்றுக்கொள்ளாதிருத்தல்

மக்கள் முரண்பாடு இல்லாமல் ஏற்றுக்கொள்ளாதிருக்கலாம், ஆனால் ஏற்றுக்கொள்ளாதிருத்தலின் விளைவிலிருந்து கூட முரண்பாடு எழலாம். அது வேதனை மற்றும் அழிக்கும் சந்தர்ப்பங்களுக்கு வித்தியாசம் அற்றதாகும், ஆனால் அவைகளை நாம் கொண்டிருத்தல் அன்பின் தோல்வியாகும்.

அப்போஸ்தலர் 15:36-41ல் பவுல் மற்றும் பர்னபாசிற்கு ஏற்பட்ட ஏற்றுக்கொள்ளாததன்தை குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த தன்மை விரோதம் மற்றும் வெறுப்பிற்கு வழிநடத்தவில்லை. இந்த பிரச்சினையானது இரண்டாவது சுவிசேஷ குழுவை ஏற்படுத்துவதின் மூலம் தீர்க்கப்பட்டது. இந்த தீர்வு பொதுவான சுவிசேஷத்தின் பரவுதலை மேலோங்க செய்தது. பவுலும் பர்னபாவும் கோபம் கொள்ளவில்லை, பேச்சை நிறுத்தி, மற்றவர்களோடு கூட செய்வதற்கு அவர்களிடம் ஒன்றும் இருக்கவில்லை. “அவர்களை ஒருவர் வேதனைப்படுத்தியன்” காரணத்தினால்

கிறிஸ்தவ சேவையிலிருந்து வெளியே யாரும் விட்டுவிடப்படவில்லை. அவர்கள் இருவரும் தொடர்ந்து தேவனை சேவித்தனர்.

மக்கள் ஒருவருக்கொருவர் சண்டைசெய்யும்போது, அவர்கள் சாத்தானோடு செய்யவில்லை. தேவன் தலைவர்களை முரண்பாடுகளோடும் ஒழுக்கத்திலும் வல்லமையாக சம்பந்தப்பட வேண்டுகின்றார், ஆகவே அவருடைய இராஜ்ஜியத்தின் வேலையானது செயற்படுத்தப்படும்.

## தேவனுடைய வார்த்தையின் பங்கு

தேவனுடைய வார்த்தையானது ஒழுக்க பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் தீர்ப்பதற்கு முக்கிய பங்கை கொண்டிருக்கின்றது:

> **வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது: தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி,**
>
> **அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. (2 தீமோத்தேயு 3:16-17)**

நாம் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் ஒழுக்கத்தையும் முரண்பாடுகளையும் தீர்க்கும்போது, மக்கள் சீர்ப்படுத்தப்பட்டு ஊழியத்தின் வேலையிற்காக பக்திவிருத்தியடைகின்றார்கள். தேவனுடைய வார்த்தையானது ஒழுக்கம், கடிந்துகொள்ளுதல் மற்றும் சீர்த்திருத்துதல் ஆகியவற்றிற்கு வல்லமையுள்ளதாக இருக்கிறது.

## வேதாகம மாதிரி

ஓர் சபை, அமைப்பு அல்லது தேவனுடைய சபை நிறுவப்படும் எந்தவொரு நேரத்திலும், அது அபிவிருத்தியின் குறிப்பிட்ட படிமுறைகளுக்கூடாக செல்லும். இந்த படிமுறைகளுக்கான உதாரணங்கள் இங்குள்ளது. உங்களுடைய வேதாகமத்தில் கீழ்வரும் அதிகாரங்களை படியுங்கள்:

| | |
|---|---|
| அப்போஸ்தலர் 1 | தேவன் குறிப்பிட்ட மனிதர்களை தெரிந்தெடுக்கின்றார். |
| அப்போஸ்தலர் 2 | அவர் இந்த மனிதருக்கு ஊழியத்தை கொடுக்கின்றார். |
| அப்போஸ்தலர் 3 | அங்கு மாபெரும் விருத்தி காணப்படுகின்றது. |
| அப்போஸ்தலர் 4 | ஓர் மாபெரும் அசைவு பிறந்தது (சபை). |
| அப்போஸ்தலர் 5-6 | ஒழுக்கமும் முரண்பாடுகளும் எழுந்தது. |

அப்போஸ்தலர் 1-4ல் தேவனுடைய மாபெரும் வேலையானது பிறந்தது, பின் அப்போஸ்தலர் 5:1-11ல் ஒழுக்கத்தின் பிரச்சினைகள் எழுந்தது. பேதுரு அதை மறுதலிக்கவில்லை, ஆனால் அதை எதிர்கொண்டு சம்பந்தம் கொண்டார். அப்போஸ்தலர் 5:12-42ல், சபைகளிலிருந்து அல்லாத முரண்பாடுகள் எழுந்தன. சீஷர்கள் எதிர்ப்பிற்கு முன்னால் இருந்து தைரியமாக அறிவித்தார்கள்:

> **மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது... தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள். (அப்போஸ்தலர் 5:29 மற்றும் 42)**

அப்போஸ்தலர் 6:1ல், முரண்பாடுகளிலிருந்து சபை எழுந்தது. விதவைகளுக்கு பகிர்ந்தளித்தல் குறித்தான ஓர் சர்ச்சை காணப்பட்டது. மீண்டும், உடனடியாக சீஷர்கள் முரண்பாடுகளை தீர்த்தார்கள். “நீங்கள் ஆவிக்குரியவர்களாக இருந்தால் புகார்களை கொடுக்க மாட்டீர்கள்” என அவர்கள் புகார்களுக்கு கூறி மௌனமாகவில்லை.

“தேவன் ஏற்படுத்திய தலைமைத்துவத்தை சவாலிற்குட்படுத்தாதீர்கள். ஏற்றுக்கொள்ளுங்கள் அல்லது பிரிந்து போங்கள்!” என்று அவர்கள் சொல்லியிருக்கலாம். மாறாக, அவர்களிடம் நல்ல தலைவருக்குரிய குறிக்கோள்

காணப்பட்டது. அவர்கள் “உங்களுக்கு ஓர் பிரச்சினை உள்ளதை நாம் கேட்கின்றோம். நாம் எல்லோரும் தேவனுடைய உதவியோடு ஒன்றாக அதை பார்ப்போம், எம்மால் அதை தீர்க்க முடியும்” (அப்போஸ்தலர் 6:2-7ஐ பாக்கவும்.) என கூறினார்கள்.

ஊழியமோ அல்லது தேவனுடைய வேலையோ நிறுவப்படும் எந்தநேரத்திலும், இது இதே மாதிரியான மாதிரியை அனுபவிக்கும். அதனோடு மற்றும் அதுவல்லாமல் ஒழுக்க பிரச்சினைகளும் முரண்பாடுகளும் காணப்படும். சாத்தான் ஊழியத்தின் வேலைகளை அழிக்க வேண்டுகின்றார்.

பரிசுத்த அவியானவரினால் வழிநடத்தப்படும் ஒருவர் (ஒரு தடவையாவது) மாம்சத்தினால் வழிநடத்தப்படும் மற்றொருவரோடு பொதுவாக முரண்பாட்டிற்கு வருவார் என்பதை கூட நீங்கள் ஞாபகத்தில் கொள்ள வேண்டும். (இந்த பாடத்தின் “மேலதிக படிப்பினைக்கு” பகுதியில் இயேசுவினுடைய முரண்பாடுகளை பாருங்கள்.)

ஒரு நல்ல தலைவர் இதுபோன்ற கடினமான சூழ்நிலைகளை புறக்கணிக்கமாட்டார். அவருடைய பிரசன்னத்திற்கு முன் பிரச்சினைகளை கொண்டுவருவதினால் “ஆவிக்குரியவர்கள் அற்றவர்கள்” என மக்களை அவர் அழைக்க மாட்டார். அவர் உடனடியாக ஒழுக்கம் மற்றும் முரண்பாட்டில் காரியங்களோடு சம்பந்தப்படுவார்.

## முரண்பாட்டிற்கான உண்மையான காரணம்

விசுவாசிகள் மற்றும் சபை, கிறிஸ்தவ ஊழியத்திற்கு இடையிலான முரண்பாட்டிற்கான பின்புலமாக உள்ள உண்மையான காரணத்தை வேதாகமம் வெளிப்படுத்துகின்றது:

> **உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமைபாராட்டாதிருங்கள் சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய்சொல்லாமலுமிருங்கள்.**
>
> **இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது.**
>
> **வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு. (யாக்கோபு 3:14-16)**
>
> **உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது: உங்கள் அவயவங்களில் போர் செய்கிற இச்சைகளினாலல்லவா? (யாக்கோபு 4:1)**
>
> **பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்திற்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா? (1 கொரிந்தியர் 3:3)**

முரண்பாடுகள் ஆவிக்குரிய முதிர்ச்சியின்மை மற்றும் மாம்சம், சரீரம் உடைய சாத்தானின் தூண்டுதலிலான மாம்சீக கிறிஸ்தவர்களினால் எழுப்பப்படுகின்றது.

## முரண்பாடுகளை தவிர்த்தல்

முரண்பாடுகளை கையாளும் மிகச்சிறந்த வழியானது அது ஏற்படுவதற்கு முன்னர் அதை தவிர்த்தலாகும். இங்கு சில முரண்பாடுகளை தவிர்க்கும் வழிகள் காணப்படுகின்றன:

1. ஆவிக்குரிய முதிர்ச்சியுள்ள விசுவாசிகள் எழும்புதல் (யாக்கோபு 3:14-16; 4:1; 1 கொரிந்தியர் 3:3).

2. மக்களை நன்கு அறிவுறுத்தலோடு வைத்திருங்கள். குழப்பங்களும் தகவல்கள் இன்மையும் பிரச்சினைகளை உருவாக்கும். ஊழியத்தின் வேலையில் உங்களோடு உள்ளடக்கியுள்ளோருக்கிடையில் தொடர்பாடும் பாலத்தை பலமாக கட்டுங்கள். வேதாகமத்தில் உள்ள நல்ல தலைவர்கள் (மோசே, நெகேமியா, எஸ்றா போன்றோர்) நல்ல தொடர்பாடலாளர்கள்.

3. தேவனுக்கான காரியத்தை நீங்கள் செய்யும்போதெல்லாம், அங்கு எப்பொழுதும் பிரச்சினைகள் காணப்படும். நீங்கள் பிரச்சினைகளை எதிர்பார்க்கின்றீர்கள் என மக்கள் அறியட்டும், அவைகள் எழும் போது நீங்கள் ஆச்சரியப்படவில்லை, அத்தோடு பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையிற்கூடாக அவைகளை தீர்க்க முடியும் என நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

4. மேலதிகமாக யோசியுங்கள். உங்களோடு சம்பந்தப்படும் அநேக பிரச்சினைகளுக்கு அவைகள் முரண்பாடு அடைய முன் கவனமாக திட்டமிடுங்கள்.

5. பலமுள்ள உறவை கட்டியெழுப்புங்கள். மற்றவர்களை பற்றி நல்லதையே கூறுங்கள், மற்றவர்களுடைய நலனை பேசும்படி உங்களோடு ஊழிய வேலை செய்வோருக்கு பயிற்றுவியுங்கள்.

6. உங்களுடைய ஊழியத்தில் வேலை செய்வோருக்கு பணிவான பாராட்டுக்களையும், நன்மதிப்பையும் கொடுங்கள்.

7. நீங்கள் ஒரு தவறை செய்தால், அதை பெரிதாக ஏற்றுக்கொண்டு திருத்துங்கள்.

8. ஊழியத்தில் உங்களுடைய குறிக்கோளிலும், திட்டங்களிலும் கவனமாக இருங்கள். நீங்கள் என்ன மற்றும் எதை செய்யும் பொது என எல்லோரும் அறியும் போது, அங்கு தவறான விளங்கிக்கொள்ளுதலுக்கும், முரண்பாடுகளுக்கும் சந்தர்ப்பம் குறைவாக காணப்படுகின்றன.

9. ஒழுக்கங்களை ஏற்படுத்த அவசியம் ஏற்படுமாயின், தெளிவான ஒழுக்கத்தை ஏற்படுத்தி மற்றவர்களுடன் அதை உடனடியாக தொடர்பாடுங்கள்.

10. உங்களுடன் வேலைசெய்வோருடன் கூட காணப்படுங்கள், ஆகவே பிரச்சினைகள் எழும்போது நீங்கள் கவனமாக இருக்க முடியும். உங்களுடைய கவனம் இல்லாமல், சாதாரண பிரச்சினைகளும் பெரிய முரண்பாடுகளாக காண முடியும்.

11. அன்பு என்னும் மாபெரும் ஒன்றான, வேதாகமத்தின் கொள்கைகளை ஊழியத்தில் செயற்படுத்துங்கள்.

## முரண்பாடுகளோடு சம்பந்தப்படுதல்

பிரச்சினை அல்லது முரண்பாடு எழும்போது, இந்த வழிகாட்டல்களை பின்பற்றுங்கள்:

1. அதனோடு சம்பந்தப்பட எப்பொழுதும் உங்களை காணப்படத்தக்கதாக வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் ஒருபோதும் இராவிட்டால் பிரச்சினைகளை உங்களால் கையாள முடியாது.

2. பிரச்சினைகளோடு சம்பந்தப்பட அறிவிற்காக ஜெபியுங்கள்.

3. உண்மையான பிரச்சினைகளை அறிந்துகொள்ளுங்கள். முரண்பாடு உண்மையான பிரச்சினை அல்ல. முரண்பாடுகள் ஏற்படும் போது பிரச்சினைகளாகின்றது. பிரச்சினைகளை அறிவதற்கு கேள்விகேட்டல், விளங்குதல், வெளிப்படுத்தலுக்காக தொடர்ந்தும் ஜெபித்தல் போன்றவற்றை நீங்கள் செய்ய வேண்டும். பிரச்சினைகளின் அனைத்து பகுதிகளையும், உள்ளடங்கியுள்ள அனைத்து மக்களிடமும் கேளுங்கள். அனைத்து காரணிகளையும் தெளிவாக விளங்க முன் கிரியை செய்ய வேண்டாம். பிரச்சினைகளுக்கான உண்மையான ஆதாரத்தை எப்பொழுதும் மனதில் வைத்திருங்கள் (யாக்கோபு 3:14-16; 4:1; 1 கொரிந்தியர் 3:3).

4. பிரச்சினைகளோடு நேரடியாக பாதிக்கப்பட்ட மக்கள் தீர்வுகளை முன்வைக்கட்டும். அனைத்து தீர்வு-களையும் கேட்பதற்கு சித்தமுள்ளவர்களாக இருங்கள். தீர்வுக்காக ஒன்றாக ஜெபியுங்கள். கடினமான முரண்பாடுகளுக்கு, உபவாசித்தலும் பரிந்துரைக்கப்படுகின்றது.

5. முரண்பாடானது இரு மக்களுக்கிடையிலான தனிப்பட்ட பிரச்சினையாயின், மத்தேயு 18:15-17ன் படியான கீழ்வரும் கொள்கைகளுக்கு அவர்களை ஒன்றாக கொண்டு வாருங்கள்.

6. முரண்பாடுகளை சரியான குறிக்கோளோடு சம்பந்தப்படுங்கள். உறவை துண்டிப்பதைவிட மன்னிப்பு கொடுத்து, மீள்கட்டுவதை எதிர்பாருங்கள். அன்புள்ளவர்களாக இருங்கள். அச்சுறுத்தவோ அல்லது கோபம் கொள்ளவோ வேண்டாம். மக்களை ஒருவருக்கொருவர் குறித்து கெட்ட காரியங்களை சொல்லவோ அல்லது கூக்குரலிடவோ அனுமதிக்க வேண்டாம்.

   உபாயங்களை பயன்படுத்துங்கள். உபாயம் எனப்படுவது மக்களை குற்றவாளிகளாக்காமால் ஞானத்தோடும் அன்போடும் கடினமான சூழ்நிலைகளில் சம்பந்தப்படும் இயலுமையாகும். இது மற்றவர்களுக்காக உணர்ச்சிமிக்கதாக இருப்பதற்கும், விளங்கிக்கொள்ளுவதற்கும், பிரித்து மற்று காயப்படுத்துவதை விட மீள்கட்டமைத்து குணமாக்கும் வசனங்களை பயன்படுத்துங்கள். இணக்கமுள்ளவர்களாக இருங்கள். சுயநலமாக உங்களுடைய சொந்த வழியில் ஏற்படுத்தி வைத்திருக்க வேண்டாம். பிரச்சினைகளை தீர்க்கும் வழிகளிலும் வித்தியாசமான கருத்துக்களிலும் திறந்தவர்களாக இருங்கள்.

7. ஓர் நேரத்தில் ஓர் முரண்பாட்டில் அல்லது பிரச்சினையில் சம்பந்தப்படுங்கள். மற்ற தொடர்புடைய பிரச்சினைகளை கலந்துரையாடுவதின் மூலம் குறித்த காரியத்தை குழப்ப வேண்டாம்.

8. முரண்பாட்டை ஏற்படுத்தும் பிரச்சினையை தெளிவாக நீங்கள் விளங்கிக்கொள்ளும்போது, அதை திருத்தும்படியாக உடனடியாக செயற்படுங்கள். அந்த தீர்வானது எப்பொழுதும் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு முதன்மையாக இருத்தல் வேண்டும் என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள். பவுல் மற்றும் பர்னபாவின் உதாரணத்தை போல் முரண்பாடுகளை ஒத்துழைப்புள்ளதாக மாற்றுங்கள்.

9. நீங்கள் முரண்பாடுகளை ஏன் அந்த வழிகளில் கையாளுகின்றீர்கள் என்பதை விபரியுங்கள். உதாரணத்திற்கு, அப்போஸ்தலர் 15ல் விபரிக்கப்பட்ட சபை முரண்பாட்டில், அவற்றில் உள்ளடங்குபவற்றை தலைவர்கள் அவர்களுடைய தீர்வுகளின் விபரிப்பை, விபரமாக எழுத்தினார்கள்.

10. பிரச்சினையிற்காகவும், அனுபவத்திலிருந்து நீங்கள் கற்றவற்றிற்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துங்கள். “அனைத்திலும்” நீங்கள் நன்றி செலுத்தும்போது, உங்களில் பொருட்டு வேலை செய்யும்படி தேவனுடைய வல்லமையையும், தெய்வீக பலத்தையும் அது கொடுக்கும்.

## ஒழுக்கத்திற்கான காரணம்

அதிகாரத்திற்கு எதிராக கலகம் செய்தல் பாவத்தின் இயல்பாகும். லூசிபர் (சாத்தான்) மற்றும் மனிதனின் (ஆதாம் மற்றும் ஏவாள்) உண்மையான பாவம் ஏற்பட இதுவே காரணமாக இருந்தது. இந்த அடிப்படை பாவ இயல்பின் காரணமாக, நீங்கள் நடத்தப்பட வேண்டாதவர்களை சில சமயம் நடத்தப்பட வேண்டிய அவசியமாகின்றது. கலகம், பாவம், ஆவிக்குரிய சரீர ஆதாரங்கள் மற்றும் முதிர்ச்சியின்மை போன்றவற்றில் விழுந்த பின்பற்றுவோர் உங்களில் காணப்படலாம்.

சபை அல்லது ஊழியத்தில் ஒழுக்கத்திற்கான அதிகாரத்தை போதகர் அல்லது ஆவிக்குரிய தலைவர் கொண்டிருக்கிறார், ஏனென்றால் பின்பற்றுவோருக்கான ஆவிக்குரிய போராட்டத்திற்கான பொறுப்பை அவர் கொண்டிருக்கிறார்:

> **உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச்செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள் அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே. (எபிரெயர் 13:17)**

தலைவரானவர் ஒழுக்க பிரச்சினைகளை அவைகள் ஏற்படும்போது உடனடியாக கையாள சித்தமுள்ளவராக இருத்தல் வேண்டும். ஆவிக்குரிய தோல்வியையோ அல்லது பாவத்தையோ சவால் அல்லாமல் செல்ல

அனுமதித்தல் எந்தவொரு ஊழியத்திற்கும் நாசமூட்டுதலாய் இருக்கலாம். இங்கு சில ஒழுக்கத்திற்கான வசனத்தின் காரணங்கள் காணப்படுகின்றன:

1. தேவனுடைய வார்த்தையை மறுதலிக்கும் அல்லது குற்றத்திற்கான காரணத்தை கொடுக்கும் ஓர் நபரை மீள் கட்டுவதற்கு: கலாத்தியர் 6:1; மத்தேயு 6:14-15

2. பாவத்தை திருத்துவதற்கு: 1 கொரிந்தியர் 8:9

3. சபையின் கிறிஸ்தவ சாட்சியை பாதுகாப்பதற்கு: 1 தீமோத்தேயு 3:7

4. அங்கத்தவர்களுக்கு அவர்களுடைய சாட்சியில் தொடர்ந்து விசுவாசமுள்ளவர்களாக இருப்பற்கும் கவனிப்பற்றவர்களாக மாறாதிருப்பதற்கும் அவர்களை ஊக்கப்படுத்துவதற்காக: 1 கொரிந்தியர் 5:6-7

## ஒழுக்கத்தின் கொள்கைகள்

இங்கு சில ஒழுக்கத்தின் வழிகாட்டல்கள் தரப்பட்டுள்ளன:

1. தவறுசெய்த சகோதரனிடம் முதலாவது சென்று முடியுமானால் தனிப்பட்ட அல்லது தனியான காரியங்களை தீருங்கள்: லூக்கா 17:3; மத்தேயு 18:15-17

2. தவறான விசுவாசி உங்களிடம் கேட்க மறுத்து மனந்திரும்பாவிட்டால், மீண்டும் சாட்சியோடு செல்லுங்கள்: மத்தேயு 18:15-17

3. அவர் இன்னும் உங்களை கேட்க மறுத்தால், அனைத்து சபையிற்கு முன்பாகவும் காரியத்தை கொண்டு செல்லுங்கள்: மத்தேயு 18:15-17

4. ஒழுக்கமானது சரியான ஆவியோடு தலைவர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டும். மத்தேயு 7:1-5; ரோமர் 15:1-2; 2 கொரிந்தியர் 2:6-8; கலாத்தியர் 6:1-4 ஆகியவற்றை பாருங்கள். ஆவியில் முதிர்ச்சியடைந்த விசுவாசிகள் முதலில் தம்மைத்தாம் நியாயந்தீர்த்து, பிற்பாடு சாதுவான, அன்பான, உதவியுள்ள ஆவியோடு குற்றம்செய்தோரோடு சம்பந்தப்பட வேண்டும்.

5. சாத்தானால் கட்டப்பட்ட குற்றவாளிகளை மீள்கட்டும் நோக்கோடு திருத்துதலானது மேற்கொள்ளப்பட வேண்டும்: 2 தீமோத்தேயு 2:24-26.

6. தவறுகளானது மறுக்கப்பட்டால், ஐக்கியத்திலிருந்து வெளியேற்றுவதிலிருந்து ஒழுக்கமானது உள்ளடக்கப்படவேண்டும். தேவனால் விசுவாசிகளுக்கு கொடுக்கப்பட்ட மாபெரும் ஓர் வரமானது மற்ற விசுவாசிகளோடு ஐக்கியம் கொள்ளுதலாகும். மிகவும் கண்டிப்பான தண்டனைகளில் ஒன்று என்னவென்றால் அந்த ஐக்கியத்திலிருந்து நிறுத்திக்கொள்ளுதலாகும். மத்தேயு 18:15-17; 1 கொரிந்தியர் 5; 2 தெசலோனிக்கேயர் 3:14; 2 யோவான் 7-11; 3 யோவான் 9-11.

7. தவறு செய்யும் சகோதரன் பிரதியுத்தரவு கொடுக்கும்படியாக சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டும். அவருடைய குறிக்கோளானது ஒழுக்கத்திலும் ஊழியத்தில் அவருடைய எதிர்காலத்திலும் தாக்கமுறச்செய்ய வேண்டும். அவருடைய குறிக்கோள் நன்றாக இருந்து அவர் மனந்திரும்பினால், தலைவர் ஐக்கியத்திலும் ஊழியத்திலும் அவரை மீள்கட்டலாம். மறுப்பானது கடினமுள்ளதாக இருந்தால், மறுப்பாளரை அவருடைய சொந்த ஜீவியம் மற்றும் வீடு சரியாக ஏற்படும் வரை ஊழியத்தின் செயற்பாட்டிலிருந்து விலக்குதல் அவசியமாகும். அவர் மனந்திரும்பாமல் கலகம் செய்தால், அவர் தலைமைத்துவ நிலையிலிருந்தும், சபை ஐக்கியத்திலிருந்தும் முடியுமானவரை நீக்கப்பட வேண்டும்.

8. தனிப்பட்ட பிரச்சினைகளும் பகிரங்க பாவங்களும் வித்தியாசமான கையாளப்படவேண்டும். மத்தேயு 18:15-17; 1 கொரிந்தியர் 5; கலாத்தியர் 2:1-14; 1 தீமோத்தேயு 5:20 ஐ பார்க்கவும். மத்தேயுவிலிருந்தான

இந்த பந்தியானது தனிப்பட்ட நபர்களுக்கு இடையிலான பிரச்சினையாக இது காணப்படுகின்றது. இது மற்ற விசுவாசிகளின் ஆதரவான சேர்ப்பினால் சம்பந்தங்கொள்ள வேண்டும், மறுப்பாளர் மறுக்காத பட்சத்தில், ஐக்கியத்திலிருந்து அவரை நீக்கலாம். மற்ற பந்தியில், பிரச்சினைகளானது பகிரங்கமாக பதிவுசெய்யப்பட்ட காரியங்களாகும், ஆகவே அவைகள் பகிரங்கமாக சம்பந்தப்படுத்த வேண்டும்.

9. காரணிகளாலாலான அறிவின் அடிப்படையில் மாத்திரமே ஒழுக்கத்தை பயிற்றுவியுங்கள். “இங்கு சொல்லப்பட்டுள்ள” ஆதாரம் மாத்திரம் போதுமானது அல்ல. அங்கு இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் காணப்பட வேண்டும். மத்தேயு 18:15-18; 1 கொரிந்தியர் 5:1; 1 தீமோத்தேயு 5:1,9ஐ பார்க்கவும்.

## ஞாபகத்தில் கொள்ளப்படவேண்டிய ஒழுங்கு முறை

ஞாபகத்தில் கொள்ளப்படவேண்டிய நல்ல ஒழுங்கு முறையானது நீங்கள் மற்றவர்களை ஒழுக்கத்திற்குட்படுத்த வேண்டும்....

**ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். (மத்தேயு 7:12)**

1. “தேவனுடைய வசனம் இதை குறித்து என்ன கூறுகின்றது?”
2. “இயேசு இதை எவ்வாறு கையாண்டார்?”
3. “நான் அவராகவும் அவர் நானாகவும் இருந்து மாறுப்பட்ட எமது நிலையான இந்த சூழ்நிலையில் நான் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்?”

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

2. முரண்பாடுகளை தவிர்க்கும் சில வழிகளை பட்டியலிடுக.

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

3. முரண்பாடுகளோடு சம்பந்தப்படும் வழிகாட்டல்களை சுருக்கமாக தருக.

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

4. ஒழுக்கத்தை பயிற்சிக்குட்படுத்தும் வேதாகமத்தின் சில காரணங்களை பட்டியலிடுக.

.......................................................................................................................................................

5. இந்த பாடத்தில் நீங்கள் கற்ற ஒழுக்கத்தின் வேதாகம கொள்கைகளை சுருக்குக.

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

6. முரண்பாடுகளுக்கான உண்மை காரணம் என்ன?

.......................................................................................................................................................

7. ஒழுக்கத்தில் தேவனுடைய வசனம் ஏன் முக்கியமானது?

.......................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. சபை அல்லது சபை அமைப்பில் ஒழுக்கத்திற்கான சில பொதுவான காரணங்கள் இங்கு தரப்பட்டுள்ளன. ஓர் சகோதரன் அல்லது சகோதரி....

-அநீதியாயிருத்தல் (பாலியல் பாவங்கள், விபச்சாரம், பாலியல் படங்கள், மணமாகாத பாலியல் பாவம்)
-ஊழிய நிதி, தனிப்பட்ட நிதி மற்றும் வியாபாரத்தில் உண்மையில்லாதிருத்தல்.
-உண்மையில்லாதிருத்தல்.
-மற்ற மக்களோடு வேலை செய்யமுடியாதிருத்தல்.
-கலகம், மற்றவர்களுடைய குணங்களை ஆராய்தல் மற்றும் பகை போன்ற தவறான குறிக்கோள்களை கொண்டிருத்தல்.
-உலகபிரகாரமாக, மாம்சீக மற்றும் ஆவிக்குரிய முதிர்ச்சியின்மை.
-அவருடைய நடத்தை மற்றும் வாழ்க்கைத்தரத்தில் தவறான உதாரணத்தை ஏற்படுத்தல்.
-அவருடைய தலைமைத்துவ நிலையில் பொறுப்பை நிறைவேற்றாமல் இருத்தல்.
-தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்காது இருத்தல்.
-மற்றவர்களை குறித்து பேசுதல் மற்றும் குழப்பத்தை ஏற்படுத்துதல்

மற்ற காரணங்களை உங்களால் எண்ண முடியுமா?

2. சில தலைவர்கள் தம்முடைய பின்பற்றுவோர்களுடன் முரண்பாடுடைய அனுபவத்தை கொண்டிருப்பார்கள், ஏனென்றால் அவர்களுக்கு விமர்சனத்தை கையாள முடியாது. விமர்சிக்கும் ஒருவர் நீங்கள் கூறும் மற்றும் செய்யும் காரியங்களில் உங்களுடைய வழியை ஏற்றுக்கொள்ளாத ஒருவராகும். அன்பினால் கொடுக்கப்படும் பெருந்தன்மையான விமர்சனம் உதவியுள்ளதாக இருக்கும். அது உங்களை முன்னேற்ற உதவும். ஆனால் நீங்களும் கூட அநீதியான விமர்சனங்களை அனுபவிக்கலாம்.

விமர்சனத்தை கையாளும் சில எடுத்துக்காட்டுகள் இங்குதரப்பட்டுள்ளன:

-நல்ல கேட்பவராக இருங்கள். விமர்ச்சிப்பவர் கூறுவது என்ன என்று கேளுங்கள்.

-உங்களுடைய கவனத்திற்கு அவர் கொண்டு வந்த காரியங்களை குறித்து நன்றி செலுத்தி “நான் இந்த காரியத்தை குறித்து ஜெபித்து, அதை விசாரிக்கின்றேன்” என்று கூறுங்கள்.

-விமர்சனத்தை குறித்து ஜெபியுங்கள். இந்த காரியம் உண்மையிலேயே திருத்தப்படவேண்டியதற்கு சம்பந்தப்பட்டுள்ளதா என காட்டும்படி தேவனிடம் கேளுங்கள்.

-விசாரனை செய்யுங்கள்: நீங்கள் தவறான தீர்மானங்களை மேற்கொண்டீர்களா? நீங்கள் தவறானதை செய்கின்றீர்களா? உங்களுடைய தீர்மானத்திற்கு அடிப்படையிலான காரணிகளை சேகரியுங்கள்.

-நீங்கள் கண்டுகொள்ளும் விமர்சனம் அநீதியாயிருந்தால், அதை புறக்கணித்து விடுங்கள். அது பிரச்சினை அல்லது தோல்வியிற்கான விமர்சனமாயிருந்தால், சூழ்நிலையை சரிபடுத்துங்கள்.

3. இயேசு அவருடைய பூலோக ஊழியத்தில் அதிக முரண்பாடுகளுக்கு முகங்கொடுத்தார். அவர் எவ்வாறு முரண்பாடுகளோடு சம்பந்தப்படுத்தினார் என்பதை படியுங்கள்...

-அவருடைய சீஷர்களுக்கு இடையான நிலையிற்கு மேலாக: மாற்கு 9:33-37

-ஓய்வுநாளில் குணமாக்குதல் தொடர்பாக பரிசேயர்களுக்கு மேலாக: மத்தேயு 12:9-14

-பிசாசுகளை துரத்துதல் தொடர்பாக பரிசேயர்களுக்கு மேலாக: மத்தேயு 12:22-25

-அவருடைய வல்லமையை காட்டும்படியாக அற்புதங்களை அவர் செய்ய வேண்டும்படியான பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்களோடு: மத்தேயு 16:1-4

-தேவாலயத்தில் காசுகாரர்களோடு: மாற்கு 11:15-18

-அவர் தேவனுடைய குமாரரென மறுக்காத காரணத்தினால் ரோம ஆளுனர்களோடு மற்றும் பிரதான ஆசாரியர்களோடு: மாற்கு 14:60-63; 15:15

4. தலைவர்கள் எவ்வாறு முரண்பாடுகள் மற்றும் ஒழுக்க காரியங்களில் எதிர்பட்டனர் என்பதற்கும் அவைகளோடு வெற்றிகரமாக சம்பந்தப்பட்டார்கள் என்பதற்கும் அநேக வேதாகம உதாரணங்கள் காணப்படுகின்றன. கீழ்வரும் வசனங்களை படியுங்கள்:

-மோசே: எண்ணாகமம் 16; யாத்திராகமம் 18:13-26

-சாலேமோன் ராஜா: 1 இராஜாக்கள் 3:16-28

-நாத்தான் தாவீதை எதிர்கொள்ளுதல்: 2 சாமுவேல் 12

-சாமுவேல் சவுலை எதிர்கொள்ளுதல்: 1 சாமுவேல் 15

-நெகேமியா: நெகேமியா 13:23-25

-எருசலேமிலுள்ள சபை தலைவர்கள்: அப்போஸ்தலர் 15

-அனைத்து விசுவாசிகளிலுமுள்ள தேவனுடைய சீஷர்கள்: எபிரெயர் 12:5-7

-அப்போஸ்தலனாகிய பவுல்: கலாத்தியர் 2:11

# அதிகாரம் பத்து

## தலைவர்களையும் பின்பற்றுவோரையும் பயிற்றுவித்தல்

**குறிக்கோள்கள்:**

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ தலைவர்களையும் பின்பற்றுவோரையும் பயிற்றுவித்தலுக்கான நோக்கத்தை விபரிக்கவும்,
- ☐ மற்றவர்களை பயிற்றுவித்தல் ஏன் முக்கியமான பொறுப்பு என விபரிக்கவும்,
- ☐ இயேசுவினால் பயன்படுத்தப்பட்ட ஆறு கொள்கைகளின் தெரிவுகளை இனங்காணவும்,
- ☐ இயேசுவினால் பயிற்சியிற்கு பயன்படுத்தப்பட்ட ஆறு கொள்கைகளை இனங்காணவும்,
- ☐ தலைமைத்துவ பயிற்சி மாதிரியில் வேதாகம உதாரணத்தை தரவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான். (லூக்கா 6:40)**

### அறிமுகம்

தலைவர்களுக்கு பின்பற்றுவோரும் பின்பற்றுவோருக்கு தலைவர்களும் இருத்தல் வேண்டும். ஓர் சராசரியான சபையில் தலைவர்களையும் பின்பற்றுவோரையும் விருத்திசெய்யும்படியாக யாரும் ஏற்படுத்தப்படவில்லை, இருப்பினும் எதிர்கால சபையானது அவர்களின் தங்கியிருக்கின்றது. தலைவர்கள் மற்றும் பின்பற்றுவோருக்கான பயிற்சியானது கிறிஸ்தவ சரீரத்தில் அவர்களுடைய பங்கை எடுப்பதற்கு இளவயதினரை ஆயத்தப்படுத்த சிறுவயது முதல் ஆரம்பிக்க வேண்டும். எந்த வயது மாற்றத்திலும் தொடரும்படியான பயிற்சியை உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.

தலைமைத்துவத்திற்கான விசேட வரங்களை சில விசுவாசிகளுக்கு தேவன் கொடுக்கின்றார் என நீங்கள் கற்றீர்கள். மற்றவர்கள் வழிநடத்துவதற்கான இயற்கையிலான இயலுமைகளோடு பிறந்திருப்பார்கள். சில மக்கள் இயற்கையிலான பின்பற்றுனர்களாக காணப்படுவார்கள். அனைவரும் தலைவர்கள் மற்றும் பின்பற்றுபவர்கள் ஆகிய இரண்டிற்கும் அழைக்கப்பட்டுள்ளார்கள்.

தேவனிடமிருந்து இயற்கையிலான தாலந்து அல்லது வரம் இருந்தால், தலைவர்கள் மற்றும் பின்பற்றுவோருக்கு பயிற்சி அவசியமாகும். “ஒவ்வொருவரும் ஒருவரை அடைவதற்காக ஒருவருக்கு போதியுங்கள்” என்பது தலைமைத்துவ பற்றாக்குறைகான தேவனுடைய பதிலாகும்.

> **அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி. (2 தீமோத்தேயு 2:2)**

இந்த அதிகாரத்தில், தலைவர்களையும் பின்பற்றுவோர்களையும் எவ்வாறு பயிற்றுவித்தல் என்பதை நீங்கள் கற்பீர்கள்.

## பின்பற்றுவோர்

ஒவ்வொருவரும் பின்பற்றுவோர் ஆவர். பவுல் தம்மைத்தாம் இயேசுவினுடைய பின்பற்றுவோர் என பேசி, கொரிந்தியர்களிலுள்ளவர்களை தம்மை பின்பற்றும்படி பேசுகின்றார்:

> **நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள். (1 கொரிந்தியர் 11:1)**

இதையொத்த அறிவுறுத்தல்களானது எபேசியர் (எபேசியர் 5:1), பிலிப்பியர் (பிலிப்பியர் 3:17), தெசலோனிக்கேயர் (1 தெசலோனிக்கேயர் 1:6) ல் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு விசுவாசிகளும் நல்ல பின்பற்றுவோராயிருப்பதற்கு பயிற்சியளிக்கப்பட வேண்டும். நம்மில் அநேகருக்கு பின்பற்றுவோராயிருப்பதற்கு விரும்புவதில்லை. நாம் தலைவர்களாயிருக்க வேண்டுவோம். ஆனால் ஓர் நல்ல தலைவர் முதலாவதாக நல்ல பின்பற்றுவோராய் இருத்தல் வேண்டும். ஓர் தலைவர் எப்பொழுதும் மற்ற ஒருவருக்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும், ஆகவே அவரும் கூட ஓர் பின்பற்றுவோர். நாம் சித்தியுள்ளதை தொடருவதினால் சித்தியுள்ளவர்களாக இருக்கின்றோம்.

நல்ல பின்பற்றுவோராய் இருப்பதற்கு நீங்கள் உங்களுடைய தலைவர்களுக்கு கீழ்ப்படிந்து அவர்களுடைய அதிகாரத்தை கொடுக்க வேண்டும் ஆகவே அவர்களுடைய வேலை மகிழ்ச்சியுள்ளதாக இருக்கும்:

> **உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச்செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள் அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே. (எபிரெயர் 13:17)**

பின்பற்றுவோர் கிறிஸ்துவை பின்பற்றினால் மாத்திரம் அவர்களுடைய தலைவர்களை பின்பற்ற வேண்டும். தலைவர்கள் தேவனுடைய வசன உண்மையிலிருந்து விலகியிருந்தால், அவர்களை பின்தொடர வேண்டாம்.

## தலைவர்கள்

சபையில் எல்லோரும் தலைமைத்துவ நிலையிற்கு அழைக்கப்பட்டவர்கள் அல்ல, ஆனால் ஒவ்வொரு நபரும் நேரத்திற்கு நேரம் சில வழிகளில் நடத்துகின்றார்கள். உதாரணத்திற்கு, ஒரு மனிதன் சபையிற்கு தலைமைத்துவத்திற்காக அழைக்கப்படாதிருக்கலாம், ஆனால் அவர் தனது வீட்டில் தலைவராய் இருக்கலாம்.

ஓர் விசுவாசியிற்கு தலைமைத்துவத்தின் ஆவிக்குரிய வரங்கள் இல்லாதிருக்கலாம் ஆனால் சபையின் தேவை காரணமாக தலைமைத்துவ மாதிரியை சந்தர்ப்பத்திற்கேற்ப அதை நிரப்பும் அவசியத்தை காணலாம். இந்த காரணத்தினால், அனைத்து விசுவாசிகளும் தலைமைத்துவத்தின் பயிற்றுவிக்கப்படவேண்டும்.

## ஓர் முக்கியமான பொறுப்பு

மற்றவர்களை பயிற்றுவித்தல் மிகவும் முக்கியமான பொறுப்பாகும் ஏனென்றால்....

> **சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான். (லூக்கா 6:40)**

நீங்கள் பயிற்சியிற்குட்படும் மக்கள் உங்களை போலிருப்பார்கள்! நீங்கள் உங்களுடைய நடத்தை மற்றும் வாழ்க்கை மாதிரியினால் சரியான உதாரணத்தை ஏற்படுத்தும் பொறுப்பு கொண்டிருப்பது முக்கியமானதாகும்.

## பயிற்சியின் முக்கியத்துவம்

தலைவர்களையும் பின்பற்றுவோரையும் நாம் பயிற்றுவிக்கும் காரணம் தேவனால் கொடுக்கப்பட்ட அர்ப்பணிப்பை நிறைவேற்றுவதே ஆகும்:

> **ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,**
>
> **நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்தேயு 28:19-20)**

நாம் தலைவர்களையும் பின்பற்றுவோரையும் பயிற்றுவிக்கும் நோக்கமானது அனைத்து ஜாதிகளுக்கும் சென்று, சுவிசேஷத்தை பிரசங்கித்து, ஞானஸ்நானம் கொடுத்து, மேலதிக போதனைகளுக்கூடாக ஆவிக்குரிய முதிர்ச்சியில் மாற்றுவதற்கு அவர்களை வழிநடத்த வேண்டும். மக்கள் பிரதிபலன் செய்வதற்கு, பாவத்திலிருந்து மனந்திரும்ப, மீண்டும் பிறக்க சுவிசேஷத்தை கேட்க வேண்டும். அவ்வாறான போதனைகள் “சுவிசேஷகம்” என அழைக்கப்படுகின்றது:

> **ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து... (மத்தேயு 28:19)**

புதிய விசுவாசிகள் “மாற்றப்பட்டோர்” என சிலசமயங்களில் அழைக்கப்படுகின்றனர். மாற்றப்பட்டோர் என்பவர் விசுவாசத்தினால் மறுபடியும் பிறந்து தேவனுடைய இராஜ்ஜியத்தின் பகுதியாக மாறிய இயேசுவின் விசுவாசி ஆவார். ஆனால் ஓர் புதிய மாற்றமானது பின்பற்றுபவனாவதற்கு பயிற்சிகொடுக்கப்பட வேண்டும்:

> **நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்தேயு 28:20)**

நாம் மாற்றப்பட்டுள்ளோரை சீஷத்துவத்திற்குள் வழிநடத்துவதே இயேசுவினுடைய திட்டமாகும். “சீஷன்” எனும் வார்த்தையிற்கு அர்த்தமாவது “கற்பவர், மாணவர், பின்பற்றுவதினால் கற்கும் ஒருவர்” என்பதாகும். கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படைகளை உருவாக்குபவரும் புதிய மாற்றப்பட்டுள்ளோரை எழுப்பும் இயலுமையும் அவர்களை சீஷத்துவம் செய்வதும் பின்பற்றுவோரான சீஷன் ஆவார். அவர் இதை செய்யும்போது, அவர் தலைவராக மாற்றப்படுவார். இந்த செயற்பாடானது மீள செய்யப்படும்பொழுது, புதிய பின்பற்றுவோரும் தலைவர்களும் இராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தை விரிவுப்படுத்த தொடர்ச்சியாக எழுப்பப்படுவர்.

## மாற்றப்படுவோர், பின்பற்றுவோருக்காக, தலைவருக்காக

மாற்றப்பட்டோரிலிருந்து பின்பற்றுவோராகவும், பின் தலைவர்களாகவும் கொண்டுவர மக்களை நீங்கள் எவ்வாறு வழிநடத்துவீர்கள். புதிய மாற்றுனர்களை வெற்றிக்கொள்ளுதல் முக்கியமானது, ஆனால் பின்பற்றுவோராகவும், தலைவர்களாகவும் மாத்திரம் அவர்களை பயிற்றுவித்தல் ஆவிக்குரிய அபிவிருத்தியில் அவர்களுக்கு இயலுமையை கொடுக்கும்.

இயேசு இதை நிறைவேற்றி, அவர் பின்பற்றுவோரை தெரிவுசெய்து, தலைவராக மாற அவர்களை பயிற்றுவித்தார். அவரிடம் தேவன் அவருக்கு அளித்த வேலைகளை செய்யும்பொருட்டு 3 1/2 வருட கால ஊழியம் மாத்திரமே கொண்டிருந்தார். இந்த குறுகிய கால நேரத்தில் சில இடங்களை மாத்திரமே சந்திக்கவும் குறிப்பிட்ட எண்ணிக்கையான மக்களை அடையவும் மாத்திரமே அவருக்கு இயலுமை கிடைத்தது.

அவருடைய ஊழியத்தின் நிறைவேற்றுதலை நிச்சயப்படுத்துவதற்கு, இயேசு பின்பற்றுவோரை பயிற்சிக்கு ஏற்படுத்தி, தலைவர்களை முன்னுரிமையுள்ளவர்களாக்கினார். அவர் தாம் ஒருபோதும் சந்திப்பதற்கு சந்தர்ப்பம்

கிடைக்காத நரகங்கள் மற்றும் கிராமங்களின் கடையாந்திரங்களில் அவரினால் பயிற்சிபெற்றோர் அடைவார்கள் என அவர் அறிந்திருந்தார்.

## தெரிவுசெய்தலின் கொள்கைகள்

நீங்கள் ஒரோயொரு தனிநபராக இருப்பதோடு அநேக நேரங்களை மாத்திரம் கொண்டிருக்கின்றீர்கள், ஆகவே உங்களால் அனைவரையும் பயிற்சிக்குட்படுத்த முடியாது. இதன் அர்த்தமானது உங்களிடம் பயிற்சி செய்வோரை நீங்கள் தெரிவு செய்ய வேண்டும். நீங்கள் பயிற்சி செய்வோரை எவ்வாறு தெரிவு செய்வீர்கள்? நீங்கள் படிப்பு, அனுபவம், பரீட்சை அல்லது மேலோட்டம் மற்றும் தவறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யலாம்.

ஆனால் தெரிவு செய்தலின் மிகச்சிறந்த வழியானது, இயேசு தன்னுடைய சீஷர்களை தெரிவுசெய்ய பயன்படுத்திய கொள்கைகளை பின்பற்றுவதாகும். மத்தேயு 5:1; 10:2-4; மாற்கு 3:13-19; லூக்கா 6:12-16; லூக்கா 10:1-16ல் அவருடைய தெரிவுசெய்தலின் பதிவுகள் கொடுக்கப்பட்டுள்ளது. நீங்கள் பயிற்சி செய்வோரை பயன்படுத்தும் இயேசு பின்பற்றிய முக்கியமான கொள்கைகள் இங்கு சில தரப்பட்டுள்ளன:

### தேவனில் அடிப்படையாய் இருத்தல்:

இயேசு தேவனில் அடிப்படையாய் இருந்தார். அவர் கூறினார்:

> **நான் என் சுயமாய் ஒன்றுஞ்செய்கிறதில்லை... நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன் எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது. (யோவான் 5:30)**

### ஜெபத்தின் காரியமாக அதை வையுங்கள்:

லூக்கா 6:12-13 இயேசு தன்னுடைய சீஷர்களை தேர்வுசெய்ய முதல் இரவு முழுவதும் ஜெபத்தில் செலவழித்தார் என பதிவு செய்யப்பட்டுள்ளது. பயிற்சிக்காக விசுவாசமுள்ள மனிதர்களை தெரிவுசெய்யும் ஞானத்திற்காக தேவனிடம் ஜெபியுங்கள்.

### ஆரம்பத்தை ஏற்படுத்துங்கள்:

இயேசு அவருடைய சீஷர்களை அழைக்க ஆரம்பத்தை கொடுத்தார். மக்கள் உங்களுடைய பின்பற்றுபவராகவோ அல்லது தலைவர்களாகவோ மாறுவதற்கு மந்தைகள் அல்ல. நீங்கள் அவர்களை அழைப்பதற்கு ஆரம்பத்தை எடுக்க வேண்டும்.

### நிகழக்கூடியவற்றை பாருங்கள், பிரச்சினைகளை அல்ல:

இயேசு சீஷர்களை தெரிவு செய்தபோது, அவர் பொதுவான மனிதர்களை அழைத்தார். சிலர் கல்லாதவர்களாகவும், அவர்கள் எல்லோரிடமும் தவறுகளும் தோல்விகளும் காணப்பட்டன. தற்காலத்திலுள்ள சபை மிஷனரி நிர்வாகத்தினால் உண்மையான 12 சீஷர்கள் ஆய்வுசெய்யப்படுவார்களானால், அவர்கள் மிஷனரி சேவையிற்காக மாறியிருப்பார்கள் என்று கூறப்படுகின்றது.

ஆனால் இயேசு நிகழக்கூடியவற்றிற்கு அடிப்படையில் செயற்படுத்தினார், பிரச்சினைகளுக்கு அல்ல. அவர் அவர்களுடைய இருப்பின் காரணத்தினால் மனிதர்களை தெரிவு செய்யவில்லை, ஆனால் அவர்கள் என்னவாக மாறுகின்றார்கள் என்பதினால் ஆகும். அவர் பிரச்சினைகளுக்கு அப்பால் அவர்களுடைய நிகழக்கூடியவற்றை பார்த்தார்.

### கிரயத்தை தெளிவாக மாற்றுதல்:

இயேசு சீஷர்களை தெரிவுசெய்யும்போது, கிரயம் என்ன என்பதை அவர் தெளிவாக ஏற்படுத்தினார். ஓர்

உண்மையான பின்பற்றுனர் அல்லது தலைவர் அனைத்தையும் விட்டுவிட வேண்டும்:

> **அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். (லூக்கா 14:33)**

அவர் சிலுவையை சுமப்பதன் மூலம் சுயத்தை புறக்கணிக்க வேண்டும்:

> **அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். (மத்தேயு 16:24)**

> **தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். (லூக்கா 14:27)**

அவர் இயேசுவை பின்பற்ற வேண்டும்:

> **அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். (மத்தேயு 16:24)**

தேவனுடைய இராஜ்ஜியமானது அவருடைய முதன்மையான முன்னுரிமையாக மாறவேண்டும்:

> **ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள்.**

> **முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். (மத்தேயு 6:31,33)**

உங்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய இராஜ்ஜியமானது முன்னுரிமையாக இருந்தால் உங்களுடைய அனைத்து தேவைகளையும் சந்திப்பதாக தேவன் வாக்குத்தத்தம் பண்ணியுள்ளார்.

ஓர் பின்பற்றுவோர் அனைத்திற்கு வேலைக்காரன் போலாக வேண்டும்:

> **சீஷன் தன் போதகனைப்போலவும், வேலைக்காரன் தன் எஜமானைப்போலவும் இருப்பது போதும். (மத்தேயு 10:24)**

ஆனால் இது உங்களிற்கு மேலாக இருக்க கூடாது: ஆனால் உங்களில் மிகப்பெரியவர்களாக இருப்பவர்களெல்லாம், அவர்கள் உங்களுக்கு ஊழியம் செய்யட்டும்:

> **உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்.**

> **அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார் என்றார். (மத்தேயு 20:26-28)**

## அடிப்படை தேவைகளை சந்திக்கப்பட்டோரை தெரிவு செய்தல்:

பவுல் தீமோத்தேயுவிடம் விசுவாசமுள்ள மக்களை தேர்ந்தெடுத்து அவர் அவர்களுக்கு போதிக்கப்பட்ட காரியங்களில் அவர்களை அர்ப்பணிப்பை ஏற்படுத்துமாறு கூறினார். இந்த விசுவாசமுள்ள மக்கள் மற்றவர்களுக்கு போதிக்கும் இயலுமைகளை கொண்டிருந்தார்கள். அடிப்படை தேவையானது விசுவாசமும் மற்றவர்களுக்கு

போதிக்கும் இயலுமையும் ஆகும். ஓர் மனிதன் விசுவாசம் இல்லாதவனாக இருந்தால், ஆவிக்குரிய அபிவிருத்தியில் அவனுக்குள்ள பொறுப்பை அவனால் நிறைவேற்ற முடியாது. அவன் விசுவாசமுள்ளவனாக இருந்து ஆனால் மற்றவர்களுக்கு போதிப்பது எவ்வாறு என்று தெரியாதிருந்தால், அப்பொழுது அவனும் கூட தோல்வியுறுவான்.

விசுவாசம் ஆவிக்குரிய முதிர்ச்சியை உள்ளடக்குகின்றது. பவுல் மற்றவர்களுக்கு போதிக்கும் இயல்புடைய விசுவாசிகளை குறித்து பேசுகின்றார், ஆனால் ஆவிக்குரிய முதிர்ச்சியை இன்னும் பெற்றவர்களை அல்ல. இந்த மக்கள் உண்மையான சீஷத்துவத்திற்கு இன்னும் ஆயத்தமுள்ளவர்கள் அல்ல. அவர்கள் விசுவாசத்தின் அடிப்படையில் மேலதிகமாக அறிவுறுத்தல் பட்டிருப்பது அவசியம் ஆகும்.

விசுவாசமுள்ள மனிதர்கள் தவறல்லாத மனிதர்களாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் கிறிஸ்துவை-போலான தகுதிகளில் விருத்தி செய்யும் செயல்பாட்டிலுள்ள விசுவாசிகள் ஆகும். ஒவ்வொரு "விசுவாசமுள்ள மனிதர்களுக்கு" பிரச்சினைகள் இருப்பதோடு, உண்மையான சீஷர்கள் செய்ததைப்போல் பெலவீனத்தை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

உலகமானது தாலந்துள்ள மனிதரை எடுத்து அவர்களுக்கு ஓர் குணாதிசயத்தை கொடுக்க முயலுகின்றது. அவர்கள் ஓர் கலைஞனை உருவாக்க நோக்குகின்றனர். தேவன் "விசுவாசமுள்ள மனிதனின்" குணாதிசயத்தை எடுத்து, அவர்களை ஆவிக்குரிய தாலந்தோடும் இயலுமைகளோடும் வல்லமையுள்ளவர்களாக மாற்றுகிறார் என அவர் கூறுகின்றார். விசுவாசமுள்ள மனிதர்கள் தேவனுடைய நோக்கத்தை அடைவதற்கு காணப்படுபவர்களாக இருக்கின்றார்கள். இயேசு சீமோனையும், அந்திரேயாவையும் அழைத்தபோது, அவர்கள் "உடனடியாக" தங்களுடைய வலைகளை விட்டார்கள். "உடனடியாக" என்னும் வார்த்தை அவர்களுடைய காணப்படுதலை வெளிப்படுத்துகின்றது.

நீங்கள் சீஷத்துவத்திற்கு மனிதர்களை தெரிவு செய்யும்போது, அவர்கள் காணப்படுபவர்களாக இருத்தல் வேண்டும். அவர்கள் தங்களுடைய ஜீவியத்தின் முன்னுரிமையை சீஷத்துவத்தை மேற்கொள்வதற்கு சித்தமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். விசுவாசமுள்ள மனிதர்கள் ஆவிக்குரிய தரிசனங்களினால் ஊக்கப்படுத்தப்படுகின்றார்கள். இயேசு பேதுருவிற்கும் அந்திரேயாவிற்கும் மனிதர்களை பிடிப்பதாக தரிசனத்தை கொடுத்த போது, அது அவர்களை தங்கள் வலைகளை விடத்தக்கதாக ஊக்கப்படுத்தியது.

விசுவாசமுள்ள மனிதர்கள் கிறிஸ்துவினுடைய சீஷர்கள் செய்ததைப்போல் தேவனுடைய வார்த்தையிற்கு பசியுள்ளவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் வேதவசனத்தில் பகிர்ந்தது போல் அவர்களுடைய "இருதயம் அவர்களுக்குள்ளே கொழுந்துவிட்டு எரிந்தது" (லூக்கா 24:32,45). அவர்கள் போதிக்கப்படுவதற்கு சித்தமுள்ளவர்களாகவும், ஆர்வமுள்ளவர்களாகவும் இருந்தனர். விசுவாசமுள்ள மனிதர்கள் தேவன் மற்றும் மனிதர்களுக்கு அன்பானவர்களாக அடையாளப்படுத்தப்படுகின்றார்கள். அவர்கள் முதலாவதும் இரண்டாவதுமான மாபெரும் கட்டளைகளை மனப்பூர்வமாக எடுத்துக்கொள்ளுகின்றார்கள்:

உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை.

இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்: உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை என்றார். (மாற்கு 12:30-31)

## பயிற்சியளிப்பதின் கொள்கைகள்

இயேசு அவர்களுடைய சீஷர்களை தேர்வுசெய்தபின், அவர் அவர்களை பயிற்றுவிக்க எட்டு முக்கியமான கொள்கைகளை நடப்பித்துக்காட்டினார்:

### 1. சம்பந்தம்

இயேசு தம்முடைய சீஷர்களை அழைத்தபோது, அவர்களை "அவர்களை தன்னுடன் இருக்குமாறு" அழைத்தார். அவர் தம்முடைய வாழ்க்கையை தம்முடைய சீஷர்களோடு நெருக்கமாக பகிர்ந்தார். ஊழிய சந்தர்ப்பங்களிலும்

வேறு சந்தர்ப்பங்களிலும் இரண்டிலும் அவர் அவர்களோடு நேரத்தை செலவழித்தார். நிர்வாக கூட்டங்கள் அல்லது ஞாயிறு ஆராதனை கூட்டங்களில் மாத்திரத்திற்கூடாக அவர்களை பயிற்சிசெய்ய கூடாது. நீங்கள் பயிற்சி செய்பவர்களோடு நெருங்கிய சம்பந்தம் காணப்படவேண்டும். நீங்கள் உங்களுடைய வாழ்க்கையை அவர்களோடு பகிர வேண்டும். நீங்கள் அவர்களை, அவர்களுடைய பிரச்சினை மற்றும் அவர்களுடைய ஆவிக்குரிய மட்டங்களை அறிய வர வேண்டும்.

## 2. அர்ப்பணிப்பு

இயேசுவோடிருந்த சம்பந்தத்திற்கு மேலாக, அர்ப்பணிப்பு விருத்திசெய்யப்பட்டது. இயேசு தம்முடைய சீஷர்களை ஆளுகையிற்கோ அல்லது அமைப்பிற்கோ அல்லாமல், ஓர் நபரிற்கு அர்ப்பணிப்பு செய்யும்படி அழைத்தார். தேவனுக்கான இவ்வகையான அர்ப்பணிப்பானது அவருடைய வார்த்தை மற்றும் நோக்கத்திற்கு முழுமையாக கீழ்ப்படிய அழைக்கின்றது. (யோவான் 4:34; 5:30; 15:10; 17:4; மற்றும் லூக்கா 22:42 பார்க்க).

## 3. தரிசனம்:

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு ஆவிக்குரிய தரிசனங்களை கொடுப்பதினால் ஊக்கப்படுத்தினார். ஒவ்வொரு நாள் ஜீவியத்தின் ஒழுங்கு விடவும் மாபெரும் இலக்கிற்காக அவர்களை அழைத்தார். அவர் மனிதர்களை பிடிக்கும்படியாக அழைத்தார் (மத்தேயு 4:19). அவர் உலகரீதியிலான ஆவிக்குரிய அறுவடைக்கான தரிசனத்தை அவர்களுக்கு கொடுத்தார் (யோவான் 4:35). அவர் தேவனுடைய தேவனுடைய இராஜ்ஜியத்தின் வெளிப்படுத்தல்களை அவர்களுடன் சவாலுக்குட்படுத்தினார் (மத்தேயு 13).

தரிசனம் இல்லாமல், மக்கள் அழிவார்கள் (நீதிமொழிகள் 29:18). அவர்களுக்கு ஓர் வழியும், ஊக்கமும் இல்லை. நீங்கள் மற்றவர்களை பயிற்றுவிக்கும்பொழுது இலக்கை ஊக்குவிக்கும்பொருட்டு ஆவிக்குரிய தரிசனத்தை நீங்கள் தொடர்பு செய்ய வேண்டும். தரிசனமானது தேவனுடைய இராஜ்ஜியத்தோடான உலகரீதியிலான வெற்றி ஆகும். குறைந்துபோகுதலினால் சிதறடிக்க வேண்டாம்.

## 4. அறிவுறுத்தல்கள்:

இயேசு தம்முடைய சீஷர்களோடு அவருடைய போதிக்கும் நேரத்தின் மாபெரும் பகுதிகளை செலவழித்தார். அவர் அவர்களுக்கு கொடுத்த அவருடைய அறிவுறுத்தல்களானது எப்பொழுதும் தரிசனத்தோடு தொடர்பாயிருந்தது. நீங்கள் இயேசுவின் முறையான சீஷர்களுடைய பின்பற்றும் பயிற்சியை கொடுப்பதற்கு, இயேசு போதித்தவற்றை நீங்கள் போதிக்க வேண்டும். இது மாபெரும் அர்ப்பணிப்பின் கட்டளையில் ஒரு பகுதியாக இருக்கின்றது (மத்தேயு 28:20).

இயேசுவினுடைய போதனையே அழுத்தமாக இருக்க வேண்டும் என்பதோடு, இந்த போதனைகளாக வெளிப்படுத்தப்பட்டவை எவைகளோ அவைகள் முதலாவதாக சபையில் கிரியைசெய்யும்படியாக போடப்பட வேண்டும். இதன் அர்த்தமானது போதிக்கும் நோக்கமானது சுவிசேஷத்தோடும் புதிய ஏற்பாட்டின் நிருபங்களோடும் இருக்க வேண்டும். (சர்வதேச அறுவடைநேர நிறுவன பாடங்கள் அவ்வகையான பயிற்சியை கொடுக்கின்றது. “போதிக்கும் உபாயங்கள்“ எனும் தலையிடங்கமிடப்பட்ட பாடத்தையும் கூட அறுவடைநேர நிறுவனம் வழங்குகின்றது, இது இயேசுவினுடைய மாதிரிகளை பயன்படுத்தி உங்களை போதிக்கும்படியாக பயிற்றுவிக்கின்றது.)

இயேசு போதித்தவற்றை நீங்கள் போதிக்கும்போது, நீங்கள் தேவனுடைய வசனத்தின் முழுமையான வெளிப்படுத்தல்களை போதிக்கின்றீர்கள், ஏனென்றால் அது பழைய ஏற்பாட்டை அடிப்படையாக கொண்டிருக்கின்றது. இயேசு கூறினார்:

> **அவர்களை நோக்கி: மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார்.**

**எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது,**

**அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகலதேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. (லூக்கா 24:44,46-47)**

## 5. செய்து காட்டுதல்:

இயேசு வாய்மொழியிற்கூடாக மாத்திரம் அறிவுறுத்தல்களை போதிக்கவில்லை. அவர் தாம் போதித்தவற்றை செய்தும் காட்டினார். இயேசு குணமாக்குதலை போதித்து நோயாளிகளை குணமாக்குவதால் அதை செய்து காட்டினார். அவர் சாத்தானுக்கு மேலான விசுவாசியின் அதிகாரத்தை போதித்து பிசாசுகளை துரத்துவதன் மூலம் அதனை செய்து காட்டினார். அவர் ஏழைகளுக்கான கரிசனையை போதித்து திரளான ஜனத்தை போஷிப்பதன் மூலம் அதனை செய்து காட்டினார்.

சீஷர்கள் மாணவர்கள் மாத்திரம் அல்ல, தேவனுடைய வல்லமையை செய்துகாட்டுதலுக்கு அவர்கள் கண்கண்ட சாட்சிகளுமாயிருக்கிறார்கள். அவர்கள் பிற்பாடு அவர்களுடைய போதனையில் "கண்கண்ட சாட்சியாக" கூறினார்கள் "நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும்..." (1 யோவான் 1:1).

இயேசு உதாரணத்தினால் போதித்தார். இயேசு ஜீவித்த, ஊழியம் செய்த, கூறிய விதத்தினால் அவர் செய்து காட்டினார். அவர் கூறினார்:

**நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். (யோவான் 13:15)**

தேவனுடைய வல்லமையின் செய்துகாட்டுதலானது மக்களை அவருடைய செய்தியை கேட்கும்படியாக உருவாக்கியது:

**பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டு கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள். (அப்போஸ்தலர் 8:6)**

பவுல் சுவிசேஷத்தின் உண்மையை மாத்திரம் போதிக்கவில்லை (கலாத்தியர் 2:5) ஆனால் சுவிசேஷத்தின் வல்லமையையும் கூட (ரோமர் 1:16). இவர் சுவிசேஷத்தை அறிவித்து செய்து காட்டினார் (1 கொரிந்தியர் 2:1,4). சர்வதேச அறுவடையநேர நிறுவன பாட தலையங்கமான "வல்லமையின் கொள்கைகள்" இந்த பொருளிற்கு ஈடுபடுத்தும்).

## 6. பங்குபற்றுதல்:

சாதாரண அறிவு மற்றும் போதாது. வல்லமையுள்ளதாக இருக்க, அறிவானது பிரயோகிக்கப்பட வேண்டும். கிரியை செய்யும்படியாக ஓர் நேரம் வருகின்றது. சீஷர்கள் தேவனுடைய போதனையை மாத்திரம் கேட்டு, நடப்பித்தல்களை கவனிக்க மாத்திரம் இல்லை, அவர்கள் கூட பங்குபற்றினார்கள். ஒரு பொருளை போதித்தல் மாத்திரம் கற்றலை உறுதிப்படுத்தும் என்பது இல்லை. போதித்தல் மாத்திரம் என்பது ஒரு புத்தகத்தை வாசித்து அறுவை சிகிச்சை செய்வதற்கு படிக்க முயற்சிப்பதை போன்றதாகும்.

சீஷர்களிடம் அவர்கள் என்ன கற்கின்றார்களோ அதில் பொதுவான அனுபவம் காணப்பட வேண்டும். சுவிசேஷத்தை எவ்வாறு பரப்புவது, நோயாளிகளுக்கு எவ்வாறு ஜெபிப்பது, பிசாசுகளை எவ்வாறு துரத்துவது போன்று அவர்கள் அனுபவத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். இயேசு இவ்வகையான சந்தர்ப்பங்களை அவருடைய சீஷர்களுக்கு கொடுத்தார். மாற்கு 6:7-13 மற்றும் லூக்கா 9:1-6 ஆகியவற்றை வாசியுங்கள். இயேசு தம்முடைய சீஷர்கள் என்ன கற்றார்களோ அதை அனுபவிக்கும்படி வெளியே அனுப்பப்பட்டார்கள். நீங்கள் போதிப்பவர்கள் கேட்பவர்களாக மாத்திரம் அல்லாது வசனங்களின் கதவுகளாகவும் மாறுவர்.

## 7. மேற்பார்வை:

இயேசுவினுடைய சீஷர்கள் அவர்களுடைய ஊழிய சுற்றிலிருந்து திரும்பியபின், இயேசு அவர்களுடைய வலிமையை மதிப்பிட்டார் (லூக்கா 9:10). முழுமையான பயிற்சி செயற்திட்டத்திற்கூடாக இயேசு தம்முடைய சீஷர்களை மேற்பார்வைசெய்தார். அவர்கள் தங்களுடைய கடினங்களில் மாத்திரம் விட்டுவிடப்படவில்லை. அவர் அவர்களை திருத்தி, கடிந்துகொண்டு, ஊக்கப்படுத்த அவர்களோடு இருந்தார்.

வேலையானது சமாந்திரமாக செய்யப்படும் என உங்களால் உறுதிப்படுத்த முடியாது, ஏனென்றால் அதை எவ்வாறு செய்ய வேண்டும் என சித்தமுள்ள ஊழியனுக்கு காட்டுவதினாலும் கவர்ச்சியான எதிர்பார்த்தல்களோடு அவனை வெளியே அனுப்புவதினாலும் உறுதிப்படுத்த முடியாது. நீங்கள் மேற்பார்வை செய்ய வேண்டும். ஊழியர் என்ற வகையில் முகங்கொடுக்கும் ஏமாற்றங்கள் மற்றும் தடைகள் போன்றவற்றில், இந்த சவால்களுக்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்று நீங்கள் அவருக்கு போதிக்க வேண்டும்.

மேற்பார்வை சிலசமயங்களில் “திடப்படுத்தல்” என அழைக்கப்படுகிறது. பவுல் தன்னுடைய சீஷர்களை மேற்பார்வை செய்தார் அல்லது “திடப்படுத்தினார்”:

> **அங்கே சிலகாலம் சஞ்சரித்தபின்பு, புறப்பட்டு, கிரமமாய்க் கலாத்தியா நாட்டிலேயும் பிரிகியா நாட்டிலேயும் சுற்றித்திரிந்து, சீஷரெல்லாரையும் திடப்படுத்தினான். (அப்போஸ்தலர் 18:23)**

> **சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று சொன்னார்கள். (அப்போஸ்தலர் 14:22)**

## 8. ஒப்படைத்தல்:

சீஷத்துவத்தின் இறுதியான கட்டமானது, இயேசு தம்முடைய சீஷர்களுக்கு தம்மில் சீஷர்களை-உருவாக்குபவர்களாக மாறுதலை ஒப்படைக்கும் செயற்பாடாகும். அவர் உலக ஜாதிகளுக்கூடாக ஆவிக்குரிய பெருக்கத்தின் இலக்கை அவர்களுக்கு கொடுத்தார்.

### எபேசுவின் உதாரணம்:

உங்களுடைய வேதாகமத்தில் அப்போஸ்தலர் 19:1-20ஐ வாசியுங்கள். இந்த அதிகாரமானது எபேசு என்னும் பெயருடைய நகரத்தில் அப்போஸ்தலனாகிய பவுலினுடைய ஊழியத்தை விபரிக்கின்றது. பவுல் முதலாவதாக எபேசிவிற்குள் வந்தபோது, அங்கு வாழ்ந்த விசுவாசிகளை அவர் ஆராய்ந்தார். இந்த மனிதர்கள் ஏற்கனவே சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு இயேசுவினுடைய பின்பற்றுவோராக மாறியவர்கள் (அப்போஸ்தலர் 9:1). ஆனால் அந்த நகரத்தில் வல்லமையாக ஊழியம் செய்யும்பொருட்டு மேலதிக பயிற்சி அவர்களுக்கு அவசியப்பட்டது.

பவுல் அனுபவத்திற்கூடாக அவர்களை போதித்தார். அவர் செய்த முதலாவது காரியமாவது பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தினாலான புதிய ஆவிக்குரிய அனுபவத்திற்கூடாக அவர்களை வழிநடத்துவதாகும் (அப்போஸ்தலர் 19:2-8). பவுல் செய்துகாட்டலின் மூலம் அவர்களுக்கு போதித்தார். அவர்கள் தேவனுடைய நாமத்தினால் செய்யப்பட்ட அநேக மாபெரும் அற்புதங்களை சாட்சியிட்டார்கள் (அப்போஸ்தலர் 19:11-12). இயேசுவினுடைய உண்மையல்லாத பின்பற்றுவோர்கள் எல்லோரும் வெளியரங்கமாக்கப்பட்டு மனமாறினர் (அப்போஸ்தலர் 19:13-17). தேவனாகிய இயேசு கிறிஸ்துவிற்கு புதிய மனமாற்றங்களானது வெற்றிக்கொள்ளப் பட்டன (அப்போஸ்தலர் 19:17-20).

சுவிசேஷத்திற்கு பாரம்பரிய தலைவர்களிலிருந்து எதிர்ப்புக்கள் எழும்பியபோது, பவுல் எபேசுவில் பயிற்சி மையத்தை நிறுவினார்:

> **சிலர் கடினப்பட்டு அவிசுவாசிகளாகிக் கூட்டத்திற்கு முன்பாக இந்த மார்க்கத்தை நிந்தித்தபோது, அவன் அவர்களை விட்டு விலகி, சீஷரை அவர்களிலிருந்து பிரித்துக்கொண்டு, திறன்னு என்னும் ஒருவனுடைய வித்தியாசாலையிலே அநுதினமும் சம்பாஷித்துக்கொண்டுவந்தான். (அப்போஸ்தலர் 19:9)**

தலைமைத்துவ பயிற்சியிற்கான செயற்பாட்டு மாதிரியில் எபேசு மாபெரும் உதாரணம் ஆகும். பவுல் பயிற்சியை பெறுவதற்காக மாணவர்களை அவர்களுடைய சுற்றுச்சூழலிலிருந்து பிரிக்கவில்லை. அவர் அவர்களை இயற்கையிலான சுற்றுச்சூழலில் பயிற்றுவித்தார். அவர்கள் அவர்களுடைய சொந்த சமூகத்தில் மிகுதியாய் இருந்து, அவர்களுடைய சொந்த பாஷையில் கற்றார்கள்.

பவுல் ஏற்படுத்திய மையமானது சீஷர்களுக்கு இரு-வருட பயிற்சியின் பாடத்தை கொடுத்தது. இந்த பள்ளியின் குறிக்கோளானது சுவிசேஷத்தின் செய்தியை பரப்பக்கூடியவர்களான சீஷர்களை பெருக்குதல் ஆகும்:

> **இரண்டு வருஷகாலம் இப்படி நடந்ததினாலே ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள். (அப்போஸ்தலர் 19:10)**

இந்த பயிற்சி மையங்கள் ஒரு கலாச்சார நிலைகளையும் அறியவில்லை. மாணவர்கள் யூதர்கள் மற்றும் புறஜாதிகள் ஆகிய இருவருக்கும் ஊழியம் செய்தார்கள் (மற்றவர்கள் உலகத்திலுள்ள யூதர் அல்லாத ஜாதிகள்). பாடசாலையிற்கு பூகோள எல்லைகள் இருக்கவில்லை. மாணவர்கள் அவர்களுடைய சொந்த நகரமான எபேசுவில் மாத்திரம் ஊழியம் செய்யவில்லை, அவர்கள் முழுவதுமான ஆசியா கண்டத்தை அடைந்தார்கள்.

எபேசுவின் உதாரணம் பயிற்சியிற்கான நல்ல மாதிரியாகும் ஏனென்றால் பயிற்றப்பட்டோர் மற்றவர்களுக்கு போதித்தார்கள்...

> **இரண்டு வருஷகாலம் இப்படி நடந்ததினாலே ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள். (அப்போஸ்தலர் 19:10)**
>
> **இவ்வளவு பலமாய்க் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது. (அப்போஸ்தலர் 19:20)**

எபேசுவின் பள்ளியானது சீஷர்களை பயிற்றுவித்து ஊழியத்தின் வேலையிற்காக மற்றவர்களை பக்திவிருத்தி அடைய செய்தது. சுவிசேஷத்தின் பரவுதலின் நோக்கமானது பூகோளத்திற்குமாக (அனைத்து ஆசியா முழுவதும்) கலாச்சாரத்திற்குமாக (யூதர் மற்றும் யூதர் அல்லாதவர்) இருந்தது. பெருகுதலின் தொடர்ச்சியான செயற்பாட்டில் சீஷர்களாக புதிய மனமாற்றபட்டோர் பயிற்சியளிக்கப்பட்டனர்.

## பயிற்சி நிலையத்தை தொடங்குதல்

எபேசு மாதிரியை ஒத்த பயிற்சி மையங்களின் தேவையானது இன்று காணப்படுகின்றது. மாற்றப்பட்டோர் பெருகும் வேளையில், உலகத்தை சுவிசேஷத்தினால் அடையும் அவர்களுடைய பொறுப்போடான சவால்களில் இருக்கும் பின்பற்றுவோர் மற்றும் தலைவர்களாக அவர்கள் பயிற்றப்படுதல் முக்கியமானதாகும்.

எபேசுவில் இருக்கும் பயிற்சி மையமானது சபையை பிரதியீடு செய்யவில்லை. விசுவாசிகள் தொடர்ச்சியாக ஜெபாலயங்களில் சந்தித்தனர், இது பூலோக சபையில் ஒன்றுகூடும் ஓர் இடமாக இருந்தது. விசுவாசிகள் கூட அவர்களுடைய வீடுகளில் அவர்களுடைய சபைகளில் தொடர்ச்சியாக சந்தித்தனர். எபேசுவிலிருந்த பள்ளியானது சபைக்குரிய விரிவாக தான் இருந்ததேயொழிய அதற்கு பிரதியீடு அல்ல. இவ்வகையான பயிற்சி திட்டங்களின் குறிகோளானது சுவிசேஷத்தின் செய்தியை செய்கின்ற எந்தவொரு முன்னுள்ள நிறுவனத்தையும் பிரதியீடு செய்வது அல்ல.

எபேசுவிற்கு மாதிரியான இதையொத்த பயிற்சி மையங்களை தொடங்க நீங்கள் விருப்பம் உள்ளவர்களாக இருந்தால், இதை செய்வதற்கான அறிவுறுத்தல்களானது சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் பாட தலையங்கமான “பெருகுதலின் முறைகள்” ஆகிய பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறு இடத்தை தெரிவு செய்தல், நிதியை திட்டமிடல், மாணவர்களை ஏற்படுத்தல், ஆசிரியர்களை ஏற்படுத்தல், பாட திட்டம், வெளியீடுகள், நடத்தை பகுதிகள் போன்றவற்றை அது விபரிக்கின்றது.

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

2. மற்றவர்களை பயிற்றுவித்தல் ஏன் முக்கியமான பொறுப்பாகும்?

..........................................................................................................................................................

3. தலைவர்களையும் பின்பற்றுவோரையும் பயிற்சியிற்குட்படுத்தும் நோக்கம் என்ன?

..........................................................................................................................................................

4. இயேசு மற்றும் அவருடைய சீஷர்களுடைய கற்றலில் கலந்துரையாடப்பட்ட தெரிவுகளின் ஆறு கொள்கைகளை பட்டியல்படுத்துக.

........................................................................ ........................................................................

........................................................................ ........................................................................

........................................................................ ........................................................................

5. இயேசு மற்றும் அவருடைய சீஷர்களுடைய கற்றலில் கலந்துரையாடப்பட்ட பயிற்சிகளின் எட்டு கொள்கைகளை பட்டியல்படுத்துக.

........................................................................ ........................................................................

........................................................................ ........................................................................

........................................................................ ........................................................................

........................................................................ ........................................................................

........................................................................ ........................................................................

6. தலைமைத்துவ பயிற்சியின் மாதிரியாக கொடுக்கப்பட்ட புதிய ஏற்பாட்டின் உதாரணம் என்ன?

..........................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. பின்பற்றுவோர் தலைவர்களாக மாறுதல்:

-யோசுவா, மோசேயினுடைய பின்பற்றுனர், தலைவராக மாறுதல்: எண்ணாகம் 27:18; உபாகமம் 3:28

-எலிசா, எலியாவினுடைய பின்பற்றுனர், தலைவராக மாறுதல்: 2 இராஜாக்கள் 2

2. இயேசு பயிற்றுவித்த பின்பற்றுவோர் தலைவர்களாக மாறினர். இயேசு கிறிஸ்துவினுடைய மறுபடியுமான அழைப்பானது பின்பற்றும்படியான அழைப்பாகும். “பின்பற்று,” “என்னை பின்பற்று,” மற்றும் “என் பின்னால் வா” என்னும் வார்த்தைகளானது 20 தடவைகளுக்கும் மேலாக இயேசுவினால் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவைகள் கூறப்பட்டது:

| | |
|---|---|
| -சீமோன் மற்றும் அந்திரேயா: | மத்தேயு 4:19; மாற்கு 1:17 |
| -யாக்கோபு மற்றும் யோவான்: | மத்தேயு 4:21; மாற்கு 1:20 |
| -மத்தேயு: | மத்தேயு 9:9; மாற்கு 2:14; லூக்கா 5:27 |
| -பிலிப்பு: | யோவான் 1:43 |
| -பேதுரு: | யோவான் 21:19,22 |
| -இள பணக்கார ஆளுநர்: | மத்தேயு 19:21; மாற்கு 10:21; லூக்கா 18:22 |
| -அவருடைய வேறொரு சீஷர்கள்: | மத்தேயு 8:22 |
| -எந்தவொரு மனிதன்: | மத்தேயு 16:24; மாற்கு 8:34; லூக்கா 9:23; யோவான் 12:26 |

3. 1 சாமுவேல் 19:18-20 மற்றும் 2 ராஜாக்கள் 2:1; 4:38; 6:1ல் பழைய ஏற்பாட்டு காலங்களில் தலைவர்க-ளுடைய பயிற்சியை குறித்து வாசியுங்கள்.

4. பின்பற்றுவோர் மற்றும் தலைவர்களுடைய பயிற்சியில் நீங்கள் முகங்கொடுக்க வேண்டிய ஐந்து முக்கிய தடைகள் இங்கு காணப்படுகின்றன:

1. மனிதர்களுடைய பயம்
2. சோம்பல்
3. மாற்றப்படவேண்டிய இடங்கள்
4. முரண்பாடுகளின் முன்னுரிமை
5. புறக்கணிப்பு (சுவிசேஷத்தை எவ்வாறு பரப்புதல் வேண்டும் மற்றும் ஊழியத்தின் விசேட குறிக்கோளை நிறைவேற்றுதல் போன்றவற்றில் மக்கள் பயிற்சியளிக்கப்படுதல் வேண்டும்).

5. சர்வதேச அறுவடைநேர நிறுவன பாடங்கள் பின்பற்றுவோர் மற்றும் தலைவர்கள் ஆகிய இரு பயிற்சியில் உங்களை ஈடுபடச்செய்கின்றது. பாடம் கொடுக்கும் முழுமையான பட்டியல்களை இன்று எழுதுங்கள்.

6. பயிற்சி பகுதிகளை நடத்துவதற்கான வழிகாட்டல்கள் இங்கு தரப்பட்டுள்ளன:

**ஆயத்தமாக்கப்பட்டிருத்தல்:**

ஒவ்வொரு ஆசிரியரும் அவர் போதிக்கப்பட காரியமான பொருளோடு பழக்கத்திற்குள்ளாகி இருத்தல் வேண்டும். அவர் ஜெபத்திற்கூடாக ஆயத்தமாக வேண்டும். அவர் ஒவ்வொரு வகுப்பு நேரத்திலும் சரியான பகிர்ந்தளிப்புகளும் பொருட்களும் வைத்திருக்க வேண்டும்.

ஒவ்வொரு ஆசிரியரும் ஒவ்வொரு பாடத்திற்குமான குறிப்பிட்ட குறிக்கோள்களை கொண்டிருத்தல்

வேண்டும். நீங்கள் சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் பொருட்களை உபயோகப்படுத்தினால், குறிக்கோள்களானது ஒவ்வொரு அதிகாரத்தின் முன்னதாக பட்டியல்படுத்தப்படல் வேண்டும்.

வகுப்பானது மாணவர்களுக்காக ஆயத்தமாக்கப்பட்டிருக்கின்றது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

**குறிப்பிட்டதாய் இருங்கள்:**

தொடக்கத்தையும் வகுப்பின் உள்ளடக்க பகுதிகளிலும் நேரத்திற்கு இருங்கள் (பரிசுத்த ஆவியானவர் வழிநடத்தினால் மாத்திரம், இல்லாவிட்டால்.)

**ஜெபம் பண்ணுங்கள்:**

வகுப்பு பகுதிகளை ஜெபத்தால் ஆரம்பித்தல் மற்றும் முடிவோடு இருங்கள்.

**மீளாய்வு செய்து சுருக்குக:**

கடைசி வகுப்பு பகுதியில் எது போதிக்கப்பட்டது என்பதின் விரிவான மீளாய்வோடு புதிய பாடத்தின் பகுதிகளை தொடங்குங்கள்.

**பல போதிக்கும் முறைமைகளை பயன்படுத்துங்கள்:**

சர்வதேச அறுவடைநேர நிறுவன பாட தலையங்கமான “போதிக்கும் உபாயங்கள்” இயேசுவினுடைய முறையை பயன்படுத்தி போதிக்க உங்களை பயிற்றுவிக்கும்.

**பரிசுத்த ஆவியானவருக்கு திறந்தவர்களாக இருங்கள்:**

பாடத்தை பூர்த்தி செய்தலை அல்லது திட்டமிட்ட மாதிரியை பின்பற்றுதலை விட மிகவும் முக்கியமானது பரிசுத்த ஆவியானவரின் அசைவாடுதலுக்காக திறந்தவர்களாக இருத்தலாகும்.

**செய்து காட்டுங்கள்:**

போதிக்கப்பட்டவற்றை செய்து காட்டுங்கள். உதாரணத்திற்கு, நீங்கள் குணப்படுத்தல் தொடர்பாக போதித்தால், தற்பொழுது நோயாளிகளாக உள்ளவர்களுக்காக ஜெபியுங்கள். பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானம் குறித்து போதிக்கும்போது, அதை அனுபவிக்கும்படி மக்களை நடத்துங்கள்.

**கற்றும் அனுபவங்களை திட்டமிடுங்கள்:**

வகுப்பு பகுதியின் இடைவெளியில் பூர்த்தி செய்வதற்காக மாணவர்களுக்கு ஒப்படை கற்றல்களை கொடுங்கள். அவர்களுடைய சபையிலும் சமூகத்திலும் நடைமுறை ஊழியத்திற்காக அவர்கள் என்ன கற்கின்றார்களோ அதை அவர்கள் கிரியையில் போடும்படியான சந்தர்ப்பத்தை கொடுங்கள்.

7. இங்கு நீங்கள் கவனத்திற்கொள்ளவேண்டிய சில கேள்விகள்:
-மற்றவர்களுக்கு முன்னதாக உள்ள உங்களுடைய உதாரணம் அவர்களை தேவனுடைய வாழ்க்கையிற்காக வழிநடத்துகின்றதா? நீங்கள் சொல்லும் மூன்று முறைகளை பட்டியல் படுத்துங்கள்.

-உங்களுடைய உதாரணத்தை எடுத்துக்கொள்ள உங்களோடிருக்கும்படிக்கு மற்றவர்களுக்கு சந்தர்ப்பம் காணப்படுகின்றதா? அல்லது மக்களிடமிருந்து நீங்கள் தனிமையில் விலகி இருக்கின்றீர்களா? நீங்கள் மற்றவர்களுக்கு காண்பிக்கும்பொருட்டு உங்களுடைய நடைமுறையான மூன்று வழிகளை பட்டியல்படுத்துங்கள்.

-உங்களுடைய வாழ்க்கை உதாரணமானது மற்றவர்களினால் பின்தொடரப்பட வேண்டுமென நீங்கள் உண்மையிலேயே விசுவாசிக்கின்றீர்களா? ஏன் மற்றும் ஏன் இல்லை? உங்களுடைய உதாரணத்தை நீங்கள் எவ்வாறு முன்னேற்றலாம்?

-உங்களுடைய தலைமைத்துவ பயிற்சியில் தேவனுடைய வார்த்தையில் அறிந்திருந்த கொள்கைகளை நீங்கள் துஷ்பிரயோகப்படுத்துகின்றீர்களா? எந்த வழிகளில்? இதை நீங்கள் எவ்வாறு திருத்த முடியும்?

-உங்களுக்கு உதவும்பொருட்டு நீங்கள் பயிற்றுவித்த யாதொருவரின் பெயரை உங்களால் கூற முடியுமா?

# அதிகாரம் பதினொன்று

## தோல்வியை எதிர்கொள்ளல்

**குறிக்கோள்கள்:**

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ தோல்வியிற்கான மூன்று அடிப்படை காரணிகளை இனங்காணவும்,
- ☐ தோல்வியிற்கு மேலாக வென்ற வேதாகம தலைவர்களை இனங்காணவும்,
- ☐ தோல்வியில் வாழ்க்கை முடிவுபெற்ற வேதாகம தலைவர்களை இனங்காணவும்,
- ☐ தோல்வியிலிருந்து வெற்றிக்கு மாற்றுவதற்கான வேதாகம வழிகாட்டல்களை பட்டியலிடவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

**நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான். (நீதிமொழிகள் 24:16)**

### அறிமுகம்

“வேதாகம முகாமைத்துவ கொள்கைகள்” என்னும் இந்த பாடத்திலுள்ள இந்த அதிகாரம் மிகவும் முக்கியமானதொன்றாகும். இது தோல்வியோடு சம்பந்தப்படுகிறது. தேவனிடம் சிறப்பான திட்டங்கள் காணப்படுகின்றன, ஆனால் அவருடைய திட்டங்களை அடைய சிறப்பில்லாத தலைவர்களுக்கூடாக கிரியை செய்வார். நீங்கள் சிறப்பல்லாதவர்களானபடியால், தோல்வியிற்கான காரணங்களை நீங்கள் அறிந்திருப்பதோடு நீங்கள் தோல்வியுறும்போது என்ன செய்ய வேண்டும் எனவும் அறிந்திருத்தல் வேண்டும்.

இந்த பாடத்தில் தோல்வியிற்கான அடிப்படை காரணங்களை நீங்கள் கற்பீர்கள். தோல்வியோடு முடிவுற்ற மற்றும் தோல்வியிலிருந்து வெற்றிக்கு திரும்பிய தலைவர்களுடைய வாழ்க்கை உதாரணங்களை நீங்கள் கற்பீர்கள். தோல்வியிற்கு முகங்கொடுத்தல் மற்றும் அதை வெற்றிக்காக மாற்றுதல் ஆகிய வேதாகம வழிகாட்டல்களும் கூட உங்களுக்கு கொடுக்கப்படும்.

### தோல்வியை ஏற்படுத்துவது என்ன?

தோல்வியிற்கான மூன்று அடிப்படை காரணங்கள் காணப்படுகின்றன:

### 1. உறவில் உள்ள தோல்வி:

அநேக தலைவர்கள் தேவனிடமிருந்தான சரியான உறவின்மையால் தோல்வியடைகின்றனர். அவர்கள் எபிரெயர் 6:1-3ல் பட்டியல்படுத்தப்பட்ட சரியான ஆவிக்குரிய அடிப்படைகளை விருத்தி செய்யாதவர்களாக இருக்கிறார்கள். பலவீனமான ஆவிக்குரிய அஸ்திபாரத்தில் தேவனுக்கான வேலையை கட்ட அவர்கள் முயற்சிக்கும்போது, அது உடைகின்றது.

அநேக தலைவர்கள் “தேவனுடைய வேலையை” செய்வதில் சுறுசுறுப்பாய் இருப்பார்கள் ஆனால் அவர்கள் ஜெபம், வேதாகம படிப்பு, உபவாசம், தேவனையும் அவருடைய சித்தத்தையும் தேடுதல் ஆகியவற்றை புறக்கணித்திருக்கிறார்கள். மற்றவர்கள் தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் முதலாவதான ஆழ்ந்த அன்பை இழந்திருக்கிறார்கள். தேவனுக்கும் அவருடைய இராஜ்ஜியத்திற்கும் முன்னுரிமை அளிப்பதற்கு பதிலாக, உலகத்தின் கவனம், ஐசுவரியம், பணத்தை உருவாக்குதல் அல்லது மக்களை பிரியப்படுத்தல் போன்றவை அவர்களுடைய ஜீவியத்தில் முதலாவது இடத்தில் எடுத்துக்கொள்ள தொடங்குகின்றது.

உசியா இராஜா தேவனுடனான தன்னுடைய சொந்த உறவின் காரணமாக தோல்வியடைந்த தலைவர்களுக்கு ஓர் உதாரணம் ஆவார். உசியா இராஜாவின் தொடக்கம் நன்றாக இருந்தது. அவர் தேவனை தேடினார் (2 நாளாகமம் 26:6-8). இஸ்ரவேலருடைய எதிரிகளுக்கு எதிராக யுத்தங்களை அவர் நன்றாக செய்தார் (2 நாளாகமம் 26:6-8). ஆனால் உசியா இராஜா நன்றாக அறிந்து பெருமையடைந்த பிற்பாடு, அவர் “களங்கப்படும் விதத்தில் கிரியை” செய்ய தொடங்கினார், அவர் தேவனுக்கு அவிசுவாசமாகி, தொடர்ச்சியாக தேவனை தேடவில்லை (2 நாளாகமம் 26:16)

தலைவராக இருப்பதற்கு, நீங்கள் தேவனுடன் நெருங்கிய ஐக்கியத்தில் இருக்க வேண்டும். தோல்வியடைந்த அநேக தலைவர்கள் தேவனுடனான அவர்களின் சொந்த தனிப்பட்ட உறவின் தோல்வியால் அவர்களுடைய பிரச்சினை ஆரம்பித்தாக கண்டனர்.

## 2. அர்ப்பணிப்பில் உள்ள தோல்வி:

“அர்ப்பணிப்பில் உள்ள தோல்வி” என்பது உங்களுடைய சொந்த பாவ கிரியையினால் ஏற்படும் தோல்வியாக அர்த்தப்படுகிறது. “அர்ப்பணிப்பின்” பாவங்கள் ஒவ்வொரு தவறான நடத்தைகள், வார்த்தைகள், குறிக்கோள் அல்லது ஊக்கத்தை உள்ளடக்குகின்றது. குறிப்பிடத்தக்க நடத்தைகள் அல்லது “அர்ப்பணிப்பின்” பாவத்தின் விளைவாக தோல்விகள் ஏற்படுகின்றது.

## 3. அசட்டையினால் உள்ள தோல்வி:

“அசட்டையினால் உள்ள தோல்வியானது” நீங்கள் என்ன செய்யாது இருக்கின்றீர்கள் என்பற்றினாலான தோல்வியாக அர்த்தப்படுகிறது. “அசட்டையினால்” நீங்கள் பாவம் செய்யும்போது, நீங்கள் என்ன செய்ய வேண்டுமோ அதை செய்யாமலிருப்பதான உங்களுடைய தோல்வி ஆகும். வேதாகமம் கூறுகின்றது:

> **ஆதலால், ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும். (யாக்கோபு 4:17)**

“அசட்டையான” பாவமானது நீங்கள் செய்ய வேண்டியது என தேவனுடைய வசனம் கூறும் காரியமாகும் ஆனால் நீங்கள் அதை செய்ய தோல்வியுறுவதாகும். இவ்வாறான “அசட்டை” காரணமாக இயேசு அவருடைய காலத்திலிருந்த சமய தலைவர்களை கடிந்து கொண்டார். அவர் கூறினார்...

> **மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தயத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள் இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டும். (மத்தேயு 23:23)**

## தோல்வியிற்கு மேலாக வென்ற வேதாகம தலைவர்கள்

வேதாகமானது தலைவர்களாக தமது வாழ்க்கையில் சில சந்தர்ப்பங்களில் தோல்வியுற்ற மாபெரும் மனிதர்களின் பல உதாரணங்களை கொண்டுள்ளது:

**ஆபிரகாம்:** அவர் தன்னிடமிருந்து மனைவி எடுத்துக்கொள்ளப்படுவாள் என்றும் அவர் கொல்லப்படலாம் என்றும் பயத்தினால் சாராள் தன்னுடைய மனைவி என்பதை குறித்து பொய் கூறினார். இருப்பினும் அவர் விசுவாசமுள்ள மனிதர் என்றும் “தேவனுடைய நண்பர்” எனவும் அழைக்கப்பட்டார்.

**மோசே:** தேவன் வழிகாட்டிய விதமான பாறையுடன் பேசுவதற்கு மாறாக கோபத்தினால் பாறையை அடித்து தண்ணீருக்காக அழைப்பித்தார். இன்னும் மோசேயை போலான மாபெரும் தீர்க்கதரிசி இன்னொருவர் இல்லை என வேதாகமம் கூறுகின்றது.

**தாவீது இராஜா:** அவர் மற்றொருவரின் மனைவியுடன் விபச்சாரத்தை செய்தார், பின் தன்னுடைய பாவத்தை மூடும்படியாக முயற்சித்து அந்த மனிதரை கொலை செய்தார். இன்னும் அவர் மாபெரும் இராஜாவாக இருந்து "தேவனுடைய சொந்த இருதயத்திற்கு அடுத்த மனிதர்" என அழைக்கப்பட்டார்.

**யோனா:** தேவன் யோனாவை நினிவேயிற்கு உபதேசிக்கும்படியாக அழைத்தபோது அவர் மறுதிசையில் சென்றார். பிற்பாடு அவர்கள் வரலாற்றில் மாபெரும் எழுப்புதலுக்காக உபதேசித்தார். முழு நகரமும் மனந்திரும்பியது.

**யோசுவா:** இந்த மனிதர் மாபெரும் இராணுவ தளபதியாக இருந்தார், இவர் மோசேயினுடைய மரணத்திற்கு பின்னர் இஸ்ரவேல் ஜாதியிற்கு தலைவராக ஏற்படுத்தப்பட்டார். தேவன் யோசுவாவிற்கு கொடுத்த மாபெரும் ஓர் சவாலானது இஸ்ரவேலை அதனுடைய வாக்குத்தத்த தேசத்திற்கு உரிமைகோர வழிநடத்துவதாகும். ஆனால் ஓர் சந்தர்ப்பத்தில் யோசுவா ஊக்கமிழந்தவராகி வனாந்திரத்தில் யோர்தானுக்கு அடுத்த பக்கத்தில் பின்வாங்கி அவர் தொடர்ச்சியாக இருந்தார். இன்னொரு தடவை அவர் கிபியோனியர்களால் ஏமாற்றப்பட்டார். இன்னும் இந்த மனிதர் தேவனுடைய வாக்குத்தத்த தேசத்தை சுதந்தரிக்க சென்றார்.

**தீர்க்கதரிசி எலியா:** யேசபேல் என்னும் பெயருடைய துன்மார்க்கமான இராணி எலியா தீர்க்கதரிசிகளிடம் தூதுவர்களை அனுப்பி அவரை அவள் கொல்ல திட்டமிட்டுள்ளதாக அவருக்கு தகவலை அனுப்பினாள். எலியா...

> **அவன் வனாந்தரத்தில் ஒருநாள் பிரயாணம் போய், ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து, தான் சாகவேண்டும் என்று கோரி: போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும் நான் என் பிதாக்களைப்பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொல்லி... (1 இராஜாக்கள் 19:4)**

இங்கு இவர் தேவனுடைய மாபெரும் மனிதனாக இருந்து, வியாதிபட்டோரை குணமாக்கி, மரித்தவர்களை எழுப்பி, தேவனுடைய நாமத்தினால் இயற்கையின் பொருள்களை கட்டுப்படுத்தியவராக இருந்தார். இப்பொழுது அவர் ஒளிந்து, பயந்து, மனச்சோர்வடைந்து சாவதற்கு விண்ணப்பித்தார். இன்னும் எலியா கார்மேல் மலையில் இஸ்ரவேலின் முழு தேசத்திற்கும் முன்பாக தேவனுடைய வல்லமையை காட்டும்படியாக திரும்பி சென்றார்.

**பேதுரு:** இந்த மனிதர் இயேசுவை மறுதலித்தார், ஆனால் பின்னர் ஆரம்ப சபையில் மாபெரும் தலைவராக மாறினார்.

**அப்போஸ்தலனாகிய பவுல்:** அப்போஸ்தலானாகிய பவுல் கூட தோல்வியிற்கு முகங்கொடுத்தார். அவர் ஆசியாவிலிருந்த அனுபவத்தின் காரணமாக அவர் "பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக.." "மிஞ்சின அதிக பாரமான வருத்தம்" (1 கொரிந்தியர் 1:8) என ஒருதடவை எழுதினார். அவர் வேதனைகளுக்கு, குழப்பத்திற்கு, உபத்திரவத்திற்கு, சிக்கல்களுக்கு போதான நேரங்களில் வெளிப்படுத்தினார் (2 கொரிந்தியர் 4:8-11). அவர் தான் பயத்தையும், வேதனையையும் கொண்டிருப்பதாக கூறினார் (2 கொரிந்தியர் 7:5-6). ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் புறஜாதிகளுக்கு வெற்றிகரமாக சுவிசேஷத்தை கொண்டு சேர்த்தார், அவர் உலகத்தின் ஜாதிகளுக்கூடாக தலைவர்களையும், மாபெரும் சபைகளையும் எழுப்பினார்.

## தோல்வியில் முடிவுற்ற தலைர்களுடைய தோல்விகள்

தோல்வியில் வாழ்க்கையை முடிவுற்ற தலைவர்களின் அநேக உதாரணங்களை கூட வேதாகமம் கொண்டுள்ளது.

**சிம்சோன்:** இஸ்ரவேலின் மாபெரும் நியாயாதிபதி மற்றும் தேவனிடமிருந்து மாபெரும் பௌதீக பலம் அவருக்கு கொடுக்கப்பட்டிருந்தது. அவர் பெலிஸ்திய எதிரியிடமிருந்து இஸ்ரவேலை விடுவிக்க தொடங்கினார். புறஜாதியாகிய பெண்ணின் உள்ளடக்கத்திற்கூடாக, சிம்சோன் சிறைபிடிக்கப்பட்டு, எதிரியின் சிறையிருப்பில் இறந்தார்.

**உசியா:** அவர் தமது 16ஆம் வயதில் இராஜாவாக மாறினார், தொடர்ச்சியாக தேவனுடைய பார்வையிற்கு நலமாயிருந்தது எதுவோ அதை செய்தார், அவர் செழித்தார். உசியா தேவாலயத்திற்குள் நுழைந்து ஆசாரியர்கள் மாத்திரமே செய்யும்படியாக அனுமதித்த காரியத்தை செய்வதினால் பாவம் செய்தார். தேவன் அவரை குஷ்டரோகத்தினால் அடித்தார், அவர் இறந்தார்.

**சவுல்:** சவுல் இஸ்ரவேலின் முதலாவது இராஜா ஆவார், மக்களால் ஏற்படுத்தப்பட்டார், தேவனுடைய ஆவி ஒருவருக்கு மேல் தங்கிய மனிதராவார். கீழ்ப்படிவு இன்மை காரணமாக, சவுல் தேவனால் புறக்கணிக்கப்பட்டு, அவருடைய இலக்கை பூர்த்தி செய்யும்பொருட்டு வேறொரு இராஜா தெரிவு செய்யப்பட்டார். சவுலுடைய வாழ்க்கையானது தோல்வி, அதிருப்தி மற்றும் தற்கொலையினால் முடிவுற்றது.

**ஏலி:** அவர் உண்மையிலேயே தேவனுடைய வீட்டிலிருந்த மாபெரும் ஆசாரியர் ஆவார். கீழ்ப்படிவின் காரணத்தினால், ஏலியும் அவருடைய குமாரர்களும் கிருபையற்று இறந்தார்கள்.

**யூதாஸ்:** யூதாஸ் இயேசுவினுடைய பூலோக ஊழியத்தின் போது அவருடைய சீஷர் ஆவார். அவர் இயேசுவுடைய போதனையை கேட்டு அவருடைய மாபெரும் அற்புதங்களை சாட்சியிட்டவராவர். இன்னும் அவர் இயேசுவை காட்டிக்கொடுத்து தன்னுடைய சொந்த வாழ்க்கையை தற்கொலையினால் முடிவுறுத்தினார்.

## வித்தியாசத்தை உருவாக்கியது என்ன?

இந்த சில தலைவர்கள் அவர்களுடைய தோல்வியிலிருந்து மீள் வந்து, தேவனுடைய மாபெரும் மனிதர்களாக சென்றனர். மற்றவர்கள் ஒருபோதும் மாற்றப்படவில்லை. அவர்களுடைய வாழ்க்கையானது தோல்வியில் முடிவுபெற்றது. வித்தியாசத்தை உருவாக்கியது என்ன?

இந்த கேள்வியிற்கு பதில் கூறுவதற்கு, இஸ்ரவேல் ஜாதியின் மாபெரும் இரண்டு தலைவர்களான தாவீது மற்றும் சவுலுடைய வாழ்க்கையை அதிகம் விரிவாக நாம் ஆராய்வோம். முதலாவது, 2 சாமுவேல் அதிகாரம் 11-12ல் தாவீதின் தோல்வியின் கதையை வாசியுங்கள். பிற்பாடு 1 சாமுவேல் அதிகாரம் 15ல் சவுலுடைய தோல்வியின் கதையை வாசியுங்கள்.

எமது மானிட காரணங்களுக்கமைய, தாவீதினுடைய தோல்வியானது சவுலுடையதை விட அதிகம் பெரிதாக காணப்படுகின்றது. சவுல் சாதாரணமாக தேவன் அவருக்கு செய்யவேண்டும் என வழிகாட்டிய யுத்தத்திலிருந்து கொள்ளைப்பொருளாக சில எருதுகளை திரும்ப கொண்டுவந்துவிட்டார். தாவீது வேறொரு மனிதருடைய மனைவியோடு விபச்சாரத்தில் ஈடுபட்டார். அவள் கர்ப்பவதி என கண்டுக்கொள்ளப்பட்டபோது, அவளுடைய புருஷன் சாகடிக்கப்பட்டு, பாவத்தை மூட முயற்சிக்கப்பட்டது. சவுல் தேவனால் ராஜாவாக புறக்கணிக்கப்பட்டார், இன்னும் தாவீது அரியணையில் அமர்ந்திருந்து, “தேவனுடைய சொந்த இருதயத்திற்கு அடுத்த மனிதன்” என அழைக்கப்பட்டார்.

ஏன் ஒரு மனிதருடைய வாழ்க்கை தோல்வியில் முடிவுறும்போது மற்றவருடைய எதிர்காலம் சித்தியுள்ளதாக சென்றது? பதிலானது ஒரே வார்த்தையாகும்: மனந்திரும்பல். தீர்க்கதரிசியாகிய சாமுவேல் சவுலை அவனுடைய பாவத்தோடு கண்டிக்கும்போது, சவுல் கூறினார்....

> **நான் கர்த்தருடைய கட்டளையையும் உம்முடைய வார்த்தைகளையும் மீறினதினாலே பாவஞ்செய்தேன் நான் ஜனங்களுக்குப் பயந்து, அவர்கள் சொல்லைக் கேட்டேன். அதற்கு அவன்: நான் பாவஞ்செய்தேன் இப்போது என் ஜனத்தின் மூப்பருக்கு முன்பாகவும், இஸ்ரவேலுக்கு முன்பாகவும் நீர் என்னைக் கனம்பண்ணி, நான் உம்முடைய தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொள்ளும்படிக்கு, என்னோடேகூடத் திரும்பிவாரும் என்றான். (1 சாமுவேல் 15:24,30)**

சவுல் தனது பாவத்தில் பிடிப்பட்டார், அத்தோடு அவர் அதை ஏற்றுக்கொண்டார். அவர் வருந்தினார், ஆனால் பிடிப்படவே மாத்திரம் செய்யப்பட்டார். பாவத்திற்கு வருந்துதல் மாத்திரம் போதாது. அந்த வருந்துதலானது மனந்திரும்புதலுக்கு நேராக வழிநடத்தப்படல் வேண்டும்:

**தேவனுக்கேற்றதுக்கம்பின்புமனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல்இரட்சிப்புக்கேதுவானமனந்திரும்புதலை உண்டாக்குகிறது, லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது. (2 கொரிந்தியர் 7:10)**

சவுல் தனது தோல்வியை ஏற்றுக்கொண்டார், ஆனால் அவர் தமது தோல்வியை வேறு மக்கள் மீது சுமத்தினார். மக்களுடைய தலைவருக்கு முன்பாக சாமுவேல் தன்னை கனம்பண்ண வேண்டும் என வேண்டினார், ஆகவே அவர் கிருபையற்றவராக இல்லாமல் இருக்க முடியும். அவர் சாமுவேலோடு சேர்ந்து தேவனை துதிக்க வேண்டினார், இது அவர் இன்னும் ஆவிக்குரிய மனிதனாக இருப்பதாக மக்களுக்கு தன்னை காட்டுதவற்கு ஆகும்.

சவுல் ஒருபோதும் தனது தவறை தேவனுக்கு அறிக்கையிடவோ, மனந்திரும்பவோ அல்லது மன்னிப்பை கேட்கவோ இல்லை. அவர் தனது கிரியைகளுக்கான தனிப்பட்ட பொறுப்பை ஏற்றுக்கொள்ள மறுத்தார். தேவன் மனந்திரும்புதலை வேண்டும்போது அவர் தேவனுடைய ஆராதனையை செலுத்தினார். சவுல் தேவனுடனான உறவை விட மக்கள் மத்தியில் அவருடைய புகழை குறித்து அதிகம் கவனம் செலுத்தினார். அவர் இராஜ்ஜியத்தை தேவனுடைய இராஜ்ஜியமாக பார்க்கவில்லை, ஆனால் தன்னுடைய சொந்த இராஜ்ஜியத்தை கட்டும் வழியிலேயே இருந்தது.

இதன் காரணமாக, சாமுவேல் சவுலிடம் கூறினார்:

> **அப்பொழுது சாமுவேல் அவனை நோக்கி: கர்த்தர் இன்று உம்மிடத்திலிருந்த இஸ்ரவேலின் ராஜ்யத்தைக் கிழித்துப்போட்டு உம்மைப்பார்க்கிலும் உத்தமனாயிருக்கிற உம்முடைய தோழனுக்கு அதைக் கொடுத்தார். (1 சாமுவேல் 15:28)**

சவுலிடமிருந்து இராஜ்ஜியம் எடுக்கப்பட்டு அது தாவீதிற்கு கொடுக்கப்பட்டது.

தீர்க்கதரிசியாகிய நாத்தான் தாவீதிற்கு அவனுடைய பாவத்தை குறித்து அறிக்கையிட்டபோது, தாவீது உடனடியாக அதை ஏற்றுக்கொண்டார்:

> **நான் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தேன் என்றான். (2 சாமுவேல் 12:13)**

அவர் மற்றவர்கள் மேல் சுமத்த முயற்சிக்கவில்லை. அவர் பத்சேபாளை குற்றம் சுமத்தவில்லை. அவர் தன்னுடைய தோல்வியை ஏற்றுக்கொண்டு, தாழ்மையாக தேவனுக்கு முன்பாக மனந்திருப்பினார். தாவீதினுடைய மனந்திரும்புதலின் மாபெரும் ஜெபம் சங்கீதம் 51 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. உங்களுடைய வேதாகமத்தில் இந்த சங்கீதம் முழுவதையும் வாசியுங்கள். தாவீது தன்னுடைய பாவத்தை ஏற்றுக்கொண்டு மன்னிப்பை கேட்டார்:

> **என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன் என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது.**
>
> **தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன். தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும். (சங்கீதம் 51:3,4,10)**

தோல்வியை எதிர்கொள்ளும்போது, தாவீது மனந்திரும்பி திசையை மாற்றினார். சவுல் அவ்வாறு அல்ல. அவர் தேவனுடைய சித்தத்திலிருந்து தூரமாக தவறி, அவருடைய வாழ்க்கையை தோல்வி, தற்கொலையினால் முடித்துக்கொண்டார்.

## நீங்கள் தோல்வியுறும் போது

நீங்கள் தோல்வியுறும் போது அதற்கான வேதாகம வழிகாட்டல்கள் காணப்படுகின்றது, இதை நீங்கள் பின்தொடர்ந்தால், தோல்வியிலிருந்து வெற்றியாக மாற்றிக்கொள்ள முடியும். இந்த வழிகாட்டல்களை படிப்பதற்கு நாம் யோனாவினுடைய உதாரணத்தை உபயோகிக்கின்றோம். இந்த பாடத்தை செயற்படுத்துவதற்கு முன்னர் உங்களுடைய வேதாகமத்தில் யோனாவினுடைய புத்தகத்தை (நான்கு அதிகாரங்கள்) வாசியுங்கள்.

யோனா பாவமுள்ள ஜாதியாகிய நினிவேயிடம் மனந்திரும்புதலை பிரசங்கிக்க செல்லும்படி தேவனால் கட்டளையிடப்பட்டார். தேவனுடைய சத்தத்திற்கு கீழ்ப்படிவதற்கு பதிலாக, அவர் மறுப்பக்க திசையிற்கு தலைப்பட்டார். யோனா அவருடைய தவறுதலை திருத்துவதற்கு கீழ்வரும் படிமுறைகளை எடுத்தார். நீங்கள் தோல்வியை அனுபவிக்கும்போது எடுக்கவேண்டிய படிமுறைகள் இதுவாகும்:

## வெளிப்படுத்தல்:

நீங்கள் தோல்வியுறும்போது, தேவனிடம் அந்த தோல்வியிற்கான காரணத்தை வெளிப்படுத்தும்படி கேளுங்கள். உறுதியாக இருங்கள்: நீங்கள் தோல்வியுறும்போது அதை அறிவதற்கான வழிகளை தேவன் அனுமதிக்கின்றார். கடலில் ஏற்பட்ட மாபெரும் புயல் யோனா தேவனுக்கு வெளியேயான சித்தத்தில் இருப்பதை வெளிப்படுத்தியது. யோனா இந்த வெளிப்படுத்தலுக்கு பின் தன்னுடைய குற்றவுணர்ச்சியை ஏற்றுக்கொண்டார் (யோனா 1:12). எவ்வளவுக்கு எவ்வளவு நீங்கள் உங்களுடைய தோல்வியை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பீர்களோ நீங்கள் தொடர்ந்தும் தோல்வியிலேயே இருப்பீர்கள்:

> **தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான் அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான். (நீதிமொழிகள் 28:13)**

> **நமக்குப் பாவமில்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. (1 யோவான் 1:8)**

தோல்வியை ஒப்புக்கொள்ளுவதிலிருந்து உங்களை தவிர்க்கும் எந்தவொரு காரணங்களை அனுமதிக்க வேண்டாம். இங்கு சில பொதுவான ஒன்று காணப்படுகின்றன:

-"மக்கள் என்னிலுள்ள நம்பிக்கையை இழந்து விடுவர்."
-"நான் தோல்வியை ஒப்புக்கொண்டால் அது நான் தவறானவன் என ஒப்புக்கொள்ளுகின்றது."
-"நான் ஏற்கனவே தோல்வியடைந்துள்ளேன். நான் ஏறத்தாள விட்டுக்கொடுக்க வேண்டும்."
-"இது ரொம்பவும் பிந்திவிட்டது."
-"நான் ஓர் தீய உதாரணம் ஆகும், ஆகவே நான் அமைதியாக இருத்தல் வேண்டும்."
-நான் சரியான காரியத்தை பெறுவதற்கு தேவனுடைய சித்தத்திலிருந்து தூர இருக்கின்றேன்."

மற்றவர்களுடைய வாழ்க்கையை தாக்கமுறச்செய்து, அவர்களுடைய மன்னிப்பை நீங்கள் தேட வேண்டியவர்களாக இருக்கும்வரையும் உங்களுடைய தோல்வியை வெளியரங்கமாக வெளிப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் உங்களுடைய தோல்வியை உங்களுக்கும் தேவனுக்கும் நீங்கள் எப்பொழுதும் ஒப்புக்கொள்ள வேண்டும். தோல்வியிலிருந்து வெற்றியிற்கு மாற்றுவதற்கான முதலாவது படிமுறை இதுவே ஆகும். பாவமானது வெளிப்பட வேண்டும். நீங்கள் அதை எதிர்கொள்ள வேண்டும்.

## மனந்திரும்புதல்:

உங்களுடைய தோல்வி வெளிப்படுத்தப்பட்ட பின்னர், நீங்கள் மனந்திரும்ப வேண்டும்:

> **நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். (1 யோவான் 1:9)**

யோனாவின் மாபெரும் மனந்திரும்புதலின் ஜெபம் யோனா 2ம் அதிகாரத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. யோனா தனது பாவத்தை தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொண்டு, மனந்திரும்பி, மன்னிப்பை கேட்டார். நீங்கள் தோல்வியுறும்போது, மனந்திரும்புதலுக்காக தேவனுக்கு முன்பாக வாருங்கள். உங்களுடைய தோல்வியிற்காக உங்களை மன்னிக்கும்படி தேவனிடம் கேளுங்கள். உங்களை மன்னிப்பதற்கும் கூட உறுதியாய் இருங்கள்!

**மீள் திரும்புதல்:**

ஜெபம், தேவனுடைய வார்த்தை, பரிசுத்த ஆவியானவருடைய வழிநடத்துதலிற்கூடாக உங்களுடைய தோல்வி தொடங்கிய சந்தர்ப்பத்தை தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார். பின் நீங்கள் அந்த சந்தர்ப்பத்திற்கு சென்று உங்களுடைய திசையை மாற்ற வேண்டும்.

யோனாவுடைய சந்தர்ப்பத்தில், நினிவேயின் எதிர்திசையிற்கு அவர் செல்ல தொடங்கியதிலிருந்து அவருடைய தோல்வி ஆரம்பமானதை அவர் உணர்ந்தார். அவருக்கு இந்த தோல்வியின் சந்தர்ப்பத்திற்கு திரும்பி அவரு-டைய திசையை மாற்ற வேண்டி இருந்தது. உண்மையான மனந்திரும்புதலானது திசையை மாற்றுவதை உள்ளடக்குகின்றது. நீங்கள் தோல்வியினுடைய சந்தர்ப்பத்திற்கு திரும்பும்போது நீங்கள் முதலாவது பாவம் செய்த இடத்திற்கு திரும்பி, உங்களுடைய தவறை திருத்துவீர்கள். இது செய்யப்படுவதாவது....

**மீள் கட்டுதல்:**

யோனாவுடைய சந்தர்ப்பத்தில், அவர் தனது தோல்வியானது நினிவேயின் மறு திசையிற்கு தலைபட்டதிலிருந்து தொடங்கியது என உணரும் போது, அவர் திசையை மாற்றினார். அவர் நினிவேயிற்கு நேராக சென்றார். அவர் தனது தோல்வியை திருத்தினார் (யோனா 3:3). அவர் சரியாக எதை செய்ய வேண்டுமோ அதை செய்தார். இது "மீள் கட்டுதல்" என அழைக்கப்படுகின்றது.

சிலசமயங்களில் மனந்திரும்புவதை தவிர உங்களுடைய தோல்வியை திருத்த உங்களால் ஒன்றும் செய்ய முடியாது. நாம் கலந்துரையாடிய தாவீதின் உதாரணத்தில், அவர் ஒப்புக்கொள்ளப்பட்ட பின் பச்சேபாளுடனான தனது பாவத்தை குறித்து அவரால் ஒன்றும் செய்ய முடியாது. தவறானது ஏற்கனவே செய்யப்பட்டு விட்டது. விபச்சாரமானது செய்யப்பட்டு அவளுடைய கணவரும் இறந்து விட்டார். மனந்திரும்புதலை தவிர அதை திருத்துவதற்கு அவரால் செய்வதற்கு ஒன்றும் இல்லை.

ஆனால் தோல்வியின் சந்தர்ப்பத்திலிருந்து நீங்கள் திரும்பக்கூடிய சூழ்நிலையில், மீள்கட்டுதலை உருவாக்குவதற்கு, நீங்கள் செய்ய வேண்டாம். நீங்கள் யாருக்காவது மன்னிப்பை கொடுக்க வேண்டும். நீங்கள் திருடிய ஒன்றை திருப்பி கொடுத்து அல்லது கூறிய பொய்யை ஏற்றுக்கொள்ள வேண்டும். இவைகள் அனைத்து மீள்கட்டுதலுக்கான உதாரணங்கள் ஆகும்.

தோல்வியிற்கு பின் உங்களுடைய ஆவிக்குரிய பலத்தை மீள்கட்டி, உங்களை நீங்களே மீள்கட்டுவதற்கு நேரம் அவசியம். நீங்கள் ஊழிய பொறுப்புக்களிலிருந்து தற்காலிகமாக நிறுத்திகொள்ள வேண்டிய அவசியம் காணப்படுகின்றது. உங்களுக்கு தேவனுடனான தனிப்பட்ட நேரம் கண்டிப்பாக அவசியமாகின்றது.

உங்களுடைய ஆவிக்குரிய பலத்தை மீள்கட்டுவதற்கு இங்கு சில வழிகள் காணப்படுகின்றன:

-தேவனுடைய வார்த்தையை படியுங்கள்.

-ஜெபத்திலும் உபவாசத்திலும் நேரத்தை செலவிடுங்கள்.

-தோல்வியிற்கான அடிப்படை காரணங்களை மீளாய்வு செய்க (இந்த பாடத்தில் கொடுக்கப்பட்டபடி) ஆகவே நீங்கள் எதிர்கால தோல்விகளை தவிர்க்க இயலுமை காணப்படும். உங்களுடைய வாழ்க்கையில் எந்தவொரு பிரச்சினைகளிலான பகுதிகளிலும் உங்களை திருத்தி உதவும்பொருட்டு தேவனிடம் வெளிப்படுத்தி கேளுங்கள்.

-அடுத்த சந்தர்ப்பத்தில் அதிக வல்லமையுள்ள போராட்டத்தில் போராட உங்களுக்கு உதவும் பொருட்டு ஆவிக்குரிய போராட்டத்தின் கையேட்டை மீளாய்வு செய்க. (சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் பாட தலையங்கமான "ஆவிக்குரிய போர்வியூகங்கள்: ஆவிக்குரிய போராட்டத்திற்கான கையேட்டை" பார்க்க.)

-பௌதீக ரீதியாக ஓய்வெடுங்கள். மனிதன் ஆவி, ஆத்துமா, சரீரத்திலானவன். உங்களுடைய பௌதீக சரீரமானது களைப்புள்ளதாக இருக்கும்போது, சாத்தான் அதில் நன்மையை எடுத்து, உங்களுடைய ஆத்துமாவையும் ஆவியையும் தாக்கத்திற்குள்ளாக்கி, உங்களை தோல்வியடைய மேற்கொள்ளுகின்றான்.

## வெற்றியிற்கு!

இந்த படிமுறைகளை நீங்கள் எடுத்தப்பின், தோல்வியை உங்களுக்கு பின்புறமாக போட்டு, வெற்றியிற்கு நேராக செல்லுங்கள். யோனா அவருடைய தோல்வியை அவருக்கு பின்னால் போட்டார். தேவன் இரண்டாம் தரம் அவனோடு பேசி, “நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய்...” (யோனா 3:1-2) என கூறினார். இந்த தடவை அவர் சீக்கிரமாக கீழ்ப்படிந்தார். நினிவேயில், யோனா வரலாற்றில் மாபெரும் ஓர் மறுமலர்ச்சி ஏற்பட்டது. முழு நகரமும் மனந்திரும்பியது. வெளிப்படுத்தலின் படிமுறைகளை சாதாரணமாக பின்தொடரும்போது, மனந்திரும்புதல், மீளதிரும்புதல், மீள்கட்டுதல் மற்றும் அவருடைய தோல்வி வெற்றியாக மாறியது.

யோனாவை போலான மனிதர்களின் மாபெரும் கதைகளை வேதாகமம் கொண்டிருக்கின்றது. இந்த மனிதர் தோல்வியடைந்தார், ஆனால் அவருடைய தோல்வியை ஏற்றுக்கொண்டு, தேவனிடமிருந்து மன்னிப்பை கேட்டார். அவர்கள் அவ்வாறு செய்யும்போது, தேவன் மன்னிக்காமல் ஒருபோதும் இருந்ததில்லை, அத்தோடு புதிய திசைகளையும் ஏற்படுத்தினார். தோல்விகளிலிருந்து வெற்றியிற்கு திரும்புவதற்கான வேதாகம மாதிரி இவையே ஆகும்.

தேவன் இதையே உங்களுக்கும் செய்ய முடியும்! அவர் உங்களுடைய கடந்தகால தோல்விகளை பார்ப்பதில்லை. அவர் நீங்கள் இன்று இருப்பதைப்போல் உங்களை பார்க்கவில்லை. அவர் மனிதர்களை பார்க்கின்றார்... நீங்கள் அவருக்கு கீழ்ப்படிவுள்ளவர்களாக நடக்கும்போது மாத்திரமே தலைவர்களாக இருக்க முடியும்.

## தோல்விகளிலிருந்து கற்றல்

பவுல் எழுதுகின்றார்:

> **ஆகையால் சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று.**
>
> **நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம்.**
>
> **அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம். (2 கொரிந்தியர் 1:8-10)**

பவுல் ஆசியாவில் அவருக்கு போதிக்கப்பட்ட முக்கியமான பாடமாக அங்கு காணப்பட்ட பிரச்சினைகளை விபரித்தார்.... “நாம் நம்மில்நாமே நம்பிக்கையுள்ளவர்களாக இருத்தல் கூடாது, ஆனால் தேவனில் இருக்க வேண்டும்.” இதுவே தோல்வியிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய மாபெரும் பாடமாகும். நீங்கள் உங்களிலேயே நம்பிக்கை கொள்ள கூடாது. தலைவர் என்ற வகையில் உங்களுடைய வல்லமை, உங்களுடைய அதிகாரம், உங்களுடைய சித்தி இயேசு கிறிஸ்துவினால் மாத்திரமே உறுதியாக்கப்படல் வேண்டும். பவுல் இயற்கையான உலகிற்கு அப்பாலுள்ளதாக ஆவிக்குரிய நன்மைகளான பிரச்சினைகள், சோதனைகள், பரீட்சைகள் மற்றும் தோல்விகளை பார்த்தார்:

> **ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்துபோகிறதில்லை, எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது.**
>
> **மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.**

**ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள். (2 கொரிந்தியர் 4:16-18)**

பவுலானவர் மனிதனுடைய வெளியக தோற்றம் அழிந்தாலும் கூட, உள்ளான மனிதன் புதிதாக்கப்படும் என கற்றிருந்தார். விட்டுக்கொடுப்பதற்கு பதிலாக, தோல்வியிலிருந்து பவுல் கற்றார் அத்தோடு வெற்றியிற்கு நேராக சென்றார். 2 கொரிந்தியர் 1:10ல் அவர் குறிப்பிடுகின்றார் அதாவது தேவன் எமது பிரச்சினைகள், பரீட்சைகள், சோதனைகள் மற்றும் தோல்விகள் போன்ற எம்முடைய அனைத்திலிருந்தும்....

| | |
|---|---|
| "விடுதலையளித்தார்" | (கடந்த காலத்தில்) |
| "விடுதலையளிக்கின்றார்" | (தற்காலத்தில்) |
| "விடுதலையளிப்பார்" | (எதிர்காலத்தில்) |

அவர் சொன்னார் நாம்....

| | |
|---|---|
| நெருக்கப்பட்டும்... | ஒடுங்கிப்போகிறதில்லை. |
| கலக்கமடைந்தும்... | மனமுறிவடைகிறதில்லை. |
| துன்பப்படுத்தப்பட்டும்... | கைவிடப்படுகிறதில்லை. |
| கீழே தள்ளப்பட்டும்... | மடிந்து போகிறதில்லை. |

(2 கொரிந்தியர் 4:8-9)

கலக்கம், துன்பம், நெருக்கம் மற்றும் விரக்தி ஆகிய அனைத்திலும் பவுல் தம்முடைய வாழ்க்கையின் இறுதியான காலங்களில் கூறக்கூடியதாக இருந்தது:

**நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். (2 தீமோத்தேயு 4:7)**

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

.................................................................................................................................................................

.................................................................................................................................................................

2. தோல்வியிற்கு மேலாக வென்ற மாபெரும் தலைவர்களின் மூன்று வேதாகம உதாரணங்களை பட்டியல்படுத்தவும்.

.................................................................................................................................................................

.................................................................................................................................................................

.................................................................................................................................................................

3. தோல்வியில் வாழ்க்கை முடிவுபெற்ற மனிதர்களின் மூன்று வேதாகம உதாரணங்களை பட்டியல்படுத்தவும்.

.................................................................................................................................................................

.................................................................................................................................................................

.................................................................................................................................................................

4. வெற்றியிலிருந்து தோல்வியிற்கு மாறுவதற்கான வேதாகம வழிகாட்டல்களை பட்டியல்படுத்தவும்:

...................................................................... ......................................................................

...................................................................... ......................................................................

5. தோல்விகளை ஏற்படுத்தும் மூன்று அடிப்படைகள் என்ன?

.................................................................................................................................................................

.................................................................................................................................................................

.................................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. லூக்கா 15:11-32ல் இயேசு, இளைய மகன் தனது தகப்பனை விட்டு கொடிய நாட்டிற்கு சென்று வாழ்ந்த கதையை கூறுகின்றார். இந்த கதையை முக்கியமாக மகன் தனது தகப்பன் வீட்டிற்கு மீள்வருதை கூறும் பகுதியை கவனமாக வாசியுங்கள். இந்த அதிகாரத்தில் கலந்துரையாடப்பட்ட தோல்வியிலிருந்து திருத்துவதற்கான அதே படிமுறைகளை அவர் பின்பற்றினார் என நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

2. தலைவர்கள் அவர்களுடைய வாழ்க்கையில் அதே சந்தர்ப்பத்தில் தோல்வியுற்ற கீழ்வரும் வேதாகம உதாரண பட்டியல்களை படியுங்கள். எந்த ஒன்று அவர்களுடைய தோல்விகளை திருத்தியது? அவர்கள் தங்களுடைய தோல்வியிலிருந்து வெற்றியிற்கு எவ்வாறு திரும்பினார்கள்? அவர்களுடைய தோல்வியை திருத்தாத ஒன்று எது? அதன் விளைவு என்ன? தேவனுடைய வார்த்தையான உங்களுடைய சொந்த படிப்பிலிருந்து இந்த பட்டியல்களின் வேறு உதாரணங்களை நீங்கள் சேர்த்துக்கொள்ள முடியும்.

| | |
|---|---|
| -ஆபிரகாம்: | ஆதியாகமம் 20-21 |
| -மோசே: | யாத்திராகமத்தின் புத்தகம்; அப்போஸ்தலர் 7:20-44 |
| -ஆரோன்: | யாத்திராகமம் 32 |
| -பிலேயாம்: | எண்ணாகமம் 22 |
| -உசியா: | 2 நாளாகமம் 26 |
| -சிம்சோன்: | நியாயாதிபகள் 13-16 |
| -தாவீது: | 2 சாமுவேல் 11-12; சங்கீதம் 51 |
| -சவுல்: | 1 சாமுவேல் 8-15 |
| -யோனா: | யோனாவின் புத்தகம் |
| -பேதுரு: | மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், அப்போஸ்தலர்கள் |
| -யோவான் மாற்கு: | அப்போஸ்தலர் 12:12,25; 15:39; 2 தீமோத்தேயு 4:11 |
| -தோமா: | 2 தீமோத்தேயு 4:9 |

3. இந்த அதிகாரத்தில் தோல்வியிற்கான மூன்று அடிப்படை காரணங்கள் காணப்படுகின்றன என நீங்கள் கற்றீர்கள் அவை உள்ளடங்குவன:

-தேவனுடனான தனிப்பட்ட உறவில் தோல்வி (பிழையான ஆவிக்குரிய அடித்தளம், ஜெபம் இன்மை, வேதாகம கற்றல்).
-அர்ப்பணிப்பின் பாவம் (தேவனுடைய வசனத்தை எதாவதொரு முறையில் துஷ்பிரயோகம் செய்தல்).
-அசட்டையின் பாவம் (செய்யவேண்டியதை செய்யாதிருத்தல்).

இந்த அடிப்படை தோல்விகளில் விளைவாக காணப்படும் சில பட்டியல்கள் இங்குள்ளன. இந்த பட்டியலில் சேர்க்க வேண்டிய வேறு விளைவுகளை உங்களால் எண்ண முடியுமா?

-ஊக்கமின்மை.
-போட்டி (மற்ற ஊழியத்தை போல் செய்தல்).
-தரிசனம் இன்மை.
-பயிற்சி இன்மை.
-கிரயத்தை செலுத்த விருப்பமின்மை.
-அர்ப்பணிப்பு இன்மை.
-தவறுதலான முன்னுரிமைகள்.
-ஒழுக்கமின்மை.
-பேராசை, ஐசுவரியம், நிதிகளை தவறாக பயன்படுத்தல், பணத்தை நேசித்தல்.
-பெருமை.
-அக்கறையின்மை.

-பின்பற்றுவோரை தவறாக நடத்துதல்.
-பின்பற்றுவோருடனான தொடர்பின்மை.
-மனிதர்களுடைய பயம் மற்றும மனிதர்களுடைய கனம்.
-பிரசித்தம்.
-முரண்பாடுகள்.
-சுய-மதிப்பீடு இல்லை.
-தம்மை மற்றவர்களுடன் ஒப்பிடுதல்.
-சந்தேகத்திற்கு இடம் கொடுத்தல்.
-குறிக்கோள்.
-மற்றவர்களுக்கு அளிக்க முடியாமை (அனைத்தையும் தாமே செய்ய முயற்சித்தல்).
-தேவனுக்கு பதிலாக மனிதர்களிடம் கேட்டு கீழ்ப்படிதல்; பிரசித்தமான கருத்தினால் வசீகரித்தல்.
-அவிசுவாசம்.
-ஊழியன் மற்றும் மேய்ப்பனைப்போல் வழிநடத்த இயலுமையின்மை.
-தலைமைத்துவ நிலைகளுக்கு வேதாகம தகுதிகளை பொருந்தாமை.
-தலைமைத்துவத்திற்கான தெளிவான அழைப்பு இன்மை.
-ஆவிக்குரிய போராட்டத்திற்கான கொள்கைகளின் அறிவும் பிரயோகமும் இன்மை.
-வெற்றியிற்கான வேதாகம கொள்கைகளின் அறிவும் பிரயோகமும் இன்மை.
-தேவனுடைய சத்தத்தை கேட்கும் இயலுமை இன்மை மற்றும் தவறான தீர்மானங்களுக்கு உட்படுத்தப்படும் அவருடைய சித்தத்திலிருந்து கண்டுகொள்ளாமல் இருத்தல்.
-ஆவிக்குரிய வல்லமை இன்மை.
-திட்டமிடுதல் இன்மை.
-ஆவிக்குரிய வளங்களின் சரியற்ற முகாமைத்துவம்.
-ஆவிக்குரிய கனியின்மை.
-கசப்பின் வேர்.
-சோம்பல் மற்றும் சுறுசுறுப்பின்மை.
-உலகத்திற்கான சிநேகம்.
-அபிஷேகம் இன்மை.

4. தோல்வியிற்கான மாபெரும் காரணங்களின் ஒன்று பெருமை ஆகும். இது மனிதகுலத்தின் முதல் பாவத்தை ஏற்படுத்தியது. சாத்தான் பெருமையை விடுக்கும்போது அவன் கூறினான், “நீங்கள் தேவர்-களை போல் இருப்பீர்கள்.” இங்கு பெருமையின் சில அறிகுறிகள் காணப்படுகின்றன:

-ஓர் முக்கியமானதொன்றிற்கான மேலதிகமான உணர்வு: சங்கீதம் 101:5
-“அனைத்து விடைகளையும்” கொண்டிருத்தல்: நீதிமொழிகள் 3:7
-பெருமையான பார்வை: நீதிமொழிகள் 6:17
-“நான்” அல்லது “எனது” அடிக்கடி அதிமாக உபயோகித்தல்: ஏசாயா 14:14-15
-ஒருவருடைய நல்ல பார்வையின் மேலான உணர்வு: ஏசாயா 28:1
-சுற்றியுள்ள மக்களை கட்டளையிடுவதற்கான சந்தர்ப்பம்: மத்தேயு 20:26-27
-முதன்மையானவைகளை விரும்புதல்: மத்தேயு 23:6-11
-தேவனுக்கான முடிவுபெற்ற காரியத்தில் தன்னைத்தான் மதிப்பிடல்: அப்போஸ்தலர் 12:21-23
-தவறான ஊக்கத்தோடு காரியங்களை செய்தல்: ரோமர் 8:6
-மேசைகளில் அல்லது வரிசையில் முதன்மையான இடத்தை பற்றிக்கொள்ளல்: மாற்கு 12:38-39
-ஒருவருடைய அறிவாற்றலில் அதிகமாக உணர்வுள்ளதாயிருத்தல்: 1 கொரிந்தியர் 3:20
-சுற்றியுள்ள முக்கியமான மக்களிலிருந்து அதிகமான மகிழ்வுறல்: 1 கொரிந்தியர் 4:6-7
-சுய புகழ்ச்சி: 2 கொரிந்தியர் 10:12-13
-மற்றவர்கள் செய்த வேலையில் தம்மைத்தாம் பாராட்டுதல்: 2 கொரிந்தியர் 10:15
-மற்றவர்களை குறித்து குறைந்தளவிலான கரிசனை: பிலிப்பியர் 2:2-4
-கேள்விகள் மற்றும் சொற்பொருளில் குறித்து அதிக ஆவலாய் இருத்தல்: 1 தீமோத்தேயு 6:4
-ஒருவர் திட்டமிடும் காரியங்களை குறித்து செருக்குடன் பேசுதல்: யாக்கோபு 4:16
-முதிர்ந்த, ஆவிக்குரிய மக்களுடைய போதனைகளை புறக்கணித்தல்: 1 பேதுரு 5:5-6

-சுதந்திரமாக எப்பொழுதும் எரிச்சலூட்டுதல்: எபேசியர் 5:21
-அனைத்திற்கும் தேவனுக்கு மேலாக இருப்பதற்கு மாறாக கவலைப்படுதல்: 1 பேதுரு 5:6-7
-வெகுமதி, அங்கிகாரம், நிலை மற்றும் இழப்பீடுகளை நேசித்தல்: 1 யோவான் 2:15-16

5. நாம் தோல்வியிலிருந்து விலக்கப்பட்டிருக்க வேண்டுமென இயேசு ஜெபித்தார்: அவருடைய இந்த ஜெபத்தை யோவான் 18:15 மற்றும் 20ல் வாசிக்கவும்.

6. மத்தேயு 23 இலிருந்து, கிறிஸ்தவ தலைவர்களுக்கான பத்து நேரான கட்டளைகளின் பட்டியல்களை உருவாக்குங்கள். ஒவ்வொரு பரிசேயர்களின் தோல்விகளும் மறுதலையக இந்த நேரான வழிகாட்டல்களை தரும்.

7. நீதிமொழிகளின் புத்தகம் தோல்வியிற்கு விளைவான காரியங்களின் அநேக எச்சரிக்கைகளை கொண்டிருக்கின்றது. ஒரு அதிகாரத்தை ஒவ்வொரு நாளும் வாசியுங்கள், ஒவ்வொரு மாதத்திற்கும் ஒருமுறையிற்கூடாக புத்தகத்தை நீங்கள் வாசிக்கலாம். வேதாகமத்தில் தோல்வியை ஏற்படுத்தும் காரியங்களை குறித்துக்கொண்டு அவைகளை புறக்கணியுங்கள். (நீங்கள் மற்ற வேதாகம புத்தகங்களை கூட இதுபோல் செய்ய வேண்டும்.)

8. இந்த பாடத்திலுள்ள பிற்சேர்க்கையானது வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள தலைவர்களுடைய வாழ்க்கையின் கதையை எவ்வாறு படிக்க வேண்டும் என்பதை விபரிக்கின்றது. தோல்வியுற்ற சில தலைவர்களை பற்றி படியுங்கள். அவர்களுக்கு தோல்வி ஏற்பட்ட காரியங்களின் பட்டியல்களை எடுங்கள்.

9. 1 மற்றும் 2 தீமோத்தேயு, தீத்து புத்தகங்கள் ஊழியத்தின் தலைமைத்துவ நிலையிலிருந்த இள மனிதனுக்காக எழுதப்பட்டது. இந்த புத்தகங்களை கவனமாக வாசித்து, இந்த மனிதனை புறக்கணிக்குமாறு அப்போஸ்தலனாகிய பவுல் கூறிய காரியங்களை பட்டியல்படுத்துக.

# அதிகாரம் பன்னிரெண்டு

## வெற்றியுடைய கொள்கைகள்

**குறிக்கோள்கள்:**

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
☐ வெற்றியை வரைவிலக்கணப்படுத்தவும்,
☐ தேவனுடைய இராஜ்ஜியம் உலகத்திலிருந்தான வித்தியாசத்தில் எவ்வாறு வெற்றியடைகின்றது என்பதை விபரிக்கவும்,
☐ வெற்றியடைவிற்கான அடிப்படை கொள்கைகளை சுருக்கமாக்கவும்,
☐ வெற்றியிற்கான வேதாகம கொள்கைளை மேலதிகமாக படிக்கவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக் இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக. அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாகவும் நடந்துகொள்ளுவாய். (யோசுவா 1:8)**

### அறிமுகம்

வெற்றியுள்ள மக்களிடம் கேட்கப்படும் கேள்வியானது, "உங்களுடைய வெற்றியிற்கான இரகசியம் என்ன?" உலகத்திலுள்ள முறைமையானது கூட கல்வி, நிலை, இலட்சியம், தாலந்து, வல்லமை மற்றும் பணம் ஆகியவை வெற்றியின் இரகசியமாக பட்டியலிடும். அநேக புத்தகங்கள் இந்த பொருளில் எழுதப்பட்டுள்ளன, ஆனால் வெற்றியின் உண்மையான கொள்கைகள் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த பாடத்தில் வேதாகமத்தின் வெற்றியின் கொள்கைகளை நீங்கள் கற்பீர்கள்.

எபிரெயர் 6:1-3ல் அடையாளப்படுத்தப்பட்டுள்ள விசுவாசத்தின் அஸ்திபாரங்களில் நீங்கள் ஏற்கனவே இருக்கின்றீர்கள் என கருதப்படுகின்றது. உங்களுடைய வாழ்க்கையிலும் ஊழியத்திலும் வெற்றியுள்ள வேதாகமத்தின் கொள்கைகளை பிரயோகிக்கும்பொருட்டு சரியான ஆவிக்குரிய அஸ்திபாரமானது அவசியப்படுகின்றது.

### வெற்றி என்றால் என்ன?

தேவனுடைய இராஜ்ஜியத்தின் வெற்றியானது "தேவனால் கொடுக்கப்பட்ட பொறுப்புக்களில் ஒருவருடைய வரங்களையும் இயலுமைகளையும் உச்சளவிலான பயன்பாடே" ஆகும். தேவனுடைய வேலையிற்காக உங்களுடைய ஆவிக்குரிய வளங்களை நீங்கள் சரியாக பயன்படுத்தும்போது நீங்கள் வெற்றியுள்ளவர்களாக மாறுகின்றீர்கள்.

தேவனுடைய இராஜ்ஜியத்தில் வெற்றிபெறுதல் உலக வெற்றியின் நிலைகளிலிருந்து வேறுபடுகின்றது. உலகமானது பொருள் ரீதியான வெற்றியை கண்ணோக்குகின்றது. தேவன் ஆவிக்குரிய ரீதியாக அதை

பார்க்கின்றார். தேவனுடைய இராஜ்ஜயத்தில் வெற்றியை வரைவிலக்கணப்படுத்தும் வித்தியாசமான தகுதிகள் காணப்படுகின்றன. உலகமானது அதனுடைய சொந்த தரத்தை ஏற்படுத்துகின்றது. தேவனால் ஏற்படுத்தப்பட்ட தரமானது "விசுவாசமுடைமை" ஆகும்.

வெற்றியிற்கு வித்தியாசமான அடிப்படைகள் காணப்படுகின்றன. உலகத்தினுடைய வெற்றியின் அடிப்படையானது மாற்றமடையக்கூடியதும் தற்காலிகமானதுமாகும். தேவனுடைய இராஜ்ஜியத்தில், வெற்றியினுடைய அடிப்படையானது நிலையானதும் நித்தியமானதாகும், ஏனென்றால் அது வெளிப்படுத்தப்பட்ட உண்மையிற்கு அடிப்படையாக உள்ளது. வெற்றியிற்கு வித்தியாசமான ஊக்கங்கள் காணப்படுகின்றன. உலகத்தில், பேரரசை பெருமை மற்றும் புகழுக்கான ஆசை காரணமாக மக்கள் ஊக்கப்படுகின்றார்கள்.

தேவனுடைய இராஜ்ஜியத்தில் வெற்றியிற்கு வித்தியாசமான மாதிரி காணப்படுகின்றது. உலகமானது ஐசுவரியம் மற்றும் வல்லமையுள்ள மனிதர்களை பார்க்கின்றது. தேவனாகிய இயேசு கிறிஸ்துவே எமது மாதிரி ஆவார். வெற்றியிற்கு வித்தியாசமான இலக்குகள் காணப்படுகின்றன. பணம், வல்லமை மற்றும் நிலைகள் உலக இலக்குகளாக வலியுறுத்தப்படுகின்றன. தேவனுடைய இராஜ்ஜியத்திலுள்ள இலக்கானது கிறிஸ்துவை போலா-குதலாகும்.

தேவனுடைய இராஜ்ஜியத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கும் வெற்றியானது பெறுவதற்கு பதிலாக கொடுத்தலாகும், நிலையிற்கு பதிலாக சேவித்தல் ஆகும், பெருமையிற்கு பதிலாக தாழ்மைப்படுத்தலாகும், வல்லமையிற்கு பதிலான பலவீனமாகும். நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கின்றீர்கள் என்னும் பதத்தில் உலக வெற்றியானது கண்ணோக்கப்படுகின்றது. நீங்கள் இருக்கும் பதத்தில் தேவன் அதை பார்க்கின்றார். சிறப்பாக அடைவதை காட்டிலும் சிறப்பான குணாதிசயமே வலியுறுத்தப்படுகின்றது.

தேவனுடைய இராஜ்ஜியத்தில், வெற்றியானது நீங்கள் யார் என்பதினால் அளவிடப்படுவதில்லை. அது நீங்கள் எதுவாக இருக்கின்றீர்கள் என நீங்கள் எதற்கு ஒப்பிடப்படுகின்றீர்கள் என்பதினால் அளவிடப்படுகின்றது. தேவனுக்காக நீங்கள் என்ன செய்கின்றீர்கள் என்பதினால் வெற்றியானது அளவிடப்படாது. அது நீங்கள் என்ன செய்கின்றீர்கள் என நீங்கள் செய்வதை ஒப்பிடுவதிலிருந்து அளவிடப்படுகின்றது.

## வெற்றியின் இரகசியம்

தேவன் ஊழியத்தில் நீங்கள் சித்தியுள்ளவர்களாக இருக்க விரும்புகின்றார். அவர் உங்களுக்காக வைத்திருக்கும் குறிக்கோளையும் திட்டங்களையும் நீங்கள் அடைய வேண்டும் என அவர் வேண்டுகின்றார். ஆவிக்குரிய "வெற்றியின் இரகசியம்" உண்மையிலேயே இரகசியமானது அல்ல. அவைகள் தேவனுடைய வசனத்தில் வெளியரங்கமாக அறிவிக்கப்பட்டுள்ளன. மக்கள் அதை தேடி, அதை கண்டடைய மறுக்கும்போதே அவைகள் "இரகசியமாக" மாத்திரம் காணப்படும்.

நாம் தேவனுடைய வசனத்தில் அனைத்து வெற்றியின் கொள்கைகளையும் பூர்த்தி செய்ய முடியாது ஏனென்றால் அவைகள் அநேகம் காணப்படுகின்றன. வேறு வேதாகம கொள்கைகளை தொடர்ந்து படிப்பதற்கான வழிகாட்டல்களை இந்த பாடத்திலுள்ள "மேலதிக படிப்பினைக்கு" பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இங்கு சில மிகவும் முக்கியமான அடிப்படை கொள்கைகள் காணப்படுகின்றன:

### சரியான இருதயத்தின் குறிக்கோளை கொண்டிருத்தல்:

மனிதனுடைய உள்ளான இருதயத்திலிருந்து வெற்றி ஆரம்பிக்கின்றது:

> **கர்த்தர் சாமுவேலை நோக்கி: நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீரவளர்ச்சியையும் பார்க்கவேண்டாம் நான் இவனைப் புறக்கணித்தேன் மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன் மனுஷன் முகத்தைப் பார்ப்பான் கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார். (1 சாமுவேல் 16:7)**

ஓர் சரியான இருதயமானது அன்பு, இரக்கம், ஒழுக்கம், சேவிக்கும் ஆவி மற்றும் உண்மையான பரிசுத்தத்தை உள்ளடக்குகின்றது.

## வெற்றியின் ஆதாரத்தை அறியுங்கள்:

இது நீங்கள் அறிந்தவை அல்ல, ஆனால் உங்களுக்கு வெற்றியாக அது மாற்றும் என நீங்கள் அறிந்தவைகள் ஆகும். உறவு என்பது நீங்கள் யாரை அறிந்திருக்கின்றீர்கள் என்பதில் அடிப்படையாக உள்ளது, நீங்கள் என்ன அறிந்திருக்கின்றீர்கள் என்பது அல்ல. அனைத்து ஜீவியமும் உறவில் அடிப்படையாக உள்ளது. நீங்கள் யாரை அறிந்திருக்கின்றீர்கள் (இயேசு), பரலோகத்திற்கு உங்களை சேர்க்க நீங்கள் அறிந்தவைகள் அல்ல.

தேவனை அறிந்திருத்தல் வெற்றியின் விளைவாய் இருக்கிறது:

> **ஞானி தன் ஞானத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம், பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம், ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம். மேன்மைபாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார். இவைகளின்மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.... (எரேமியா 9:23-24)**

> **உடன்படிக்கைக்குத் துரோகிகளாயிருக்கிறவர்களை இச்சகப்பேச்சுகளினால் கள்ளமார்க்கத்தாராக்குவான் தங்கள் தேவனை அறிந்திருக்கிற ஜனங்கள் திடங்கொண்டு, அதற்கேற்றபடி செய்வார்கள். (தானியேல் 11:32-33)**

## தேவனை தேடுங்கள்:

தேவனை தேடுதல் என்பது அவரிடம் விண்ணப்பித்தல் மூலம் அவரில் காத்திருத்தல், ஜெபித்தல், அவரை அறியும்பொருட்டு வசனத்தை படித்தல் மற்றும் அவருடைய சித்தத்தை செய்தல் என அர்த்தப்படுகின்றது. தேவனை தேடுவதற்கான நன்மையானது எசேக்கியாவை அழைத்த தேவனாகிய யூதாவின் இராஜாவினால் நிரூபிக்கப்பட்டுள்ளது. அவர் அவருடைய வெற்றியிற்காக தேவனையும், இந்த காரணங்களை தேடினார்:

> **இந்தப்பிரகாரமாக எசேக்கியா யூதாவெங்கும் நடப்பித்து, தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நன்மையும் செம்மையும் உண்மையுமானதைச் செய்தான்.**

> **அவன் தேவனுடைய ஆலயத்தின்வேலையிலும், தன் தேவனைத் தேடும்படிக்கு நியாயப்பிரமாணத்திற்கும் கற்பனைக்கும் அடுத்த காரியத்திலும் என்னசெய்யத் தொடங்கினானோ, அதையெல்லாம் தன் முழு இருதயத்தோடும் செய்து சித்திபெற்றான். (2 நாளாகமம் 31:20-21)**

உசியா என்னும் பெயருடைய இராஜாவை குறித்தும் கூட கூறப்பட்டுள்ளது:

> **அவன் கர்த்தரைத் தேடின நாட்களில் தேவன் அவன் காரியங்களை வாய்க்கச் செய்தார். (2 நாளாகமம் 26:5)**

தேவனை தேடுவது மிகவும் முக்கியமானது, ஏனென்றால் தலைவர்களுக்கு அவருடைய நோக்கத்தையும் சித்தத்தையும் நிறைவேற்ற தேவன் வாஞ்சிக்கிறார் (ஆமோஸ் 3:7ஐ வாசியுங்கள்)

## வசனத்தை தியானியங்கள்:

தேவனுடைய வசனத்தை தியானிப்போருக்கு வெற்றி வாக்களிக்கப்பட்டுள்ளது. தேவன் யோசுவாவிடம் கூறினார்:

> **இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக் இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக் அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாகவும் நடந்துகொள்ளுவாய். (யோசுவா 1:8)**

"தியானித்தல்" என்பது "ஒன்றை குறித்து எண்ணி, அதில் தங்கியிருந்து, விரிவாக கற்பது" ஆகும். தியானிக்கும் ஒருவர் விசுவாசிப்பதாவது தேவன் மனிதரோடு பேசினார், அவர் கூறியவைகள் வேதாகமத்தில் பதியப்பட்டுள்ளது, தேவனுடைய வசனங்கள் உண்மையானது.

## வசனத்திற்கு கீழ்படியுங்கள்:

வெற்றியுள்ளவற்றை தியானித்தால் மாத்திரம் போதாது, வசனத்திற்கு கீழ்ப்படிதல் கூட செய்யப்படல் வேண்டும்....

> **இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக, அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாகவும் நடந்துகொள்ளுவாய். (யோசுவா 1:8)**

சாலேமோன் இஸ்ரவேலுக்கு இராஜாவாக மாறுவதற்கு முன்னர், தாவீது அவனுக்கு இந்த ஆலோசனைகளை கொடுத்தார்:

> **இப்போதும் என் குமாரனே, நீ பாக்கியவானாயிருந்து, கர்த்தர் உன்னைக் குறித்துச் சொன்னபடியே உன் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தைக் கட்டும்படி, அவர் உன்னுடனேகூட இருப்பாராக.**
>
> **கர்த்தர் உனக்கு ஞானத்தையும் உணர்வையும் அருளிச்செய்து, உன் தேவனாகிய கர்த்தரின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு, இஸ்ரவேலை ஆளும்படி உனக்குக் கட்டளையிடுவாராக. (1 நாளாகமம் 22:11-12)**

தேவனுடைய வார்த்தைகளிலுள்ள ஒவ்வொரு கட்டளைகளும் முக்கியமானவை. இந்த கட்டளைகளை வைத்திருக்கும்போது உங்களை வெற்றியுள்ளவர்களாக மாற்றும்.

தேவனுடைய வசனத்தை நீங்கள் தனிப்பட்டவர்களாக மாத்திரம் தியானித்து கீழ்ப்படியக்கூடாது, நீங்கள் நடத்தும் மக்களுக்கு முன்பதாக அதிகாரத்தின் இடமாகிய அதன் சரியான மேடையில் செய்ய வேண்டும். நெகேமியா 8:1-8ல் தேவனுடைய வசனமாகிய அதிகாரத்தை நெகேமியா எவ்வாறு மீள்கட்டினார் என்பதை வாசியுங்கள். நெகேமியா ஏற்படுத்திய மறுமலர்ச்சியானது தேவனுடைய வசனமாகிய அதிகாரத்திலிருந்து தவிர்க்கப்பட்டிருக்கவில்லை. வார்த்தையின் அதிகாரத்திற்கு அடிப்படையாகவுள்ள ஊழியம் எப்பொழுதும் வெற்றிச்சிறக்கும்.

## தேவனால் அழைக்கப்பட்டவர்களாக இருங்கள்:

நீங்கள் தேவனால் அழைக்கப்பட்டவர்களாயிருத்தலின் முக்கியத்துவத்தை இந்த பாடத்தின் முன்னர் கற்றீர்கள். தேவன் உங்களுக்கு கொடுத்த ஆவிக்குரிய வரங்களை பயன்படுத்தி, தேவன் விசேடமாக அழைத்த உங்களுடைய ஊழியத்தை அறிந்திருக்கும் வரையிலும் உங்களால் வெற்றி பெற முடியாது.

## தேவனுடைய பிரசன்னத்தை அனுபவியுங்கள்:

ஊழியத்தை செழிப்பாக்குதல் தேவனுடைய பிரசன்னமே ஆகும்:

> **கர்த்தர் யோசேப்போடே இருந்தார், அவன் காரியசித்தியுள்ளவனானான் அவன் எகிப்தியனாகிய தன் எஜமானுடைய வீட்டிலே இருந்தான்.**
>
> **கர்த்தர் அவனோடே இருக்கிறார் என்றும், அவன் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறார் என்றும், அவன் எஜமான் கண்டு: (ஆதியாகமம் 39:2-3)**

பரிசுத்தமான வாழ்க்கையை வாழ்ந்து, உங்களுடைய விசேட அழைப்பில் ஊழியம் செய்து, அவருடைய ஐக்கியத்தில் நீங்கள் நடக்கும்போது மாத்திரமே தேவனால் "உங்களோடு இருக்க" முடியும்.

### தேவனுடைய அபிஷேகத்தை வைத்திருங்கள்:

இந்த பாடத்தின் மூன்றாம் அதிகாரமானது தேவனுடைய அபிஷேகத்தின் முக்கியத்துவத்தை விபரிக்கின்றது. ஊழியத்தில் சித்தியுள்ளவர்களாக இருப்பதற்கு இந்த அபிஷேகம் உங்களுக்கு அவசியமாகும்.

### பிரச்சினைகளுக்கும் தீர்மானத்திற்கும் முகங்கொடுங்கள்:

பிரச்சினைகளுக்கும் தீர்மானத்திற்கும் முகங்கொடுக்க மறுத்தல் தோல்வியிற்கு வழிநடத்தும். இந்த பாடத்தில் நீங்கள் கற்ற உபாயங்களை பயன்படுத்தி பிரச்சினைகளை உடனடியாக எதிர்கொண்டு, தீர்மானங்களை அறிவுள்ளதாக எடுங்கள்.

### உங்களுடைய நோக்கத்தை அறியுங்கள்:

தேவன் ஒவ்வொரு விசுவாசிகளுக்குமான விசேட நோக்கத்தை கொண்டுள்ளார். உங்களுடைய நோக்கத்தை அறிந்திருத்தல் ஏன் நீங்கள் இருக்கின்றீர்கள் என்ற அறிவையும், நீங்கள் எதை செய்ய வேண்டும் என தேவன் அழைத்தார் என்பதையும், ஆவிக்குரிய தரிசனத்தை கொண்டிருப்பதையும் உள்ளடக்குகின்றது. (சர்வதேச அறுவடைநேர நிறுவத்தின் பாட தலையங்கமான, “குறிக்கோளுடனான முகாமைத்துவத்தில்” இதை குறித்து அதிகம் நீங்கள் கற்க முடியும்).

தரிசனத்தோடோடு உள்ள மனிதர் இறந்தகாலத்தில், தவறு மற்றும் தோல்வியிற்கு மேலான குற்றவுணர்வு அல்லது வெற்றியிற்கு மேலான கொண்டாட்டம் போன்றவற்றில் வாழ்வதில்லை. ஓர் தரிசனம் மற்றும் தெளிவான அறிவின் நோக்கம் எதிர்காலத்திற்கு உங்களை நோக்க உதவி புரியும். பவுல் கூறுவதை போல:

> **சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை் ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி... (பிலிப்பியர் 3:13)**

### திட்டத்தை கொண்டிருங்கள்:

நீங்கள் ஒரு திட்டத்தை கொண்டிருந்து செய்யும்வரை உங்களுடைய நோக்கத்தை நீங்கள் ஒருபோதும் அடைய மாட்டீர்கள். சர்வதேச அறுவடைநேர நிறுவன பாடமான, “குறிக்கோளிலான முகாமைத்துவத்தில்” எவ்வாறு திட்டமிடுவதை குறித்து நீங்கள் கற்பீர்கள்.

### திட்டத்தை செயற்படுத்துங்கள்:

நல்ல திட்டத்தை கொண்டிருத்தல் மாத்திரம் ஊழியத்தில் உங்களுடைய குறிக்கோளை அடைய முடியாது. நீங்கள் திட்டத்தை கூட செயல்படுத்த வேண்டும். நீங்கள் ஒழுங்கமைத்து, ஒப்படைத்து, நிர்வாகம் செய்ய வேண்டும். நல்ல ஆவிக்குரிய தலைமைத்துவத்திற்கான ஓர் பயிற்சியானது தேவனுடைய நோக்கத்தையும் திட்டத்தையும் வெற்றிகரமாக அடைவதற்காக விளைவை அது ஏற்படுத்துமா அல்லது இல்லையா என்பதாகும். நீங்கள் இதை எவ்வாறு செய்ய வேண்டும் என சர்வதேச அறுவடைய நேர நிறுவனத்தின் பாட தலையங்கமான “குறிக்கோளிலான முகாமைத்துவத்தில்” கற்கலாம்.

### பரிசுத்தமான வாழ்க்கையை வாழுதல்:

இந்த பாடத்தில் நான்காம் அதிகாரத்தில் கலந்துரையாடப்பட்டுள்ள தலைவருக்கான தகுதியை அடைவதற்கு, நீங்கள் பரிசுத்தமான வாழ்க்கையை வாழ்ந்தால் மாத்திரமே ஊழியத்தில் சித்தியுள்ளவர்களாக இருப்பீர்கள். பாவம் தோல்வியிற்கு உத்தரவாதமாயிருக்கிறது. பரிசுத்தம் சித்திக்கு உத்தரவாதமாக இருக்கின்றது.

> **தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான் அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான். (நீதிமொழிகள் 28:13)**

## தேவனிடமிருந்து ஞானத்தை கேளுங்கள்:

மனித ஞானம் நல்ல தீர்மானத்தை எடுப்பதற்கும் மற்றவர்களை வழிநடத்துவதற்கும் போதுமானது அல்ல. சித்தியுள்ள தலைவர்களாக இருப்பதற்கு தேவனிடமிருந்தான அறிவு உங்களுக்கு இருப்பது அவசியமாகும்:

> **உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். (யாக்கோபு 1:5)**

## உயர்வுக்காக போராடுங்கள்:

"நன்றாக போதும்" என்பதற்காக மட்டும் ஏற்படுத்திக்கொள்ளாதிருங்கள். உயர்வுக்காக போராடுங்கள்:

> **தேவனுக்கு மகிமையும் துதியுமுண்டாகும்படி இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி... (பிலிப்பியர் 1:10)**

## தேவனுடைய மகிமையிற்காக எல்லாவற்றையும் செய்யுங்கள்:

உங்களுடைய சொந்தத்திற்கு மாறாக தேவனுடைய மகிமையிற்காக அனைத்தையும் நீங்கள் செய்தால், நீங்கள் சித்தியுள்ளவர்களாக மாறுவீர்கள்:

> **வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள். (கொலொசெயர் 3:17)**

## இராஜ்ஜியத்தை முதலாவதாக தேடுங்கள்:

தேவனுடைய இராஜ்ஜியம் உங்களுக்கு முன்னுரிமையுள்ளதாக இருந்தால் நீங்கள் சித்தியுள்ளவர்களாக மாறுவீர்கள்:

> **முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். (மத்தேயு 6:33)**

இராஜ்ஜியத்தின் முன்னுரிமைகளானது சரியான அமைப்பிற்கூடாக ஏற்படுத்தப்படுகின்றது. (அப்போஸ்தலர் 6:1-7ஐ பாருங்கள்)

## உதாரணங்களை பின்தொடருங்கள்:

இந்த பாடத்தில் நீங்கள் கற்ற பிரகாரமாக, இயேசுவே மாபெரும் ஆவிக்குரிய தலைவருக்கு உதாரணம் ஆவார். இயேசு கூறினார்:

> **நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். (யோவான் 13:15)**

கிறிஸ்துவினுடைய உதாரணத்தை தவிர மற்ற ஏதாவதொன்றிற்கு உங்களை நீங்களே ஒப்பிடும்போது, அது நல்லது அல்ல. யாக்கோபு யோசேப்பை அவனுடைய சகோதரர்களுக்கு ஒப்பிட்டு, பொறாமை மற்றும் வெறுப்பு போன்ற ஊக்கமுடைய நடத்தைகளை உருவாக்கும்படி ஏற்படுத்தினார். இஸ்ரவேலின் மக்கள் மற்ற ஜாதிகளுடன் தம்மை ஒப்பிட்டு அவர்களுடைய பாவமான வழிகளை ஏற்றுக்கொண்டனர். சவுல் தாவீதுடனான தம்மில் ஒப்பீட்டை கேட்டு, பொறாமையினால் விஷமடைந்தார்.

ஒப்பிடுதல் உங்களுடைய தரிசனத்தை நீட்டிக்கச்செய்து, உங்களுடைய ஆற்றலை நிறைவேற்ற உங்களை சவாலிற்குட்படுத்த கூட உதவுகின்றது. ஆனால் மற்ற நபர்களுடைய அடைதலானது உங்களுடைய வாழ்க்கையின் தரங்கள் அல்ல. உங்களுடைய சித்திகள் மற்றவர்களுடனான கிரியைகளுக்கான உறவில் அளவிடப்படவில்லை. இந்த காரணத்தினால் தேவனிடம் யோவானை குறித்து பேதுரு கேட்கின்றார் "ஆண்டவரே, இவன் காரியம் என்ன?" இது கடிந்துக்கொள்ளுதலை பெறப்பட்டு, இயேசு கூறினார், "உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றிவா." (யோவான் 21:21-22)

## தீர்மானம், ஒழுக்கம், வழி, உறுதிபடுத்தல்

பொதுவாக, வெற்றியானது ஒருவரியில் இலகுவாக சுருக்கமாக்கலாம்:

இயேசுவின் உதாரணமாகிய தீர்மானம், ஒழுக்கம், வழி, உறுதிபடுத்தல் ஆகியவற்றை பின்பற்றுங்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் இதை செய்தார்:

> **பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள் ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்.**
>
> **பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்.**
>
> **ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன் ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன்.**
>
> **மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன். (1 கொரிந்தியர் 9:24-27)**

பவுல் தீர்மானத்தை ஏற்படுத்துகின்றார். அவர் சித்திப்பெற வேண்டுகின்றார். அவருக்கு வாழ்க்கையின் "ஓட்டத்தில்" வெற்றி பெற வேண்டும் (வசனம் 24). இதை செய்வதற்கு, அவர் ஒழுக்கமுள்ளவராக வேண்டுமென அவர் உணர்கிறார், அதாவது அனைத்து காரியத்திலும் வெற்றி பெற வேண்டும் என்பதாகும் (வசனம் 25 மற்றும் 27) அவருக்கு வழி இருந்தது. அவர் குறிக்கோளில் இல்லாமல் ஓடவோ அல்லது போராடவோ இல்லை. அவருடைய குறிக்கோள் மற்றும் நோக்கம் குறித்து அவர் நிச்சயமற்றதாக இருக்கவில்லை (வசனம் 26). அவர் வெற்றி பெறவும் கூட தீர்மானித்தார். (வசனங்கள் 24-25).

## வெற்றியின் கிரயம்

நீங்கள் வெற்றியிற்கு கிரயத்தை செலுத்த சித்தமுள்ளவர்களாக இருக்கின்றீர்களா? இங்கு அது உள்ளது:

> **அறியாதவனாயிருந்து, அடிகளுக்கு ஏதுவானவைகளைச் செய்தவனோ சில அடிகள் அடிக்கப்படுவான். எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும் மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள். (லூக்கா 12:48)**

நீங்கள் அதிகம் சித்தியுள்ளவர்களாக இருக்கும்போது, தேவன் அதிகம் உங்களிடம் கேட்கின்றார். இது வெற்றியிற்கான கிரயம் ஆகும்.

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

2. வெற்றியை வரைவிலக்கணப்படுத்தவும்.

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

3. தேவனுடைய இராஜ்ஜியத்தின் வெற்றியானது உலகத்திலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது?

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

4. இந்த பாடத்தில் நீங்கள் கற்ற வெற்றியின் அடிப்படை கொள்கைகளை சுருக்குக.

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

இந்த பாடமானது வெற்றியின் சில அடிப்படை கொள்கைகளை பூர்த்தி செய்கின்றது. தேவனுடைய வசனத்தில் அநேக வேறு வெற்றியுள்ள கொள்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த பகுதியானது இந்த கொள்கைகளை நீங்கள் தொடர்ந்து படிப்பதற்கு உதவி புரியும்.

1. அடுத்த வருடத்தின் போது, முழு வேதாகமத்திற்கூடாக வாசியுங்கள். கொடுக்கப்பட்ட அனைத்து கட்டளைகளையும் குறித்துக் கொள்ளுங்கள். இந்த கட்டளைகளை வைத்துக்கொள்ளுதல் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் வெற்றியை உறுதிப்படுத்தும் (யோசுவா 1:8).

2. இந்த பாடத்திலுள்ள பிற்சேர்க்கையானது வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள தலைவர்களுடைய கதைகளான வாழ்க்கையை எவ்வாறு கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை விபரிக்கும். அவர்கள் சித்தியுள்ளவர்களாக உருவாக்கிய காரியங்களை இனங்கண்டு, உங்களுடைய சொந்த வாழ்க்கையில் இவைகளை இணைத்துக்கொள்ளுங்கள்.

3. உலகரீதியான "வெற்றியை" விபரிக்கும் பிரசங்கியின் புத்தகத்தை வாசியுங்கள். முக்கியமாக அதிகாரம் 2ஐ வாசியுங்கள். குறித்த தரத்திற்கு அமைவில் வெற்றிபெற்ற ஓர் மனிதன் வெறுமையாக கைவிடப்பட்டவனாகவும், சந்தோஷமின்மையாகவும் காணப்படுகிறார். தேவனுடைய தரத்தில் அவனுடைய செழிப்பை அடிப்படையாக வைத்திருக்கின்ற மனிதன் நிறைவானவராகவும் சந்தோஷமுள்ளவராகவும் காணப்படுகிறார். பிரசங்கி 12:13-14ல் இதன் உள்ளடக்கங்களை வாசியுங்கள்.

4. 1 மற்றும் 2 தீமோத்தேயு, தீத்து புத்தகங்கள் ஊழியத்தில் தலைமைத்துவ நிலையில் உள்ள இளைய மனிதனுக்கு எழுதப்பட்டது. இந்த புத்தகங்களை கவனமாக படித்து அப்போஸ்தலனாகிய பவுல் பகிர்ந்த வல்லமையின் கொள்கைகளை பட்டியல்படுத்துங்கள்.

5. இந்த ஞாபகத்தில் கொள்ளுங்கள்: "ஒன்றுமே செய்யாது வெற்றி பெறுவதை பார்க்கிலும் முயற்சி செய்து தோற்பது நன்மையான ஒன்றாகும்." "நான் நிறுத்துகின்றேன்!" என நீங்கள் சொல்லும்வரைக்கும் நீங்கள் ஒருபோதும் தோல்வியடைவதில்லை.

6. சித்தியுடைய ஊழியத்திற்கு நிதி மிகவும் முக்கியதொன்றாகும். தேவனுடைய வேலையை அடையும் பொருட்டு உங்களுக்கு பணம் தேவைப்படுவதாகும். நிதி வெற்றியிற்கான சில ஆவிக்குரிய கொள்கைகள் இங்கு தரப்பட்டுள்ளன.

**தேவனே உங்களுடைய ஆதாரம்:** ஆதியாகமம் 22:14

**நீங்கள் நிதிதேவையில் வெற்றியுள்ளவராக மாறுவதற்கு தேவன் விரும்புகின்றார்:** சங்கீதம் 35:27; 23:1; மாற்கு 12:43-44; எபேசியர் 3:29; கலாத்தியர் 3:13; 1 தீமோத்தேயு 6:17; 3 யோவான் 2

**நீங்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தை முதலில் ஏற்படுத்தினால், உங்களுடைய தேவைகளை அவர் போஷிப்பார்:** மத்தேயு 6:33

**நிதி வெற்றி வெகுமதியாக அளிக்கப்படும்:**

-தேவனுக்கு முன்னுரிமை கொடுத்தல்: நீதிமொழிகள் 3:9-10; மத்தேயு 6:33
-அன்பின் தேவன்: நீதிமொழிகள் 8:21
-தேவனுக்கு மகிமையை கொடுத்தல்: நீதிமொழிகள் 10:22
-தேவனுக்கு வாஞ்சையாயிருத்தல்: நீதிமொழிகள் 13:21; 15:6
-தாழ்மை: நீதிமொழிகள் 22:4

-கொடுப்பதற்கு ஆயத்தமுள்ளதாக இருத்தல்: நீதிமொழிகள் 22:9
-தேவனை நம்புதல்: நீதிமொழிகள் 28:25
-கொடுக்கும் அளவு: நீதிமொழிகள் 11:24-25; லூக்கா 6:38; 2 கொரிந்தியர் 9:6,10

**தேவன் பலம் கிடைப்பதற்கு உங்களுக்கு வல்லமை கொடுக்கின்றார்:** உபாகமம் 8:18-19

**வேலையிற்கான விளைவு ஆரோக்கியமாகும்:**

-ஜாக்கிரதையுள்ள வேலை: நீதிமொழிகள் 10:4; 13:4
-புத்தியுள்ள வேலை: நீதிமொழிகள் 10:5
-நீதியுள்ள வேலை: நீதிமொழிகள் 13:11
-பிரயாச வேலை: நீதிமொழிகள் 14:23

**கொடுத்தல் உங்களை நிதி வெற்றியாளராக மாற்றும்.** நீங்கள் கொடுக்க வேண்டியது:

-முதலாவது தேவனுக்கு: மல்கியா 3:1-2; நீதிமொழிகள் 3:9-10
-மகிழ்ச்சியாய்: 2 நாளாகமம் 9:7
-விருப்பத்துடன்: யாத்திராகமம் 25:2; 1 நாளாகமம் 29:9; 2 நாளாகமம் 8:12
-சுதந்திரமாய்: எஸ்றா 2:68
-உங்களுடைய இயலுமையின் படி: மத்தேயு 5:42; அப்போஸ்தலர் 11:29; 2 கொரிந்தியர் 8:12; உபா-கமம் 16:17; எஸ்றா 2:69
-தேவனுடைய மகிமையிற்காக: மத்தேயு 6:3
-சாதாரணமாக: ரோமர் 12:8
-ஏழைகளுக்கு: நீதிமொழிகள் 3:27-28; 19:17; 21:13; 28:27
-இரகசியமாக: மத்தேயு 6:3
-ஒழுங்குமுறையாக: 1 கொரிந்தியர் 16:2
-வருமானத்தில் ஒர் வீதம்: ஆதியாகமம் 14:20; 28:22; லேவியராகமம் 27:30; 2 நாளாகமம் 31:5; மல்கியா 3:10

**நிதியில் வெற்றியுள்ளவராக இருப்பதற்கு நீங்கள் தவிர்க்க வேண்டியவை:**

-பணத்திற்கான அன்பு: 1 தீமோத்தேயு 6:10
-ஐசுவரியத்தை நம்புதல்: சங்கீதம் 49:6; 1 நாளாகமம் 29:14
-கடன்: ரோமர் 13:8
-சோம்பல்: நீதிமொழிகள் 6:6-11; 24:30-34
-சுயமாய் அனுபவித்தல்: நீதிமொழிகள் 13:18; 21:17; 23:21
-கனவுகாணுதல்: நீதிமொழிகள் 13:4
-கலகம்: நீதிமொழிகள் 1:10-19
-மோசடி: யாக்கோபு 5:3-4; நீதிமொழிகள் 20:23; 13:11; 22:16
-ஏமாற்றுதல்: நீதிமொழிகள் 10:2
-லஞ்சம்: நீதிமொழிகள் 14:27
-நேர்மையின்மை: அப்போஸ்தலர் 5:3-4; நீதிமொழிகள் 21:6
-“உடனடியாக ஐசுவரியவானாகும்” திட்டங்கள்: நீதிமொழிகள் 28:20
-கடன்பெற்று மீள செலுத்தாதிருத்தல்: சங்கீதம் 37:21
-மற்ற மக்களுடைய கடனுக்காக உத்தரவாதப்படுத்தல்: நீதிமொழிகள் 6:1; 11:15; 22:26
-தனிப்பட்ட தீய நடத்தைகள்: நீதிமொழிகள் 23:21
-நிதி சித்தியை தாக்கம்செலுத்தும் கீழ்ப்படிவு இன்மை: நீதிமொழிகள் 13:18
-பணம் பறித்தல்: நீதிமொழிகள் 10:22; 1 தீமோத்தேயு 6:10
-நியாயமான ஊதியத்தை செலுத்தாதிருத்தல்: எரேமியா 22:13
-பேராசை: நீதிமொழிகள் 28:22

-தேவனுடைய அறிவுறுத்தல்களை மறுத்தல்: நீதிமொழிகள் 13:18
-தனிப்பட்ட நலனுக்காக மாபெரும் காணிக்கையை பெறுதல்: 1 சாமுவேல் 2:29
-காணிக்கை கொடாமலிருத்தல்: நீதிமொழிகள் 11:24

**நீங்கள் கொடுப்பதில் விசுவாசமுள்ளவர்களாக இருப்பதால் ஆவிக்குரிய முதிர்ச்சியை அடைவீர்கள்:**
லூக்கா 16:11

7. நீதிமொழிகளின் புத்தகம் முழு வேதாகமத்திலும் மாபெரும் சித்தியுள்ள கொள்கைகள் சில கொண்டுள்ளன. ஒவ்வொரு நாளும் ஒரு அதிகாரத்தை வாசியுங்கள், அவ்வாறாயின் ஒவ்வொரு மாதமும் ஒருமுறை புத்தகத்திற்கூடாக நீங்கள் செல்லலாம். உங்களுடைய வேதாகமத்தில் வெற்றியுள்ள கொள்கைகளை குறித்துக்கொண்டு அவைகளை தியானியுங்கள். உங்களுடைய வாழ்க்கையிலும் ஊழியத்திலும் அவைகளை இணைத்துக்கொள்ளுங்கள்.

8. வெற்றி மற்றும் செழிப்பிற்கான சில நேரடியான வேத வசனங்கள் தரப்பட்டுள்ளன:

-உபாகமம் 29:9
-யோசுவா 1:8-9
-2 நாளாகமம் 31:21; 32:30
-1 இராஜாக்கள் 2:3
-நெகேமியா 1:11; 2:20
-சங்கீதம் 1:3; 73:12; 122:6
-நீதிமொழிகள் 28:13
-பிரசங்கி 7:14; 11:6
-ஏசாயா 54:17; 55:11
-3 யோவான் 2

9. எசேக்கியேலிடம் வெற்றியிற்கான நான்கு கட்ட திட்டங்கள் காணப்பட்டன. அவர்

-தேவனை நம்பினார்.
-அவரோடு உபவாசித்து ஜெபித்தார் (நெருங்கிய உறவு).
-அவரை பின்பற்றினார்.
-அவருடைய கட்டளைகளை வைத்திருந்தார்.

இதன்காரணமாக, அவர் செய்த யாவற்றிலும் அவர் சித்தியடைந்தார்.

# அதிகாரம் பதிமூன்று

## கிரயத்தை கணக்கிடல்

**குறிக்கோள்கள்:**

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ தலைமைத்துவத்தின் கிரயத்தை மூன்று அம்சங்களில் சுருக்கமாக்கவும்,
- ☐ ஆவிக்குரிய தலைமைத்துவத்தின் உண்மையான பரீட்சையை இனங்காணவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். (மத்தேயு 16:24)**

### அறிமுகம்

இந்த பாடத்தில் சரியான தலைமைத்துவத்திற்கூடாக ஆவிக்குரிய முகாமைத்துவம் குறித்து நீங்கள் கற்றீர்கள். நீங்கள் எவ்வாறு நல்ல உக்கிராணக்காரராகவும், ஊழியன் மற்றும் மேய்ப்பனைப்போல் வழிநடத்தல் குறித்தும் கற்றீர்கள்.

நீங்கள் தலைவர்களுடைய இலக்குகளையும் தகுதிகளையும், அபிஷேகத்தின் முக்கியத்துவத்தையும், தீர்மானம் எவ்வாறு மேற்கோள்வது மற்றும் பிரச்சினைகளை தீர்ப்பது குறித்து கற்றீர்கள். நீங்கள் வெற்றியின் கொள்கைகளை படித்து, தோல்வியிற்கு விளைவான காரியங்களை குறித்து எச்சரிக்கை அடைந்தீர்கள். அத்தோடு கூட தலைவர்களையும் பின்பற்றுவோரையும் எவ்வாறு பயிற்றுவிக்க வேண்டும் என்பதையும் நீங்கள் கற்றீர்கள்.

ஒரே ஒரு கேள்வி மீதமாகவுள்ளது: ஆவிக்குரிய தலைவர் என்ற வகையில் ஊழியத்தின் உயர் கிரயத்தை செலுத்த நீங்கள் ஆயத்தப்பட்டுள்ளீர்களா?

### கிரயத்தை கணக்கிடல்

ஆவிக்குரிய தீர்மானங்களை நீங்கள் மேற்கொள்ளும் முன்னர் கிரயத்தை கணக்கிடும் முக்கியத்துவத்தை இயேசு வலியுறுத்தினார். அவர் இரண்டு இயற்கையான உதாரணங்களை பயன்படுத்தினார், கோபுரத்தை கட்டும் ஓர் மனிதன் மற்றும் யுத்தத்திற்கு செல்லும் இராஜா:

> **உங்களில் ஒருவன் ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்து, அஸ்திபாரம் போட்டபின்பு முடிக்கத் திராணியில்லாமற்போனால், பார்க்கிறவர்களெல்லாரும்:**
>
> **இந்த மனுஷன் கட்டத்தொடங்கி முடிக்கத் திராணியில்லாமற்போனான் என்று சொல்லித் தன்னைப்**

**பரியாசம்பண்ணாதபடிக்கு, அதைக் கட்டித் தீர்க்கிறதற்குத் தனக்கு நிர்வாகமுண்டோ இல்லையோ என்று முன்பு அவன் உட்கார்ந்து செல்லுஞ்செலவைக் கணக்குப்பாராமலிருப்பானோ?**

**அன்றியும் ஒரு ராஜா மற்றொரு ராஜாவோடே யுத்தஞ்செய்யப் போகிறபோது, தன்மேல் இருபதினாயிரம் சேவகரோடே வருகிற அவனைத் தான் பதினாயிரம் சேவகரைக்கொண்டு எதிர்க்கக் கூடுமோ கூடாதோ என்று முன்பு உட்கார்ந்து ஆலோசனைபண்ணாமலிருப்பானோ?**

**கூடாதென்று கண்டால், மற்றவன் இன்னும் தூரத்திலிருக்கும்போதே, ஸ்தானாபதிகளை அனுப்பி சமாதானத்துக்கானவைகளைக் கேட்டுக்கொள்வானே. (லூக்கா 14:28-32)**

இயேசு இந்த உதாரணங்களின் மூலமாக ஆவிக்குரிய அர்ப்பணிப்பை செய்வதற்கு மூன்னர் நீங்கள் கிரயத்தை கணக்கிடும் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். சாதாரணமாக ஆவிக்குரிய தலைவராக சேவிப்பதற்கான கிரயம் என்ன?

## தலைவர்களுக்கான மூன்று நிலைகள்

உங்களுடைய வேதாகமத்தில் லூக்கா 9:57-62ஐ வாசியுங்கள். இந்த பந்தியில் சீஷர்களுக்காக வேண்டும் மூன்று மனிதர்களை இயேசு சந்தித்தார். இந்த ஒவ்வொரு சீஷர்களுக்குள்ளும், இயேசு ஆவிக்குரிய தலைமைத்துவத்திற்கான கிரயத்தின் வித்தியாசமான நிலைகளை வெளிப்படுத்தினார்:

### கவனிக்கத்தக்க கிரயம்: (லூக்கா 9:57-58)

முதலாவது மனிதன் சுய-முயற்சி காரணமாக சீஷராக மாறுவதற்கு முயற்சி செய்தார். அவர் இயேசுவின் அழைப்பிற்காக காத்திருக்கவில்லை. சீஷத்துவம்போல, தலைமைத்துவமும் மனிதர் தேவனுக்காக ஏற்படுத்தும் நிவேதனம் அல்ல. அது தேவனால் மனிதனுக்கு அழைக்கப்பட்ட அழைப்பாகும். நீங்கள் சுய-முயற்சி காரணமாக வழிநடத்துவதற்கு முயன்றால், நீங்கள் தோல்வியடைவீர்கள். நீங்கள் அழைக்கப்பட்டு தேவனிடமிருந்து அபிஷேகம் பெறப்படல் வேண்டும். இயேசு அந்த மனிதனுக்கு கூறினார், “நீ என்னை பின்பற்றி வந்தால், நீ முகங்கொடுப்பது இதுவே ஆகும்.” தலைமைத்துவத்தின் கிரயமானது ஊழியத்தோடு கூட பலியையும் உள்ளடக்குகின்றது:

**அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம் நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். (1 யோவான் 3:16)**

தலைமைத்துவத்திற்கான கிரயம் தனிமையையும் உள்ளடக்குகின்றது. அப்போஸ்தலனாகிய பவுல் கூறினார்:

**ஆசியா நாட்டிலிருக்கிற யாவரும் அவர்களில் பிகெல்லு எர்மொகெனே முதலாய் என்னைவிட்டு விலகினார்களென்று அறிந்திருக்கிறாய். (2 தீமோத்தேயு 1:15)**

தலைவரும் கூட புறக்கணிப்பு மற்றும் கண்டனத்தை அனுபவிக்க வேண்டும்:

**அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. (யோவான் 1:11)**

தலைவர் கூட துன்புறுத்தலை அனுபவிக்க வேண்டும். 2 கொரிந்தியர் 11:23-27ல் பவுல் அனுபவித்த கோரமான காரியங்களை வாசியுங்கள்.

தலைவருக்கு அநேக கடமைகள் உண்டு:

**இவை முதலானவைகளையல்லாமல், எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது. (2 கொரிந்தியர் 11:28)**

ஓர் தலைவர் ஒழுக்கமுள்ளவராக இருத்தல் வேண்டும்:

> **மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன். (1 கொரிந்தியர் 9:27)**

ஓர் தலைவரானவர் அவருடைய ஆவிக்குரிய அழைப்பின் பெறுமதியில் நடக்க மாபெரும் பொறுப்பை உடையவராவார்:

> **இப்படிப்பட்ட ஊழியத்தை உடையவர்களாகிய நாங்கள் இரக்கம் பெற்றிருப்பதால் சோர்ந்துபோகிறதில்லை.**
>
> **வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து, தந்திரமாய் நடவாமலும், தேவ வசனத்தைப் புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம். (2 கொரிந்தியர் 4:1-2)**
>
> **ஆதலால், கர்த்தர்நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து... (எபேசியர் 4:1)**

## சரியான முன்னுரிமைகள்: (லூக்கா 9:59-60)

இரண்டாவது மனிதன் இயேசுவினால் "பின்பற்றிவரும்படி" அழைக்கப்பட்டார். நீங்கள் கற்றதுபோல், "பின்பற்றுதல்" என்பதின் அர்த்தம், ஒரு உதாரணத்தை பின்பற்றும்படியாக, முன்னால் செல்லும் ஒருவருக்கு பின் வருதலாகும். இது நம்பிக்கை மற்றும் கீழ்ப்படிவு ஆகிய இரண்டையும் உள்ளடக்குகின்றது.

இயேசு அவருடைய 12 சீஷர்களையும் அழைத்தபோது, அவர்களை வந்து பின்பற்றும்படி கூறினார். அவர் மேலோட்டமான வாழ்க்கையின் பாதையை காட்டவில்லை. அவர் அவர்களுக்கு ஒரு திட்டத்தின் விபரிப்புக்களை கொடுக்கவில்லை. சீஷர்கள் தனிமையான அழைப்பின் காரணமாக பழைய வாழ்க்கையை பின்பதாக விட்டுவிட வேண்டும். தீர்மானங்கள், பிரிவுகள், தியாகங்கள் இவைகள் தெரிவதற்கு தேவைப்படாமல் இருக்கலாம்.

உலகத்தின் ஒருவரின் பாதுகாப்பற்ற கண்களிலிருந்து பாதுகாப்பான வாழ்க்கையிற்கு விட்டுக்கொடுக்கும் பின்பற்றுனர் தலைவர் ஆவார். அர்ப்பணிப்பானது ஒரு திட்டம் அல்ல, ஆனால் அது ஓர் நபருக்கானது. அந்த நபர் தேவனாகிய இயேசு கிறிஸ்துவே ஆகும். லூக்கா பந்தியில் பின்பற்றும்படி அழைப்பு பெற்ற இந்த மனிதனுடைய பிரதியுத்தரவானது "முன்பு போய்... எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும்..." அவருக்கு இயேசுவை பின்பற்ற வேண்டி இருந்தது, ஆனால் அது அவருடைய முதன்மையான முன்னுரிமை அல்ல.

இயேசு அந்த நபர் தனது உறவினர்களுடைய தேவைகளை மறுக்கும்படி ஒருபோதும் பரிந்துரைக்கவில்லை (யோவான் 19:25-27ஐ பார்க்கவும்). இந்த கதையில் வலியுறுத்தப்பட்டிருக்கும் முன்னுரிமையானது அதன் காரியமாக இருக்கின்றது. இந்த மனிதன் முதலாவதாக "என் தகப்பனை அடக்கம்பண்ண" வேண்டும்படி கூறுகின்றார். பழைய ஏற்பாட்டு காலங்களில் ஒரு நபர் "தன் தகப்பனை அடக்கம்பண்ண" என்று தான் காத்திருப்பதற்காக கூறுவதாவது, அவருடைய தகப்பனார் மரித்திருக்கும்படியான அர்த்தத்தின் அவசியம் இல்லை. இதன் அர்த்தமானது அவருக்கு சொந்தமான சொத்துரிமைகளை பெறும்பொருட்டு அவருடைய தகப்பன் மரிக்கும்வரை அவர் காத்திருக்க வேண்டும் என்பது அவசியமாகும். ஆகவே, இந்த மனிதன் இந்த தவிர்ப்பை மேற்கொள்ளும் பொருட்டு, அவர் தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் அழைப்பிற்கு முன் அவருடைய எதிர்கால பரம்பரையுரிமையை வைக்கின்றார். கடினமான சூழ்நிலையின் போதான அவரை பின்பற்றி தலைவராக மாறும்படியாக மனிதனை இயேசு அழைக்கும்போது, அந்த அழைப்பிற்கு முன்பதாக ஒன்றையும் வைக்க முடியாது.

இன்னொரு பந்தியில், சரியான முன்னுரிமைகளின் முக்கியத்துவத்தின் அதிகமான விரிவை இயேசு விபரிக்கின்றார்:

**அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். (மத்தேயு 16:24)**

நாம் சுய புறக்கணிப்பை எடுக்கும்போது சுய-புறக்கணிப்பானது கண்டிப்பாக வரல் வேண்டும். பழைய சுயநலமும் பாவமுள்ள இயல்பும் புறக்கணிக்கப்படல் வேண்டும். (இந்த பகுதியில் பவுலினுடைய கடினத்தை குறித்து ரோமர் 7-8ல் வாசியுங்கள்.) சுயம் மரிக்கும்போது, சிலுவையானது உங்களுடைய முன்னுரிமையாக மாற்றப்படும். சிலுவையானது தியாகம், வலி, புறக்கணிப்பு, அவமதிப்பு மற்றும் தேவனுடைய சித்தத்தை செய்யும்போது உள்ளடங்கும் கடினத்திற்கான அடையாளமாக இருக்கின்றது. சுவிசேஷத்தின் நிமித்தம் இரத்தசாட்சியான மரணத்தினாலான அழைப்பிற்கான அர்த்தமாக கூட சிலுவை இருக்கின்றது.

“சிலுவையை எடுத்துக்கொள்ளல்” என்பது வாழ்க்கையின் சுமையை குறிக்காது. இவைகள் அனைத்து மனிதர்களுக்கும் பொதுவானது ஆகும். அவைகள் துன்பங்கள், சோதனைகள், ஏமாற்றங்கள் மற்றும் மனச்சோர்வுகள் ஆகியவை எமக்கு வரும் ஏனென்றால் பாவமுள்ள உலகத்தில் வாழ்வதாலாகும். விசுவாசிகளா-னவர்கள் இவ்வாறான வாழ்க்கையின் சுமைகளிலிருந்து விலக்கப்பட்டவர் அல்ல. அவர் வியாதி, விபத்து, தீ விபத்து, இயற்கையான இடர்களை அனுபவிப்பார், ஏனென்றால் அவர் பாவத்தினால் அழிந்த உலகத்தில் வாழ்கின்றபடியாலாகும். ஆனால் இந்த சுமைகள் “சிலுவையை எடுத்துக்கொண்டு” என்று அர்த்தம் அல்ல. சிலுவை-வயை எடுத்துக்கொள்ளல் தன்னிச்சையான செயற்பாடாகும், இது வாழ்க்கையின் சுமைகளினால் திணிக்கப்பட்ட ஒன்று அல்ல. இது தேவனுடைய சித்தத்தை தொடர்ச்சியாக (தினம்) செய்யும்பொருட்டு சுய வாஞ்சைகளை புறக்கணிக்கும்படியான தீர்மானமாகும்.

இயேசு கூறினார், “தனது சிலுவையை எடுத்துக்கொண்டு எனக்கு பின்வராதவன், என்னுடைய சீஷனாயிருக்க முடியாது.” சிலுவையை எடுத்துக்கொள்ளுதல் என்பது மனித இயற்கையில் விரும்பப்படுவது அல்ல ஏனென்றால் அது சுய புறக்கணிப்பை உள்ளடக்குகின்றது. அது கிறிஸ்துவின் பொருட்டு தன்னார்வமாக செய்யப்பட வேண்டியது ஆகும்.

சிலுவையை எடுத்துக்கொள்ளுவதற்கு, உலகத்தின் காரியத்திலிருந்து உங்களுடைய கைகளை வெறுமையாக்க வேண்டும். உங்களுடைய இருதயமானது பணம் மற்றும் பொருள் காரியங்களில் ஏற்படுத்திக்கொள்ளப்படுமாயின், உங்களுடைய கரமானது சிலுவையை எடுத்துக்கொள்ளும்படியாக அதிக பாரமானதாகும். உங்களுடைய நேர-மானது பிரியமான காரியங்களால் எடுத்துக்கொள்ளப்படுமாயின், அது மாம்சத்தை பிரியப்படுத்தும் காரியமாயின், உங்களுடைய கரமானது சிலுவையை எடுத்துக்கொள்ளும்படியாக அதிக பாரமானதாகும். சிலுவையை எடுத்துக்கொண்டு சுயத்தை புறக்கணித்த பின், அடுத்த படிமுறை பின்பற்றுதலாகும். நீங்கள் பழைய வாழ்க்கை முறைமை மற்றும் பாவமுள்ள உறவுமுறைகளை பின்பதாக விட்டுவிட வேண்டும்.

ஒன்று நடைபெறும்பொருட்டு உட்கார்ந்திருத்தல் மற்றும் காத்திருப்பதால் நீங்கள் ஒருபோதும் தலைவராக மாற முடியாது. நீங்கள் முதலாவது காரியங்களை எடுத்துக்கொள்ள வேண்டும்: உங்களை புறக்கணித்து, உங்களுடைய சிலுவையை எடுத்துக்கொண்டு, பின்பற்றுங்கள். மத்தேயு தனது வரி மேசையிலும் மற்றும் பேதுரு தனது வலைகளோடும் இருந்திருக்கலாம். அவர்கள் இருவரும் நேர்மையான தங்களுடைய வர்த்தகத்தை தொடர்ந்து, ஆவிக்குரிய அனுபவத்தை தொடர்ச்சியாக அனுபவித்திருக்கலாம். ஆனால் அவர்களுக்கு ஆவிக்குரிய தலைவர்களாக மாறுவதற்கு, அவர்களுக்கு பழைய சூழ்நிலைகளை கைவிட்டு, புதியதொன்றிற்குள் பிரவேசிக்க வேண்டி இருந்தது. மத்தேயு தனது வரி மேசைகளையும் பேதுரு தனது வலையையும் விட்டுவிட வேண்டி ஏற்பட்டது.

இதன் அர்த்தமானது ஒவ்வொருவரும் தமது சொந்த வேலையையும் தனது வீட்டையும் தலைவராக மாறுவதற்கு விட்டுவிட வேண்டும் என்பது அவசியம் அல்ல. அவன் அர்த்தம் என்ன என்பதாவது அதற்கு வாழ்க்கைமுறையில் மாற்றம் வேண்டும் என்பதாகும். சில சந்தர்ப்பங்களில் சுவிசேஷத்தின் பொருட்டு வீட்டை, வேலையை, விரும்பிய ஒருவரை விட்டுவிட வேண்டிய அர்த்தத்தையும் கூட அது உள்ளடக்கும். நீங்கள் இயேசு நடத்தும் எவ்விடத்திற்கும் பின்தொடர வேண்டும்.

சரியான முன்னுரிமை என்பது இந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளுவதற்கு அனைத்தையும் நீங்கள் கைவிட

வேண்டும் என்பதாகும்:

> **அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். (லூக்கா 14:33)**

மற்றவர்களுக்கு சேவித்தல் முன்னுரிமையாக மாறுதல் வேண்டும்:

> **உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது: உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்.**
>
> **உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்.**
>
> **அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார் என்றார். (மத்தேயு 20:26-28)**

தேவனுடைய இராஜ்ஜியமானது உங்களுடைய முக்கியமான முன்னுரிமையாக மாறுதல் வேண்டும்:

> **ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள்.**
>
> **முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். (மத்தேயு 6:31,33)**

### முழுமையான நோக்கம்: (லூக்கா 9:61-62)

லூக்கா 9:57-62ல் உள்ள மூன்றாவது மனிதன் பின்தொடர வேண்டினார், ஆனால் அவருக்கு தன்னுடைய சொந்த காரியங்களை செய்வதற்கு வேண்டி இருந்தது. அவருடைய குடும்பத்திற்கான விவகாரமான காரியங்கள், சாதாரணமாக செய்யப்படவேண்டியவைகள் ஆகும், ஆனால் இயேசு அவரை அழைத்தார். அவருடைய வாழ்க்கையின் உண்மையான குறிக்கோள் என்ன? அவருக்கு தலைவராக மாற வேண்டி இருந்ததா அல்லது வாழ்க்கையிற்காக அவருடைய சொந்த திட்டங்களை பின்பற்ற வேண்டி இருந்ததா? இந்த மனிதருடைய வாழ்க்கையின் குறிக்கோளானது இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. கிழிந்த பழைய வாழ்க்கையிற்கு இடையிலும், இயேசு அழைத்த புதிய வாழ்க்கையிலும் அவர் பிடித்துக்கொண்டிருந்தார். அவருடைய வாழ்க்கையின் முழுமையான நோக்கமானது இயேசுவினுடைய அழைப்பாக இருக்கவில்லை. தலைமைத்துவத்தின் உங்களுடைய அர்ப்பணிப்பானது பூரணத்துவமாக இருத்தல் வேண்டும். இது உங்களுடைய வாழ்க்கையின் முழுமையான நோக்கமாக மாற வேண்டும்.

## ஆவிக்குரிய தலைமைத்துவத்தின் உண்மையான பரீட்சை

தலைமைத்துவத்தின் உண்மையான பரீட்சையானது உங்களுடைய பின்பற்றுவோரோடு நீங்கள் தொடர்ச்சியாக பிரசன்னமாயிருக்காத போது என்ன நடைபெறும் என்பதாகும். நீங்கள் அவர்களுக்கு என்ன போதித்தீர்கள் என்பதில் அவர்கள் தொடர்ந்தும் விசுவாசமுள்ளவர்களாக இருப்பார்களா? உங்களுடைய பௌதீக பிரசன்னம் இல்லாமல் அவர்கள் ஆவிக்குரிய முதிர்ச்சிக்காக தொடர்வார்களா? அவ்வாறு காணப்படுமாயின், ஆவிக்குரிய தலைமைத்துவத்தின் உண்மையான பரீட்சையை நீங்கள் சித்தி அடைந்து விட்டீர்கள்.

## இறுதியான சவால்

தலைவர் என்ற வகையில் உங்களுடைய மாபெரும் பொறுப்பை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்:

**சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான். (லூக்கா 6:40)**

பின்பற்றுபவர்ளோடு பிரச்சினைகளினால் ஊக்கம் அற்று போக வேண்டாம். இயேசு குறித்த விதமான பிரச்சினைகளை அனுபவித்தார். ஓர் சந்தர்ப்பத்தில், பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் அவர்களை ஏற்றுக்கொள்ளாக சமாரியா கிராமத்தை அழிக்கும்படியாக பரலோகத்திலிருந்து அக்கினியை அழைப்பிக்க வேண்டியதான வெறுக்கத்தக்க குறிக்கோளுடையவர்களாக காணப்பட்டனர் (லூக்கா 9:51-55). பேதுரு மூன்று தடவைகள் இயேசுவை மறுதலித்தார் (லூக்கா 22:54-62). அனைத்து மூன்று பேரும் கெத்சமனே தோட்டத்தில் அவர்கள் மூவருக்கும் ஜெபிக்கும்படியாக கூறப்பட்டபோதும் அவர்கள் தூங்கினார்கள் (லூக்கா 22:45-46).

ஆனால் இந்த சீஷர்கள் இயேசுவின் ஊழியத்திலும் நேரத்தின் முதலீட்டிலும் பெறுமதியுள்ளவர்களாக இருந்தனர். அவர்கள் தவறுகளையும் தோல்விகளையும் உடையவர்களாயிருந்தபோதிலும், விசுவாசமுள்ள மனிதர்களாக நிரூபித்தார்கள். அவர்களுக்கூடாக, உலக ஜாதிகளுக்கு சுவிசேஷம் பரப்பப்பட்டது. நீங்கள் ஆவிக்குரிய தலைலவர் என்ற வகையில் உயர் கிரயத்தை செலுத்த சித்தமுள்ளவர்களாக இருப்பின், குறிப்பிட்ட அர்ப்பனித்த பின்பற்றுவோர்களை தேவனுக்காக எழுப்புவதற்கு பயன்படுத்துவதற்கு உங்களால் கூட அது இயலுமையான காரியம் ஆகும்.

நான் ஓர் அழைப்பை கேட்டேன் “வந்து பின்பற்று”.. அவ்வளவும் தான் அனைத்தும்.
உலகத்தின் மகிழ்ச்சி ஆழமாக வளர்ச்சியுற்றது;
என் ஆத்துமா அவர் பின் சென்றது.
நான் எழுந்து சென்று பின்பற்றினேன்... அவ்வளவும் தான் அனைத்தும்.

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

2. இந்த பாடத்தில் கலந்துரையாடப்பட்ட தலைவர்களுக்கான கிரயத்தின் மூன்று அம்சங்கள் என்ன?

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

3. ஆவிக்குரிய தலைமைத்துவத்தின் உண்மையான பரீட்சை என்ன?

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. கீழ்வரும் வசனங்களை படித்து, தலைமைத்துவ நிலையில் தலைமைத்துவ நிலையில் சேவிப்பதற்கான இந்த ஒவ்வொரு மனிதருக்கான கிரயம் எவ்வளவு என கருத்திற் கொள்ளுக:

   யோசேப்பு: ஆதியாகமம் 37-50

   மோசே: யாத்திராகமத்தின் புத்தகம்

   ஓசியா: ஓசியாவின் புத்தகம்

   எசேக்கியேல்: எசேக்கியேல் 3

   அப்போஸ்தலனாகிய பவுல்: அப்போஸ்தலர் 9-28

2. இப்பொழுது நீங்கள் முகாமைத்துவத்திற்கான இந்த கற்றலை முடித்துள்ளீர்கள், நாம் சர்வதேச அறுவடை-நேர நிறுவனத்தின் பாடமான “சுற்றுச்சூழல் ஆய்வு” மற்றும் “குறிக்கோள்களிலான முகாமைத்துவம்” ஆகியவற்றை பெறும்படிக்கு உங்களுக்கு நாங்கள் பரிந்துரைக்கின்றோம்.

   இந்த பாடங்களானது வல்லமையுள்ள ஊழியத்திற்கு தேவையான தலைமைத்துவம், திட்டமிடல், அமைப்புக்கள் போன்றவற்றை நீங்கள் விளங்கும்படியாக இவைகள் சேர்க்கும்.

## பிற்சேர்க்கை

இந்த பிற்சேர்க்கையானது வேதாகமத்தில் முக்கியமான வாழ்க்கை குணாதிசயங்களை படிப்பதினால் முகாமைத்துவத்தின் கொள்கைகளை குறித்து அதிகம் கற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தை கொடுக்கின்றது.

“சுயசரிதை” என்பது யாரோ ஒருவருடைய வாழ்க்கையின் கதையாகும். நீங்கள் வேதாகமத்தில் முக்கியமான நபரின் வாழ்க்கையை கற்கும்போது, நீங்கள் “சுயசரிதையின் கற்றலை” செய்கின்றீர்கள். வேதாகமத்தின் குணாதிசயத்தின் வாழ்க்கையை கற்பதினால் இந்த அனுபவங்களிலிருந்து நீங்கள் கற்கலாம். வேதாகமம் குறிப்பிடுகின்றது:

> **இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது: உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது. (1 கொரிந்தியர் 10:11)**

வேதாகமத்தில் வாழ்க்கை குணாதிசயங்களால் நடைபெற்ற சம்பவங்களானது உங்களுடைய நன்மையிற்காக பதிவுசெய்யப்பட்டுள்ளது. அவர்களுடைய அனுபவங்களானது தலைமைத்துவம் குறித்தான உங்களுடைய மாபெரும் ஆவிக்குரிய பாடத்தை கற்றுக்கொடுக்கின்றது. தலைவர் என்ற ரீதியில் அவர்களுடைய தோல்விகளை கவனிப்பதால் நீங்கள் தவிர்க்கவேண்டிய தவறுகளை குறித்து கற்றுக்கொள்ள முடியும். தலைவர் என்ற ரீதியில் அவர்களுடைய வெற்றிகளை கவனிப்பதால் உங்களுடைய சொந்த வாழ்க்கையில் தலைமைத்துவத்திற்கான நேரான தகுதிகளை உங்களால் விருத்தி செய்து கொள்ள முடியும்.

சுயசரிதையான கற்றலை செய்யும்போது பின்பற்றவேண்டிய நான்கு படிமுறைகள் இங்கு தரப்பட்டுள்ளன:

### படிமுறை ஒன்று: கற்கவேண்டிய நபரை தெரிந்தெடுங்கள்

உங்களுக்கு விசேடமாக பிடித்த நபரை நீங்கள் தெரிந்தெடுக்க வேண்டும். எபிரெயர் 11, கலாத்தியர் 3:7; லூக்கா 4:27ல் கொடுக்கப்பட்ட பட்டியல்களிலிருந்து ஓர் நபரை நீங்கள் தெரிவு செய்ய வேண்டும். நீங்கள் தற்போது வாசிக்கும் குறித்த வேதாகம புத்தகங்களிலிருந்து ஓர் நபரை நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

அனைத்திற்குமான மாபெரும் தலைவர் இயேசு கிறிஸ்துவே என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். தலைவருக்கான சரியான உதாரணத்திற்காக அவருடைய வாழ்க்கையை நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

நீங்கள் ஒரு நபரை படிப்பதற்கு தெரிவு செய்யும்போது, பெயர்களை குழப்பாதிருக்கும்படி கவனத்திற் கொள்ளுங்கள். உதாரணத்திற்கு, வேதாகமத்தில் 30 சகரியாக்களும், 20 நாத்தான்களும், 15 யோனத்தான்களும், 8 யூதாஸ்களும், 7 மரியாள்களும், 5 யாக்கோபுகளும், 5 யோவான்களும் காணப்படுகின்றன. நீங்கள் தேர்ந்தெடுத்த நபரை குறித்து நீங்கள் கற்கும் அனைத்து வசனங்களும் அதே பெயரோடுள்ள வேறொரு தனிநபர் இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

சில நபர்களுக்கு ஒரு பெயரை விட அதிகமான பெயரை கூட கொண்டிருக்கின்றனர். உதாரணத்திற்கு, பழைய ஏற்பாட்டில் யாக்கோபுடைய பெயரானது இஸ்ரவேல் என மாற்றப்பட்டிருக்கின்றது மற்றும் அபிராமின் பெயர் ஆபிரகாமாக மாற்றப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் சவுலினுடைய பெயர் பவுலாக மாற்றம்பெற்றிருக்கின்றது.

### படிமுறை இரண்டு: தகவல்களை சேகரியுங்கள்

நீங்கள் படிக்கும் நபரை குறித்து வேதாகம பதிவுகள் அனைத்தையும் வாசியுங்கள். உங்களிடம் வேதாகம வசனங்களின் புத்தகங்கள் கிடைக்கப்பெறுமானால், இவைகளை மேலதிக தகவல்களாக பயன்படுத்துங்கள். உதாரணத்திற்கு, உங்களிடம் வேதாகம அகராதி காணப்படுமாயின் குறித்த நபருக்கான பெயரை பார்த்து, வேதாகமத்தில் அவன் / அவளை குறித்தான அனைத்து வசனங்களையும் கண்டுக்கொள்ளும்படியாக பட்டியலிடுங்கள்.

உங்களிடம் அகராதி காணப்படாதவிடத்து, வேதாகமத்திலிருந்து நேரடியாக வசனங்களை சேகரியுங்கள். குறித்த நபரை குறித்தான அநேக வசனங்கள் ஓர் புத்தகத்திற்குள் அல்லது தொடர்ச்சியான வேதாகம புத்தகங்களில் காணப்படுகின்றது. நபரை குறித்து அனைத்து வசனங்களையும் பட்டியலிட்டு, பின்பு ஒவ்வொரு வசனங்களையும் வாசித்து படியுங்கள்.

**படிமுறை மூன்று: தகவல்களை ஆய்வு செய்யுங்கள்**

நீங்கள் கற்பதற்கு சேர்க்க வேண்டிய சில தகவல்களை கீழ்வரும் பட்டியல் அடையாளப்படுத்தும். வேதாகமானது அனைத்து சந்தர்ப்பங்களிலும் இந்த அனைத்து காரியங்களுக்கான தகவல்களை கொண்டிராது, ஆனால் அனைத்தையும் உள்ளடக்க முயற்சி செய்யுங்கள், அது நீங்கள் கற்கும் நபரை குறித்து வெளிப்படுத்துகின்றது. இந்த சுயசரிதையிற்கான தகவல்களுக்காக பாருங்கள்:

பெயர் மற்றும் பெயருடைய அர்த்தம்.

உறவினர்கள்: பெற்றோர், சகோதரர் மற்றும் சகோதரிகள், முற்பிதாக்கள், பிள்ளைகள்.

பிறப்பு: இடம், பிறப்பின் முக்கியத்துவம், பிறப்பின் போதான அசாதாரண நிகழ்வுகள்.

குழந்தைப்பருவம் மற்றும் ஆரம்ப பயிற்சி.

பூகோள அமைப்பு: இந்த நபருடைய வாழ்க்கை நடைபெற்ற கதை எங்கு நடைபெற்றது?

நண்பர்கள் மற்றும் அயலவர்கள், தனிப்பட்ட உறவுகள்.

தொழில் அல்லது உத்தியோகம்: அவர்கள் செய்த நிலை அல்லது அலுவலக தொழில் என்ன? அவர்கள் தங்களுடைய ஜீவியத்திற்காக எவ்வாறு சம்பாதித்தார்கள்?

பௌதீக விபரிப்பு.

நேர்மறையான குணாதிசயம் மற்றும் தலைமைத்துவ பண்புகள்.

மறையான குணாதிசயம் மற்றும் தலைமைத்துவ பண்புகள்.

குறிப்பிடத்தக்க சம்பவங்கள்:

தேவனுடனான முதலாவது சந்திப்பு.

உரையாடல்.

ஊழியத்திற்கான அழைப்பு.

நபருடைய வாழ்க்கையின் மாபெரும் நெருக்கடி அல்லது திருப்பு முனை.

தலைவர் என்ற வகையில் அவர்கள் சித்திப்பெற்ற வழிகள்: அவர்களுடைய சித்திகாக ஏற்படுத்தியவைகள் என்ன?

தலைவர் என்ற ரீதியில் அவர்கள் தோல்வியுற்ற முறைகள்: அவர்களுடைய தோல்வி ஏற்படுத்தியவைகள் எவைகள்? அதன் விளைவுகள் என்ன? அதை குறித்து அவர்கள் என்ன செய்தார்கள்?

மரணம்: எப்பொழுது, எங்கே, அசாதாரண சூழ்நிலைகள்.

**படிமுறை நான்கு: நீங்கள் கற்றவற்றை பிரயோகித்தல்**

உங்களுடைய சொந்த வாழ்க்கையில் இந்த நபரை குறித்து நீங்கள் கற்றவற்றை பிரயோகித்தல்:

1. தலைவர் என்ற வகையில் அவர்களுடைய நேராக குணாதிசயங்கள் என்ன? உங்களுடைய சொந்த வாழ்க்கையில் அவைகளை விருத்தி செய்ய உதவும்படியாக தேவனிடம் கேளுங்கள்.

2. அவர்களுடைய மறையான குணாதிசயங்கள் என்ன? உங்களுடைய சொந்த வாழ்க்கையில் இந்த எதாவதொன்றை நீங்கள் காண்கின்றீர்களா? அவைகளை மேற்கொள்ளும்படியாக உங்களுக்கு உதவும்பொருட்டு தேவனிடம் கேளுங்கள்.

3. தலைவர் என்ற வகையில் எந்த வழிகளில் இந்த நபர் வெற்றி பெற்றார்? நீங்கள் வெற்றியின் இந்த கொள்கைகளை பிரயோகிக்கின்றீர்களா?

4. தலைவர் என்ற வகையில் எந்த வழிகளில் இந்த நபர் தோல்வி அடைந்தார்? இந்த பிரச்சினைகள் உங்களிடமும் கூட உள்ளதா? மாற்றுவதற்கு நீங்கள் என்ன செய்வீர்கள்?

5. இந்த நபருடைய வாழ்க்கையிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட தலைமைத்துவத்தின் மாபெரும் கொள்கைகளை சுருக்கமாக ஒரு வரியில் உள்ளடக்குக. உதாரணத்திற்கு, சிம்சோனுடைய வாழ்க்கையை குறித்தான வாக்கியமானது “தோல்வியின் விளைவான ஆவிக்குரிய இணக்கம்” என கூறலாம்.

இங்கு சுயசரிதையின் கற்றலுக்கான உதரணம் தரப்பட்டுள்ளது:

## உதாரணம்: ஓர் சுயசரிதையிற்கான படிப்பு

**படிமுறை ஒன்று: கற்கவேண்டிய நபரை தெரிந்தெடுங்கள்**

சவுல் இராஜா

**படிமுறை இரண்டு: தகவல்களை சேகரியுங்கள்**

1 சாமுவேல் 9-31ல் சவுலினுடைய கதை காணப்படுகின்றது. சவுலினுடைய தகவல்களானது இந்த அதிகாரத்திலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது.

**படிமுறை மூன்று: தகவல்களை ஆய்வு செய்யுங்கள்**

பெயர் மற்றும் பெயருடைய அர்த்தம்: சவுல். அர்த்தம் “தேவனால் கேட்கப்பட்டது.” 1 சாமுவேல் 9:2

உறவினர்கள்: பெற்றோர், சகோதரர் மற்றும் சகோதரிகள், முற்பிதாக்கள், பிள்ளைகள்:

சவுல் கீஸின் குமாரன், கீஸ் அபீயேலின் குமாரன், அபீயேல் சேரோரின் குமாரன், சேரோன் பெகோராத்தின் குமாரன், பெகோராத் அபியாவின் குமாரன். கீஸ் பென்யமீன் கோத்திரத்தானும் மகா பராக்கிரமசாலியான ஒரு மனுஷனுமாவான். 1 சாமுவேல் 9:1. சவுலுக்கு மூன்று குமாரர்கள் இருந்தார்கள்: யோனத்தான், இஸ்வி, மல்கிசூவா. அவருக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள், மேரப் மற்றும் மீகாள். சவுலினுடைய மனைவியின் பேர் அகினோவாம்.

பிறப்பு: இடம், பிறப்பின் முக்கியத்துவம், பிறப்பின் போதான அசாதாரண நிகழ்வுகள்: இந்த காரணிகளை வேதாகமம் குறிப்பிடவில்லை.

குழந்தைப்பருவம் மற்றும் ஆரம்ப பயிற்சி: தன்னுடைய தகப்பனுடைய கழுதைகளை கவனித்தல்: 1 சாமுவேல் 9:3

பூகோள அமைப்பு: யூதா

நண்பர்கள் மற்றும் அயலவர்கள், தனிப்பட்ட உறவுகள்:

பேலியாளின் மக்கள் அவரை அசட்டை பண்ணினார்கள்: 1 சாமுவேல் 10:27. அவர் சேனாபதியின் தலைவரான, அப்னேருக்கு நெருக்கமானவராக இருந்தார், அவர் சவுலுடைய சிறியதகப்பனின் குமாரன்: 1 சாமுவேல் 14:50. தாவீது சவுலுடைய நண்பராக மாறினார். முதலாவதாக அவர் சவுலுக்கு பிரியமானவராக இருந்தார், பின் சவுல் பொறாமை அடைந்து அவர்களுடைய உறவானது முறிந்து போயிற்று: 1 சாமுவேல் 18:6-9. சவுல் முதலாவதாக இராஜாவாக மாறும்பொழுது “தேவனால் இருதயத்திற்கு தொடப்பட்ட” எனும் மனிதர்களுடைய குழுவை அவன் கொண்டிருந்தான். சவுல் “வலிமையான மற்றும் வீரமுள்ள” மனிதர்களை தேவனுடைய வழிகாட்டல் இன்றி சேர்க்கத்தொடங்கிய போது, அவனுடைய பிரச்சினைகள் தொடங்கின: 1 சாமுவேல் 10:26; 13:2; 14:52.

தொழில் அல்லது உத்தியோகம்: இஸ்ரவேலின் முதலாவது இராஜா.

பௌதீக விபரிப்பு: மற்ற அனைத்து மனிதர்களுடைய உயரத்திற்கு மேலாக அவனுடைய தோளானது உயரமாக இருந்தது: 1 சாமுவேல் 9:2; 10:23. அவன் “சவுந்தரியமான” என விபரிக்கப்பட்டார் இதன் அர்த்தமானது அழகுடையவர்: 1 சாமுவேல் 9:2

நேர்மறையான குணாதிசயம் மற்றும் தலைமைத்துவ பண்புகள்:

| | |
|---|---|
| -தனது குடும்பத்திற்காக கரிசனையை காட்டினார்: | 1 சாமுவேல் 9:5 |
| -“தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர்”: | 1 சாமுவேல் 9:2; 10:24 |
| -ஆவியானவர் அவருடைய இருதயத்தை மாற்றட்டும்: | 1 சாமுவேல் 10:6; 11:6 |
| -மிதமானவர் (தளவாடங்களுக்கிடையே ஒளிந்தவர்): | 1 சாமுவேல் 10:22 |
| -பழிவாங்கலை நிறைவேற்ற மறுக்கின்றவர்: | 1 சாமுவேல் 11 |
| -தலைமைத்துவம் (திரண்ட மக்கள்): | 1 சாமுவேல் 11 |
| -ஆவியின் மனிதன்: | 1 சாமுவேல் 11 |
| -உண்மையிலேயே கீழ்ப்படிவுள்ளவர்: | 1 சாமுவேல் 9:27 |
| -தெய்வீகத்துடன் தம்மை இணைத்துக் கொண்டவர்: | 1 சாமுவேல் 10:26; 11:7 |
| -தேவனுக்காக உறுதியானவர்: | 1 சாமுவேல் 10:6 |
| -உண்மையிலேயே தாழ்மையுள்ளவர்: | 1 சாமுவேல் 9:21 |

மறையான தலைமைத்துவ பண்புகள்:
தேவனை கீழ்ப்படிவதை பார்க்கிலும் அவசியமாக காணப்பற்றவற்றை செய்தவர்: 1 சாமுவேல் 13:8-13
கீழ்படியாது பொய்பேசி, பின் அதை ஏற்றுக்கொள்வதற்காக பழியை மறுத்தார்: 1 சாமுவேல் 15
தேவனுடைய மக்களை துக்கப்படுத்தினார்: 1 சாமுவேல் 15:35
தேவனை விட மனிதன் என்ன சிந்திக்கின்றார் என்பதோடு அதிகம் கவனம் செலுத்தியவர்: 1 சாமுவேல் 15:30
தேவன் தொட்ட வாத்திய குழு மனிதர்களை விட தான் தேர்ந்தெடுத்த பலமும் வீரமும் உள்ள மனிதர்களோடு மிகவும் நெருக்கமானார்: 1 சாமுவேல் 10:26; 14:52
பயமுள்ளவர்: 1 சாமுவேல் 17:11
வெளியக தோற்றத்தினால் நியாயம்தீர்க்கப்பட்டார்: 1 சாமுவேல் 17:33
பட்டயத்தையுடைய மனிதனை நம்பினார்: 1 சாமுவேல் 17:38
பொறாமை குணமுடையவர்: 1 சாமுவேல் 18:6-9
தீய ஆவி: 1 சாமுவேல் 18:10
பழிவாங்கும் ஆவி: 1 சாமுவேல் 18:11
தேவன் அபிஷேகித்தவருக்கு எதிராக சதி தீட்டினார்: 1 சாமுவேல் 18:20-30

குறிப்பிடத்தக்க சம்பவங்கள்:

| | |
|---|---|
| தேவனுடனான முதலாவது சந்திப்பு: | 1 சாமுவேல் 9:15-28 |
| உரையாடல்: | 1 சாமுவேல் 10:9 |
| ஊழியத்திற்கான அழைப்பு: | 1 சாமுவேல் 10:1 |

நபருடைய வாழ்க்கையின் மாபெரும் நெருக்கடி அல்லது திருப்பு முனை: கீழ்படிவற்று அவரிடமிருந்து இராஜ்ஜியமானது எடுத்துக்கொள்ளப்பட்டது. 1 சாமுவேல் 13

மரணம்: எப்பொழுது, எங்கே, அசாதாரண சூழ்நிலைகள். சவுல் தன்னுடைய சொந்த கைகளினால் மரித்தார். அவருடைய மூன்று மகன்கள், அவருடைய பட்டயங்களை வைத்திருப்போர் மற்றும் அவருடைய அனைத்து மனிதர்களும் பெலிஸ்தியர்களினுடான யுத்தத்தின்போது மலை.கில்போவாவில் ஒரே நாளில் மரித்தார்கள். 1 சாமுவேல் 31

**படிமுறை நான்று: நீங்கள் கற்றவற்றை பிரயோகித்தல்**

என்னுடைய சொந்த **வாழ்க்கையில் நான் பார்த்து விருத்தி செய்ய வேண்டிய சவுலினுடைய வாழ்க்கையின் நேர்மறையான தலைமைத்துவ பண்புகள்:**

ஓர் நபருக்குள் தேவ ஆவியானவர் வரும்போது அவர் “வேறொரு மனிதனாக” மாற முடியும்: 1 சாமுவேல் 10:6. நான் அந்த வகையான அபிஷேகத்தை தேவனிடமிருந்து எதிர்பார்க்க வேண்டும்.

என்னுடைய சொந்த **வாழ்க்கையில் நான் பார்த்து புறக்கணிப்பு செய்ய வேண்டிய சவுலினுடைய வாழ்க்கையின் எதிர் மறையான தலைமைத்துவ பண்புகள்:**

தேவன் தலைவர்களை அவருடைய சொந்த இருதயத்திற்கு அடுத்து வாஞ்சிக்கின்றார்: 1 சாமுவேல் 13:14. இப்பகுதியில் சவுல் தோல்வியடைந்திருப்பினும் கூட, இவ்வகையான தலைவராக இருக்க நான் வாஞ்சிக்கின்றேன். கீழ்ப்படிவின்மை: தேவன் கட்டளையிட்டதை விட அவசியமாக தோன்றுபவை அல்லது இலகுவான காரியத்தை செய்தல். என்னுடைய சொந்த பாவங்களுக்காக மற்றவர்கள் மேல் பழி வைத்தல். தேவன் என்னை பற்றி என்ன நினைக்கின்றார் என்பதைவிட மனிதன் என்ன நினைக்கின்றான் என்பதற்கு அதிகம் கரிசனை செலுத்தல். நான் சவுலினுடைய முழுமையான எதிர்மறையான பட்டியல்களின் பண்புகளை சிறப்பாக மீளாய்வு செய்து, நேரத்திற்கு நேரம் என்னுடைய சொந்த இருதயத்திலிருந்து பரீட்சிப்பேன்.

மக்களுக்கு மேலாக தலைவராக இருக்கும்படியான சவுலுக்கான தேவனுடைய அழைப்பு: 1 சாமுவேல் 10:1. இஸ்ரவேலருக்கு இராஜாவாக தேவன் இருப்பதை விட (1 சாமுவேல் 12:12-15; 10:24). அவனை ஏற்படுத்தியவர்கள் மக்களே. மக்களுடைய ஆராதனை தேவனுடைய திட்டத்திலிருந்து என்னை ஒருபோதும் திசைதிருப்பாது என்றும் நான் இருக்க கூடாததற்கு என்னை மாற்றாது என்றும் நான் மிகுந்த கவனமுள்ளவனாக இருக்க வேண்டும்.

சவுலோடு தேவன் உண்மையாகவே இருந்தபோதிலும் (1 சாமுவேல் 10:7,9; 13:14), அவர் பிற்பாடு இராஜ்ஜியத்தை இழந்தார். சவுலினுடைய பாவத்திற்கு பின்பும், இராஜ்ஜியத்தினுடைய இழப்பிற்கான தீர்க்கதரிசனத்திற்கு பின்பும் இன்னும் தேவனுடைய அபிஷேகமானது சவுல் மேல் இருந்தது என்பதை முக்கியமாக குறித்துக்கொள்ள வேண்டும் (1 சாமுவேல் 14:47). வரங்களும் தேவனுடைய அழைப்பும் மனந்திரும்புல் இல்லாமல் ஏற்படுபவையாகும் (1 சாமுவேல் 15:1). சவுல் இன்னும் தேவனுடைய சத்தத்தை கேட்டார் (1 சாமுவேல் 15:1) அவரை தொழுதார் (15:31), ஆனால் அவர் பாவத்தை அறிக்கையிடாது இராஜ்ஜியத்தை இழந்தார். தலைவராக தேவன் அபிஷேகம் பண்ணப்பட்ட மனிதரை தொடும் அபாயத்தை தாவீது உணர்ந்திருந்தார். இந்த எச்சரிக்கையை நான் கவனிக்க வேண்டும்.

**சவுலினுடைய வாழ்க்கையிலிருந்து கற்ற மாபெரும் உண்மையானது** தேவனுக்கு கீழ்ப்படிவின்மையிற்கான உண்மையாகும். இது சாமுவேலினுடைய கூற்றில் சுருக்கமாக கூறப்பட்டுள்ளது: “கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், பலிகளும் பிரியமோ? ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தல் உத்தமம்.” (1 சாமுவேல் 15:22). சவுலைக்குறித்தான தாவீதின் கூற்றில் கீழ்ப்படிவின்மையிற்கான விளைவுகள் சுருக்கமாக கூறப்பட்டுள்ளது: “பராக்கிரமசாலிகள் எவ்வாறு விழுந்துபோனார்கள்.” (2 சாமுவேல் 1:19).

**குறிப்பு: கீழ்வரும் பக்கங்களானது நீங்கள் அபிவிருத்தியடைந்து வேதாகம தலைவர்களை கற்று உபயோகிக்கும்பொருட்டான படிவங்களை கொண்டுள்ளது.**

# வேதாகம தலைவர்களின் சுயசரிதையிற்கான கற்றல்

**படிமுறை ஒன்று: கற்கவேண்டிய நபரை தெரிந்தெடுங்கள்**

“நான் கற்கப்போகின்ற தலைவரானவர்: .......................... ”

**படிமுறை இரண்டு: தகவல்களை சேகரியுங்கள்**

இந்த நபரின் வாழ்க்கையை பதிவுசெய்யப்பட்டுள்ள வேதாகம வசனங்களை பட்டியல்படுத்துங்கள்:

**படிமுறை மூன்று: தகவல்களை ஆய்வு செய்யுங்கள்**

பெயர் மற்றும் பெயருடைய அர்த்தம்:

உறவினர்கள்: பெற்றோர், சகோதரர் மற்றும் சகோதரிகள், முற்பிதாக்கள், பிள்ளைகள்.

பிறப்பு: இடம், பிறப்பின் முக்கியத்துவம், பிறப்பின் போதான அசாதாரண நிகழ்வுகள்.

குழந்தைப்பருவம் மற்றும் ஆரம்ப பயிற்சி.

பூகோள அமைப்பு:

நண்பர்கள் மற்றும் அயலவர்கள், தனிப்பட்ட உறவுகள்.

தொழில் அல்லது உத்தியோகம்:

பௌதீக விபரிப்பு.

நேர்மறையான தலைமைத்துவ பண்புகள்.

மறையான தலைமைத்துவ பண்புகள்.

குறிப்பிடத்தக்க சம்பவங்கள்:

தேவனுடனான முதலாவது சந்திப்பு.

உரையாடல்.

ஊழியத்திற்கான அழைப்பு.

மாபெரும் நெருக்கடி அல்லது திருப்பு முனை.

மரணம்: எப்பொழுது, எங்கே, அசாதாரண சூழ்நிலைகள்.

**படிமுறை நான்று: நீங்கள் கற்றவற்றை பிரயோகித்தல்**

“கீழ்வரும் வழிகளில் என்னுடைய சொந்த வாழ்க்கையில் .................... குறித்து நான் கற்றவை எவையோ அவைகளை பிரயோகிக்க முடியும்:”

# சுய பரீட்சைக்கான விடைகள்

**அதிகாரம் ஒன்று:**

1. கண்காணிப்பை விரும்புகிறவன் நல்லவேலையை விரும்புகிறான். (1 தீமோத்தேயு 3:1)

2. "உக்கிராணத்துவம்" என்பதற்கான வேறு பெயர் "முகாமைத்துவம்" என்பதாகும். "உக்கிராணக்காரர்" அல்லது "முகாமையாளர்" மற்றவர்களால் அவர்களுக்கு நம்பிக்கையினால் கொடுக்கப்பட்ட ஏதோவொன்றிற்கு மேலான பொறுப்பாகும். மனித வளம், பொருட்கள், ஆவிக்குரிய வளம் ஆகியவற்றின் சரியான உபயோகித்தலின் மூலமாக தேவனுடைய குறிக்கோள்களையும் திட்டங்களையும் அடைவதற்கான செயற்பாடு முகாமைத்துவம் ஆகும். இந்த திட்டங்களும் குறிக்கோள்களும் அடைந்தாலும் இல்லாவிட்டாலும் முகாமைத்துவம் அளவிடப்படும்.

3. வளங்களானது சுவிசேஷம், நிதி, ஊழியத்தின் பொருள் வளங்கள், ஆவிக்குரிய வளங்கள், வேறு விசுவாசிகள் ஆகும்.

4. விசுவாசம்.

5. இயேசு கிறிஸ்து.

6. அதிகாரம் ஒன்றில் தரப்பட்டுள்ளதோடு உங்களுடைய சுருக்கத்தை ஒப்பிடுக.

7. அதிகாரம் ஒன்றிலுள்ள சுருக்கத்தோடு உங்களுடைய பதிலை ஒப்பிடுக.

**அதிகாரம் இரண்டு:**

1. அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். (எபேசியர் 4:11)

2. 2, 1, 4, 3, 5, 6, 7

3. -மூப்பர்
   -தொண்டர்
   -ஆயர் (பாதிரி)

**அதிகாரம் மூன்று:**

1. என் கொம்பைக் காண்டாமிருகத்தின் கொம்மைப்போல உயர்த்துவீர்: புது எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்படுகிறேன். (சங்கீதம் 92:10)

2. "அபிஷேகித்தல்" என்றால் அர்ப்பணித்தல் அல்லது ஒன்றை புனிதப்படுத்தல் அல்லது ஒன்றிற்கு எண்ணெயை பிரயோகித்தல் ஆகும்.

3. எண்ணெய் பரிசுத்த ஆவியானவருக்கு அடையாளமாயிருக்கிறது. ஒரு நபரை எண்ணெயினால் அபிஷேகித்தலானது பரிசுத்த ஆவியானவர் குறித்த நோக்கத்திற்காக அவர் மேல் வருதலுக்கு அடையாளமாயிருக்கின்றது.

4. குஷ்டரோக அபிஷேகம் உறவு முறைக்கானது, ஆசாரிய அபிஷேகம் பரிசுத்தத்திற்கானது, தலைவருக்குரிய அபிஷேகம் நிலை மற்றும் வல்லமைக்கானது.

5. ஊழியத்திற்கான அபிஷேகத்தின் ஆதாரம் தேவனே ஆவார்.

6. தேவனில் உங்கள் நிலையை ஏற்படுத்தல், தேவனுடைய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு உங்களை இயலுமைப்படுத்தல், வழிநடத்த அறிவை கொடுத்தல், நீங்கள் ஊழியம் செய்வோருக்கான நுகத்தடிகளின் கட்டுக்களை உடைத்தல் ஆகியவற்றை அபிஷேகம் மேற்கொள்ளுகின்றது.

7. தேவன் அறிவு, கல்வி, அனுபவம் மற்றும் இயலுமை அடிப்படையில் தேவன் அபிஷேகம் செய்வதில்லை. அவர் இருதயத்தின் குறிக்கோளின் அடிப்படையில் அபிஷேகிக்கின்றார்.

8. தேவனல்லாத சேனைகள் அபிஷேகத்தில் நீங்கள் நடப்பதிலிருந்து உங்களை மறைக்க முயற்சிக்கின்றன, ஏனென்றால் அபிஷேகிக்கப்பட்ட ஊழியம் தேவனுடைய நோக்கத்தை அடையும் என அவைகள் அறிந்திருக்கின்றன.

9. நீங்கள் செய்யாவிட்டால் மாபெரும் கடினத்தின் அனுபவங்களையும் வல்லமையின்மையாகவும் மாறுவீர்கள் என்பதனால் ஆகும்.

10. இந்த அதிகாரத்தில் கலந்துரையாடப்பட்ட மூன்று வகையான அபிஷேகத்தில் தொடர்ந்து நடப்பதினாலாகும்.

**அதிகாரம் நான்கு:**

1. ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம் அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். (எபேசியர் 2:10)

2. தகுதிகள் என்பது இயற்கையிலான இயலுமைகள் அல்ல. அவைகள் குணம் மற்றும் நடத்தைகளின் தரம் ஆகும். தலைமைத்துவத்திற்கான வேதாகம தகுதிகளானது தேவனுடைய வார்த்தையில் தலைவர்களுக்காக விபரிக்கப்பட்ட குணம் மற்றும் நடத்தைகளின் தகுதிகளாகும். அவைகள் தேவனு டையதான வாழ்க்கை முறைக்கு ஆதாரமாக உள்ளது.

3. சுவிசேஷத்தின் கனியானது சுவிசேஷ செய்தியில் வல்லமையுள்ள சாட்சியாக இருப்பதாகும்.

4. அதிகாரம் நான்கில் கொடுக்கப்பட்ட கிறிஸ்துவை-போலான தகுதிகளின் பட்டியலை பார்க்க.

5. 9, 7, 8, 5, 6, 2, 4, 3, 1

6. வசனங்களானது 1 தீமோத்தேயு 3 மற்றும் தீத்து 1 ஆகும்.

7. மறுபடியும் பிறத்தல் வேண்டும், பரிசுத்த ஆவியானவரினால் ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும், தலைவராக இருக்கும்படிக்கு அழைக்கப்பட்டு அபிஷேகிக்கப்பட்டிருக்க வேண்டும், ஆவிக்குரிய முதிர்ச்சியை கொண்டிருத்தல் வேண்டும்.

**அதிகாரம் ஐந்து:**

1. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது:

   அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்,

   தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். (பிலிப்பியர் 2:5-7)

2. ஊழிய தலைமைத்துவம்.

3. இயேசு கிறிஸ்து.

4. ஊழியத்துவத்தின் வல்லமையானது ஒரு நபரை தேவனால் உபயோகிக்கக்கூடியவாறு ஒரு நிலையிற்கு தாழ்மைப்படுத்துவதாகும். இது இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் காட்டப்பட்டுள்ளது.

5. மதசார்பற்ற தலைவர்கள் தம்மை பின்பற்றுவோருக்கு ஆதிக்கம் செலுத்துகின்றனர், பின்பற்றுவோருக்கு மேல் அதிகாரத்தை பயிற்றுவிக்கின்றனர், தலைவர்களாகவும், இராஜாக்களாகவும் கிரியை செய்கின்றனர்.

6. நாம் கிறிஸ்துவின் சரீரத்தை சேவிக்கின்றோம், இறந்துபோன மற்றும் தொலைந்த தாழ்மையை சேவிக்கின்றோம். உண்மையிலேயே, நாம் தேவனையே சேவிக்கின்றோம்.

7. அதிகாரம் ஐந்தில் கலந்துரையாடப்பட்டுள்ளதோடு உங்களுடைய விளக்கத்தை ஒப்பிடுக.

**அதிகாரம் ஆறு:**

1. உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும்,

   சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். (1 பேதுரு 5:2-3)

2. இயேசு கிறிஸ்து.

3. இயேசு கிறிஸ்துவிலுள்ள அனைத்து உண்மையான விசுவாசிகளும் ஒரேயொரு உண்மையான ஆட்டுமந்தையின் பகுதிகளாயிருக்கின்றோம்.

4. உங்களுடைய கலந்துரையாடல்களை அதிகாரம் ஆறுடன் ஒப்பிடுக.

5. உங்களுடைய கலந்துரையாடல்களை அதிகாரம் ஆறுடன் ஒப்பிடுக.

**அதிகாரம் ஏழு:**

1. பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்,

   அவர், (தேவன்) சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகரா-கவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். (எபேசியர் 4:11-12)

2. ஊழிய வேலைகளில் விசுவாசிகளை சீர்செய்தல் ஆகும்.

3. சீர்செய்தல் என்பது போதித்தல், உபதேசித்தல், செய்துகாட்டுதல், பயிற்சிக்குட்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. சீர்செய்தல் ஊழியத்தின் வேலையில் மக்களை ஆயத்தம்செய்வதை கூட உள்ளடக்கும்.

4. ஊழியத்தின் வேலையில் விசுவாசிகள் சரியாக “சீர்செய்யும்போது” இந்த நேராக விளைவுகள் காணப்படுகின்றன:
-ஊழியத்தின் வேலை செய்யப்படும்: எபேசியர் 4:12
-கிறிஸ்துவினுடைய சரீரம் (சபை) பக்திவிருத்தியடையும் (கட்டப்படும்): எபேசியர் 4:12
-ஆவிக்குரிய முதிர்ச்சியை மக்கள் அடைவார்கள்: எபேசியர் 4:13-15
-ஐக்கியம் விளைவாயிருக்கும்: எபேசியர் 4:13
-மக்கள் கிறிஸ்துவினுடைய தோற்றத்திற்குள் மாற்றப்படுவார்கள்: எபேசியர் 4:13
-மக்கள் நிலையான கொள்ளையுள்ளவர்களாக மாறி, உண்மையில் விதைக்கப்படுவார்கள்: எபேசியர் 4:15-16
-கிறிஸ்துவினுடைய சரீரம் வல்லமையுள்ளதாக செயற்படும்: எபேசியர் 4:16

5. உங்களுடைய கலந்துரையாடல்களை அதிகாரம் ஆறுடன் ஒப்பிடுக.

## அதிகாரம் எட்டு:

1. மனுஷனுடைய இருதயம் அவனுடைய வழியை யோசிக்கும்: அவனுடைய நடைகளை உறுதிப்படுத்துகிறவரோ கர்த்தர். (நீதிமொழிகள் 16:9)

2. வேதாகமத்தின் அணுகுமுறையான மக்களினாலான வாக்குகள் அல்லது “பெரும்பான்மை ஆளுகை” அல்ல. தேவன் சபையிலுள்ள தலைவர்களை தீர்மானம் மேற்கொள்ளும்படிக்கு ஏற்படுத்துகின்றார்.

3. அதிகாரம் எட்டில் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டலோடு உங்களுடைய சுருக்கத்தை ஒப்பிடுக.

4. தீர்மானம் மேற்கொள்ளும் மாதிரியானது தீர்மானம் மேற்கொள்ளும்போது தொடரவேண்டிய உதாரணத்தை கொடுக்கும்.

5. ஓர் மாதிரி நீங்கள் தொடர வேண்டிய உதாரணத்தை கொடுக்கும்.

## அதிகாரம் ஒன்பது:

1. வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது: தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி,

   அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. (2 தீமோத்தேயு 3:16-17)

2. அதிகாரம் ஒன்பதில் தரப்பட்டுள்ளதோடு உங்களுடைய சுருக்கத்தை ஒப்பிடுக.

3. அதிகாரம் ஒன்பதில் தரப்பட்டுள்ளதோடு உங்களுடைய சுருக்கத்தை ஒப்பிடுக.

4. அதிகாரம் ஒன்பதில் கொடுக்கப்பட்டுள்ள பட்டியல்களுடன் உங்களுடைய காரணத்தின் பட்டியல்களை ஒப்பிடுக.

5. அதிகாரம் ஒன்பதில் தரப்பட்டுள்ளதோடு உங்களுடைய சுருக்கத்தை ஒப்பிடுக.

6. முரண்பாடுகள் ஆவிக்குரிய முதிர்ச்சியின்மை மற்றும் மாம்சம், சரீரம் உடைய சாத்தானின் தூண்டுதலிலான மாம்சீக கிறிஸ்தவர்களினால் எழுப்பப்படுகின்றது.

7. நாம் தேவனுடைய வசனத்தின் அடிப்படையில் ஒழுக்கம் செய்து முரண்பாடுகளை தீர்க்கும்போது, மக்கள் ஊழியத்தின் வேலையிற்காக பூரணப்பட்டு பக்திவிருத்தியடைவர். தேவனுடைய வசனமானது ஒழுக்கம், சீர்திருத்தம், மற்றும் திருத்துதலுக்கு வல்லமையுள்ளதாக இருக்கின்றது.

## அதிகாரம் பத்து:

1. சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான். (லூக்கா 6:40)

2. மற்றவர்களை பயிற்றுவித்தல் மிகவும் முக்கியமான பொறுப்பாகும், ஏனென்றால் நீங்கள் பயிற்சியிற்குட்படும் மக்கள் உங்களை போலிருப்பார்கள்!

3. நாம் தலைவர்களையும் பின்பற்றுவோரையும் பயிற்றுவிக்கும் நோக்கமானது அனைத்து ஜாதிகளுக்கும் சென்று, சுவிசேஷத்தை பிரசங்கித்து, ஞானஸ்நானம் கொடுத்து, மேலதிக போதனைகளுக்கூடாக ஆவிக்குரிய முதிர்ச்சியில் மாற்றுவதற்கு அவர்களை வழிநடத்த வேண்டும்.

4. -தேவனில் அடிப்படையாய் இருத்தல்.
-ஜெபத்தின் காரியமாக அதை வையுங்கள்.
-ஆரம்பத்தை ஏற்படுத்துங்கள்.
-நிகழக்கூடியவற்றை பாருங்கள், பிரச்சினைகளை அல்ல.
-கிரயத்தை தெளிவாக மாற்றுதல்.
-அடிப்படை தேவைகளை சந்திக்கப்பட்டோரை தெரிவு செய்தல்.

5. -சம்பந்தம்
-அர்ப்பணிப்பு
-தரிசனம்
-அறிவுறுத்தல்கள்
-செய்து காட்டுதல்
-பங்குபற்றுதல்
-மேற்பார்வை
-ஒப்படைத்தல்

6. எபேசுவின் உதாரணம்

## அதிகாரம் பதினொன்று:

1. நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான். (நீதிமொழிகள் 24:16)

2. தோல்வியிற்கு மேலாக வென்ற பட்டியல்களுக்கு அதிகாரம் பதினொன்றிலுள்ள கலந்துரையாடலை பார்க்க.

3. தோல்வியில் வாழ்க்கை முடிவுபெற்ற பட்டியல்களுக்கு அதிகாரம் பதினொன்றிலுள்ள கலந்துரையாடலை பார்க்க.

4. -வெளிப்படுத்தல்
-மனந்திரும்புதல்
-மீள் திரும்புதல்
-மீள் கட்டுதல்

5. உறவில் உள்ள தோல்வி, அர்ப்பணிப்பில் உள்ள தோல்வி, அசட்டையினால் உள்ள தோல்வி:

## அதிகாரம் பன்னிரெண்டு:

1. இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக் இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக் அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாகவும் நடந்துகொள்ளுவாய். (யோசுவா 1:8)

2. தேவனுடைய இராஜ்ஜியத்தின் வெற்றியானது "தேவனால் கொடுக்கப்பட்ட பொறுப்புக்களில் ஒரு-வருடைய வரங்களையும் இயலுமைகளையும் உச்சளவிலான பயன்பாடே" ஆகும். தேவனுடைய வேலையிற்காக உங்களுடைய ஆவிக்குரிய வளங்களை நீங்கள் சரியாக பயன்படுத்தும்போது நீங்கள் வெற்றியுள்ளவர்களாக மாறுகின்றீர்கள்.

3. அதிகாரம் பன்னிரெண்டில் கலந்துரையாடப்பட்டதில் உங்கள் விபரித்தல்களை ஒப்பிடுக.

4. அதிகாரம் பன்னிரெண்டில் கலந்துரையாடப்பட்டதில் உங்கள் சுருக்கத்தை ஒப்பிடுக.

## அதிகாரம் பதிமூன்று:

1. அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். (மத்தேயு 16:24)

2. தலைவர்களுக்கான கிரயத்தின் மூன்று முக்கிய அம்சங்களானது கவனிக்கத்தக்க கிரயம், சரியான முன்னுரிமைகள், முழுமையான நோக்கம் ஆகும்.

3. தலைமைத்துவத்தின் உண்மையான பரீட்சையானது உங்களுடைய பின்பற்றுவோரோடு நீங்கள் தொடர்ச்சியாக பிரசன்னமாயிருக்காத போது என்ன நடைபெறும் என்பதாகும். நீங்கள் அவர்களுக்கு என்ன போதித்தீர்கள் என்பதில் அவர்கள் தொடர்ந்தும் விசுவாசமுள்ளவர்களாக இருப்பார்களா? உங்களுடைய பௌதீக பிரசன்னம் இல்லாமல் அவர்கள் ஆவிக்குரிய முதிர்ச்சிக்காக தொடர்வார்களா?